II சாமுவேல் - முன்னுரை

காலமும் இடமும்

1சாமுவேல், 2சாமுவேல் ஆகிய இரண்டு புஸ்தகங்களையும் சாமுவேல், தாவீது, நாத்தான், காத் ஆகியோர் எழுதினார்கள். இவர்கள் இவற்றை பாலஸ்தீன தேசத்தில் சுமார் கி.மு. 1204-1035 ஆகிய வருஷக்காலத்தில் எழுதியிருக்க வேண்டும். இந்தச் சம்பவங்களை ஏசாயா தீர்க்கதரிசி கி.மு. 743-683 ஆவது வருஷங்களில் ஒரே புஸ்தகமாகத் தொகுத்தார்.

நியாயாதிபதிகள், ரூத், 1சாமுவேல், 2சாமுவேல், 1இராஜாக்கள், 2இராஜாக்கள், 1நாளாகமம், 2நாளாகமம் ஆகிய புஸ்தகங்களையும் ஏசாயா தீர்க்கதரிசியே தொகுத்தார் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள்.

ஆசிரியர்

1சாமுவேல், 2சாமுவேல் ஆகிய இரண்டு புஸ்தகங்களும் ஆரம்பத்தில் ஒரே புஸ்தகமாகவே இருந்தது. மூலஎபிரெய பாஷை சுவடிகளில் இவை இரண்டும் ஒரே புஸ்தகமாகவே உள்ளது. கி.மு. 289-294 ஆகிய வருஷங்களில் எபிரெய மொழியின் பழைய ஏற்பாட்டை செப்துவஜிந்த் என்றழைக்கப்படும் கிரேக்க மொழி பழைய ஏற்பாடாக மொழிபெயர்த்தார்கள். ஒன்றாக இருந்த சாமுவேலின் புஸ்தகம் செப்துவஜிந்தில் 1சாமுவேல், 2சாமுவேல் என இரண்டு புஸ்தகங்களாகப் பிரிக்கப்பட்டது. அதன் பின்பு, உண்டான எல்லாப் பதிப்புக்களிலும் சாமுவேலின் புஸ்தகம் இரண்டு புஸ்தகங்களாகவே உள்ளது.

சாமுவேல் 1சாமு 1-24 ஆகிய அதிகாரங்களையும், தாவீது, நாத்தான், காத் ஆகியோர் 1சாமு 25-2சாமு 24 ஆகிய அதிகாரங்களையும் எழுதினார்கள். (1சாமு 10:25; 1நாளா 29:29). இந்தப் புஸ்தகத்தில் யாசேரின் புஸ்தகத்தைப் பற்றிய குறிப்பு ஒன்று உள்ளது. (2சாமு 1:18) ஏசாயா இந்தப் புஸ்தகத்தைத் தொகுத்தபோது, அவர் யாசேரின் புஸ்தகத்தையும் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

மையக்கருத்து

1சாமுவேல் புஸ்தகத்தில் ஏலி, சவுல், சாமுவேல் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் இஸ்ரவேலில் காணப்பட்ட தோல்வியைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. 2சாமுவேல் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் முக்கியமான செய்திகள் வருமாறு:

1. தாவீதின் மூலமாக இஸ்ரவேலில் அமைதியும், ஒழுங்கும் திரும்புதல்
2. கர்த்தர் தாவீதைத் தம்முடைய ஜனத்தின்மீது ராஜாவாக அபிஷேகம் பண்ணியிருக்கிறார். தாவீதின் காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யம் பூரணமாக ஸ்தாபிக்கப்படுகிறது. எருசலேம் நகரம் அரசியல் காரியங்களுக்கும், மார்க்கக் காரியங்களுக்கும் மைய ஸ்தலமாயிற்று. (2சாமு 1:1-6:23)
3. தாவீதின் உடன்படிக்கை ஸ்தாபனம் பண்ணப்படுகிறது. (2சாமு 7:1-29)
4. இஸ்ரவேலின் சத்துருக்களையெல்லாம் தாவீது யுத்தத்தில் ஜெயித்தார். (2சாமு 3:1; 2சாமு 5:17-25; 2சாமு 8:1-10:19)
5. தாவீதின் பாவமும், மனந்திரும்புதலும் (2சாமு 11:1-12:31)
6. தாவீதின் குடும்பப் பிரச்சனைகள் (2சாமு 13:1-14:33)
7. அப்சலோமின் கலகம். (2சாமு 15:1-19:43)
8. தாவீதின் கடைசி காலச் சம்பவங்கள். (2சாமு 20:1-24:25).

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 24

வசனங்கள் - 695

கேள்விகள் - 125

புதிய தீர்க்கதரிசனங்கள் - 5

வரலாற்றைக் குறிக்கும்வசனங்கள் - 679

II சாமுவேல் - முன்னுரை

கட்டளைகள் - 70

வாக்குத்தத்தங்கள் - 13

முன்னறிவிப்புக்கள் - 25

1சாமுவேல் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். *(2சாமு 2:1,2; 2சாமு 5:19,23; 2சாமு 7:4; 2சாமு 12:1,7; 2சாமு 21:1; 2சாமு 24:11,16,18)*

பொருளடக்கம்

I. கில்போவா மலையில் நடைபெற்ற யுத்தத்தைப்பற்றிய அறிக்கை

1. தாவீதிடம் வெகுமதி பெறலாம் என்று நினைத்து சவுலின் மரணச் செய்தியை அறிவித்த அமலேக்கிய மனுஷன் *(1:1-10)*

2. இஸ்ரவேலின் தோல்விக்காகத் துக்கம் *(1:11-12)*

3. அமலேக்கியன் வெட்டப்பட்டு மரித்தான் *(1:13-16)*

4. தாவீது சவுலின் பேரிலும் யோனத்தானின் பேரிலும் பாடிய புலம்பல் *(1:17-27)*

II. தாவீது இஸ்ரவேலின் இராஜாவானான்

1. யூதாவின் இராஜாவானான் *(2:1-4)*

2. சவுலை அடக்கம் பண்ணியதற்காக கீலேயாத் தேசத்து யாபேசின் மனுஷருக்கு ஆசீர்வாதம் *(2:5-7)*

3. இஸ்ரவேல் ராஜ்யத்தில் முதல் பிரிவினை *(2:8-11)*

4. உள்நாட்டுக் குழப்பம்

   (1) கிபியோனில் யுத்தம் *(2:12-17)*

   (2) அப்னேர் ஆசகேலைக் கொன்றான் *(2:18-24)*

   (3) பெரிய கலவரம் தவிர்க்கப்பட்டது *(2:25-32)*

   (4) மறுபடியும் உள்நாட்டுக் குழப்பம் *(3:1)*

5. எப்ரோனிலே தாவீதின் குடும்பத்தார் *(3:2-5)*

6. அப்னேர் தாவீதோடே சேர்ந்து கொண்டான்

   (1) அப்னேரின் கோபத்திற்குக் காரணம் *(3:6-8)*

   (2) சவுலின் ராஜ்யபாரத்தை தாவீதிடம் கொடுப்பதாக அப்னேரின் சபதம் *(3:9-11)*

   (3) இஸ்ரவேலையெல்லாம் தாவீதிடம் திருப்புவதில் உதவிபுரிய அப்னேரின் விருப்பம் *(3:12)*

   (4) தாவீதின் நிபந்தனை - தன் மனைவியாகிய மீகாளை அழைத்து வருமாறு தாவீது அப்னேரிடம் கூறினான் *(3:13)*

   (5) மீகாள் தாவீதிடம் மறுபடியும் சேர்க்கப்படுகிறாள் *(3:14-16)*

   (6) தாவீதை தங்கள் மேல் ராஜாவாக வைக்கும்படிக்கு அப்னேர் இஸ்ரவேலின் மூப்பரோடே பேசுகிறான் *(3:18-19)*

   (7) தாவீதும் அப்னேரும் சமாதானத்தோடு பிரிகிறார்கள் *(3:20-21)*

   (8) யோவாபுக்கு அப்னேரின் வருகை தெரிய வருகிறது *(3:22-23)*

   (9) யோவாப் தாவீதோடு வாக்குவாதம் பண்ணுகிறான். அப்னேர் வேவுபார்க்க வந்ததாகக் குற்றம் சுமத்துகிறான் *(3:24-25)*

   (10) யோவாப் அப்னேரை இரகசியமாய் அழைத்து வந்து கொன்று போடுகிறான் *(3:26-27)*

II சாமுவேல் - முன்னுரை

(11) தாவீது யோவாபைச் சபிக்கிறான் (3:28-30)

(12) தாவீது அப்னேருக்காக அழுகிறான் (3:31-39)

7. இஸ்போசேத் ராஜாவின் மரணம்

(1) ரேகாபும், பானாவும் இஸ்போசேத்தைக் கொல்கிறார்கள் (4:1-7)

(2) தாவீதினிடத்தில் இஸ்போசேத்தின் தலையைக் கொண்டு வருகிறார்கள் (4:8)

(3) கொலைசெய்த ரேகாபையும், பானாவையும் கொன்று போடுகிறார்கள் (4:9-12)

8. இராஜ்யம் ஒன்று சேர்கிறது - தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கு இராஜாவாகிறான் (5:1-3)

9. தாவீதின் வயது - 40 வருஷ ஆட்சி (5:4-5)

10. சமஸ்த ராஜ்யத்திற்கு எருசலேம் தலைநகரமாயிற்று (5:6-10)

11. ஈராம் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டுகிறான் (5:11-12)

12. எருசலேமில் தாவீதின் குடும்பத்தார் (5:13-16)

13. பெலிஸ்தர் மீது முதலாவது வெற்றி (5:17-21)

14. பெலிஸ்தர்மீது இரண்டாவது வெற்றி (5:22-25)

III. தாவீதின் ஆராதனை ஒழுங்குகள்

1. தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வருமாறு தாவீது கூறுகிறான் (6:1-5)

2. தேவனுடைய பெட்டியைத் தொட்டதினால் ஊசா மரித்துப் போகிறான் (6:6-7)

3. தாவீது தேவனுக்குப் பயந்து, தேவனுடைய பெட்டியை ஓபேத் ஏதோமின் வீட்டிலே வைக்கிறான் (6:8-10)

4. ஓபேத் ஏதோமைக் கர்த்தர் ஆசீர்வதித்ததினால் தாவீது தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வருகிறான் (6:11-15)

5. மீகாளின் பாவம் (6:16)

6. தாவீது போட்ட புதிய கூடாரத்திற்குள் தேவனுடைய பெட்டியை வைக்கிறார்கள் (6:17-19)

7. மீகாளின் பாவமும் சாபமும் (6:20-23)

8. தேவனுக்கு ஆலயம் கட்ட தாவீதின் விருப்பம் (7:1-3)

9. தாவீதோடு உடன்படிக்கை

(1) உடன்படிக்கை செய்த வேளை (7:4-7)

(2) கர்த்தர் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கொடுப்பார் (7:8-11)

(3) தாவீதின் குமாரன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவான் (7:12)

(4) தாவீதின் குமாரன் தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவான் (7:13)

(5) தாவீதின் வீடும் இராஜ்யமும் என்றென்றைக்கும் ஸ்திரப் பட்டிருக்கும் (7:14-17)

(6) தாவீதின் ஜெபம் (7:18-29)

IV. தாவீதின் இராஜ்யம் பூரணமாக ஸ்தாபிக்கப்படுகிறது

1. பெலிஸ்தரின்மீது வெற்றி (8:1)

2. மோவாபியரின்மீது வெற்றி (8:2-3)

II சாமுவேல் - முன்னுரை

3. சோபாவின்மீதும், சீரியாவின்மீதும் வெற்றி (8:4-8)

4. ஆமாத்தின் ராஜாவாகிய தோயீயோடு சமாதானம் (8:9-12)

5. ஏதோமின்மீது வெற்றி (8:13-14)

6. தாவீதின் ஆளுகையின் சிறப்பு (8:15)

7. தாவீதின் அதிகாரிகள் (8:16-18)

8. சவுலின் குடும்பத்தாருக்கு இரக்கம் (9:1-13)

9. அம்மோனியர் - சீரியரோடு யுத்தம்

(1) தாவீதின் நல்ல எண்ணத்தை ஆனூன் தவறாகப் புரிந்து கொள்கிறான் (10:1-3)

(2) தாவீதின் ஊழியக்காரருக்கு அவமானம் (10:4-5)

(3) முதலாவது யுத்தம் - அம்மோனியர் மீதும் சீரியர்மீதும் வெற்றி (10:6-14)

(4) இரண்டாவது யுத்தம் - சீரியர் தோற்று ஓடுகிறார்கள் (10:15-19)

(5) மூன்றாவது யுத்தம் - அம்மோன்மீது வெற்றி (11:1)

V. தாவீதின் பாவமும் மனந்திருந்துவதும்

1. தாவீதின் சோதனை (11:2-3)

2. தாவீது பத்சேபாளுடன் செய்த பாவம் (11:4)

3. பத்சேபாள் கர்ப்பம் தரிக்கிறாள் (11:5)

4. பத்சேபாளையும் உரியாவையும் இணைக்க தாவீது முயற்சி பண்ணுகிறான் (11:6-8)

5. உரியாவின் நல்ல பண்பு (11:9-11)

6. உரியாவைக் குடித்து வெறிக்கப் பண்ணுகிறான் (11:12-13)

7. உரியாவைக் கொல்ல சூழ்ச்சி (11:14-15)

8. உரியாவின் மரணம் (11:16-17)

9. யோவாப் தாவீதுக்கு செய்தி அனுப்புகிறான் (11:18-21)

10. உரியாவின் மரணச் செய்தியும் தாவீதின் கடின இருதயமும் (11:22-25)

11. தாவீது பத்சேபாளை மனைவியாகச் சேர்த்துக்கொள்கிறான் (11:26-27)

12. தாவீது தன்பாவத்துக்காக மனம் வருந்துகிறான்

(1) நாத்தானின்உவமை (12:1-4)

(2) தாவீதின் கோபம் (12:5-6)

(3) நீயே அந்த மனுஷன் (12:7-9)

(4) தாவீதின் மீது சாபம் (12:10-14)

VI. தாவீதின் பாவத்திற்குத் தண்டனைகள்

1. தாவீதின் பிள்ளை செத்துப் போயிற்று (12:15-19)

2. தேவன்மீதுள்ள விசுவாசத்தைத் தாவீது புதுப்பிக்கிறான் (12:20-23)

3. சாலொமோனின் பிறப்பு (12:24-25)

4. அம்மோனியரோடு யுத்தம் (12:26-31)

5. தாவீதின் குடும்பப் பிரச்சனைகள்

(1) அம்னோன் தாமார்மீது மோகங் கொள்கிறான் (13:1-4)

(2) தாமாரைக் கற்பழிக்க அம்னோனின் திட்டம் (13:5)

(3) தாவீது உண்மை நிலவரம் தெரியாமல் தாமாரை அம்னோனிடம் அனுப்புகிறான் (13:6-7)

II சாமுவேல் - முன்னுரை

(4) அம்னோனின் பாவம் (13:8-14)

(5) அம்னோன் தாமாரை வெறுக்கிறான் (13:15-17)

(6) தாமாரின் துக்கம் (13:18-20)

(7) தாவீதின் கோபம் (13:21)

(8) அம்னோனைக் கொல்ல அப்சலோமின் திட்டம் (13:22-27)

(9) அம்னோனின் மரணம் (13:28-29)

(10) அம்னோனுக்காகத் தாவீதின் துக்கம் (13:30-36)

(11) அப்சலோம் தப்பியோடிப் போகிறான் (13:37-39)

(12) தாவீதையும் அப்சலோமையும் ஒன்று சேர்க்க யோவாபின் திட்டம்

(அ) யோவாப் தீட்டிய திட்டம் (14:1-3)

(ஆ) புத்தியுள்ள ஸ்திரீ கூறிய உவமை (14:4-12)

(இ) தாவீதும், அப்சலோமும் உவமையும் (14:13-17)

(ஈ) யோவாபின் மீது சந்தேகம் (14:18-20)

(உ) அப்சலோமை அழைத்துவர உத்தரவு (14:21-24)

(ஊ) அப்சலோமின் அழகும் குடும்பமும் (14:25-27)

(எ) தாவீதும் அப்சலோமும் முழுவதுமாக ஒப்புரவாகுகிறார்கள் (14:28-33)

6. உள்நாட்டுக் குழப்பம்

(1) அப்சலோம் இஸ்ரவேலரின் இருதயத்தைக் கவர்ந்து கொள்கிறான் (15:1-6)

(2) குழப்பம் அதிகரிக்கிறது (15:7-12)

(3) தாவீது எருசலேமை விட்டு ஓடிப்போகிறான் (15:13-18)

(4) ஈத்தாய்க்கு தாவீதின் ஆலோசனை (15:19-23)

(5) சாதோக்குக்கும் லேவியருக்கும் தாவீதின் ஆலோசனை (15:24-29)

(6) தாவீதின் துக்கமும் ஜெபமும் (15:30-31)

(7) ஊசாய்க்குத் தாவீதின் ஆலோசனை (15:32-37)

(8) மேவிபோசேத்தைப் பற்றி சீபா கூறிய பொய் (16:1-4)

(9) சீமேயி தாவீதைச் சபிக்கிறான் (16:5-14)

(10) அப்சலோம் எருசலேமுக்கு வருகிறான் (16:15-23)

(11) அகித்தோப்பேல், ஊசாய் ஆகியோரின் முரண்பட்ட ஆலோசனைகள் (17:1-13)

(12) அகித்தோப்பேலின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை (17:14)

(13) ஊசாய் தாவீதுக்குக் கூறிய ஆலோசனை (17:15-22)

(14) அகித்தோப்பேலின் மரணம் (17:23)

(15) அப்சலோம் தாவீதைத் துரத்துகிறான் (17:24-26)

(16) மக்னாயீமில் தாவீதுக்குக் கிடைத்த உதவி (17:27-29)

(17) எப்பிராயீம் காட்டிலே யுத்தம் (18:1-8)

II சாமுவேல் - முன்னுரை

(18 அப்சலோமின் மரணம் (18:9-18)

(19) தாவீதுக்கு யுத்தச் செய்தி வருகிறது (18:19-28)

(20) அப்சலோமுக்காக தாவீதின் துக்கம் (18:29-33)

(21) தாவீதுக்கு யோவாபின் ஆலோசனை (19:1-8)

VII. தாவீது இராஜ்யபாரத்தைத் திரும்பப் பெறுகிறான்

1. மறுபடியும் தாவீது ராஜா (19:9-14)
2. தாவீது எருசலேமுக்குத் திரும்புகிறான் (19:15-23)
3. மேவிபோசேத்தின் நல்ல குணம் (19:24-30)
4. பர்சிலாவுக்கு வெகுமதி (19:31-40)
5. உள்நாட்டுக் குழப்பம்

(1) தாவீதின் மீது பொறாமை (19:41-43)

(2) இராஜ்யத்தில் மறுபடியும் பிளவு (20:1-2)

(3) தாவீது தன் மறுமனையாட்டிகளைக் காவல் வீட்டில் வைக்கிறான் (20:3)

(4) அமாசாவின் மரணம் (20:4-13)

(5) இஸ்ரவேலர் மறுபடியும் ஒன்று சேர்கிறார்கள் (20:14-22)

(6) புதிய ராஜ்யபாரத்தில் தாவீதின் அதிகாரிகள் (20:23-26)

6. மூன்று வருஷ ஓயாத பஞ்சம் (21:1-9)
7. சவுலின் குமாரருக்காக ரிஸ்பாளின் துக்கம் (21:10-11)
8. சவுல், யோனத்தான் ஆகியோரின் அடக்கம் (21:12-14)
9. பெலிஸ்தருடன் யுத்தம் - நான்கு இராட்சத புத்திரர் (21:15-22)

VIII. தாவீதின் கடைசிப்பாடலும், கடைசி வார்த்தைகளும்

1. பாட்டு

(1) தேவனைப்பற்றிய ஒன்பது காரியங்கள் (22:1-3)

(2) தாவீதின் ஜெபம் (22:4-7)

(3) தேவனுடைய பதில் (22:8-21)

(4) சாட்சி (22:22-25)

(5) தேவனுடைய குணாதிசயம் (22:26-28)

(6) சாட்சி - நான்கு ஆசீர்வாதங்கள் (22:29-30)

(7) தேவனைப்பற்றி ஐந்து காரியங்கள் (22:31-32)

(8) சாட்சி - முப்பத்திரண்டு ஆசீர்வாதங்கள் (22:33-51)

2. தாவீதின் கடைசி வார்த்தைகள் (23:1-7)

IX. தாவீதின் பராக்கிரமசாலிகள்

1. ஏஸ்னி ஊரானாகிய அதீனோ (23:8)
2. எலெயாசார் (23:9-10)
3. சம்மா (23:11-17)
4. அபிசாய் (23:18-19)
5. பெனாயா (23:20-23)
6. மற்ற பராக்கிரமசாலிகள் (23:24-39)

X. தாவீதின் பாவம்

1. இஸ்ரவேலை இலக்கம் பார்க்கிறான் (24:1-2)

II சாமுவேல் - முன்னுரை

2. யோவாபின் ஆலோசனை (24:3)
3. இஸ்ரவேலின் இலக்கம் (24:4-8)
4. இலக்கம்பார்த்த தொகை (24:9)
5. தாவீது மனம் திரும்புகிறான் (24:10-11)
6. மூன்று காரியங்கள் (24:12-13)
7. கர்த்தருடைய கையில் விழுவோமாக (24:14)
8. கொள்ளை நோய் (24:15)
9. எருசலேமின்மீது தேவனுடைய இரக்கம் (24:16)
10. ஜனத்தை உபாதிக்கிற தூதன் (24:17)
11. கர்த்தருக்கு பலிபீடம் கட்ட தாவீது நிலம் வாங்கி அங்கு பலி செலுத்துகிறான் (24:18-25)

II சாமுவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. கில்போவா மலையில் நடைபெற்ற யுத்தத்தைப்பற்றிய அறிக்கை

1. தாவீதிடம் வெகுமதி பெறலாம் என்று நினைத்து சவுலின் மரணச் செய்தியை அறிவித்த அமலேக்கிய மனுஷன்

2சாமு 1:1 சவுல் மரித்தபின்பு, தாவீது அமலேக்கியரை முறிய அடித்து, சிக்லாகுக்குத் திரும்பிவந்து, இரண்டுநாள் அங்கே இருந்தபிற்பாடு,

2சாமு 1:2 மூன்றாம்நாளிலே ஒரு மனுஷன் சவுலின் பாளயத்திலிருந்து புறப்பட்டு, தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, தன் தலையின்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டு, தாவீதினிடத்தில் வந்து, தரையிலே விழுந்து வணங்கினான்.

2சாமு 1:3 தாவீது அவனைப் பார்த்து: நீ எங்கேயிருந்து வந்தாய் என்று கேட்டதற்கு, அவன்: இஸ்ரவேலின் பாளயத்திலிருந்து தப்பிவந்தேன் என்றான்.

2சாமு 1:4 தாவீது அவனைப் பார்த்து: நடந்த செய்தி என்ன? சொல் என்று கேட்டதற்கு, அவன்: ஜனங்கள் யுத்தத்தை விட்டு முறிந்தோடிப் போனார்கள்; ஜனங்களில் அநேகம்பேர் விழுந்து மடிந்துபோனார்கள்; சவுலும் அவர் குமாரனாகிய யோனாத்தானும் மடிந்தார்கள் என்றான்.

2சாமு 1:5 சவுலும் அவர் குமாரனாகிய யோனத்தானும் மடிந்துபோனது உனக்கு எப்படித் தெரியும் என்று தாவீது தனக்கு அதை அறிவிக்கிற வாலிபனிடத்தில் கேட்டதற்கு,

2சாமு 1:6 அந்த வாலிபன்: நான் தற்செயலாய்க் கில்போவா மலைக்குப் போனேன்; அப்பொழுது இதோ,சவுல் தம்முடைய ஈட்டியின்மேல் சாய்ந்து கொண்டிருந்தார்; இரதங்களும் குதிரைவீரரும் அவரைத் தொடர்ந்து நெருங்கினார்கள்.

2சாமு 1:7 அவர் திரும்பிப் பார்த்து: என்னைக் கண்டு கூப்பிட்டார்; அதற்கு நான்: இதோ இருக்கிறேன் என்றேன்.

2சாமு 1:8 அப்பொழுது அவர்: நீ யார் என்று என்னைக் கேட்டார்; நான் அமலேக்கியன் என்று சொன்னேன்.

2சாமு 1:9 அவர் என்னை நோக்கி: நீ என்னண்டையில் கிட்டவந்து நின்று, என்னைக் கொன்றுபோடு; என் பிராணன் முழுவதும் இன்னும் போகாததினால் எனக்கு வேதனையாயிருக்கிறது என்றார்.

2சாமு 1:10 அப்பொழுது நான், அவர் விழுந்தபின்பு பிழைக்கமாட்டார் என்று நிச்சயித்து, அவரண்டையில் போய் நின்று, அவரைக் கொன்றுபோட்டேன்; பிற்பாடு அவர் தலையின்மேல் இருந்த முடியையும் அவர் புயத்தில் இருந்த அஸ்தகடகத்தையும் எடுத்துக்கொண்டு, அவைகளை இங்கே என் ஆண்டவனிடத்திற்குக் கொண்டுவந்தேன் என்றான்.

"பின்பு" **(Now it came to pass)** - 1சாமுவேல் புஸ்தகமும், 2சாமுவேல் புஸ்தகமும் மூலஎபிரெய பாஷை சுவடிகளில் ஒரே புஸ்தகமாகவே இருந்தது. கி.மு. 285 ஆம் வருஷம் செப்துவஜிந்த் பதிப்பு மொழிபெயர்க்கப்பட்ட போது, சாமுவேல் என்னும் ஒரே புஸ்தகம் 1சாமுவேல், 2சாமுவேல் என இரண்டு புஸ்தகங்களாகப் பிரிக்கப்பட்டது. அதன் பின்பு வெளிவந்த பதிப்புக்களில் சாமுவேல் புஸ்தகம் இரண்டு புஸ்தகங்களாகவே உள்ளன. இதுபோலவே ராஜாக்கள் புஸ்தகமும், நாளாகமம் புஸ்தகமும் பழைய எபிரெய பாஷை சுவடிகளில் ஒரே புஸ்தகமாகவே இருந்தன. இதுபோல எஸ்றாவும், நெகேமியாவும் ஒரே புஸ்தகமாகவே இருந்தது.

"சவுல் மரித்தபின்பு" - சவுல் மரித்த பின்பு, தாவீதின் வரலாறு வேதாகமத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. தாவீதின் நாற்பது வருஷக்கால ராஜ்யபாரத்தைப் பற்றி 1சாமுவேல் புஸ்தகத்திலும், 1இராஜா 1-2, 1நாளா 11-29 ஆகிய அதிகாரங்களிலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

"தாவீது அமலேக்கியரை முறிய அடித்து" - (1சாமு 30)

II சாமுவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

"மூன்றாம்நாளிலே" - ஒரு மனுஷன் சவுலின் பாளயத்திலிருந்து சிக்லாகிற்கு வந்தான். சிக்லாகிற்கு வந்து மூன்று நாளுக்குப் பின்பு, அவன் தாவீதைச் சந்திக்கிறான். தாவீது பெலிஸ்தரை விட்டு சிக்லாகுக்குத் திரும்பிவந்து பத்து நாட்களுக்குப்பின்பு இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்க வேண்டும். (1சாமு 30:1,17).

"ஒரு மனுஷன் சவுலின் பாளயத்திலிருந்து புறப்பட்டு" - இவன் ஒரு அமலேக்கியன். (2சாமு 1:8). அமலேக்கியரில் பலர் புறதேசத்து சேனைகளில் பணிபுரிந்திருக்கிறார்கள். சவுலின் காலத்திலும், தாவீதின் காலத்திலும் அமலேக்கியர் சிப்பியோன், யூதா ஆகியோருடைய இடங்களுக்குத் தெற்கில் குடியிருந்தார்கள். சவுலின் பாளயத்திலிருந்து புறப்பட்டு வந்த மனுஷன் சவுலின் நம்பிக்கைக்குரிய சேவகர்களில் ஒருவனாக இருந்திருக்க வேண்டும். அல்லது அவன் பாளயத்திலுள்ள ஒரு வேலைக்காரனாக இருந்திருக்க வேண்டும். அவன் தாவீதின் பாளயத்திற்கு வந்து, தாவீதிடம் சவுலின் மரணத்தைப் பற்றி தெரிவித்தால், தனக்கு ஏதாவது வெகுமதி கிடைக்கும் என்று நினைத்து வந்தான். வரும்போது அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தன் தலையின்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டு வந்தான். தாவீதைப் பார்த்தவுடன் தரையிலே விழுந்து வணங்கினான். இவனுடைய செயல் எல்லாமே கபட நாடகம்.

"சவுலும் அவர் குமாரனாகிய யோனாத்தானும் மடிந்தார்கள்" - சவுல் தாவீதின் சத்துருவாக இருந்தான். ஆகையினால் சவுலின் மரணம் தாவீதுக்கு சந்தோஷமான செய்தியாக இருந்திருக்க வேண்டும். ஆனால் தாவீதோ வித்தியாசமான மனுஷன். அவனிடத்தில் சுயநலமில்லை. தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிற சவுல்மீது தாவீது மரியாதை வைத்திருந்தான்.

"சவுலும் அவர் குமாரனாகிய யோனத்தானும் மடிந்துபோனது உனக்கு எப்படித் தெரியும்" - அவர்கள் மரித்துப்போனதை தாவீது உறுதி பண்ண விரும்புகிறான். அமலேக்கியன் தாவீதை நம்ப வைப்பதற்காகச் சில பொய்யான கதைகளைக் கூறுகிறான். சவுலின் மரணத்தில் தனக்கு முக்கிய பங்கு இருந்ததாக ஒரு கதையைக் கூறுகிறான். தனக்கு ஏதாவது வெகுமதி கிடைக்கும் என்பது அவனுடைய நம்பிக்கை. அவனுக்கு வெகுமதி கிடைப்பதற்குப் பதிலாக அவனுக்கு மரணமே கிடைத்தது. (2சாமு 1:5வி10).

"நான் தற்செயலாய்க் கில்போவா மலைக்குப் போனேன்" - அமலேக்கியன் கதைக்கும், உண்மையான சம்பவத்திற்கும் அதிக வித்தியாசம் உள்ளது. (1சாமு 31:3-5; 1நாளா 10:3-5) தானே சவுலைக் கொன்று போட்டதாகக் கூறினான். இவனுடைய ஆசை இவனுடைய உயிருக்கே ஆபத்தாக முடிந்து விட்டது. (2சாமு 4:10).

"என்னைக் கொன்றுபோடு" - சவுல் தன் ஆயுததாரியிடம் இந்த வார்த்தைகளைக் கூறினான். தாவீதைப் பார்க்க வந்திருக்கும் அமலேக்கியனிடம் சவுல் இந்த வார்த்தைகளைக் கூறவில்லை. (1சாமு 31:3-5; 1நாளா 10:3-5).

"அவரைக் கொன்றுபோட்டேன்" - சவுல் ஒரு பட்டயத்தை நட்டு, அதன் மீது விழுந்து, தன் உயிரை மாய்த்துக் கொண்டான். (1சாமு 31:3-5; 1நாளா 10:3-5).

எபிரெயரின் கிரீடங்கள்

எபிரெய ராஜாக்கள் பயன்படுத்திய கிரீடங்களைப் பற்றியும், அவற்றின் அமைப்புக்களைப் பற்றியும் அதிகமாகத் தெரியவில்லை. எபிரெய மொழியில் கிரீடம் என்பதற்கான வார்த்தை "நேஜேர்" **(nezer)** என்பதாகும். இந்த வார்த்தைக்கு ஆசாரிய ஊழியத்திற்காக அல்லது ராஜாவின் ஊழியத்திற்காக ஒருவரை வேறுபிரித்து அர்ப்பணிப்பது என்று பொருள். ஒருவருடைய பிரதான ஊழியத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அந்த நபருக்கு தலையில் ஒரு கிரீடம் வைக்கப்பட்டது. (2சாமு 1:10; 2இராஜா 11:12; 2நாளா 23:11; சங் 89:39; சங் 132:18; நீதி 27:24; சக 9:16) பிரதான ஆசாரியரின் கிரீடத்திற்கும், இதே எபிரெய வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யாத் 29:6; யாத் 39:30; லேவி 8:9; லேவி 21:12) கிரீடங்களில் கற்கள் பதிக்கப்பட்டிருப்பது சக 9:16 ஆவது வசனத்தின் மூலமாகத் தெரிய வருகிறது. பிரதான ஆசாரியரின் கிரீடங்கள் பொன்னால் செய்யப்பட்டவை. (யாத் 25:11, 24-25; யாத் 30:3-4; யாத் 37:2,11-12,26-27) மற்றவர்களுக்கும் பொன்னால் செய்யப்பட்ட கிரீடங்கள் இருந்தன. (எஸ் 8:15; சங் 21:3;வெளி 14:14). இஸ்ரவேலின் ராஜாக்கள் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார்கள். அவர்கள் "கர்த்தருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள். பிரதான ஆசாரியருடைய பட்டமும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. (2சாமு 1:14,16; 1சாமு 12:3-5; சங் 2:2; ஆப 3:13).

1 அதிகாரம்

கிரீடம் (crown) - נֵזֶר - neh’-zer, ney’-zer - 5145

ஆ.பெ.சொ.- கிரீடம், தலைமயிர், நசரேயனாயிருத்தல், பொருத்தனைமுடி, பொருத்தனை செய்யப்படுதல், நசரேயவிரதம், விரதங்காத்தல்

2. இஸ்ரவேலின் தோல்விக்காகத் துக்கம்

2சாமு 1:11 அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த சகல மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,

2சாமு 1:12 சவுலும், அவன் குமாரனாகிய யோனத்தானும், கர்த்தருடைய ஜனங்களும், இஸ்ரவேல் குடும்பத்தாரும், பட்டயத்தாலே விழுந்தபடியினால் புலம்பி அழுது சாயங்காலமட்டும் உபவாசமாயிருந்தார்கள்.

“புலம்பி அழுது சாயங்காலமட்டும் உபவாசமாயிருந்தார்கள்” - சவுலும், அவன் குமாரனாகிய யோனத்தானும், கர்த்தருடைய ஜனங்களும், இஸ்ரவேல் குடும்பத்தாரும், பட்டயத்தாலே விழுந்தார்கள். இதற்காகத் தாவீதும் அவனோடிருந்த சகல மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு புலம்பி அழுது சாயங்காலமட்டும் உபவாசமாயிருந்தார்கள். தாவீதும், அவன் மனுஷரும் செய்வது ஒரு விநோதமான காரியம். ஏனெனில் சவுல் நீண்டகாலம் தாவீதின் சத்துருவாக இருந்தான். தாவீதைக் கொல்வதற்காக அவன் பல முயற்சிகளை மேற்கொண்டான். இப்படிப்பட்ட சவுல் மரித்தபோது, தாவீது சந்தோஷப்படாமல், தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு துக்கமாயிருக்கிறான். தாவீதோடு சேர்ந்து, அவனுடைய மனுஷரும் சவுலுக்காகத் துக்கமாய் இருக்கிறார்கள். (2சாமு 1:12,17). சவுலைப் பற்றிக்கூறும் போதெல்லாம் தாவீது அவனைத் தன்னுடைய நண்பனான யோனத்தானுக்கு இணையாக நல்ல வார்த்தைகளாலேயே கூறியிருக்கிறான்.

அவையாவன: “கர்த்தர் அபிஷேகம் பண்ணியவர்” **"the Lord's anointed"** *(2சாமு 1:14-16)*, “இஸ்ரவேலின் அலங்காரம்” **"the beauty of Israel"** *(2சாமு 1:19)*, “பராக்கிரமசாலி” **"the mighty"** *(2சாமு 1:21-22)*, “கழுகைப் பார்க்கிலும் வேகமானவர்” **"swifter than eagles"** “சிங்கங்களைப் பார்க்கிலும் பலமுள்ளவர்” **"stronger than lions"** *(2சாமு 1:23)*, “பிரியமும், இன்பமுமானவர்” **"lovely and pleasant"***(2சாமு 1:23)*. சவுலுக்காக அழுது புலம்புமாறு தாவீது இஸ்ரவேலின் குமாரத்திகளுக்கு ஆலோசனை கூறுகிறான். *(2சாமு 1:24)*.

3. அமலேக்கியன் வெட்டப்பட்டு மரித்தான்

2சாமு 1:13 தாவீது அதைத் தனக்கு அறிவித்த வாலிபனைப் பார்த்து: நீ எவ்விடத்தான் என்று கேட்டதற்கு, அவன்: நான் அந்நிய ஜாதியானுடைய மகன், நான் அமலேக்கியன் என்றான்.

2சாமு 1:14 தாவீது அவனை நோக்கி: கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரைக் கொன்றுபோடும்படி நீ உன் கையை நீட்டப் பயப்படாமற்போனது என்ன என்று சொல்லி,

2சாமு 1:15 வாலிபரில் ஒருவனைக் கூப்பிட்டு, நீ கிட்டப்போய் அவன்மேல் விழுந்து, அவனை வெட்டு என்றான்; அவன் அவனை வெட்டினான்; அவன் செத்தான்.

2சாமு 1:16 தாவீது அவனைப் பார்த்து: உன் இரத்தப்பழி உன் தலையின்மேல் இருப்பதாக; கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரை நான் கொன்றுபோட்டேன் என்று உன் வாயே உனக்கு விரோதமான சாட்சி சொல்லிற்று என்றான்.

“நான் அமலேக்கியன்” - அமலேக்கியரை முழுவதுமாக அழித்துப் போடுமாறு கர்த்தர் சவுலுக்கு ஆணையிட்டிருந்தார். சவுல் கர்த்தருடைய வார்த்தைக்கு முழுவதுமாகக் கீழ்ப்படியவில்லை. அதன் விளைவாக சவுலின் கிரீடத்தை எடுத்துப் போடுவதற்குக் கர்த்தர் ஓர் அமலேக்கியனைப் பயன்படுத்தி விட்டார். *(1சாமு 15:3; யாத் 17:16)*

II சாமுவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

"கர்த்தர் அபிஷேகம்பண்ணினவரைக் கொன்று போடும்படி" - சவுலைக் கொல்லும் அளவுக்கு அமலேக்கியனின் கை பயப்படாமல் இருக்குமானால், அவன் மரணத்திற்கு பாத்திரவான் என்று தாவீது தீர்மானம் பண்ணுகிறான். தாவீது தன்னுடைய வாலிபரில் ஒருவனை அழைத்து, அந்த அமலேக்கியனைக் கொன்றுபோடுமாறு கூறுகிறான். அமலேக்கியன் தனக்கு வெகுமதி கிடைக்குமென்று பொய் கூறினான். ஆனால் அவனுக்கு மரணமே கிடைத்தது. (2சாமு 1:14-16).

4. தாவீது சவுலின் பேரிலும் யோனத்தானின் பேரிலும் பாடிய புலம்பல்

2சாமு 1:17 தாவீது சவுலின்பேரிலும், அவன் குமாரனாகிய யோனத்தானின் பேரிலும், புலம்பல் பாடினான்.

2சாமு 1:18 (வில்வித்தையை யூதா புத்திரருக்குக் கற்றுக்கொடுக்கும்படி கட்டளையிட்டான்; அது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.) அவன் பாடின புலம்பலாவது:

2சாமு 1:19 இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று; பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்கள்.

2சாமு 1:20 பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும், விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும், அதைக் காத் பட்டணத்தில் அறிவியாமலும் அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள்.

2சாமு 1:21 கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும், காணிக்கைக்கு ஏற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படாதவர்போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே.

2சாமு 1:22 கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும், பராக்கிரமசாலிகளின் நிணத்தை உண்ணாமலும், யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை; சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை.

2சாமு 1:23 உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும் பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள்; மரணத்திலும் பிரிந்துபோனதில்லை; கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப் பார்க்கிலும் பலமுள்ளவர்களாயிருந்தார்கள்.

2சாமு 1:24 இஸ்ரவேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து, உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த சவுலுக்காக அழுது புலம்புங்கள்.

2சாமு 1:25 போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே, யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே.

2சாமு 1:26 என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது.

2சாமு 1:27 பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே; யுத்த ஆயுதங்கள் எல்லாம் அழிந்துபோயிற்றே, என்று பாடினான்.

தாவீதின் புலம்பல் பாடல்

இது பழைய ஏற்பாட்டில் காணப்படும் மிகவும் நேர்த்தியான புலம்பல் பாட்டு. தாவீது இதில் வார்த்தைகளை அழகாகக் கோர்த்திருக்கிறான். சவுலின் மூலமாகத் தாவீதுக்கு பல நெருக்கங்கள் உண்டாயிற்று. ஆனாலும் அதையெல்லாம் மறந்து விட்டு, தாவீது சவுலுக்காகவும், யோனத்தானுக்காகவும் தன் இருதயத்தின் ஆழத்தில் துக்கப்பட்டு, புலம்பற்பாட்டு பாடியிருக்கிறான். சவுலைப் பற்றிய எந்தச் செய்தியையும் தாவீது இந்தப் பாட்டில் மறைக்கவில்லை. வார்த்தைக்கு வார்த்தை அவனைப் புகழ்ந்து கூறியிருக்கிறான்.

II சாமுவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

கிழக்கு தேசத்தில் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு தலைப்பைக் கொடுப்பது வழக்கம். தாவீது பாடிய புலம்பல் பாடலுக்கு "கேஷேத்" (Qesheth) என்னும் தலைப்பு இஸ்ரவேல் புத்திரரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு "வில்" என்று பொருள். சவுல் வில்வித்தையை யூதா புத்திரருக்குக் கற்றுக்கொடுக்கும்படி கட்டளையிட்டான். *(2சாமு 1:18).*

பெலிஸ்தருடைய வில்வீரர்களால் சவுல் மரித்தான். *(1சாமு 31:3)* யோனத்தானும் வில்லை எய்வதில் சிறந்தவன். *(2சாமு 1:22).* பென்யமீன் கோத்திரத்தார் அனைவருமே வில்வீரர்கள். *(1நாளா 8:40; 1நாளா 12:2; 2நாளா 14:8; 2நாளா 17:17).* சவுல் தன்மீது கோபமாக இருக்கிறானா என்பதை யோனத்தான் வில்எறிந்து தாவீதுக்குத் தெரியப்படுத்தினான். *(1சாமு 20:36).* இந்தச் சம்பவத்தைத் தாவீது தன் வாழ்நாளில் மறக்கவே மாட்டான்.

"யாசேர்" (Jasher) - *(யோசு 10:13)*

கில்போவா யுத்தத்தைப் பற்றிய வர்ணனை

1. இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று *(2சாமு 1:19).* இந்த வாக்கியத்தில் "அலங்காரம்" என்பதற்கான எபிரெய வார்த்தை "த்சேபிய்" (tsebiy) என்பதாகும். இஸ்ரவேல் தேசம் அழகானது என்பது இதன் உட்பொருள்.
2. பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்கள்.
3. பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப் படாதபடிக்கும், விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும், அதைக் காத் பட்டணத்தில் அறிவியாமலும் அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப் படுத்தாமலும் இருங்கள். *(2சாமு 1:20).*
4. கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனியும் மழையும் பெய்யாமலும், காணிக்கைக்கு ஏற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம்பண்ணப்படாதவர் போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே. *(2சாமு 1:21).*
5. கொலையுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாமலும், பராக்கிரமசாலிகளின் நிணத்தை உண்ணாமலும், யோனத்தானுடைய வில் பின்வாங்கினதில்லை; சவுலின் பட்டயம் வெறுமையாய்த் திரும்பினதில்லை. *(2சாமு 1:22).*
6. உயிரோடே இருக்கையில் சவுலும் யோனத்தானும் பிரியமும் இன்பமுமாயிருந்தார்கள்; மரணத்திலும் பிரிந்துபோனதில்லை *(2சாமு 1:23).*
7. கழுகுகளைப் பார்க்கிலும் வேகமும், சிங்கங்களைப்பார்க்கிலும் பலமுள்ளவர்களாயிருந்தார்கள்.
8. இஸ்ரவேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து, உங்கள் உடையின்மேல் பொன் ஆபரணங்களைத் தரிப்பித்த சவுலுக்காக அழுது புலம்புங்கள். *(2சாமு 1:24).*
9. போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் விழுந்தார்களே *(2சாமு 1:25,27)*
10. யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே.
11. என் சகோதரனாகிய யோனத்தானே, உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப்பார்க்கிலும் அதிகமாயிருந்தது.

அலங்காரம் (beauty) - צְבִי - tseb-ee' - 6643

ஆண்பால் பெயர்ச்சொல் - கலைமான், அலங்காரம், வெளிமான், சிங்காரம், நல்ல, ஜோடிப்பு, மகிமை, மேன்மை

II சாமுவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

"உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து" - சவுலின் ராஜ்யபாரத்தில் இஸ்ரவேல் தேசத்து, வளமும், செழிப்பும் உண்டாயிருந்தது என்பதை இந்த வாக்கியம் விவரிக்கிறது. இராத்தாம்பரம் ஐசுவரியத்தின் அடையாளம்.

"யோனத்தானே, உயரமான ஸ்தலங்களிலே வெட்டுண்டு போனாயே" - யோனத்தான் மலை ஏறுவதில் வல்லவன். ஆனாலும் அவன் கில்போவா மலையில் மரித்துப் போனான்.

" பராக்கிரமசாலிகள் விழுந்து போனார்களே" - இந்தப் புலம்பல் பாடலில் பராக்கிரமசாலிகள் விழுந்துபோனதைப் பற்றி மூன்று இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (2சாமு 1:19,25,27).

2 அதிகாரம்

II. தாவீது இஸ்ரவேலின் இராஜாவானான் -(2சாமு 2:1-5:25)

1. யூதாவின் இராஜாவானான்

2சாமு 2:1 பின்பு தாவீது கர்த்தரை நோக்கி: நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான். அதற்குக் கர்த்தர்: போ என்றார்; எவ்விடத்திற்குப் போகலாம் என்று தாவீது கேட்டதற்கு, அவர்: எப்ரோனுக்குப் போ என்றார்.

2சாமு 2:2 அப்படியே தாவீது தன் இரண்டு மனைவிகளாகிய யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமோடும், நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயிலோடும் கூட அவ்விடத்திற்குப் போனான்.

2சாமு 2:3 அன்றியும் தன்னோடிருந்த மனுஷரையும், அவர்கள் குடும்பங்களையும் கூட்டிக் கொண்டுபோனான்; அவர்கள் எப்ரோனின் சுற்றூர்களிலே குடியேறினார்கள்.

2சாமு 2:4 அப்பொழுது யூதாவின் மனுஷர் வந்து, அங்கே தாவீதை யூதா வம்சத்தாரின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள். கீலேயாத்தேசத்து யாபேசின் மனுஷர் சவுலை அடக்கம் பண்ணினவர்கள் என்று அவர்கள் தாவீதுக்கு அறிவித்தபோது,

"எப்ரோன்" (Hebron) - எப்ரோன் ஏழரை வருஷங்களாகத் தாவீதின் தலைநகரமாக இருந்தது. அதன் பின்பு எருசலேம் சமஸ்த இஸ்ரவேலுக்கும் தலைநகரமாயிற்று.(2சாமு 2:1-7;2சாமு 3:1-6; 2சாமு 5:1-12).

"தாவீது தன் இரண்டு மனைவிகளாகிய" - தாவீது தன்னுடைய இரண்டு மனைவிகளையும் தன்னுடைய எல்லா மனுஷரையும் அவர்களுடைய வீட்டாரையும் சிக்லாகிலிருந்து எப்ரோனுக்கு அழைத்துச் சென்றான். யூதாவைச் சுற்றிலுமுள்ள பட்டணங்களில் அவர்கள் குடியேறினார்கள்.

(2சாமு 2:2,3).

"நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயில்" - அபிகாயிலைப் பற்றி கூறப்படும்போதெல்லாம் நாபாலின் மனைவி என்று சேர்த்தே கூறப்படுகிறது. ஏனெனில் தாவீதுக்கு இதே பெயரில் ஒரு சகோதரியும் இருக்கிறாள். (2சாமு 17:25; 1நாளா 2:16-17; 2சாமு 2:2; 2சாமு 3:3; 1சாமு 25:3,14,18, 23,32,36,39-42; 1சாமு 27:3; 1சாமு 30:5; 1நாளா 3:1).

"தாவீதை யூதா வம்சத்தாரின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்" - தாவீதின் ராஜரீகம் ஆரம்பமாயிற்று. பல வருஷங்களுக்கு முன்பாக சாமுவேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். (1சாமு 16) அதன் பின்பு, தாவீது பல இக்கட்டுக்கள் வழியாகக் கடந்து சென்றார். எல்லா வழிகளிலும் நெருக்கப்பட்டார். ஒரு ராஜாவாக ஆட்சி புரிவதற்குத் தேவையான பயிற்சிகளையெல்லாம் பெற்றுக் கொண்டார். தாவீது யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். அந்தக் கோத்திரத்தாரே தாவீதை முதன் முதலாக ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறார்கள். யூதா ஆட்சி செய்யும் கோத்திரமாக இருக்கும் என்னும் தீர்க்கதரிசனமும், யூதா கோத்திரத்து நித்திய ராஜாவாகிய மேசியா வருவார் என்னும் தீர்க்கதரிசனமும் நிறைவேற ஆரம்பிக்கிறது. (ஆதி 49:10; 1நாளா 5:2). இப்போது தாவீதுக்கு முப்பது வயதாயிற்று. (2சாமு 5:4) தாவீது கோலியாத்தைக் கொன்று 10 அல்லது 12 வருஷங்கள் ஆயிற்று. (1சாமு 16-2சாமு 2).

2. சவுலை அடக்கம் பண்ணியதற்காக கீலேயாத் தேசத்து யாபேசின் மனுஷருக்கு ஆசீர்வாதம்

2சாமு 2:5 தாவீது கீலேயாத்தேசத்து யாபேசின் மனுஷரிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி, நீங்கள் உங்கள் ஆண்டவனாகிய சவுலுக்கு இந்தத் தயவைச் செய்து, அவரை அடக்கம்பண்ணினபடியினாலே, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

2சாமு 2:6 கர்த்தர் உங்களைக் கிருபையும் உண்மையுமாய் நடத்துவாராக; நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், நானும் இந்த நன்மைக்குத்தக்கதாக உங்களை நடத்துவேன்.

II சாமுவேல் - தொகுப்புரை

2 அதிகாரம்

2சாமு 2:7 இப்போதும் நீங்கள் உங்கள் கைகளைத் திடப்படுத்திக்கொண்டு நல்ல சேவகராயிருங்கள்; உங்கள் ஆண்டவனாகிய சவுல் மரித்தபின்பு, யூதா வம்சத்தார் என்னைத் தங்கள்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் என்று அவர்களுக்குச் சொல்லச் சொன்னான்.

"தாவீது கீலேயாத்தேசத்து யாபேசின் மனுஷரிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி" - இந்தத் தேசத்து மனுஷர்கள் சவுலின் உடலை அடக்கம் பண்ணினார்கள். அவர்களுடைய கிரியைகளுக்காக அவர்களை ஆசீர்வதித்ததே தாவீது ராஜாவின் முதலாவது செய்கையாகும். (2சாமு 2:4-7). சவுல்மீது தாவீது உயர்ந்த மரியாதை வைத்திருக்கிறான். சவுல் தனக்கு தீங்கு செய்த போதிலும் தாவீது தன்னுடைய உள்ளத்தில் சவுலுக்கு உண்மையான மரியாதை கொடுக்கிறான்.

"யூதா வம்சத்தார் என்னைத் தங்கள்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்" - தாவீது ராஜதந்திரத்தைப் பயன்படுத்துகிறான். தனக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களை எல்லாம் பயன்படுத்தி தான் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிற செய்தியை எல்லோருக்கும் அறிவிக்கிறான்.

3. இஸ்ரவேல் ராஜ்யத்தில் முதல் பிரிவினை -(15:1; 20:1;1இராஜா 12:1)

2சாமு 2:8 சவுலின் படைத்தலைவனான நேரின் குமாரனாகிய அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை மகனாயீமுக்கு அழைத்துக்கொண்டு போய்,

2சாமு 2:9 அவனைக் கிலேயாத்தின் மேலும், அஷூரியர்மேலும், யெஸ்ரயேலின் மேலும், எப்பிராயீமின் மேலும், பென்யமீனின் மேலும், இஸ்ரவேலனைத்தின் மேலும், ராஜாவாக்கினான்.

2சாமு 2:10 சவுலின் குமாரனாகிய இஸ்போசேத் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகிறபோது, நாற்பது வயதாயிருந்தான்; அவன் இரண்டு வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்; யூதா கோத்திரத்தார்மாத்திரம் தாவீதைப் பின்பற்றினார்கள்.

2சாமு 2:11 தாவீது எப்ரோனிலே யூதா கோத்திரத்தின்மேல் ராஜாவாயிருந்த நாட்களின் இலக்கம் ஏழு வருஷமும் ஆறுமாதமுமாம்.

"அப்னேர்" - இவன் சவுலின் படைத்தலைவன். நேரின் குமாரன். வரலாற்றுக் காலத்தில் தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்குமாறு சாத்தான் யாரையாவது பயன்படுத்திக் கொண்டுவருவான். இப்போது தேவனுடைய சித்தத்திற்கு எதிராக அப்னேர் கிரியை செய்கிறான். இவன் சவுலின் சிறிய தகப்பன். சவுலின் ராஜ்யபாரத்தில் உயர்ந்த அந்தஸ்தத்தில் இருந்தவன். இப்போது ராஜ்யபாரம் தாவீதின் கையில் இருக்கிறது. தாவீது தனக்கு உயர்ந்த அந்தஸ்து கொடுப்பானோ அல்லது கொடுக்கமாட்டானோ என்னும் சந்தேகம் அப்னேரின் உள்ளத்தில் இருக்கிறது. சவுலுக்கு இஸ்போசேத் என்னும் குமாரன் இருந்தான். அப்னேர் அவனை மகனாயீமுக்கு அழைத்துக் கொண்டுபோய், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு அவனை ராஜாவாக்கினான். (2சாமு 2:8-9). தாவீது யூதா கோத்திரத்தின்மீது ராஜாவாக இருக்கிறான். அப்னேரின் துர்ச்செய்கைக்காக தாவீது அவன்மீது உடனடியாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. கர்த்தருடைய ஏற்ற வேளைக்காக தாவீது ஏழு வருஷங்கள் காத்திருக்கிறான். அதன் பின்பு, இஸ்ரவேல் கோத்திரத்தார் சமஸ்த இஸ்ரவேல் தேசமாக ஆனார்கள். (2சாமு 2:10-11; 2சாமு 5:1-5).

"இஸ்போசேத்" (Ish-Bosheth) - இந்தப் பெயருக்கு "அவமானத்தின் மனுஷன்" (man of shame) என்று பொருள். இவன் தாவீதின் இளைய குமாரன். இப்போது இவன் மட்டுமே உயிரோடு இருக்கிறான். அப்னேர் இவனை பென்யமீன் கோத்திரத்தின்மீதும், யூதாவைத் தவிர, இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தின்மீதும் ராஜாவாக்கினான். (2சாமு 2:8-15; 2சாமு 3:7-15; 2சாமு 4:5-12). மறுபெயர் எஸ்பால் (Esh-baal) இந்தப் பெயருக்கு "பாகாலின் மனுஷன்" (man of Baal) என்று பொருள். (1நாளா 8:33; 1நாளா 9:39). இதுவே இவனுடைய முதலாவது பெயராக இருந்திருக்க வேண்டும். பாகாலின் பெயர் இவனோடு சேர்ந்து வருவதினால் இது அவமானமாகக் கருதப்பட்டு, "அவமானத்தின் மனுஷன்" என்று பொருள்படும் இஸ்போசேத் என்னும் பட்டப்பெயர் இவனுக்கு வழங்கப்படலாயிற்று.

2 அதிகாரம்

இஸ்போசேத்தின் வரலாறு

இஸ்போசேத் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகிற போது, நாற்பது வயதாயிருந்தான். இரண்டு வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான். இஸ்ரவேல் கோத்திரத்தாரை ஒன்றாக இணைப்பதற்கு அப்னேருக்கு ஐந்து வருஷமாயிற்று. பாலஸ்தீன தேசத்தின் வடக்கு பகுதியில் பெலிஸ்தரோடு நடைபெற்ற யுத்தத்தில் பெலிஸ்தருக்குப் பயந்து, இஸ்ரவேலர் எல்லோரும் பல திசைகளிலும் பயந்து ஓடிவிட்டார்கள். இந்த யுத்தத்தில் சவுலும், அவன் குமாரரும் மரித்துப்போனார்கள். பயந்து ஓடிப்போன இஸ்ரவேலரை அப்னேர் திரும்பவும் அழைத்துக் கொண்டு வந்தான். இஸ்போசேத்தை அந்தக் கோத்திரத்தார்மீது அப்னேர் ராஜாவாக்கினான். இஸ்ரவேல் புத்திரர் யுத்தத்தில் தோற்றுப்போனபோது, அவர்களுடைய பட்டணங்களில் பெலிஸ்தர் வந்து குடியேறினார்கள். இஸ்ரவேல் புத்திரர் யோர்தானையும் தாண்டி ஓடிப்போய் விட்டார்கள். (1சாமு 31:7).

இஸ்ரவேலுக்கும், யூதாவிற்கும் இடையில் யுத்தம் நடைபெறுவதற்கு முன்பாக இஸ்போசேத் இரண்டு வருஷங்கள் மட்டுமே ராஜ்யபாரம் பண்ணினான். (2சாமு 2:12-32) சவுலின் குடும்பத்திற்கும், தாவீதின் குடும்பத்திற்கும் நெடுநாள் யுத்தம் நடந்தது. (2சாமு 3:1) தாவீது எப்ரோனைத் தலைநகரமாகக் கொண்டு, ஆட்சி புரிந்த ஏழரை வருஷக்காலத்திலும் இந்த யுத்தம் நடைபெற்றிருக்கலாம். இந்த யுத்தத்தில் தாங்கள் தாவீதுக்கு எதிராக எதிர்த்து நிற்க வேண்டுமென்றால், யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள கோத்திரத்தார் அனைவரும் தங்களோடு இணைய வேண்டுமென்று அப்னேர் திட்டம் பண்ணினான். அவர்களை இணைப்பதற்கு அப்னேருக்கு ஐந்து வருஷமாயிற்று. அதன் பின்பு, சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை அப்னேர் மகனாயீமில் ராஜாவாக்கினான். இதன் பின்பு, அஷூரியரும், யெஸ்ரயேலரும், எப்பிராயீமரும், மற்ற கோத்திரத்தாரும் இஸ்போசேத்தை ராஜாவாக ஏற்றுக் கொண்டார்கள். (2சாமு 2:8-10).

தாவீதுக்கு எதிராக அப்னேர் தொடர்ந்து சதி பண்ணிக்கொண்டிருந்தான். ஆனாலும் தாவீது உடனடியாக அப்னேர்மீது யுத்தம் பண்ணவில்லை. இஸ்ரவேல் தேசம் முழுவதற்கும், ராஜாவாக ஆகும் ஏற்ற காலத்திற்காகத் தாவீது பொறுமையோடு காத்துக் கொண்டிருந்தார். அப்னேரும், அவனுடைய சேவகரும் மகனாயீமிலிருந்து பென்யமீனிலுள்ள கிபியோனுக்குப் போனபோது, தாவீதின் மனுஷர் அவனோடு யுத்தம் பண்ணினார்கள். இந்த யுத்தத்தில் அப்னேர் தோல்வியுற்றான். (2சாமு 2:12-32).

4. உள்நாட்டுக் குழப்பம் - (2இராஜா 25:25)

(1) கிபியோனில் யுத்தம்

2சாமு 2:12 நேரின் குமாரனாகிய அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தின் சேவகரைக் கூட்டிக் கொண்டு, மகனாயீமிலிருந்து கிபியோனுக்குப் புறப்பட்டுப்போனான்.

2சாமு 2:13 அப்பொழுது செருயாவின் குமாரனாகிய யோவாபும் தாவீதின் சேவகரும் புறப்பட்டுப்போய், கிபியோனின் குளத்தண்டையில் ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்டு, குளத்திற்கு அந்தப்பக்கத்தில் அவர்களும், குளத்திற்கு இந்தப்பக்கத்தில் இவர்களும் இறங்கினார்கள்.

2சாமு 2:14 அப்னேர் யோவாபை நோக்கி: வாலிபர் எழுந்து, நமக்கு முன்பாகச் சிலம்பம் பண்ணட்டும் என்றான். அதற்கு யோவாப்: அவர்கள் எழுந்து, அப்படிச் செய்யட்டும் என்றான்.

2சாமு 2:15 அப்பொழுது சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தின் பக்கத்திற்குப் பென்யமீன் மனுஷரில் பன்னிரண்டுபேரும், தாவீதுடைய சேவகரிலே பன்னிரெண்டு பேரும், எழுந்து ஒரு பக்கமாய்ப் போய்,

2சாமு 2:16 ஒருவர் தலையை ஒருவர் பிடித்து, ஒருவருடைய விலாவிலே ஒருவர் பட்டயத்தினாலே குத்தி, ஒருமிக்க விழுந்தார்கள்; அதினாலே கிபியோனிலிருக்கிற அந்த ஸ்தலம் எல்காத் அசூரிம் என்னப்பட்டது.

2 அதிகாரம்

2சாமு 2:17 அன்றையதினம் மிகவும் கடினமான யுத்தமாகி, அப்னேரும் இஸ்ரவேல் மனுஷரும் தாவீதின் சேவகரால் முறிய அடிக்கப்பட்டார்கள்.

"மகனாயீமிலிருந்து கிபியோனுக்குப் புறப்பட்டுப்போனான்" - கிபியோன் பென்யமீனிலுள்ள பட்டணம். அப்னேரின் சொந்த ஊர். இஸ்ரவேலின் தலைநகரை மகனாயீமிலிருந்து கிபியோனுக்கு மாற்ற வேண்டும் எஎன்பது அப்னேரின் எண்ணம். (1நாளா 8:29-30; 1நாளா 9:35-36) கிபியோனிலிருந்து எப்ரோனிலுள்ள தாவீதின்மீது யுத்தம் பண்ண அப்னேருக்கு வசதியாக இருக்கும்.

"தாவீதின் சேவகரும் புறப்பட்டுப்போய்" - இந்த வாக்கியத்தில் "புறப்பட்டுப்போய்" என்னும் வார்த்தைக்கு யுத்தம் பண்ணுதல் என்று பொருள். (நியா 3:10; 1சாமு 18:30; 2சாமு 11:1; 1இராஜா 20:18; 1நாளா 7:11; 2நாளா 6:34; 2நாளா 26:11)

"வாலிபர் எழுந்து, நமக்கு முன்பாகச் சிலம்பம் பண்ணட்டும்" - இரண்டு சேனைகள் எதிரெதிராக சந்திக்கும்போது தங்களுடைய வெற்றி தோல்வியை நிர்ணயம் பண்ணுவதற்கு ஒரு சில வீரர்களை மட்டும் பயன்படுத்தி, அவர்களுடைய திறமையைச் சோதித்து பார்த்து, முடிவு பண்ணுவது அக்காலத்து வழக்கம். (1சாமு 17). இரண்டு பக்கத்திலும் பன்னிரண்டுபேர், எழும்பி, ஒருவர் தலையை ஒருவர் பிடித்து, ஒருவருடைய விலாவிலே ஒருவர் பட்டயத்தினாலே குத்தி, ஒருமிக்க விழுந்தார்கள். இவர்களுடைய சண்டையினால் யுத்தம் முடிவு பெறுவதற்குப் பதிலாக வலுவடைந்தது. யுத்தத்தில் அப்னேரும், அவனுடைய சேனையும் தோற்று ஓடிப்போனார்கள். (2சாமு 2:12-32).

"எல்காத் அசூரிம்" **(Helkath-hazzurim)** - இந்தப் பெயருக்கு "பட்டயங்களின் நிலம்" **(field of the swords)** என்று பொருள். கிபியோனுக்கு அருகிலுள்ள இந்த இடத்தில் 24 வீரர்கள் ஒருவரையொருவர் பட்டயத்தால் குத்தி ஒருமிக்க விழுந்தார்கள்.

(2) அப்னேர் ஆசகேலைக் கொன்றான் - (3:20-39)

2சாமு 2:18 அங்கே செருயாவின் மூன்று குமாரராகிய யோவாபும் அபிசாயும் ஆசகேலும் இருந்தார்கள்; ஆசகேல் வெளியிலிருக்கிற கலைமான்களில் ஒன்றைப்போல வேகமாய் ஓடுகிறவனுமாயிருந்தான்.

2சாமு 2:19 அவன் அப்னேரைப் பின்தொடர்ந்து, வலதுபுறத்திலாகிலும் இடதுபுறத்திலாகிலும், அவனைவிட்டு விலகாமல் துரத்திக் கொண்டுபோனான்.

2சாமு 2:20 அப்னேர் திரும்பிப் பார்த்து: நீ ஆசகேல் அல்லவா என்றான். அவன்: நான்தான் என்றான்.

2சாமு 2:21 அப்பொழுது அப்னேர் அவனை நோக்கி: நீ வலது பக்கத்திற்காகிலும் இடது பக்கத்திற்காகிலும் விலகி, வாலிபரில் ஒருவனைப் பிடித்து, அவனை உரிந்துகொள் என்றான்; ஆசகேலோ விடமாட்டேன் என்று தொடர்ந்து போனான்.

2சாமு 2:22 பின்னும் அப்னேர் ஆசகேலை நோக்கி: நீ என்னை விட்டுப்போ; நான் உன்னைத் தரையோடே ஏன் வெட்டவேண்டும்? பிற்பாடு உன் சகோதரனாகிய யோவாபின் முகத்திலே எப்படி விழிப்பேன் என்றான்.

2சாமு 2:23 ஆனாலும் அவன் விலகிப்போக மாட்டேன் என்றபடியினால், அப்னேர் அவனை ஈட்டியின் பின்புற அலகினால் அவன் வயிற்றிலே குத்தினான்; ஈட்டி முதுகிலே புறப்பட்டது; அவன் அங்கேதானே விழுந்து செத்தான்; ஆசகேல் விழுந்துகிடக்கிற இடத்திலே வந்தவர்களெல்லாரும் தரித்து நின்றார்கள்.

2சாமு 2:24 யோவாபும் அபிசாயும் சூரியன் அஸ்தமிக்குமட்டும் அப்னேரைப் பின்தொடர்ந்தார்கள்; கிபியோன் வனாந்தரவழிக்கு அருகான கீயாவுக்கு எதிரே இருக்கிற அம்மா மேடுமட்டும் வந்தார்கள்.

2 அதிகாரம்

2சாமு 2:21 அப்பொழுது அப்னேர் அவனை நோக்கி: நீ வலது பக்கத்திற்காகிலும் இடது பக்கத்திற்காகிலும் விலகி, வாலிபரில் ஒருவனைப் பிடித்து, அவனை உரிந்துகொள் என்றான்; ஆசகேலோ விடமாட்டேன் என்று தொடர்ந்து போனான்.

2சாமு 2:22 பின்னும் அப்னேர் ஆசகேலை நோக்கி: நீ என்னை விட்டுப்போ; நான் உன்னைத் தரையோடே ஏன் வெட்டவேண்டும்? பிற்பாடு உன் சகோதரனாகிய யோவாபின் முகத்திலே எப்படி விழிப்பேன் என்றான்.

2சாமு 2:23 ஆனாலும் அவன் விலகிப்போகமாட்டேன் என்றபடியினால், அப்னேர் அவனை ஈட்டியின் பின்புற அலகினால் அவன் வயிற்றிலே குத்தினான்; ஈட்டி முதுகிலே புறப்பட்டது; அவன் அங்கேதானே விழுந்து செத்தான்; ஆசகேல் விழுந்துகிடக்கிற இடத்திலே வந்தவர்களெல்லாரும் தரித்து நின்றார்கள்.

2சாமு 2:24 யோவாபும் அபிசாயும் சூரியன் அஸ்தமிக்குமட்டும் அப்னேரைப் பின்தொடர்ந்தார்கள்; கிபியோன் வனாந்தரவழிக்கு அருகான கீயாவுக்கு எதிரே இருக்கிற அம்மா மேடுமட்டும் வந்தார்கள்.

"செருயா" **(Zeruiah)** - (1சாமு 26:6)

"யோவாப்" **(Joab)** - (1சாமு 26:6).

"அபிசாய்" **(Abishai)** - (1சாமு 26:6).

"ஆசகேல்" **(Asahel)** - இந்தப் பெயருக்கு "கர்த்தர் உண்டு பண்ணினார்" **"God has made"** என்று பொருள்.

ஆசகேலின் சுபாவம்

1. வெளியிலிருக்கிற கலைமான்களில் ஒன்றைப்போல வேகமாய் ஓடுகிறவன். (2சாமு 2:18)
2. தீர்மானமாகச் செயல்படுகிறவன். (2சாமு 2:19-21)
3. அஞ்சாதவன். (2சாமு 2:22)
4. உறுதியானவன் (2சாமு 2:23)
5. பராக்கிரமசாலி (2சாமு 23:24)
6. நல்ல தலைவன் (2நாளா 27:7)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஆசகேல்"கள்

1. தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். (2சாமு 2:18-32; 2சாமு 3:27,30; 1நாளா 2:16; 1நாளா 11:26; 1நாளா 27:7)
2. யோசபாத்தின் கீழிருந்த லேவியன். (2நாளா 17:8)
3. எசேக்கியேலின் கீழிருந்த லேவியன். (2நாளா 31:13)
4. எஸ்றாவின் நாட்களில் இருந்த ஒரு யூதன். (எஸ்றா 10:15)

"வாலிபரில் ஒருவனைப் பிடித்து, அவனை உரிந்துகொள்" - யுத்தத்தில் ஒருவனுடைய போராயுதங்களைப் பறித்துக் கொள்வது வெற்றிக்கு அடையாளம். அப்னேர் படைத்தளபதி. அவனுடைய போராயுதம் மிகப்பெரிய வெற்றிக்கு அடையாளம். ஆசகேல் அப்னேரைக் கொன்றுபோட்டு, அவனுடைய ஆயுதங்களை உரிந்து கொள்ள வேண்டுமென்று தீர்மானமாக இருந்தான்.

"அப்னேர் அவனை ஈட்டியின் பின்புற அலகினால் அவன் வயிற்றிலே குத்தினான்" - அப்னேர் தன்னைக் காத்துக் கொள்வதற்காக ஆசகேலைக் கொன்று போட்டான். ஆசகேலைக் கொன்றதற்காக அவனுடைய சகோதரர் அப்னேரைக் கொன்றுபோட்டார்கள். (2சாமு 3:27-39).

(3) பெரிய கலவரம் தவிர்க்கப்பட்டது

2சாமு 2:25 அப்பொழுது அப்னேரைப் பின்சென்ற பென்யமீன் புத்திரர் ஒரே படையாகக் கூடி, ஒரு மலையின் உச்சியிலே நின்றார்கள்.

2 அதிகாரம்

2சாமு 2:26 அப்பொழுது அப்னேர் யோவாபைப் பார்த்துக் கூப்பிட்டு, பட்டயம் எப்போதும் சங்காரம் பண்ணிக் கொண்டிருக்கவேண்டுமோ, முடிவிலே கசப்புண்டாகும் என்று அறியீரோ, தங்கள் சகோதரரை விட்டுப் பின்வாங்கும்படிக்கு எந்த மட்டும் ஜனங்களுக்குச் சொல்லாதிருப்பீர் என்றான்.

2சாமு 2:27 அதற்கு யோவாப்: இன்று காலமே நீர் பேசாதிருந்தீரானால் ஜனங்கள் அவரவர் தங்கள் சகோதரரைப் பின்தொடராமல், அப்போதே திரும்பி விடுவார்கள் என்று தேவனுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

2சாமு 2:28 யோவாப் எக்காளம் ஊதினான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் இஸ்ரவேலைத் தொடராமலும், யுத்தம்பண்ணாமலும் நின்றுவிட்டார்கள்.

2சாமு 2:29 அன்று ராமுழுவதும் அப்னேரும் அவன் மனுஷரும் அந்தரவெளி வழியாய்ப் போய், யோர்தானைக் கடந்து பித்ரோனை உருவ நடந்து தாண்டி, மகனாயீமுக்குப் போனார்கள்.

2சாமு 2:30 யோவாப் அப்னேரைத் தொடராமல் ஜனங்களையெல்லாம் கூடிவரச்செய்தான்; தாவீதின் சேவகரில் பத்தொன்பதுபேரும் ஆசகேலும் குறைந்திருந்தார்கள்.

2சாமு 2:31 தாவீதின் சேவகரோ பென்யமீனரிலும், அப்னேரின் மனுஷரிலும், முந்நூற்றறுபதுபேரை மடங்கடித்தார்கள்.

2சாமு 2:32 அவர்கள் ஆசகேலை எடுத்து, பெத்லெகேமிலுள்ள அவனுடைய தகப்பன் கல்லறையிலே அவனை அடக்கம்பண்ணினார்கள்; யோவாபும் அவன் மனுஷரும் இரா முழுவதும் நடந்து, பொழுது விடியும் போது எப்ரோனிலே சேர்ந்தார்கள்.

"பித்ரோன்" **(Bithron)** - இந்தப் பெயருக்கு "பாறையான இடம்" **"a craggy spot"** அல்லது "குறுகிற மலை இடுக்கு" **"ravine"** என்று பொருள். யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் இந்த இடம் அமைந்துள்ளது.

"மகனாயீம்" **(Mahanaim)** - இந்தப் பெயருக்கு "இரண்டு பாளயங்கள்" **"two camps"** என்று பொருள். யாக்கோபு இந்த இடத்திற்கு மகனாயீம் என்று பெயரிட்டான். ஏசா நானூறுபேருடன் வந்தபோது தேவதூதர்களின் இரண்டு சேனைகள் யாக்கோபை இங்கு சந்தித்தார்கள். (2சாமு 2:8,13,29; 2சாமு 17:24,27; 2சாமு 19:32; ஆதி 32:2; யோசு 13:26,30; யோசு 21:38; 1இராஜா 2:8; 1இராஜா 4:14; 1நாளா 6:80).

"சேவகரில் பத்தொன்பதுபேரும் ஆசகேலும் குறைந்திருந்தார்கள்" - தாவீது இருபது பேரை இழந்தான். அப்னேர் 360 பேரை இழந்தான். (2சாமு 2:31).

"இராமுழுவதும் நடந்து" - தாவீதின் மனுஷர் இரவு முழுவதும் 22 மைல் நடந்தார்கள். அப்னேரும், அவன் மனுஷரும் தங்கள் ஸ்தலத்திற்கு 50 மைல் நடந்தேபோனார்கள். (2சாமு 2:29).

3 அதிகாரம்

(4) மறுபடியும் உள்நாட்டுக் குழப்பம் - (2இராஜா 25:25)

2சாமு 3:1 சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்கும் நெடுநாள் யுத்தம் நடந்தது; தாவீது வரவர பலத்தான்; சவுலின் குடும்பத்தாரோ வரவர பலவீனப்பட்டுப்போனார்கள்.

"நெடுநாள் யுத்தம் நடந்தது" - சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்கும் இடையே பெரிய விரோதம் எதுவும் இல்லை. இவ்விரண்டு குடும்பங்களுக்கும் இடையில் அப்னேர் நடுவில் வந்து, அவர்களுக்குள் பிரச்சனையை உண்டுபண்ணுகிறான். இவன் சவுலின் சேனைத்தலைவனாக இருந்தவன். தாவீது ராஜாவாக ஆவதை இவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இவ்விரண்டு குடும்பங்களுக்கும் நடுவில் ஏழரை வருஷங்களுக்கு யுத்தம் நடைபெற்றது. (2சாமு 2:8-11). இந்த யுத்தத்தினால் யூதா கோத்திரத்திற்கும், மற்ற கோத்திரங்களுக்கும் இடையில் உள்ள பிரிவினை அதிகரித்தது. இறுதியில் சமஸ்த இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிந்தது. அதன் பின்பு 260 வருஷங்களாக இஸ்ரவேல் தேசம் வடக்கு இஸ்ரவேல் தேசம் எனவும், தெற்கு யூதா தேசம் எனவும் இரண்டாகப் பிரிந்திருந்தது. (1இராஜா 12-2இராஜா 25). இந்த யுத்தத்தில் கர்த்தர் தாவீதோடு இருந்தார். ஆகையினால் தாவீது வரவர பலத்தான்; சவுலின் குடும்பத்தாரோ வரவர பலவீனப்பட்டுப் போனார்கள்.

5. எப்ரோனிலே தாவீதின் குடும்பத்தார்

2சாமு 3:2 எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்த குமாரர்: யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமிடத்தில் பிறந்த அம்னோன் அவனுக்கு முதல் பிறந்தவன்.

2சாமு 3:3 நாபாலின் மனைவியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயிலிடத்திலே பிறந்த கிலேயாப் அவனுடைய இரண்டாம் குமாரன்; மூன்றாம் குமாரன் கேசூரின் ராஜாவான தல்மாய் குமாரத்தியாகிய மாக்காள் பெற்ற அப்சலோம் என்பவன்.

2சாமு 3:4 நாலாம் குமாரன் ஆகீத் பெற்ற அதொனியா என்பவன்; ஐந்தாம் குமாரன் அபித்தால் பெற்ற செப்பத்தியா என்பவன்.

2சாமு 3:5 ஆறாம் குமாரன் தாவீதின் மனைவியாகிய எக்லாளிடத்தில் பிறந்த இத்ரேயாம் என்பவன்; இவர்கள் எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்தவர்கள்.

தாவீதின் பெரிய குடும்பம்

எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்த ஆறு குமாரர்

1. யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமிடத்தில் பிறந்த அம்னோன் (2சாமு 2:2)
2. கர்மேல் ஊராளான அபிகாயிலிடத்திலே பிறந்த கிலேயாப் (2சாமு 2:3); மறுபெயர் தானியேல் **(Daniel)** (1நாளா 3:1)
3. கேசூரின் ராஜாவான தல்மாயின் குமாரத்தியாகிய மாக்காள் பெற்ற அப்சலோம்.
4. ஆகீத் பெற்ற அதொனியா (2சாமு 2:4)
5. அபித்தால் பெற்ற செப்பத்தியா.
6. எக்லாளிடத்தில் பிறந்த இத்ரேயாம் (2சாமு 2:5)

எருசலேமில் தாவீதுக்குப் பிறந்த பதின்மூன்று குமாரர்

1. பத்சேபாளுக்குப் பிறந்த சம்முவா (2சாமு 5:13); மறுபெயர் சிமீயா **(Shimea)** (1நாளா 3:5; 1நாளா 14:4)
2. பத்சேபாளுக்குப் பிறந்த சோபாப் (2சாமு 5:14); பத்சேபாளின் மறுபெயர் பத்சுவாள் **(Bathshua)** (1நாளா 3:5; 1நாளா 14:4)
3. பத்சேபாளுக்குப் பிறந்த நாத்தான் (2சாமு 5:14;1நாளா 3:5; 1நாளா 14:4)

3 அதிகாரம்

4. பத்சேபாளுக்குப் பிறந்த சாலொமோன் (2சாமு 5:14; 1நாளா 3:5;1நாளா 14:4)

5. இப்பார் (Ibhar) (2சாமு 5:15; 1நாளா 3:6; 1நாளா 14:5)

6. எலிசூவா (Elishua) (2சாமு 5:15; 1நாளா 14:5); மறுபெயர் எலிசாமா (Elishama) (1நாளா 3:6; 1நாளா 14:7)

7. எலிப்பேலேத் (Eliphelet) (1நாளா 3:6); மறுபெயர் எல்பேலேத் (Epalet) (1நாளா 14:5)

8. நெப்பேக் (Nephed) (2சாமு 5:15; 1நாளா 3:7; 1நாளா 14:6)

9. யப்பியா (Japhia) (2சாமு 5:15; 1நாளா 3:7; 1நாளா 14:6)

10. நோகா (Nogah) (1நாளா 3:7; 1நாளா 14:6)

11. எலிஷாமா (Elishama) (2சாமு 5:16; 1நாளா 3:8; 1நாளா 14:7)

12. எலியாதா (Eliada) (2சாமு 5:16; 1நாளா 3:8); மறுபெயர் பெலியாதா (Beeliada) (1நாளா 14:7)

13. எலிப்பேலேத் (Eliphalet) (2சாமு 5:15; 1நாளா 3:8;1நாளா 14:7)

எருசலேமில் தாவீதுக்குப் பிறந்த குமாரத்திகள்

1. தாமார் (2சாமு 13:1; 1நாளா 3:9) தாவீதுக்கு மேலும் பல குமாரத்திகளும் பிறந்திருக்க வேண்டும். (2சாமு 5:13).

தாவீதின் ஒன்பது மனைவிகள்

1. அகினோவாம் (Ahinoam) (1சாமு 14:50)

2. அபிகாயில் (Abigail) 1சாமு 25:3)

3. மாகாள் (Maacah) (2சாமு 3:3; 1நாளா 3:2)

4. ஆகீத் (Haggith) (2சாமு 3:4; 1நாளா 3:2)

5. அபித்தால் (Abital) (2சாமு 3:4; 1நாளா 3:3)

6. எக்லாால் (Eglah) (2சாமு 3:5; 1நாளா 3:3)

7. மீகாள் (Michal) (2சாமு 3:14; 2சாமு 6:16-23; 1சாமு 14:49; 1சாமு 18:20-29; 1சாமு 19:11-17; 1சாமு 25:44; 1நாளா 15:29)

8. பத்சேபாள் (Bathsheba) (2சாமு 11:3)

9. அபிஷாக் (Abishag) (1இராஜா 1:3,15; 1இராஜா 2:17,21-22)

தாவீதின் மறுமனையாட்டிகள்

தாவீதுக்கு பல மறுமனையாட்டிகள் இருந்தார்கள். அவர்களுக்குப் பிறந்த குமாரர்கள், குமாரத்திகளின் பெயர்கள் அட்டவணைப்படுத்தப்படவில்லை.(1நாளா 3:9; 1நாளா 5:13). தாவீது அப்சலோமிடமிருந்து தப்பியோடியபோது எருசலேமில் பத்து மறுமனையாட்டிகளை விட்டுச் சென்றான். (2சாமு 15:16; 2சாமு 16:21; 2சாமு 20:3). தாவீதுக்கு 19 குமாரர்கள் இருந்தார்கள். ஒன்பது மனைவிகள் இருந்தார்கள். குறைந்தது 10 மறுமனையாட்டிகள் இருந்திருக்க வேண்டும்.

6. அப்னேர் தாவீதோடே சேர்ந்து கொண்டான்

(1) அப்னேரின் கோபத்திற்குக் காரணம் - (வசனம் 1)

2சாமு 3:6 சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்கும் யுத்தம் நடந்துவருகிறபோது, அப்னேர் சவுலின் குடும்பத்திலே பலத்தவனானான்.

2சாமு 3:7 சவுலுக்கு ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் என்னும் பேருள்ள ஒரு மறுமனையாட்டி இருந்தாள்; இஸ்போசேத் அப்னேரை நோக்கி: நீ என் தகப்பனாருடைய மறுமனையாட்டியினிடத்தில் பிரவேசித்தது என்ன என்றான்.

3 அதிகாரம்

2சாமு 3:8 அப்னேர் இஸ்போசேத்தின் வார்த்தைகளுக்காக மிகவும் கோபங்கொண்டு: உம்மைத் தாவீதின் கையில் ஒப்புக்கொடாமல், இந்நாள்மட்டும் உம்முடைய தகப்பனாகிய சவுலின் குடும்பத்துக்கும், அவருடைய சகோதரருக்கும், சிநேகிதருக்கும், தயவுசெய்கிறவனாகிய என்னை நீர் இன்று ஒரு ஸ்திரீயினிமித்தம் குற்றம்பிடிக்கிறதற்கு, நான் யூதாவுக்கு உட்கையான ஒரு நாய்த்தலையா?

"அப்னேர் சவுலின் குடும்பத்திலே பலத்தவனானான்" - இவன் சவுலின் சிறிய தகப்பன். அதனால் இவனுக்கு சவுலின் குடும்பத்தில் அதிகாரம் மிகுதியாயிருந்தது. (1சாமு 10:14-16; 1சாமு 14:50).

"ரிஸ்பாள் என்னும் பேருள்ள ஒரு மறுமனையாட்டி" - இவள் சவுலின் மறுமனையாட்டி. சவுலுக்கு எத்தனை மனைவிகளும், எத்தனை மறுமனையாட்டிகளும் இருந்தார்கள் என்று தெரியவில்லை. சவுலின் மறுமனையாட்டியை அப்னேர் தனக்குச் சேர்த்துக் கொண்டான். இதனால் சவுலின் மகனாகிய இஸ்போசேத் அப்னேர்மீது கோபம் கொண்டான். ஒருவன் மரித்துப் போகும்போது அவனுடைய மனைவியையோ, அல்லது மறுமனையாட்டியையோ வேறொருவன் தனக்கு முறைப்படி சேர்த்துக் கொள்ளலாம். தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளாமல் அவர்களிடத்தில் பிரவேசிப்பது தவறு.

"அப்னேர் இஸ்போசேத்தின் வார்த்தைகளுக்காக மிகவும் கோபங்கொண்டு" - இஸ்போசேத் தன் ராஜ்யபாரத்திற்கு அப்னேரையே நம்பியிருக்கிறான். அப்னேரை இஸ்போசேத் குறைகூறியது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆகையினால் அப்னேர் இஸ்போசேத்மீது மிகவும் கோபம் கொண்டான். (2சாமு 3:9).

(2) சவுலின் ராஜ்யபாரத்தை தாவீதிடம் கொடுப்பதாக அப்னேரின் சபதம்

2சாமு 3:9 நான் ராஜ்யபாரத்தைச் சவுலின் குடும்பத்தை விட்டுத் தாண்டப் பண்ணி, தாவீதின் சிங்காசனத்தைத் தாண் துவக்கிப் பெயெர்செபாமட்டுமுள்ள இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் நிலைநிறுத்தும்படிக்கு,

2சாமு 3:10 கர்த்தர் தாவீதுக்கு ஆணையிட்டபடியே, நான் அவனுக்குச் செய்யாமற்போனால், தேவன் அப்னேருக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர் என்றான்.

2சாமு 3:11 அப்பொழுது அவன் அப்னேருக்குப் பயப்பட்டதினால், அப்புறம் ஒரு மறுமொழியும் அவனுக்குச் சொல்லாதிருந்தான்.

"தாண் துவக்கிப் பெயெர்செபாமட்டுமுள்ள இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் நிலைநிறுத்தும்படிக்கு" - தாவீது யூதாவின் மேல் மட்டுமே ராஜ்யபாரம் பண்ணுகிறான். இஸ்ரவேலின் மற்றொரு கோத்திரத்தார் அப்னேரையும், இஸ்போசேத்தையும் பின்பற்றிப் போயிருக்கிறார்கள். இப்போது அப்னேர் இஸ்போசேத்தின்மீது கோபம் கொண்டிருக்கிறான். ஆகையினால் இஸ்போசேத்தின் ராஜ்யபாரத்தைத் தாவீதிடம் கொடுத்து விடப்போவதாக அப்னேர் பேசுகிறான். "தாண் துவக்கிப் பெயெர்செபா மட்டுமுள்ள" என்னும் வாக்கியம் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் குறிக்கும். தாண் பட்டணம் இஸ்ரவேலின் வடக்குக் கடைசி எல்லையில் உள்ளது. பெயெர்செபா இஸ்ரவேலின் தெற்குக் கடைசி எல்லையில் உள்ளது. இஸ்ரவேலைப் பொதுவாகக் குறிப்பதற்கு எபிரெயர்கள் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துவது வழக்கம். (2சாமு 3:10; 2சாமு 17:11; 2சாமு 24:2,15; 1நாளா 21:2; 2நாளா 30:5; நியா 20:1; 1சாமு 3:20).

"தாண்" (Dan) - (யோசு 19:40-48)

"பெயெர்செபா"(Beer-sheba)-(2சாமு 3:10; 2சாமு 17:11; 2சாமு 24:2-7,15; ஆதி 21:14, 31-33; ஆதி 22:19; ஆதி 26:23,33; ஆதி 28:10; ஆதி 46:1,5; யோசு 15:28,யோசு 19:2; நியா 20:1; 1சாமு 3:20; 1சாமு 8:2; 1இராஜா 4:25; 1இராஜா 19:3; 2இராஜா 12:1;2இராஜா 23:8; 1நாளா 4:28; 1நாளா 21:2; 2நாளா 19:4; 2நாளா 24:1; 2நாளா 30:5; நெகே 11:27-30; ஆமோ 5:5; ஆமோ 8:14; ஆதி 21:31)

3 அதிகாரம்

"தேவன் அப்னேருக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர்" - இஸ்போசேத் மீதுள்ள கோபத்தினால் அப்னேர் இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லோரையும் தாவீதின்கீழ் ஒன்றாகச் சேர்ப்பதாக வாக்குப்பண்ணுகிறான். இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிந்ததற்கு அப்னேர்தான் காரணம். இவன் ஆரம்பத்தில் ஒன்றும் செய்யாமல், சும்மாயிருந்திருந்தாலே இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிந்திருக்காது. சாமுவேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணியிருப்பது அப்னேருக்குத் தெரியும். கர்த்தரும் ராஜ்யத்தை தாவீதுக்குக் கொடுப்பதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். இதுவரையிலும் அப்னேர் கர்த்தருடைய சித்தத்திற்கு எதிராகவே செயல்பட்டு வந்திருக்கிறான். ஆனாலும் இதுவரையிலும் மனந்திரும்பவில்லை. இப்போது அப்னேரின் வாழ்வில் ஒரு கசப்பான சம்பவம் நடைபெற்றபோது அவன் தாவீதின் பக்கமாகச் சேர்ந்து கொள்ள விரும்புகிறான்.

"அவன் அப்னேருக்குப் பயப்பட்டதினால்" - இஸ்போசேத் அப்னேருக்குப் பயப்படுகிறான். அப்னேர் சொன்னதைச் செய்வான் என்பது அவனுக்குத் தெரியும். (2சாமு 3:8-10)

(3) இஸ்ரவேலை யெல்லாம் தாவீதிடம் திருப்புவதில் உதவிபுரிய அப்னேரின் விருப்பம்

2சாமு 3:12 அப்னேர் தன் நாமத்தினாலே தாவீதினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: தேசம் யாருடையது? இதோ, இஸ்ரவேலையெல்லாம் உம்மிடத்தில் திருப்ப, என் கை உம்மோடிருக்கும் என்று சொல்லச்சொன்னான்.

"அப்னேர் தன் நாமத்தினாலே தாவீதினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி" - இஸ்போசேத்திடம் தான் கூறிய வார்த்தைகளை நிறைவேற்றுவதற்கு அப்னேர் உடனடியாகச் செயலில் இறங்குகிறான். (2சாமு 3:8-10)

(4) தாவீதின் நிபந்தனை - தன் மனைவியாகிய மீகாளை அழைத்து வருமாறு தாவீது அப்னேரிடம் கூறினான்

2சாமு 3:13 அதற்குத் தாவீது: நல்லது, உன்னோடே நான் உடன்படிக்கை பண்ணுவேன்; ஆனாலும் ஒரே காரியம் உன்னிடத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்; அது என்னவெனில், நீ என் முகத்தைப் பார்க்க வரும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாளை நீ அழைத்துவரவேண்டும்; அதற்குமுன் நீ என் முகத்தைப் பார்ப்பதில்லை என்று சொல்லச்சொல்லி,

"சவுலின் குமாரத்தியாகிய மீகாளை நீ அழைத்துவரவேண்டும்" - தாவீது அப்னேரோடு உடன்படிக்கை பண்ண சம்மதிக்கிறான். சவுலின் குமாரத்தியாகிய மீகாள் ஏற்கெனவே தாவீதின் மனைவியாக இருந்தவள். அவள்மீது தாவீது நேசமாக இருக்கிறான். ஆகையினால் அவளை அழைத்து வரவேண்டுமென்று தாவீது கூறியிருந்திருக்கலாம். அல்லது தாவீதின் வம்சத்தில் மிஞ்சியிருக்கும் மீகாளைத் தன் பக்கமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று தாவீது நினைத்திருக்கலாம்.

(5) மீகாள் தாவீதிடம் மறுபடியும் சேர்க்கப்படுகிறாள்

2சாமு 3:14 அவன் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தினிடத்திற்கும் ஸ்தானாபதிகளை அனுப்பி நான் பெலிஸ்தருடைய நூறு நுனித்தோல்களைப் பரிசமாகக் கொடுத்து, விவாகம்பண்ணின என் மனைவியாகிய மீகாளை அனுப்பி விடும் என்று சொல்லச்சொன்னான்.

2சாமு 3:15 அப்பொழுது, இஸ்போசேத் அவளை லாயிசின் குமாரனாகிய பலத்தியேல் என்னும்புருஷனிடத்திலிருந்து அழைத்து வர ஆட்களை அனுப்பினான்.

2சாமு 3:16 அவள் புருஷன் பகூரீம்மட்டும் அவள் பிறகாலே அழுதுகொண்டுவந்தான். அப்னேர் அவனை நோக்கி: நீ திரும்பிப்போ என்றான்; அவன் திரும்பிப்போய்விட்டான்.

3 அதிகாரம்

2சாமு 3:17 அப்னேர் இஸ்ரவேலின் மூப்பரோடே பேசி: தாவீதை உங்கள்மேல் ராஜாவாக வைக்கும்படிக்கு நீங்கள் அநேக நாளாய்த் தேடினீர்களே.

"அவன் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தினிடத்திற்கும் ஸ்தானாபதிகளை அனுப்பி" - தாவீது ஸ்தானாபதிகளை அனுப்புகிறான். அப்னேர் மூலமாகத் தனக்குக் கிடைத்திருக்கும் செல்வாக்கை தாவீது பயன்படுத்துகிறான். மீகாள் இஸ்போசேத்தின் சகோதரி. மீகாளை விவாகம் பண்ணுவதற்காகத்தாவீது ஏற்கெனவே பெலிஸ்தருடைய நூறு நுனித்தோல்களைப் பரிசமாகக் கொடுத்திருக்கிறான். (1சாமு 18:20-30) ஆகையினால் அவளைத் தன்னிடத்தில் அனுப்பிவிடவேண்டுமென்று அவளுடைய சகோதரனுக்குக் கூறுகிறான். மீகாள் தாவீதின் முதலாவது மனைவி. மீகாளும் தாவீதை நேசித்தாள். (1சாமு 18:20) தாவீதைத்தப்ப வைப்பதற்காக மீகாள் சவுலையே ஏமாற்றியவள். (1சாமு 19:11-17).

மீகாள் தாவீதினிடத்திற்குத் திரும்ப மீட்டு வரப்படுகிறாள்

மீகாள் இப்போது பல்த்தியேலின் மனைவியாக இருக்கிறாள். பல்த்தியேல் மீகாளைத் தாவீதினிடத்திற்கு அனுப்பி விடுகிறான். (2சாமு 3:15-16) ஆனாலும் மீகாளை அவன் சந்தோஷமாக அனுப்பவில்லை. அழுதுகொண்டே அனுப்பினான். தாவீதைச் சவுல் துரத்திவிட்ட பின்பு, தன் குமாரத்தியாகிய மீகாளைச் சவுல் பல்த்தியேலுக்கு மனைவியாகக் கொடுத்தான். (1சாமு 25:44). இந்த இடைப்பட்ட காலத்தில் மீகாள் தாவீதை மறந்து போயிருக்கலாம். ஆகையினால்தான் தாவீது உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நடமாடிய போது, மீகாள் அவனைப் பரியாசம் பண்ணினாள். (2சாமு 6:14-16). மீகாள் தாவீதைத் தன் இருதயத்தில் தூஷித்ததினால் அவளுக்கு பிள்ளைப்பேறு எதுவும் உண்டாகாமற்போயிற்று. (2சாமு 6:21-23)

"அப்னேர் அவனை நோக்கி: நீ திரும்பிப்போ என்றான்" - மீகாளைத் தாவீதினிடத்தில் ஒப்புவிக்குமாறு அப்னேர் இஸ்போசேத்தைக் கட்டாயப்படுத்தியிருக்கவேண்டும். இஸ்போசேத்தும், அப்னேருக்குப் பயந்த படியினால், அவன் சொல்லுக்குக் கீழ்ப்படிகிறான். பல்த்தியேல் மீகாளை மிகவும் நேசித்தான். அவளைத் தாவீதினிடத்தில் அனுப்ப அவனுக்கு விருப்பமில்லை. ஆகையினால் பல்த்தியேல் பகூரீம்மட்டும் அவள் பிறகாலே அழுதுகொண்டுவந்தான். அவனை அப்னேர் திருப்பி அனுப்பிவிட்டான். (2சாமு 3:13-15). மீகாள் தாவீதினிடத்தில் திரும்பி வராமல் அப்னேரால் தாவீதின் முகத்தைப் பார்க்க முடியாது. இது தாவீதின் கட்டளை.

தாவீதுக்கு இஸ்ரவேலின் ராஜ்யபாரம் கிடைப்பதற்கு அப்னேர் செய்த காரியங்கள்

1. இஸ்போசேத்திற்குத் தன்னால் என்ன செய்ய முடியும் என்று கூறி, அவனைப் பயமுறுத்தினான். (2சாமு 3:7-10)
2. தாவீதோடு உடன்படிக்கை பண்ணுவதற்கு ஸ்தானாபதிகளை அனுப்பினான். (2சாமு 3:12)
3. தாவீதின் நிபந்தனையின்படி மீகாளை அவனிடத்திற்கு அனுப்பினான். (2சாமு 3:14-16)
4. இஸ்ரவேலின் மூப்பரோடு பேசி, தாவீதை அவர்கள்மீது ராஜாவாக வைக்குமாறு கூறினான். (2சாமு 3:17-19)
5. இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் தாவீதை ராஜாவாக ஆக்க விரும்புகிறார்கள் என்னும் செய்தியை அப்னேர் தாவீதின் காதுகள் கேட்க பேசினான். (2சாமு 3:19-20)
6. இஸ்ரவேலர் எல்லாரையும் தாவீதை ராஜாவாக்குவதற்கு அவனிடத்தில் அழைத்து வருவேன் என்று தாவீதிடம் வாக்குப் பண்ணினான். (2சாமு 3:21)
7. இஸ்ரவேலர் எல்லோரையும் அழைத்து வரப் புறப்பட்டான். இதன் மூலமாக ராஜ்யபாரம் இஸ்போசேத்தின் கையிலிருந்து தாவீதின் கைக்கு மாறுகிறது. (2சாமு 3:21)

II சாமுவேல் - தொகுப்புரை

3 அதிகாரம்

(6) தாவீதை தங்கள் மேல் ராஜாவாக வைக்கும்படிக்கு அப்னேர் இஸ்ரவேலின் மூப்பரோடே பேசுகிறான்

2சாமு 3:18 இப்போதும் அப்படிச் செய்யுங்கள்; என் தாசனாகிய தாவீதின் கையினால், என் ஜனமாகிய இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கும், அவர்களுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும் நீங்கலாக்கி ரட்சிப்பேன் என்று கர்த்தர் தாவீதைக்குறித்துச் சொல்லியிருக்கிறாரே என்றான்.

2சாமு 3:19 இந்தப்பிரகாரமாக அப்னேர் பென்யமீன் மனுஷர் காதுகள் கேட்கப் பேசினான்; பின்பு அப்னேர் இஸ்ரவேல் பார்வைக்கும், பென்யமீனுடைய எல்லாக் குடும்பத்தாரின் பார்வைக்கும், சம்மதியானதையெல்லாம் எப்ரோனிலே தாவீதின் காதுகள் கேட்கப் பேசுகிறதற்குப் போனான்.

(7) தாவீதும் அப்னேரும் சமாதானத்தோடு பிரிகிறார்கள்

2சாமு 3:20 அப்னேரும், அவனோடே கூட இருபதுபேரும் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்தபோது, தாவீது அப்னேருக்கும், அவனோடே வந்த மனுஷருக்கும் விருந்துசெய்தான்.

2சாமு 3:21 பின்பு அப்னேர் தாவீதை நோக்கி: நான் எழுந்துபோய், இஸ்ரவேலரை எல்லாம் உம்மோடே உடன்படிக்கை பண்ணும்படிக்கு, ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில் சேர்த்துக்கொண்டு வருகிறேன்; அதினாலே உம்முடைய ஆத்துமா அரசாள விரும்புகிற இடமெல்லாம் அரசாளுவீர் என்றான்; அப்படியே தாவீது அப்னேரை அனுப்பிவிட்டான்; அவன் சமாதானத்தோடே போனான்.

(8) யோவாபுக்கு அப்னேரின் வருகை தெரிய வருகிறது

2சாமு 3:22 தாவீதின் சேவகரும் யோவாபும் அநேகம் பொருட்களைக் கொள்ளையிட்டு, தண்டிலிருந்து கொண்டுவந்தார்கள்; அப்பொழுது அப்னேர் எப்ரோனில் தாவீதினிடத்தில் இல்லை; அவனை அனுப்பிவிட்டான்; அவன் சமாதானத்தோடே போய்விட்டான்.

2சாமு 3:23 யோவாபும் அவனோடிருந்த எல்லாச் சேனையும் வந்தபோது, நேரின் குமாரனாகிய அப்னேர் ராஜாவினிடத்தில் வந்தான் என்றும், அவர் அவனைச் சமாதானமாய்ப்போக அனுப்பிவிட்டார் என்றும், யோவாபுக்கு அறிவித்தார்கள்.

"தாவீதின் சேவகரும் யோவாபும் அநேகம் பொருட்களைக் கொள்ளையிட்டு, தண்டிலிருந்து கொண்டுவந்தார்கள்" - தாவீதின் மனுஷர் அருகிலுள்ள தேசங்களின்மீது யுத்தம் செய்து, கொள்ளைப் பொருட்களைக் கொண்டு வந்தார்கள். தாவீது பெலிஸ்தரோடு இருந்த சமயங்களில் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்தான். (1சாமு 27:8). தாவீதின் சேவகரும், யோவாபும் யூதேயாவில் கொள்ளையிட்டு, அநேகம் பொருட்களைத் தண்டிலிருந்து கொண்டுவந்திருக்க வேண்டும். (2சாமு 3:22-23).

"அவன் சமாதானத்தோடே போய்விட்டான்" - அப்னேர் தாவீதைப் பார்ப்பதற்கு மீகாளோடு வந்தான். அதன் பின்பு, தாவீது அவனைச் சமாதானத்தோடு அனுப்பிவிட்டான். அப்னேர் போனபின்பு, யோவாப் தாவீதைப் பார்க்க வருகிறான். (2சாமு 3:22) அப்னேர் வந்ததைப் பற்றி யோவாப் கேள்விப்பட்டான். அப்னேருக்கு எதிராக யோவாப் குறைகூறினான். ஆனால் அந்த வார்த்தைகளைத் தாவீது ஏற்றுக் கொள்ளவில்லை. (2சாமு 3:24-25). தாவீதிற்குத் தெரியாமல் யோவாப் அப்னேரைக் கூட்டி வரும்படி ஆட்களை அனுப்பி, அவனைக் கொன்றுபோட்டான். (2சாமு 3:26-27)

3 அதிகாரம்

(9) யோவாப் தாவீதோடு வாக்குவாதம் பண்ணுகிறான். அப்னேர் வேவுபார்க்க வந்ததாகக் குற்றம் சுமத்துகிறான்

2சாமு 3:24 அப்பொழுது யோவாப் ராஜாவண்டையில் பிரவேசித்து: என்ன செய்தீர்? இதோ, அப்னேர் உம்மிடத்தில் வந்தானே, நீர் அவனைப் போகவிட்டது என்ன?

2சாமு 3:25 நேரின் குமாரனாகிய அப்னேரை அறிவீரே; அவன் உம்மை மோசம்போக்கவும், உம்முடைய போக்குவரத்தை அறியவும், நீர் செய்கிறதையெல்லாம் ஆராயவும் வந்தான் என்று சொன்னான்.

(10) யோவாப் அப்னேரை இரகசியமாய் அழைத்து வந்து கொன்று போடுகிறான் - *(2:18-23)*

2சாமு 3:26 யோவாப் தாவீதை விட்டுப் புறப்பட்டவுடனே, அவன் அப்னேரைத் தாவீதுக்குத் தெரியாமல் கூட்டிக் கொண்டு வரும்படி ஆட்களை அனுப்பினான்; அவர்கள் சீரா என்னும் துரவுமட்டும்போய் அவனை அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

2சாமு 3:27 அப்னேர் எப்ரோனுக்குத் திரும்பி வருகிறபோது, யோவாப் அவனோடே இரகசியமாய்ப் பேசப் போகிறவன் போல, அவனை ஒலி முகவாசலின் நடுவே ஒரு பக்கமாய் அழைத்துப்போய், தன் தம்பி ஆசகேலுடைய இரத்தப்பழியை வாங்க, அங்கே அவனை வயிற்றிலே குத்திக் கொன்றுபோட்டான்.

"சீரா என்னும் துரவு" - சீரா என்பதற்கு "புறப்படும் துரவு" **"well of departure"** என்று பொருள். எப்ரோனிலிருந்து வடக்கே மூன்று மைல் தூரத்திலுள்ளது.

"தாவீதுக்குத் தெரியாமல்" - அப்னேரை அழைத்து வரும்படி யோவாப் ஆட்களை அனுப்பினான். ஆனால் இது தாவீதுக்குத் தெரியாது. அப்னேரின் கண்ணியத்தை யோவாப் சந்தேகப்படுகிறான். தாவீது அப்னேரை ஏற்றுக் கொண்டது யோவாபிற்கு அதிர்ச்சியாக உள்ளது. அப்னேர் யுத்தம் பண்ணுவதில் சிறந்தவன். தாவீதோடு அப்னேர் சேர்ந்து விட்டால், யோவாபிற்கு தாவீதினிடத்தில் முக்கியத்துவம் குறைந்துவிடும். அதுமட்டுமல்ல, யோவாபின் சகோதரனாகிய ஆசகேலை அப்னேர் ஏற்கெனவே கொன்றுபோட்டான். *(2சாமு 2:22-23)* யோவாப் இதற்காக அப்னேரை பழிவாங்க விரும்பினான். அப்னேர் திரும்பி வந்தபோது, யோவாப் அவனைக் கொன்றுபோட்டான். *(2சாமு 3:26-27)*.

"அவனை ஒலிமுகவாசலின் நடுவே ஒரு பக்கமாய் அழைத்துப்போய்" - யோவாப் அப்னேரை இரகசியம் பேசுகிறவன்போல தனியாக அழைத்துப்போனான். இரகசியம் பேசுவதற்குப் பதிலாக யோவாப் அப்னேரைக் கொன்றுபோட்டான். அப்னேரும் இதை எதிர்பார்க்கவில்லை. யோவாபைச் சந்தேகப்பட வில்லை. தன்னைக் காத்துக் கொள்வதற்கு அப்னேர் ஆயத்தமாகவும் இல்லை. ஆகையினால் அப்னேர் மதிகெட்டவன்போல செத்துப்போனான் என்று தாவீது கூறுகிறான். *(2சாமு 3:27,33)*.

"அங்கே அவனை வயிற்றிலே குத்திக் கொன்றுபோட்டான்" - யோவாப் அப்னேரைக் கொன்றுபோட்டது, துன்மார்க்கமான செயல். தாவீதின் சேனையில் யோவாபிற்குச் செல்வாக்கு இருக்கிறது. ஆகையினால் தாவீது யோவாபை ஒன்றும் விசாரிக்கவில்லை. அபிசாயும் தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். இவனும் மேலும் சில முக்கியமானவர்களும் இந்தச் சதியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களைக்குறித்து விசாரித்தால், தேசத்தில் கலகம் ஏற்பட்டு விடும். ஆகையினால் தாவீது இதை விசாரிக்கும் பொறுப்பைக் கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுத்து விடுகிறான். *(2சாமு 3:30,39)*. அப்னேர் ஆசகேலைக் கொன்றதுதான் யோவாப் அவனைக் கொல்வதற்குக் காரணம். இதுபோலவே யோவாப் அமாசாவையும் கொன்றுபோட்டு, தப்பித்துக் கொண்டான். *(2சாமு 20:10)*. தாவீதின் ஆட்சிக்காலத்தில் இந்த வழக்கு நியாயம் விசாரிக்கப்படவில்லை. இந்த வழக்கை விசாரிக்கும் பொறுப்பை, தாவீது சாலொமோனுக்குக் கொடுத்து விடுகிறான். *(1இராஜா 2:5-6)*. சாலொமோனின் காலத்தில் யோவாப் அதோனியாவோடு சேர்ந்து கொண்டு ராஜாங்கத்தில் பிரச்சனை பண்ணினான். இதற்காக சாலொமோன் யோவாபைக் கொன்று போட்டான். *(1இராஜா 2:28-34)*.

3 அதிகாரம்

(11) தாவீது யோவாபைச் சபிக்கிறான்

2சாமு 3:28 தாவீது அதைக் கேட்டபோது: நேரின் குமாரனாகிய அப்னேரின் இரத்தத்திற்காக, என்மேலும் என் ராஜ்யத்தின் மேலும் கர்த்தருக்கு முன்பாக என்றைக்கும் பழியில்லை.

2சாமு 3:29 அது யோவாபுடைய தலையின் மேலும், அவன் தகப்பன் குடும்பத்தின் மேலும் சுமந்திருப்பதாக; யோவாபின் வீட்டாரிலே பிரமியக்காரனும், குஷ்டரோகியும், கோல் ஊன்றி நடக்கிறவனும், பட்டயத்தால் விழுகிறவனும், அப்பம் குறைச்சலுள்ளவனும், ஒருக்காலும் ஒழிந்துபோவதில்லை என்றான்.

2சாமு 3:30 அப்னேர் கிபியோனில் நடந்த யுத்தத்திலே தங்கள் தம்பியாகிய ஆசகேலைக் கொன்றதினிமித்தம் யோவாபும் அவன் சகோதரனாகிய அபிசாயும் அவனைச் சங்காரம் பண்ணினார்கள்.

அப்னேர் மரித்தபோது தாவீது செய்த காரியங்கள்

1. கர்த்தருக்கு முன்பாக தன்னிடத்தில் பழியில்லை என்று அறிக்கையிட்டான். (2சாமு 3:28)
2. யோவாபையும், அவன் வீட்டாரையும் சபித்தான். (2சாமு 3:29)
3. யோவாபையும், அவனோடிருந்த சகல ஜனங்களையும் அப்னேருக்காகத் துக்கம் கொண்டாடச் சொன்னான். (2சாமு 3:31)
4. தாவீதுராஜா தானும் பாடைக்குப் பின்சென்றான்.
5. தாவீதுராஜா அப்னேரின் கல்லறையண்டையிலே சத்தமிட்டு அழுதான். (2சாமு 3:32)
6. தாவீது அப்னேருக்காகப் புலம்பினான். (2சாமு 3:33-34)
7. சூரியன் அஸ்தமிக்கும் வரையிலும் உபவாசம் பண்ணினான். (2சாமு 3:35)
8. அப்னேரின் மேன்மையை அறிவித்தான். (2சாமு 3:38)
9. அப்னேரைக் கொலைபண்ணிய வழக்கைக் கர்த்தரிடத்தில் ஒப்புவித்தான். (2சாமு 3:39)

யோவாபின்மீது தாவீது கூறிய சாபம்

1. யோவாபுடைய தலையின் மேல் பழி சுமந்திருப்பதாக.
2. அவன் தகப்பன் குடும்பத்தின் மேல் பழி சுமந்திருப்பதாக.
3. யோவாபின் வீட்டாரில் பிரமியக்காரன் ஒருக்காலும் ஒழிந்துபோவதில்லை.
4. யோவாபின் வீட்டாரில் குஷ்டரோகி ஒருக்காலும் ஒழிந்துபோவதில்லை.
5. யோவாபின் வீட்டாரில் கோல் ஊன்றி நடக்கிறவன் ஒருக்காலும் ஒழிந்து போவதில்லை.
6. யோவாபின் வீட்டாரில் பட்டயத்தால் விழுகிறவன் ஒருக்காலும் ஒழிந்து போவதில்லை.
7. யோவாபின் வீட்டாரில் அப்பம் குறைச்சலுள்ளவன் ஒருக்காலும் ஒழிந்து போவதில்லை.

"தங்கள் தம்பியாகிய ஆசகேலைக் கொன்றதினிமித்தம்" - (2சாமு 3:27)

(12) தாவீது அப்னேருக்காக அழுகிறான்

2சாமு 3:31 தாவீது யோவாபையும், அவனோடிருந்த சகல ஜனங்களையும் பார்த்து: நீங்கள் உங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, இரட்டுடுத்தி, அப்னேருக்கு முன்னாக நடந்து துக்கங்கொண்டாடுங்கள் என்று சொல்லி, தாவீதுராஜா தானும் பாடைக்குப் பின்சென்றான்.

2சாமு 3:32 அவர்கள் அப்னேரை எப்ரோனிலே அடக்கம்பண்ணுகையில், ராஜா அப்னேரின் கல்லறையண்டையிலே சத்தமிட்டு அழுதான்; சகல ஜனங்களும் அழுதார்கள்.

II சாமுவேல் - தொகுப்புரை

3 அதிகாரம்

2சாமு 3:33 ராஜா அப்னேருக்காகப் புலம்பி: மதிகெட்டவன் சாகிறதுபோல, அப்னேர் செத்துப்போனானோ?

2சாமு 3:34 உன் கைகள் கட்டப்படவும் இல்லை; உன் கால்களில் விலங்கு போடப்படவும் இல்லை; துஷ்டர் கைகளில் மடிகிறதுபோல மடிந்தாயே என்றான்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் பின்னும் அதிகமாய் அவனுக்காக அழுதார்கள்.

2சாமு 3:35 பொழுது இன்னும் இருக்கையில், ஜனங்கள் எல்லாரும் வந்து: அப்பம் புசியும் என்று தாவீதுக்குச் சொன்னபோது, தாவீது: சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னே நான் அப்பத்தையாகிலும் வேறெதையாகிலும் ருசிபார்த்தால், தேவன் எனக்கு அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர் என்று ஆணையிட்டுச் சொன்னான்.

2சாமு 3:36 ஜனங்கள் எல்லாரும் அதைக் கவனித்தார்கள், அது அவர்கள் பார்வைக்கு நன்றாயிருந்தது; அப்படியே ராஜா செய்ததெல்லாம் சகல ஜனங்களுக்கும் நலமாய்த் தோன்றினது.

2சாமு 3:37 நேரின் குமாரனாகிய அப்னேரைக் கொன்றுபோட்டது ராஜாவினால் உண்டானதல்லவென்று அந்நாளிலே சகல ஜனங்களும், இஸ்ரவேலர் அனைவரும் அறிந்து கொண்டார்கள்.

2சாமு 3:38 ராஜா தன் ஊழியக்காரரை நோக்கி: இன்றைய தினம் இஸ்ரவேலில் பிரபுவும் பெரிய மனுஷனுமாகிய ஒருவன் விழுந்தான் என்று அறியீர்களா?

2சாமு 3:39 நான் ராஜாவாக அபிஷேகம் பண்ணப் பட்டவனாயிருந்த போதிலும், நான் இன்னும் பலவீனன்; செருயாவின் குமாரராகிய இந்த மனுஷர் என் பலத்துக்கு மிஞ்சினவர்களாயிருக் கிறார்கள், அந்தப் பொல்லாப்பைச் செய்தவனுக்குக் கர்த்தர் அவன் பொல்லாப்புக்குத் தக்கதாய்ச் சரிக்கட்டுவாராக என்றான்.

பாடை (bier) - מִטָּה - mit-taw' - 4296

பெ.பெ.சொ. - கட்டில், மஞ்சம், பாடை, சயனம், பள்ளி, படுக்கை, மெத்தை **(a bed or sofa on which to sleep or eat) bed**(ஆதி 47:31; ஆதி 48:2; ஆதி 49:33;யாத் 8:3; 1சாமு 19:13-16; 1சாமு 28:23; 2சாமு 4:7; 1இராஜா 17:19; 1இராஜா 21:4; 2இராஜா 1:4,6,16;2இராஜா 4:10,21,32; 2நாளா 24:25; எஸ் 1:6; எஸ் 7:8; சங் 6:6; நீதி 26:14; உன் 3:7; எசே 23:41; ஆமோ 3:12;ஆமோ 6:4); **bedchamber** (2இராஜா 11:2; 2நாளா 22:11); **bier** (2சாமு 3:31). முக்கியமான ஜனங்களை அவர்களுடைய படுக்கையோடு கல்லறையில் அடக்கம் பண்ணுவது வழக்கம். ஏரோதை படுக்கையோடு அடக்கம் பண்ணியதாகவும், அவனுடைய படுக்கை பொன்னால் செய்யப்பட்டிருந்தது எனவும், அதில் விலையேறப்பெற்ற முத்துக்களும், கற்களும் பதிக்கப் பட்டிருந்தது எனவும் யோசபஸ் என்னும் வரலாற்று ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

"அப்னேரை எப்ரோனிலே அடக்கம் பண்ணுகையில்" - அப்னேரை மகனாயீமிற்கு எடுத்துச் செல்லவில்லை. யோர்தானுக்கு அக்கரையில் அவனுடைய சரீரத்தைக் கொண்டு செல்வதற்குப் பதிலாக எப்ரோனிலேயே அடக்கம் பண்ணிவிட்டார்கள். அவனுடைய பிதாக்களின் கல்லறையில் அப்னேரை அடக்கம் பண்ணவில்லை.

"சகல ஜனங்களும் அழுதார்கள்" - தங்களுக்குப் பிரியமானவர்கள் மரித்துப் போகும்போது எபிரெயர்கள் சத்தமிட்டு அழுவது வழக்கம். 2சாமு 3:32,34).

தாவீது அப்னேருக்காகப் புலம்பியது

1. மதிகெட்டவன் சாகிறதுபோல, அப்னேர் செத்துப்போனானோ? (2சாமு 3:33)
2. அப்னேரின் கைகள் கட்டப்படவும் இல்லை. (2சாமு 3:34)
3. அப்னேரின் கால்களில் விலங்கு போடப்படவும் இல்லை.

II சாமுவேல் - தொகுப்புரை

3 அதிகாரம்

4. துஷ்டர் கைகளில் மடிகிறதுபோல அப்னேர் மடிந்தான்.

"உன் கால்களில் விலங்கு போடப்படவும் இல்லை" - குற்றவாளிகளின் கைகளைப் பின்னால் இழுத்துக் கட்டி, அவர்களுடைய கால்களில் விலங்குகளை மாட்டி, அவர்கள் தப்பித்துப் போகாதவாறு பார்த்துக் கொள்வார்கள். *(2 இராஜா 25:7)*

"சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னே நான் அப்பத்தையாகிலும் வேறெதையாகிலும் ருசிபார்த்தால்" - தாவீது சூரியன் அஸ்தமிக்கும் வரையிலும் ஒன்றும் புசிப்பதில்லை என்று ஆணையிட்டுக் கொண்டான். எல்லா ஜனங்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். அப்னேரின் மரணத்திற்கு தாவீது காரணமல்ல என்பதை ஜனங்கள் புரிந்து கொண்டார்கள். *(2சாமு 3:35-37)*.

"அந்தப் பொல்லாப்பைச் செய்தவனுக்குக் கர்த்தர் அவன் பொல்லாப்புக் குத்தக்கதாய்ச் சரிக்கட்டுவாராக" - அப்னேரைக் கொன்றவனைப் பழிவாங்கும் காரியத்தைத் தாவீது கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்து விடுகிறான்.

II சாமுவேல் - தொகுப்புரை

4 அதிகாரம்

7. இஸ்போசேத் ராஜாவின் மரணம்

(1) ரேகாபும், பானாவும் இஸ்போசேத்தைக் கொல்கிறார்கள்

2சாமு 4:1 அப்னேர் எப்ரோனிலே செத்துப் போனதைச் சவுலின் குமாரன் கேட்டபோது, அவன் கைகள் திடனற்றுப் போயிற்று; இஸ்ரவேலரெல்லாரும் கலங்கினார்கள்.

2சாமு 4:2 சவுலின் குமாரனுக்குப் படைத் தலைவரான இரண்டுபேர் இருந்தார்கள்; ஒருவனுக்குப் பேர் பானா, மற்றவனுக்குப் பேர் ரேகாப்; அவர்கள் பென்யமீன் புத்திரரில் பேரோத்தியனாகிய ரிம்மோனின் குமாரர்கள். பேரோத்தும் பென்யமீனுக்கு அடுத்ததாய் எண்ணப்பட்டது.

2சாமு 4:3 பேரோத்தியர் கித்தாயீமுக்கு ஓடிப்போய், இந்நாள்வரைக்கும் அங்கே சஞ்சரிக்கிறார்கள்.

2சாமு 4:4 சவுலின் குமாரன் யோனத்தானுக்கு இரண்டு காலும் முடமான ஒரு குமாரன் இருந்தான்; சவுலும் யோனத்தானும் மடிந்த செய்தி யெஸ்ரயேலிலிருந்து வருகிறபோது, அவன் ஐந்து வயதுள்ளவனாயிருந்தான்; அப்பொழுது அவனுடைய தாதி அவனை எடுத்துக்கொண்டு ஓடிப் போனாள்; அவள் ஓடிப்போகிற அவசரத்தில் அவன் விழுந்து முடவனானான்; அவனுக்கு மேவிபோசேத் என்று பேர்.

2சாமு 4:5 பேரோத்தியனான அந்த ரிம்மோனின் குமாரராகிய ரேகாபும் பானாவும் போய், இஸ்போசேத் மத்தியானத்திலே வெய்யில் நேரத்தில் படுக்கையின் மேல் சயனித்திருக்கும்போது அவன் வீட்டிற்குள் பிரவேசித்து,

2சாமு 4:6 கோதுமை வாங்க வருகிறவர்கள் போல, நடுவீடுமட்டும் வந்து, அவனை வயிற்றிலே குத்திப்போட்டார்கள்; பின்பு ரேகாபும் அவன் சகோதரன் பானாவும் தப்பி ஓடிப்போனார்கள்.

2சாமு 4:7 அவன் தன் பள்ளி அறையிலே தன் கட்டிலின்மேல் படுத்திருக்கும்போது இவர்கள் உள்ளே போய், அவனைக் குத்திக் கொன்றுபோட்டு, அவன் தலையை வெட்டிப்போட்டார்கள்; பின்பு அவன் தலையை எடுத்துக்கொண்டு, இராமுழுதும் அந்தரவெளி வழியாய் நடந்து,

இஸ்ரவேலில் அப்னேரின் மரணத்தினால் உண்டான விளைவுகள்

1. தாவீதும், அவன் மனுஷரும் அப்னேரின் மரணத்திற்காக உபவாசம்பண்ணி, துக்கங் கொண்டாடினார்கள். *(2சாமு 3:32,34-37)*

2. இஸ்போசேத்தின் கைகள் திடனற்றுப் போயிற்று. *(2சாமு 4:1)*

3. இஸ்ரவேலரெல்லாரும் கலங்கினார்கள்.

"பேரோத்" **(Beeroth)** - இது ஏவியரின் பட்டணம். எருசலேமிலிருந்து வடக்கே 6மைல் தூரத்திலுள்ளது. *(2சாமு 4:2; ஆதி 10:6; யோசு 9:17; யோசு 18:25; எசே 2:25; நெகே 7:29).*

"சவுலின் குமாரன் யோனத்தானுக்கு இரண்டு காலும் முடமான ஒரு குமாரன் இருந்தான்" - சவுலின் சந்ததியாரைப் பற்றி இங்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்போசேத் மரித்துப்போனபின்பு, தாவீது இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தை மிகவும் எளிதாகக் கைப்பற்றிக் கொண்டான். *(2சாமு 4:4-7).* சவுலின் சந்ததியில் இப்போது மேவிபோசேத் மட்டுமே உயிரோடு இருக்கிறான். சவுலும், யோனத்தானும் மடிந்த செய்தி யெஸ்ரயேலிலிருந்து வருகிறபோது, அவன் ஐந்து வயதுள்ளவனாயிருந்தான். அவனுடைய ஐந்து வயதைத் தாவீதின் ஏழு வருஷ ஆட்சிக்காலத்தோடு சேர்க்கும்போது மேவிபோசேத்திற்கு இப்போது பன்னிரண்டு வயதாக இருக்க வேண்டும். சவுலும், யோனத்தானும் மரித்த செய்தியைக் கேள்விப்பட்டபோது, மேவிபோசேத்தின் தாதி அவனை எடுத்துக்கொண்டு ஓடிப் போனாள்; அவள் ஓடிப்போகிற அவசரத்தில் அவன் விழுந்து முடவனானான்.

4 அதிகாரம்

"ரேகாபும் பானாவும்" - இவர்கள் இருவரும் பேரோத்தியனான ரிம்மோனின் குமாரர். இஸ்போசேத்தின்கீழ் இவர்கள் இருவரும் படைத்தலைவர்களாக இருந்தார்கள். (2சாமு 4:2) இஸ்ரவேல் தேசத்து படைத் தலைவர்கள் அருகிலுள்ள தேசங்களுக்குச் சென்று, அங்குள்ள தானியங்களையும், மிருக ஜீவன்களையும் கொள்ளையிட்டு வருவது வழக்கம். புறஜாதியார் செய்ததுபோலவே இஸ்ரவேல் தேசத்தாரும் செய்தார்கள். (2சாமு 4:2; 2சாமு 3:22; 1சாமு 27:8; 1சாமு 30:1,16).

"கோதுமை வாங்க வருகிறவர்கள் போல" - இஸ்போசேத்தின் காவலளர்களை ரேகாவும், பானாவும் ஏமாற்றுகிறார்கள். இவர்கள் இருவரும் கோதுமை வாங்க வருகிறவர்கள் போல நடுவீடுமட்டும் வந்துவிட்டார்கள். இஸ்போசேத் ராஜா வீட்டில் தனியாக இருந்தான். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்கள் இருவரும் இஸ்போசேத்தை அவனுடைய வயிற்றிலே குத்திப்போட்டார்கள். அவனைக் குத்திக் கொன்றுபோட்டு, அவன் தலையை வெட்டிப் போட்டார்கள்; பின்பு அவன் தலையை எடுத்துக் கொண்டு எப்ரோனிலுள்ள தாவீதினிடத்திற்கு வந்தார்கள். (2சாமு 4:6-12).

இவர்கள் இருவரும் இஸ்போசேத்தை ஏன் கொன்று போட்டார்கள் என்பதற்குக் காரணம் தெரியவில்லை. தாவீதுக்கு எதிரியான இவர்களைக் கொன்றுபோட்டால் தாவீது தங்களுக்கு வெகுமதி தருவான் என்று நினைத்திருக்கலாம். (2சாமு 4:8-12). ஆனால் தாவீதோ சவுலின் குடும்பத்தார்மீது பிரியமாயிருக்கிறான். அவனுடைய குடும்பத்தாரைத் துன்பப்படுத்திய எவனுக்கும் தாவீது வெகுமதி கொடுத்ததில்லை. (2சாமு 1:3-16; 2சாமு 4:9-12).

கோதுமை வாங்குகிறவர்கள் பொதுவாக மதிய வேளையில் வந்துவாங்குவார்கள். அந்த கோதுமையை மறுநாள் அரைப்பதற்குப் பயன்படுத்துவார்கள். ஆகையினால், ரேகாவும், பானாவும் மற்றவர்கள் சந்தேகப்படாதவாறு நடந்து கொண்டார்கள்.

இஸ்போசேத் மதிய உணவு சாப்பிட்ட பின்பு, சிறிது தூக்கம்போடும் பழக்கம் உடையவனாக இருக்கலாம். (2சாமு 4:5-7). இஸ்போசேத்தின் தலையை வெட்டி, அவர்கள் கோதுமை வாங்குவதற்குக் கொண்டுவந்த சாக்குப்பைக்குள் போட்டு, தாவீதிடம் எடுத்துச் சென்றிருக்க வேண்டும். மதியவேளையில் வெட்டிய தலையோடு இரவு முழுவதும் அந்தரவெளியாய் நடந்து, எப்ரோனிலுள்ள தாவீதிடம் மறுநாள் காலையில் போய்சேருகிறார்கள். (2சாமு 4:6-8).

(2) தாவீதினிடத்தில் இஸ்போசேத்தின் தலையைக் கொண்டு வருகிறார்கள்

2சாமு 4:8 எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் இஸ்போசேத்தின் தலையைக் கொண்டு வந்து, ராஜாவை நோக்கி: இதோ, உம்முடைய பிராணனை வாங்கத்தேடின உம்முடைய சத்துருவாயிருந்த சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தின் தலை; இன்றைய தினம் கர்த்தர் ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்காகச் சவுலின் கையிலும் அவன் குடும்பத்தாரின் கையிலும் பழிவாங்கினார் என்றார்கள்.

"தாவீதினிடத்தில் இஸ்போசேத்தின் தலையைக் கொண்டு வந்து" - ரேகாபும், பானாவும் துன்மார்க்கமான காரியத்தைச் செய்திருக்கிறார்கள். குற்றமற்றவனுடைய இரத்தத்தைச் சிந்தியிருக்கிறார்கள். தாவீது தங்களுக்குச் சன்மானம் கொடுப்பான் என்றுநினைத்தார்கள். ஆனால் தாவீதோ அவர்கள் உயிரை எடுத்து விட்டான். (2சாமு 4:8-12; 2சாமு 1:3-16).

"அவன் குடும்பத்தாரின் கையிலும் பழிவாங்கினார்" - சவுலின் குடும்பத்தில் இப்போது பன்னிரண்டு வயது நிரம்பிய முடவனான மேவிபோசேத் மட்டுமே இருக்கிறான். (2சாமு 4:4-6).

(3) கொலைசெய்த ரேகாபையும், பானாவையும் கொன்று போடுகிறார்கள்

2சாமு 4:9 ஆனாலும் தாவீது பேரோத்தியனான ரிம்மோனின் குமாரராகிய ரேகாபுக்கும், அவன் சகோதரன் பானாவுக்கும் பிரதியுத்தரமாக: என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு நான் சொல்லுகிறதைக் கேளுங்கள்.

4 அதிகாரம்

2சாமு 4:10 இதோ, ஒருவன் எனக்கு நற்செய்தி கொண்டுவருகிறவன் என்று எண்ணி, சவுல் செத்துப்போனான் என்று எனக்கு அறிவித்து, தனக்கு வெகுமானம் கிடைக்கும் என்று நினைத்தபோது, அவனை நான் பிடித்து சிக்லாகிலே கொன்றுபோட்டேனே.

2சாமு 4:11 தமது வீட்டிற்குள் தமது படுக்கையின்மேல் படுத்திருந்த நீதிமானைக் கொலை செய்த பொல்லாத மனுஷருக்கு எவ்வளவு அதிகமாய் ஆக்கினை செய்யவேண்டும்? இப்போதும் நான் அவருடைய இரத்தப்பழியை உங்கள் கைகளில் வாங்கி, உங்களை பூமியிலிருந்து அழித்துப்போடாதிருப்பேனோ என்று சொல்லி,

2சாமு 4:12 அவர்களைக் கொன்றுபோடவும், அவர்கள் கைகளையும் கால்களையும் தறித்து, எப்ரோனிலிருக்கிற குளத்தண்டையிலே தூக்கிப்போடவும் தன் சேவகருக்குக் கட்டளையிட்டான். இஸ்போசேத்தின் தலையை எடுத்து, எப்ரோனிலிருக்கிற அப்னேரின் கல்லறையிலே அடக்கம் பண்ணினார்கள்.

"என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தர்" - இக்கட்டுகளிலிருந்து கர்த்தர் மீட்கிறார் என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு.

"கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு நான் சொல்லுகிறது" - இஸ்ரவேல் தேசத்தில் ஜனங்கள் ஆணையிடும்போது, கர்த்தருடைய நாமத்தையும் அதில் பயன்படுத்துவது வழக்கம். வேதாகமத்தில் இதுபோன்ற வாக்கியங்களைப் பயன்படுத்தி, ஆணையிட்ட சம்பவங்கள் பல உள்ளன. அவையாவன:

1. கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு *(2சாமு 4:9; 2சாமு 12:5; 2சாமு 14:11; 2சாமு 15:21; நியா 8:19; ரூத் 3:13; 1சாமு 14:39,45; 1சாமு19:6; 1சாமு 20:3,21; 1சாமு 25:26; 1சாமு 26:10,16; 1சாமு 28:10; 1சாமு 29:6; 1இராஜா 1:29; 1இராஜா 2:24; 1இராஜா 22:14; 2இராஜா 2:2,4,6; 2இராஜா 4:30; 2இராஜா 5:16,20; 2நாளா 18:13; எரே 38:16).*

2. தேவனுடைய ஜீவனைக்கொண்டு *(2சாமு 2:27; யோபு 27:2)*

3. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக் கொண்டு *(1சாமு 25:34; 1இராஜா 17:1)*

4. உன்னுடைய தேவனாகிய கர்த்தரின் ஜீவனைக்கொண்டு *(1இராஜா 17:12; 1இராஜா 18:10)*

5. சேனைகளின் கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு. *(1இராஜா 18:15; 2இராஜா 3:14)*

6. கர்த்தர் ஜீவனுள்ளவர் *(2சாமு 22:47; சங் 18:46; எரே 4:2; எரே 5:2; எரே 12:16; எரே 16:14-15; எரே 23:7-8; ஓசி 4:15)*

7. கர்த்தராகிய ஆண்டவருடைய ஜீவன். *(எரே 44:26).*

"சவுல் செத்துப்போனான் என்று எனக்கு அறிவித்து" - *(2சாமு 1:3-16)*

"தனக்கு வெகுமானம் கிடைக்கும் என்று நினைத்தபோது" - சவுலைத் தான் கொன்றுபோட்டதாக ஒரு வாலிபன் வந்து, தாவீதிடம் பொய்கூறினான். தனக்கு வெகுமானம் கிடைக்கும் என்று நினைத்தான். ஆனால் தாவீது அவனுக்கு வெகுமானம் தராமல், அவனுடைய ஜீவனை எடுத்துப் போட்டான். *(2சாமு 1:2,5,6,13).*

"அவனை நான் பிடித்து சிக்லாகிலே கொன்றுபோட்டேனே" - இலக்கியத்தில் "செயலாண்மை" **(agency)** என்னும் இலக்கண பிரிவு இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு தாவீது "அவனை நான் பிடித்து சிக்லாகிலே கொன்றுபோட்டேனே" என்று கூறுகிறான். ஆனால் தாவீது அவனைத் தன் கையால் கொல்ல வில்லை. வாலிபரில் ஒருவனைக் கூப்பிட்டு, அவனை வெட்டிப்போடுமாறு சொன்னான். அந்த வாலிபனோ அவனைக் கொன்று போட்டான். *(2சாமு 1:15).* வேதாகமத்தில் இதுபோன்ற இலக்கணப் பகுதி பல இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

II சாமுவேல் - தொகுப்புரை

4 அதிகாரம்

கர்த்தர் தாம் செய்ததாகக் கூறும் சில காரியங்கள் அவர் செய்தவையல்ல. அவர் சார்பாக அவருடைய அனுமதியின்பேரில் அவருடைய பிள்ளைகள் செய்திருக்கிறார்கள். (ஆதி 12:17; யாத் 32:35; உபா 28:59; 2சாமு 12:15) கர்த்தர் வியாதியையும், வாதைகளையும், சாபங்களையும் அனுப்பியதாக வேதாகமத்தில் வாசிக்கிறோம். இவற்றைக் கர்த்தர் அனுப்புவதில்லை. மனுஷர்மீது இவை வருவதற்கு கர்த்தர் அனுமதி அளிக்கிறார். அல்லது இதுபோன்ற வாதைகள் வரும்போது, கர்த்தர் தம்முடைய ஜனத்தைப் பாதுகாக்காமல் விட்டுவிடுகிறார். பாவம் செய்கிறவர்களைத் தண்டிப்பதற்குக் கர்த்தர் பல சமயங்களில் தம்முடைய பிரதிநிதிகளைப் பயன்படுத்துகிறார். (கலா 6:7-8).

"அவர்களைக் கொன்றுபோடவும்............ தன் சேவகருக்குக் கட்டளையிட்டான்" - ரேகாவும், பானாவும் இஸ்போசேத்தின் தலையை வெட்டுவதற்கு தங்களுடைய கைகளைப் பயன்படுத்தினார்கள். அவனுடைய தலையைத் தாவீதிடம் கொண்டுவருவதற்கு தங்கள் கால்களால் நடந்து வந்தார்கள். தாவீது அவர்களுடைய கைகளையும் கால்களையும் தறித்துப் போடுமாறு தன் சேவகருக்குக் கட்டளையிட்டான். ராஜதுரோகம் பண்ணியோருடைய கைகளையும், கால்களையும் தறித்துப்போடுவது அக்காலத்து வழக்கம். கொலைசெய்தவர்களைத் தண்டிப்பதற்காகவும், இந்தக் கொலையில் தாவீதுக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்பதை நிரூபிப்பதற்காகவும் தாவீது அவர்கள் இருவரையும் கொன்றுபோட்டான். இஸ்போசேத்தின் தலையை எடுத்து, எப்ரோனிலிருக்கிற அப்னேரின் கல்லறையிலே அடக்கம் பண்ணினார்கள்.

5 அதிகாரம்

8. இராஜ்யம் ஒன்று சேர்கிறது - தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கு இராஜாவாகிறான் - *(2:8; 1நாளா 11:1)*

2சாமு 5:1 அக்காலத்திலே இஸ்ரவேலின் கோத்திரங்களெல்லாம் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்து: இதோ, நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள்.

2சாமு 5:2 சவுல் எங்கள்மேல் ராஜாவாயிருக்கும்போதே இஸ்ரவேலை நடத்திக்கொண்டு போனவரும் நடத்திக்கொண்டுவந்தவரும் நீரே; கர்த்தர்: என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ரவேலின் மேல் தலைவனாயிருப்பாய் என்று உம்மிடத்தில் சொன்னாரே என்றார்கள்.

2சாமு 5:3 இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் எப்ரோனிலே ராஜாவினிடத்தில் வந்தார்கள்; தாவீதுராஜா எப்ரோனிலே கர்த்தருக்கு முன்பாக அவர்களோடே உடன்படிக்கை பண்ணினபின்பு, அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்.

"அக்காலத்திலே இஸ்ரவேலின் கோத்திரங்க ளெல்லாம் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்து" - மற்றக் கோத்திரத்தின் மூப்பர்கள் தாவீதினிடத்தில் வருகிறார்கள். அவனோடு ஓர் உடன்படிக்கை பண்ணி, தாவீதைச் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக அபிஷேகம் பண்ணுகிறார்கள். ஏழு வருஷக்காலமாகப் பிரிந்திருந்த இஸ்ரவேல் ராஜ்யம் மறுபடியும் ஒன்றுசேர்ந்து, சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யமாயிற்று. (2சாமு 2:8-11).

மூப்பர் தாவீதிடம் கூறிய காரியம்

1. நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள்.

2. சவுல் எங்கள்மேல் ராஜாவாயிருக்கும் போதே இஸ்ரவேலை நடத்திக்கொண்டு போனவரும் நடத்திக் கொண்டுவந்தவரும் நீரே (2சாமு 5:2)

3. கர்த்தர்: என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ரவேலின் மேல் தலைவனாயிருப்பாய் என்று உம்மிடத்தில் சொன்னாரே.

"இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும்" - இஸ்ரவேல் தேசத்தில் மூப்பர்கள் சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். அக்காலத்திலேயே இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் மூப்பர்கள் ஜனங்களை நீதியாகவும், திறமையாகவும் நிர்வாகம் பண்ணி வந்தார்கள்.

இஸ்ரவேலின் மூப்பர் செய்த காரியங்கள்

1. தாவீதோடு விண்ணப்பம் பண்ணினார்கள். (2சாமு 5:1-2)

2. தாவீதோடு உடன்படிக்கை பண்ணினார்கள்.

3. தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்.

9. தாவீதின் வயது - 40 வருஷ ஆட்சி

2சாமு 5:4 தாவீது ராஜாவாகும்போது, முப்பது வயதாயிருந்தான்; அவன் நாற்பது வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான்.

2சாமு 5:5 அவன் எப்ரோனிலே யூதாவின்மேல் ஏழு வருஷமும் ஆறு மாதமும், எருசலேமிலே சமஸ்த இஸ்ரவேலின்மேலும் யூதாவின்மேலும் முப்பத்துமூன்று வருஷமும் ராஜ்யபாரம் பண்ணினான்.

"தாவீது ராஜாவாகும்போது, முப்பது வயதாயிருந்தான்" - தாவீது கோலியாத்தைக் கொன்றபோது அவனுக்கு 18 அல்லது 20 வயது இருந்திருக்க வேண்டும். தன் ஜீவனுக்குத் தப்பித்து, 6 அல்லது 10 வருஷங்கள் சவுலிடமிருந்து ஓடி ஒளிந்திருக்க வேண்டும். (1சாமு 18-31) தாவீது தன்னுடைய எழுபதாவது வயதில் அபிஷாகை தன் மனைவியாகத் திருமணம் பண்ணினான். (1இராஜா 1:1-4) தாவீது இஸ்ரவேலை 40 வருஷங்களுக்கு ராஜ்யபாரம் பண்ணினான். ராஜ்யபாரம் பண்ண ஆரம்பித்தபோது, தாவீதின் வயது 30 ஆகும். (2சாமு 5:4) அதுல்லாம் கெபியில் தாவீது தன் மனுஷரைச் சேர்த்தபோது, அவனுக்கு 20 அல்லது 24 வயதாக இருக்க வேண்டும்.

5 அதிகாரம்

"அவன் நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்" - தாவீது 40 வருஷமும், 6 மாதமும் ராஜ்யபாரம் பண்ணினான். எப்ரோனில் யூதாவின்மீது 7 வருஷமும், 6 மாதமும் ராஜாவாக இருந்தான். சமஸ்த இஸ்ரவேலின்மீது 33 வருஷம் ராஜாவாக ஆட்சி புரிந்தான். (2சாமு 5:4-5).

10. சமஸ்த ராஜ்யத்திற்கு எருசலேம் தலைநகரமாயிற்று - (1நாளா 11:4)

2சாமு 5:6 தேசத்திலே குடியிருக்கிற எபூசியர் மேல் யுத்தம்பண்ண ராஜாவானவன் தன் மனுஷரோடேகூட எருசலேமுக்குப் போனான். அவர்கள்: இதிலே பிரவேசிக்க தாவீதினால் கூடாது என்று எண்ணி, தாவீதைநோக்கி: நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை; குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள் என்று சொன்னார்கள்.

2சாமு 5:7 ஆனாலும் தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான்; அது தாவீதின் நகரமாயிற்று.

2சாமு 5:8 எவன் சாலகத்தின் வழியாய் ஏறி, எபூசியரையும் தாவீதின் ஆத்துமா பகைக்கிற சப்பாணிகளையும், குருடரையும் முறிய அடிக்கிறானோ, அவன் தலைவனாயிருப்பான் என்று தாவீது அன்றையதினம் சொல்லியிருந்தான்; அதனால் குருடனும் சப்பாணியும் வீட்டிலே வரலாகாது என்று சொல்லுகிறதுண்டு.

2சாமு 5:9 அந்தக் கோட்டையிலே தாவீது வாசம்பண்ணி, அதற்குத் தாவீதின் நகரம் என்று பேரிட்டு, மில்லோ என்னும் ஸ்தலந்துவக்கி, உட்புறமட்டும் சுற்றிலும் இருக்கிற மதிலைக் கட்டினான்.

2சாமு 5:10 தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார்.

"எபூசியர் மேல் யுத்தம்பண்ண ராஜாவானவன் தன் மனுஷரோடேகூட எருசலேமுக்குப் போனான்" - இப்போது தாவீதின் தலைநகரம் எப்ரோனில் இருக்கிறது. அவன் யூதாவை மட்டும் ஆட்சி புரிந்தபோது, எப்ரோன் சரியான மையஸ்தலம். ஆனால் சமஸ்த இஸ்ரவேலுக்கும், எப்ரோன் சரியான இடமல்ல. தாவீது தன் தலைநகரை மாற்ற வேண்டிய சூழ்நிலையில் இருந்தான். கர்த்தர் தம்முடைய திட்டத்தின் பிரகாரம் எருசலேமை நித்திய நகரமாகத் தெரிந்தெடுத்திருக்கிறார். அதன் பிரகாரம், தாவீது எருசலேமிற்குத் தன் தலைநகரை மாற்றினான். எருசலேம் பல வருஷங்களாக எபூசியரின் கோட்டையாக இருந்தது. இதற்குக்கிடையில் சிறிது காலம் மட்டும் அது யூதாவின் வசமாயிற்று. எபூசியர் கானான் தேசத்தைக் கைப்பற்றிய நாளிலிருந்து அவர்கள் எருசலேம் பட்டணத்தைத் தங்கள் தலைநகரமாகப் பயன்படுத்தி வந்தார்கள். (யோசு 10:1-5,23; யோசு 15:63; நியா 1:8)

"குருடரும் சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள்" - எபூசியர் எருசலேம் கோட்டையின்மீது அதிகம் நம்பிக்கை வைத்திருந்தார்கள். கோட்டை வலுவானது. தங்கள்மீது யாரும் யுத்தம் பண்ண முடியாது என்று நினைத்தார்கள். ஆகையினால் பலவான்களை எருசலேமிற்குக் காவல் வைப்பதற்குப் பதிலாக அவர்கள் குருடரையும், சப்பாணிகளையும் காவலுக்கு வைத்திருந்தார்கள். தாவீதால் எருசலேம் கோட்டையைப் பிடிக்க முடியாது என்று எபூசியர் நினைத்தார்கள். ஆனால் தாவீதோ சீயோன் கோட்டையைப் பிடித்தான். அது தாவீதின் நகரமாயிற்று. (2சாமு 5:7).

"சீயோன்" **(Zion)** - வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் 153 இடங்களில் சீயோனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் **"Sion"** என்பது பழைய ஏற்பாட்டின் **"Zion"** ஆகும். எருசலேம் பட்டணம் ஐந்து உயரமான மலைகளின்மீது கட்டப்பட்டிருக்கிறது. அவை அக்ரா, பெசித்தா, மோரியா, ஓபேல், சீயோன் என்பனவாகும். ஒருசிலர் ஓபேலும், சீயோனும் ஒன்றே என்று கூறுகிறார்கள். சீயோனும் தாவீதின் நகரமும் ஒன்றுதான். (2சாமு 5:7; 2நாளா 5:2). சீயோன் என்னும் பெயர் எருசலேமிற்கும், இஸ்ரவேல் தேசத்திற்கும் பொதுவாக வழங்கப்பட்டிருக்கும் பெயராகும்.

5 அதிகாரம்

"தாவீதின் நகரம்" (the city of David) - (2சாமு 5:7,9; 1இராஜா 8:1; 1நாளா 11:5; 2நாளா 5:2).

"சாலகம்" (gutter) - எருசலேம் பட்டணத்திற்குள் இதன் வழியாகத்தான் குடிக்கும் தண்ணீர் போகிறது.

"சப்பாணிகளையும், குருடரையும் முறிய அடிக்கிறானோ, அவன் தலைவனாயிருப்பான்" - தாவீது தன்னுடைய வீரர்களுக்கு ஒரு போட்டி வைக்கிறான். எபூசியரையும், சப்பாணிகளையும், குருடர்களையும் முறியடிக்கிறவன் தன்னுடைய சேனைக்குத் தலைவனாக இருப்பான் என்று உறுதி கூறுகிறான். (2சாமு 5:6)

"அதனால் குருடனும் சப்பாணியும் வீட்டிலே வரலாகாது என்று சொல்லுகிறதுண்டு" - தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்த பின்பு, இஸ்ரவேலர் மத்தியில் இந்தப் பழமொழி வழங்கப்படலாயிற்று. கர்த்தருடைய ஆலயத்திற்கு எபூசியரின் குருடனும், சப்பாணியும் வரக்கூடாது என்பது இதன் பொருளாகும்.

"மில்லோ" (Millo) - எருசலேமிலுள்ள அரண். (1இராஜா 9:15,24; 1இராஜா 11:27; 2இராஜா 12:20; 1நாளா 11:8; 2நாளா 32:5). இந்த மில்லோவும், நியா 9:6,20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மில்லோவும் ஒன்றல்ல. வெவ்வேறானவை.

11. ஈராம் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டுகிறான்- (1இராஜா 5:1-18; 9:10-14)

2சாமு 5:11 தீருவின் ராஜாவாகிய ஈராம் தாவீதினிடத்தில் ஸ்தானாபதிகளையும், கேதுரு மரங்களையும், தச்சரையும் கல்தச்சரையும் அனுப்பினான்; அவர்கள் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டினார்கள்.

2சாமு 5:12 கர்த்தர் தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாகத் திடப்படுத்தி, தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை உயர்த்தினார் என்று தாவீது கண்டறிந்தபோது,

"ஈராம்" (Hiram) - இந்தப் பெயருக்கு "பிரதிஷ்டை" "consecration" என்றுபொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஈராம்"கள்

1. தீருவின் ராஜா. தாவீது, சாலொமோன் ஆகியோரின் சிநேகிதன். (2சாமு 5:11; 1இராஜா 5:1-18; 1இராஜா 9:11-27; 1இராஜா 10:11,22; 1நாளா 14:1; 2நாளா 2:11,13)
2. சாலொமோனின் ஆட்சிக்காலத்தில் வெண்கல வேலையைச் சிறப்பாக செய்தவன். (1இராஜா 7:13,40-45). இவன் தீருவின் ராஜவாகிய ஈராமின் குமாரன் என்று யோசபஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

12. எருசலேமில் தாவீதின் குடும்பத்தார் - (2:2; 3:2-5; 1நாளா 3:5)

2சாமு 5:13 அவன் எப்ரோனிலிருந்து வந்த பின்பு, எருசலேமில் இன்னும் அதிகமான மறுமனையாட்டிகளையும் ஸ்திரீகளையும் கொண்டான்; இன்னும் அதிக குமாரரும் குமாரத்திகளும் தாவீதுக்குப் பிறந்தார்கள்.

2சாமு 5:14 எருசலேமில் அவனுக்குச் சம்முவா, சோபாப், நாத்தான், சாலொமோன்,

2சாமு 5:15 இப்பார், எலிசூவா, நெப்பேக், யப்பியா,

2சாமு 5:16 எலிஷாமா, எலியாதா, எலிப்பேலேத் என்னும் பேர்களையுடைய குமாரர் பிறந்தார்கள்.

13. பெலிஸ்தர் மீது முதலாவது வெற்றி - (1நாளா 14:8)

2சாமு 5:17 தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள் என்று பெலிஸ்தர் கேள்விப்பட்டபோது, அவர்கள் எல்லாரும் தாவீதைத் தேடும்படி வந்தார்கள்; அதைத் தாவீது கேட்டபோது, ஒரு அரணிப்பான இடத்துக்குப் போனான்.

5 அதிகாரம்

2சாமு 5:18 பெலிஸ்தரோ வந்து, ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பரவியிருந்தார்கள்.

2சாமு 5:19 பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக் கொடுப்பீரா என்று தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர்: போ, பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன் என்று தாவீதுக்குச் சொன்னார்.

2சாமு 5:20 தாவீது பாகால் பிராசீமுக்கு வந்து, அங்கே அவர்களை முறிய அடித்து: தண்ணீர்கள் உடைத்தோடுகிறதுபோல, கர்த்தர் என் சத்துருக்களை எனக்கு முன்பாக உடைத்து ஓடப்பண்ணினார் என்று சொல்லி, அதினிமித்தம் அந்த ஸ்தலத்திற்குப் பாகால்பிராசீம் என்று பேரிட்டான்.

2சாமு 5:21 அங்கே பெலிஸ்தர் தங்கள் விக்கிரகங்களைவிட்டு ஓடிப்போனார்கள்; அவைகளைத் தாவீதும் அவன் மனுஷரும் சுட்டெரித்தார்கள்.

பெலிஸ்தரோடு புதிய யுத்தம்

வேதாகமத்தில் பெலிஸ்தரைப் பற்றி கடந்த எட்டு வருஷங்களாக ஒன்றும் கூறப்படவில்லை. கில்போவாவில் நடைபெற்ற யுத்தத்தில் சவுல் தோல்வியுற்றபோது, பெலிஸ்தரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (1சாமு 31). ஏழரை வருஷங்களாகத் தாவீது யூதாவின்மீது ராஜாவாக இருந்தான். இதைப் பெலிஸ்தர்கள் பெரிய பிரச்சனையாக எடுத்துக் கொள்ள வில்லை. ஏனெனில் யூதா இஸ்ரவேலின் ஒருசிறிய பகுதிதான். மேலும் தாவீதும், பெலிஸ்தரோடு அவர்களில் ஒருவனாக ஒரு வருஷத்திற்குமேல் குடியிருந்தான். தன்னுடைய சொந்த கோத்திரமாகிய யூதா கோத்திரத்தின்மீது ராஜாவாக ஆளுகை செய்வதற்கு தாவீது எப்ரோனில் குடியேறினான். ஆகையினால் பெலிஸ்தர் இதுவரையிலும் தாவீதை ஒரு பெரிய பிரச்சனையாகக் கருதவில்லை. இப்போது தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறான்.

இது பெலிஸ்தருக்குப் பிரச்சனையாயிற்று. இதைக் கேள்விப்பட்ட போது, பெலிஸ்தர் தாவீதைத் தேடி வந்தார்கள். சமஸ்த இஸ்ரவேலின்மீதும், தாவீது தன்னுடைய ராஜ்யபாரத்தைச் ஸ்திரப்படுத்துவதற்கு முன்பாக அவனை அழித்துப்போட வேண்டுமென்று வந்தார்கள். காலம் கடந்து விட்டால், தாவீது தன்னை ஸ்திரப்படுத்தி, தன் சேனையைப் பெருக்கிக் கொள்வான்.

"தாவீதைத் தேடும்படி வந்தார்கள்" - (1சாமு 26:1-2)

"அதைத் தாவீது கேட்டபோது" - பெலிஸ்தர் மத்தியில் தாவீதுக்கு வேவுகாரர்கள் இருந்திருக்க வேண்டும். பெலிஸ்தர் சவுலை எட்டு வருஷங்களுக்கு முன்பு யுத்தத்தில் முறியடித்தார்கள். அதன் பின்பு, இஸ்ரவேலின் பெரும்பகுதி பெலிஸ்தரின் வசமாயிற்று. பெலிஸ்தர் மத்தியில் வாசம்பண்ணும் இஸ்ரவேலருக்கு அவர்களுடைய யுத்த யுக்திகள் தெரிந்திருக்கும். அவர்கள் மூலமாகத் தாவீது பெலிஸ்தரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பான்.

"ஒரு அரணிப்பான இடத்துக்குப் போனான்" - இந்த அரணிப்பான இடம் எது என்று தெரியவில்லை. தாவீது மலையின்மீது ஏறிப்போவதற்குப் பதிலாக மலையிலிருந்து கீழே இறங்கி வருகிறான். ஒருவேளை அவன் அதுல்லாம் கெபிக்கு வந்திருக்கலாம். (1சாமு 22:1). இந்தச் சம்பவத்திற்கு முன்பாகவே தாவீது சீயோனைப்பிடித்து, அதைத் தன் நகரமாக ஆக்கியிருந்தால் (2சாமு 5:6-10) சீயோனைச் சுற்றிலுள்ள ஏதாவது ஒரு அரணிப்பான இடத்திற்குத் தாவீது போயிருப்பான். சீயோனுக்குத் தென் பகுதியில் பாதுகாப்பான இடங்கள் பல உள்ளன. எருசலேமிலிருந்து தென்மேற்கே 12மைல் தூரத்தில் அதுல்லாம் கெபி உள்ளது. இப்பகுதியில் ரெப்பாயீம் பள்ளத்தாக்கும் உள்ளது. இன்னோம் பள்ளத்தாக்கும், பெத்லகேமிற்குப் போகும் சாலையும், மலையின் பிளவுகளும் இப்பகுதியில் உள்ளன.(யோசு 15:8;யோசு 18:16; ஏசா 17:5). தாவீதுக்கும், பெலிஸ்தருக்கும் இந்த இடத்தில் முதலாவது யுத்தம் நடைபெற்றது. தன் அரணிப்பான இடத்திலிருந்து தாவீது பெலிஸ்தரைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றான். ரெப்பாயீம் பள்ளத்தாக்கு, எருசலேமிற்கும், பெத்லகேமிற்கும் இடையிலுள்ளது என்று யோசபஸ் கூறுகிறார். ரெப்பாயீம் பள்ளத்தாக்கில்

பாகால்பிராசீமில் **(Baal-perazim)** தாவீதுக்குப் பெலிஸ்தர்மீது முதலாவது வெற்றிகிடைக்கிறது. (2சாமு 5:18-21; 1நாளா 14:11). பாகால்பிராசீமும், பெராத்சீம் மலையும் **(Mount Perazim)** ஒன்றாக இருக்கலாம்.(ஏசா 28:21)

5 அதிகாரம்

"ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பரவியிருந்தார்கள்" - தாவீது ரெப்பாயீம் பள்ளத்தாக்கிற்குத் தன்னுடைய சேனைகளை அணிவகுத்து வந்தான். பெலிஸ்தரும் இந்த இடத்திற்கு வந்தார்கள்.

தீர்க்கதரிசன எண் - 1

"பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன்" *(2சாமு 5:19)* இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. அபியத்தார் பிரதான ஆசாரியனாக இருக்கிறான். ஊரீம், தும்மீம் ஆகியவற்றின்மூலமாகத் தாவீது கர்த்தரிடத்தில் இரண்டு கேள்விகளைக் கேட்கிறான். அவையாவன

1. பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா.

2. அவர்களை என் கையில் ஒப்புக் கொடுப்பீரா.

தாவீதின் இவ்விரண்டு கேள்விகளுக்கும் கர்த்தர் "ஆம்" என்று பதில் கூறினார்.

"பாகால்பிராசீம்" **(Baal-perazim)** - ரெப்பாயீம் பள்ளத்தாக்கு என்பதற்கு இராட்சதரின் பள்ளத்தாக்கு என்று பொருள். இந்தப் பள்ளத்தாக்கில் பாகால்பிராசீம் சரியாக எங்குள்ளது என்று தெரியவில்லை. இந்தப் பள்ளத்தாக்கின் ஒரு முனையிலுள்ள ஏதாவது ஒரு மலைப்பகுதியில் பாகால்பிராசீம் இருக்க வேண்டும். கர்த்தர் தாவீதின் சத்துருக்களை அவனுக்கு முன்பாக உடைத்து ஓடப்பண்ணினார். (1நாளா 14:11). அங்கே பெலிஸ்தர் தங்கள் விக்கிரகங்களைவிட்டு ஓடிப்போனார்கள்; அவைகளைத் தாவீதும் அவன் மனுஷரும் சுட்டெரித்தார்கள். *(2சாமு 5:21)*.

14. பெலிஸ்தர்மீது இரண்டாவது வெற்றி - (1நாளா 14:8)

2சாமு 5:22 பெலிஸ்தர் திரும்பவும் வந்து, ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே இறங்கினார்கள்.

2சாமு 5:23 தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்ததற்கு, அவர்: நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்னாலே சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள்மேல் பாய்ந்து,

2சாமு 5:24 முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, சீக்கிரமாய் எழும்பிப்போ; அப்பொழுது பெலிஸ்தரின் பாளயத்தை முறிய அடிக்க, கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்றார்.

2சாமு 5:25 கர்த்தர் தாவீதுக்குக் கட்டளையிட்ட பிரகாரம் அவன் செய்து, பெலிஸ்தரைக் கேபா துவக்கிக் கேசேர் எல்லைமட்டும் முறிய அடித்தான்.

"பெலிஸ்தர் திரும்பவும் வந்து" - இதற்கு முன்பு வந்த எண்ணிக்கையைவிட பெலிஸ்தர் இப்போது திரளான வீரர்களைச் சேர்த்துக் கொண்டு ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே இறங்கினார்கள். தாவீது பெலிஸ்தரோடு இரண்டாம் முறையாக யுத்தம் பண்ணி ஜெயம் பெற்றான். *(2சாமு 5:22-25)*.

தீர்க்கதரிசன எண் - 2

"நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்னாலே சுற்றி............" *(2சாமு 5:23-24)* இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. தாவீது மறுபடியும் கர்த்தரிடத்தில் ஊரீம், தும்மீம் ஆகியவற்றின் மூலமாக விசாரிக்கிறான். *(2சாமு 5:19,23)*.

"அவர்களுக்குப் பின்னாலே சுற்றி" - பெலிஸ்தருக்கு எதிராகப் போகாமல், அவர்களுக்குப் பின்னாகச் சுற்றி, அவர்களுடைய பின்புறத்திலிருந்து பெலிஸ்தரைத் தாக்க வேண்டுமென்பது கர்த்தருடைய திட்டம். (யோசு 8:2; 1நாளா 14:14).

"முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது" - தாவீது பெலிஸ்தருக்குப் பின்னாகப் போனாலும், அவன் தன் சுய இஷ்டப்படி யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை அவன் கேட்கும் வரையிலும் பொறுமையோடு காத்திருந்தான். இந்த இரைச்சலின் சத்தம் கர்த்தருடைய சேனைகளின் சத்தமாகும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்பதற்கு இது அடையாளம். தாவீது தங்களுக்கு முன்பாக இருப்பான் என்று பெலிஸ்தர் நினைத்தார்கள். ஆனால் சேனைத்திரளின்

II சாமுவேல் - தொகுப்புரை

5 அதிகாரம்

சத்தமோ அவர்களுக்குப் பின்புறம் இருந்து வருகிறது. இந்தச் சத்தத்தைக் கேட்டபோது, பெலிஸ்தர் குழப்பம் அடைந்தார்கள். பயந்து ஓடிவிட்டார்கள். தாவீது பெலிஸ்தரைக் கேபா துவக்கிக் கேசேர் எல்லைமட்டும் முறிய அடித்தான். தாவீது தங்களுக்கு முன்பாக இருப்பதாக பெலிஸ்தர் நினைத்தார்கள். ஆனால் சேனைத்திரளின் சத்தமோ அவர்களுக்கு பின்புறம் இருந்து வருகிறது.

"கேபா" **(Geba)** - பென்யமீனிலுள்ள கிபியோனின் சுருக்கமான பெயர். சவுலின் சொந்த ஊர். (யோசு 21:17; 1சாமு 13:3; 1இராஜா 15:22; 2இராஜா 23:8; 1நாளா 6:60; 1நாளா 8:6; 2நாளா 16:6; நெகே 11:31; நெகே 12:29; ஏசா 10:29; சக 14:10). ஒரு காலத்தில் சவுலைப் பெலிஸ்தர் முறியடித்தார்கள். ஆனால் இப்போதோ அவனுடைய ஊர் வரைக்கும் பெலிஸ்தர் தோற்று ஓடுகிறார்கள்.

"கேசேர்" **(Gazer)** - (1நாளா 14:16) மறுபெயர் **(Gezer)** (யோசு 10:33; யோசு 12:12; யோசு 16:3,10; யோசு 21:21; நியா 1:29; 1இராஜா 9:15-17; 1நாளா 6:67; 1நாளா 7:28; 1நாளா 20:4). கேபாவிலிருந்து கேசேர் 30 அல்லது 35 மைல் தூரத்திலுள்ளது. ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலிருந்து பெலிஸ்தர் வடமேற்காக ஓடிப்போனார்கள்.

6 அதிகாரம்

III. தாவீதின் ஆராதனை ஒழுங்குகள் - (2சாமு 6:1-7:29)

1. தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வருமாறு தாவீது கூறுகிறான் - (1நாளா 13:1-8)

2சாமு 6:1 பின்பு தாவீது இஸ்ரவேலர் எல்லாருக் குள்ளும் தெரிந்து கொள்ளப்பட்ட முப்பதினாயிரம்பேரைக் கூட்டி,

2சாமு 6:2 கேருபீன்களின் நடுவே வாசமாயிருக்கிற சேனைகளுடைய கர்த்தரின் நாமம் தொழுதுகொள்ளப் படுகிற தேவனுடைய பெட்டியைப் பாலை யூதாவிலிருந்து கொண்டுவரும்படி, அவனும் அவனோடிருந்த அந்த ஸ்தலத்தாரும் எழுந்து போய்,

2சாமு 6:3 தேவனுடைய பெட்டியை ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றி, அதைக் கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து கொண்டுவந்தார்கள்; அபினதாபின் குமாரராகிய ஊசாவும் அகியோவும் அந்தப் புது இரதத்தை நடத்தினார்கள்.

2சாமு 6:4 அவர்கள் தேவனுடைய பெட்டியை ஏற்றி, அதைக் கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து நடத்திக்கொண்டு வருகிற போது, அகியோ பெட்டிக்கு முன்னாலே நடந்தான்.

2சாமு 6:5 தாவீதும் இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் தேவதாரு மரத்தால் பண்ணப்பட்ட சகலவித கீதவாக்கியங்களோடும், சுரமண்டலம் தம்புரு மேளம் வீணை கைத்தாளம் ஆகிய இவைகளோடும், கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடிக் கொண்டு போனார்கள்.

"தாவீது இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும்" - தாவீது நான்காம் முறையாக ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுகிறான். இஸ்ரவேலர் எல்லாருக்குள்ளும் தெரிந்துகொள்ளப்பட்ட மனுஷரைக் கூட்டிக் கொண்டான். தன் சத்துருக்களோடு மூன்றுமுறை யுத்தம் பண்ணப்போனான். (2சாமு 5:6,17,23) ஆனால் இம்முறை தன்னோடு தெரிந்துகொள்ளப்பட்ட முப்பதினாயிரம்பேரை மட்டுமே தன்னோடு சேர்த்துக் கொண்டான்.

"பாலையூதா" **(Baale of Judah)** - இது கீரியாத்யாரீமிற்கு கானானியர் கொடுத்த பழங்காலத்து பெயராகும். (1சாமு 6:21; 1சாமு 7:2). மறுபெயர் பாலா **(Baalah)** (யோசு 15:9-10,11,29; 1நாளா 13:6).

"புது இரதம்" - ஆசாரியர் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்க வேண்டுமென்பது மோசேயின் பிரமாணம். அதற்குப் பதிலாக இங்கு பெட்டியைப் புதிய இரதத்தின்மேல் ஏற்றினான். கிபியாவிலிருந்து எருசலேமிற்கு உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வந்தான். (2சாமு 15:24; யாத் 37:5; எண் 4:15; எண் 7:9; எண் 10:21; உபா 10:8; யோசு 3:8-14; 1நாளா 13:7; 1நாளா 15:2) பெலிஸ்தரும், பெட்டியை வண்டியில் வைத்துதான் இஸ்ரவேல் தேசத்திற்குத் திரும்ப அனுப்பினார்கள். (1சாமு 6:7).

"ஊசா" **(Uzzah)** - இந்தப் பெயருக்கு "பெலன்" **"strength"** என்று பொருள். மறுபெயர் **(Uzza).**

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஊசா"க்கள்

1. அபினதாபின் குமாரன் (2சாமு 6:3-8)
2. சீமேயியின் குமாரன் - லேவியன் (1நாளா 6:29)
3. ஒரு பென்யமீனன் (1நாளா 8:7)
4. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன். (எஸ்றா 2:49; நெகே 7:51)
5. யூதாவின் மனுஷரில் ஒருவன். (2இராஜா 21:18,26)

6 அதிகாரம்

"அகியோ" (Ahio) - இந்தப் பெயருக்கு "உடன்பிறந்தவன்" "fraternal" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "அகியோ"க்கள்

1. அபினதாபின் குமாரன் (2சாமு 6:3-4; 1நாளா 13:7)
2. எல்பாலின் குமாரன் - பென்யமீனன். (1நாளா 8:14)
3. யெகியேலின் குமாரன் (1நாளா 8:31; 1நாளா 9:37)

"சகலவித கீதவாக்கியங்கள்" - (சங் 33:2; சங் 150:3)

2. தேவனுடைய பெட்டியைத் தொட்டதினால் ஊசா மரித்துப் போகிறான் - (1நாளா 13:9; 1சாமு 6:19)

2சாமு 6:6 அவர்கள் நாகோனின் களம் இருக்கிற இடத்துக்கு வந்தபோது, மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தபடியினால், ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய்த் தன் கையை நீட்டி, அதைப் பிடித்தான்.

2சாமு 6:7 அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின் மேல் கோபமூண்டது; அவனுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார்; அவன் அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்தான்.

"நாகோனின் களம்" - இதுவும் கீதோனும் (Chidon) ஒன்றாகும். (1நாளா 13:9)

"அவனுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார்" - லேவியர் உடன்படிக்கைப் பெட்டியைத் தொடக்கூடாது. மீறி தொட்டால் அவர்களுக்கு மரணம் உண்டாகும். (எண் 4:15-20) முதல் முறையாக இந்தப் பிரமாணம் இங்கு நிறைவேறுகிறது. ஒருவேளை இதற்கு முன்பு, எந்த லேவியரும் உடன்படிக்கைப் பெட்டியைத் தொட்டிருக்க மாட்டார்கள். பெலிஸ்தர்கள் உடன்படிக்கைப் பெட்டியைத் தொட்டார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தை அறியாதவர்கள். (1சாமு 6-7). ஆகையினால் அவர்கள் தப்பித்தார்கள்.

3. தாவீது தேவனுக்குப் பயந்து, தேவனுடைய பெட்டியை ஓபேத் ஏதோமின் வீட்டிலே வைக்கிறான் - (1நாளா 13:9)

2சாமு 6:8 அப்பொழுது கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது விசனப்பட்டு, அந்த ஸ்தலத்திற்கு இந்நாள்மட்டும் வழங்கிவருகிற பேரேஸ்ஊசா என்னும் பேரிட்டான்.

2சாமு 6:9 தாவீது அன்றையதினம் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவது எப்படியென்று சொல்லி,

2சாமு 6:10 அதைத் தன்னிடத்தில் தாவீதின் நகரத்தில் கொண்டுவர மனதில்லாமல், கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே கொண்டுபோய் வைத்தான்.

"பேரேஸ்ஊசா" (Perez-uzzah) - இந்தப் பெயருக்கு "ஊசாவின் மீறுதல்" "breach of Uzzah" என்று பொருள். (1நாளா 13:11).

"ஓபேத்ஏதோம்" (Obed-Edom) - இந்தப் பெயருக்கு "ஏதோமின் வேலைக்காரன்" "servant of Edom" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஓபேத்ஏதோம்"கள்

1. இவனுடைய வீட்டில் உடன்படிக்கைப் பெட்டி மூன்று மாதங்களுக்கு இருந்தது. (2சாமு 6:6-12; 1நாளா13:13-14; 1நாளா 15:25)
2. லேவியன் - ஆசரிப்புக்கூடாரத்தின் வாசற்காவலாளரில் ஒருவன் (1நாளா 15:18-24; 1நாளா 26:4,8,15)

II சாமுவேல் - தொகுப்புரை

6 அதிகாரம்

3. எதித்தூணின் குமாரன். (1நாளா 16:38; 2நாளா 25:24)

4. மற்றொரு லேவியன் (1நாளா 16:5,38)

"கித்தியர்" (Gittite) - காத் ஊரரார். பெலிஸ்தருடைய தேசத்தில் குடியிருந்தவர்களோடு கித்தியரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (2சாமு 6:10-11; 2சாமு 15:18-22; 2சாமு 18:2; 2சாமு 21:19; யோசு 13:3; 1நாளா 13:13; 1நாளா 20:5).

4. ஓபேத் ஏதோமைக் கர்த்தர் ஆசீர்வதித்ததினால் தாவீது தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவருகிறான் - (1நாளா 13:9; 15:1-16:43)

2சாமு 6:11 கர்த்தருடைய பெட்டி கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே மூன்று மாதம் இருக்கையில் கர்த்தர் ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார்.

2சாமு 6:12 தேவனுடைய பெட்டியினிமித்தம் கர்த்தர் ஓபேத் ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் என்று தாவீதுராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது தாவீது தேவனுடைய பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து தாவீதின் நகரத்துக்கு மகிழ்ச்சியுடனே கொண்டுவந்தான்.

2சாமு 6:13 கர்த்தருடைய பெட்டியைச் சுமந்து போகிறவர்கள் ஆறு தப்படி நடந்த போது, மாடுகளையும் கொழுத்த ஆட்டுக்கடாக்களையும் பலியிட்டான்.

2சாமு 6:14 தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு, தன் முழுப் பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்.

2சாமு 6:15 அப்படியே தாவீதும், இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் கர்த்தருடைய பெட்டியைக் கெம்பீர சத்தத்தோடும் எக்காள தொனியோடும் கொண்டுவந்தார்கள்.

"கர்த்தர் ஓபேத்ஏதோமின் வீட்டையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார்" - கர்த்தர் எவ்வாறு ஆசீர்வதித்தார் என்பது இங்கு கூறப்படவில்லை. அவனுக்கு ஆரோக்கியமும், ஐசுவரியமும் பெருகியிருக்க வேண்டும்.

"கர்த்தருடைய பெட்டியைச் சுமந்து போகிறவர்கள்" - ஊசா மரணமடைந்ததற்கான காரணத்தைத் தாவீது புரிந்து கொண்டான். உடன்படிக்கைப் பெட்டியை இரதத்தில் ஏற்றாமல், ஆசாரியர்களுடைய தோள்களில் அதைச் சுமந்து போகவைக்கிறான். தாவீது நியாயப் பிரமாணத்தை வாசித்து, பெட்டியை எப்படித் தூக்கிச் செல்லவேண்டும் என்பது பற்றி தெரிந்து கொண்டான். மேலும் பெட்டியைப் பற்றிய மற்ற பிரமாணங்களையும் அவன் தெரிந்திருக்க வேண்டும். (1நாளா 15-16)

"சணல்நூல் ஏபோத்" (linen ephod) - இது ஆசாரியரும், லேவியரும் அணியும் வஸ்திரம். இது ராஜாக்களுக்குரியதல்ல. தாவீது கிறிஸ்துவிற்கு அடையாளமாக இருக்கிறான். அவன் ஆசாரியனாகவும், ராஜாவாகவும் இருக்கிறான். (சக 6:12-13) ஆகையினால் சணல்நூல் ஏபோத்தைத் தரிக்கக் கர்த்தர் தாவீதை அனுமதிக்கிறார். அல்லது ஒருவேளை தாவீது சமுகத்தப்பத்தைப் புசித்ததைப் போல இதையும் அறியாமல் செய்திருக்கலாம். (1சாமு 21:3-6). இயேசு கிறிஸ்துவும் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இதை அங்கிகரிக்கிறார்.(மத் 12:3-5; மாற்கு 2:23-28). தாவீது தன்னுடைய ராஜ வஸ்திரத்தைக் களைந்து போட்டு, தேவனுடைய ஊழியக்காரனின் வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டான். கேருபீன்களுக்கு மத்தியில் வாசம்பண்ணும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்.

நடனம் பண்ணுதல் (danced) - כָּרַר - kaw-rar' - 3769

வினைச்சொல் - நடனம் பண்ணுதல் (dance, whirl) (2சாமு 6:14,16)

II சாமுவேல் - தொகுப்புரை

6 அதிகாரம்

5. மீகாளின் பாவம் - (வசனம் 20; 1நாளா 15:29)

2சாமு 6:16 கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்திற்குள் பிரவேசிக்கிற போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணிவழியாய்ப் பார்த்து, தாவீதுராஜா கர்த்தருக்கு முன்பாகக் குதித்து, நடனம் பண்ணுகிறதைக் கண்டு, தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள்.

"சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணி வழியாய்ப் பார்த்து" - தாவீது எருசலேமிற்கு நடனமாடி வந்து கொண்டிருக்கிறான். இதை மீகாள் பலகணி வழியாகப் பார்க்கிறாள். இவளும் சேர்ந்து, ஆடிப்பாடி சந்தோஷமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இஸ்ரவேலர் மத்தியில் தங்களுடைய புருஷர் ஜெயத்தோடு திரும்பி வரும்போது அவர்களை ஆடிப்பாடி வரவேற்பது இஸ்ரவேல் ஸ்திரீகளின் வழக்கம். (யாத் 15:20; நியா 11:34). மிரியாம் கர்த்தரைப் புகழ்ந்து, மற்ற ஸ்திரீகளோடு ஆடிப்பாடியதோடு போன்று இங்கு தாவீது ஆடுகிறான்.(2சாமு 6:14-20).

"தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள்" - மீகாளுக்கு தன் புருஷன் அற்ப மனுஷரில் ஒருவனைப்போல இருக்கிறான். அவன் ஆடுவது மீகாளுக்குப் பிடிக்கவில்லை. ஆகையினால் அவள் தாவீதை தன் இருதயத்தில் அவமதித்தாள். இதற்காக கர்த்தர் அவளைத் தண்டித்தார். மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளையில்லாதிருந்தது. (2சாமு 6:16,20-23).

6. தாவீது போட்ட புதிய கூடாரத்திற்குள் தேவனுடைய பெட்டியை வைக்கிறார்கள் - (1நாளா 16:1-3)

2சாமு 6:17 அவர்கள் கர்த்தருடைய பெட்டியை உள்ளே கொண்டுவந்து, அதற்குத் தாவீது போட்ட கூடாரத்திற்குள் இருக்கிற அதின் ஸ்தானத்திலே அதை வைத்தபோது, தாவீது கர்த்தருடைய சந்நிதியிலே சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் இட்டான்.

2சாமு 6:18 தாவீது சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலி களையும் இட்டபின்பு, சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலே ஜனங்களை ஆசீர்வதித்து,

2சாமு 6:19 இஸ்ரவேலின் திரள் கூட்டமான ஸ்திரீ புருஷராகிய சகல ஜனங்களுக்கும், அவரவருக்கு ஒவ்வொரு அப்பத்தையும், ஒவ்வொரு இறைச்சித்துண்டையும், ஒவ்வொரு படி திராட்சரசத்தையும் பங்கிட்டான்; பிற்பாடு ஜனங்கள் எல்லாரும் அவரவர் தங்கள் வீட்டிற்குப் போய்விட்டார்கள்.

"கூடாரத்திற்குள் இருக்கிற அதின் ஸ்தானம்" - தாவீது புதிய கூடாரத்தைப் போட்டிருக்கிறான். அதிலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கர்த்தருடைய பெட்டி வைக்கப்படுகிறது. (1நாளா 21:29).

"தாவீது கர்த்தருடைய சந்நிதியிலே சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலி களையும் இட்டான்" - எத்தனை மிருக ஜீவன்களைப் பலிசெலுத்தினான் என்று தெரியவில்லை. பலிசெலுத்தப்பட்டபோது, இஸ்ரவேலின் திரள்கூட்டமான ஸ்திரீ புருஷராகிய சகல ஜனங்களும் அங்கு இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அப்பத்தையும், ஒவ்வொரு இறைச்சித்துண்டையும், ஒவ்வொரு படி திராட்சரசத்தையும் பங்கிட்டான். ஆகையினால் தாவீது கர்த்தருடைய சன்னதியில் திரளான சர்வாங்க தகனபலி களையும், திரளான சமாதான பலிகளையும் இட்டிருக்கவேண்டும். (2சாமு 6:18-19; 1நாளா 16:1-3).

7. மீகாளின் பாவமும் சாபமும் - (வசனம் 16; 1நாளா 15:29-16:3)

2சாமு 6:20 தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர்கொண்டுவந்து, அற்பமனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறது போல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள்.

II சாமுவேல் - தொகுப்புரை

6 அதிகாரம்

2சாமு 6:21 அதற்குத் தாவீது மீகாளைப் பார்த்து: உன் தகப்பனைப்பார்க்கிலும், அவருடைய எல்லா வீட்டாரைப்பார்க்கிலும், என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்துகொண்ட கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன்.

2சாமு 6:22 இதைப்பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்; அப்படியே நீ சொன்ன பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன் என்றான்.

2சாமு 6:23 அதினால் சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது.

"கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன்" - தாவீது மீகாளுக்கு முன்பாக ஆடவில்லை. கர்த்தருக்கு முன்பாகவே ஆடினான். மேலும் தாவீது தன்னைப் பற்றிக் கூறும்போது இதைப்பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன் என்று கூறுகிறான்.

"மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது" - கர்த்தர் மீகாளைச் சபித்ததாகக் கூறப்படவில்லை. மீகாள் தன் இருதயத்தில் தாவீதைத் தூஷித்ததினால், அவர்கள் இருவரும் ஒருவேளை பிரிந்து வாழ்ந்திருக்கலாம். (2சாமு 6:16,20; 1நாளா 15:29).

7 அதிகாரம்

8. தேவனுக்கு ஆலயம் கட்ட தாவீதின் விருப்பம் - (1நாளா 17:1)

2சாமு 7:1 கர்த்தர் ராஜாவைச் சுற்றிலும் இருந்த அவனுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் அவனை நீங்கலாக்கி, இளைப்பாறப்பண்ணின போது, அவன் தன் வீட்டிலே வாசமாயிருக்கையில்,

2சாமு 7:2 ராஜா தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: பாரும், கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணும்போது தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே என்றான்.

2சாமு 7:3 அப்பொழுது நாத்தான் ராஜாவை நோக்கி: நீர் போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும்; கர்த்தர் உம்மோடு இருக்கிறாரே என்றான்.

தாவீதின் உடன்படிக்கை

கர்த்தர் தாவீதோடு ஓர் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். 2சாமு 7 ஆவது அதிகாரத்தில் இந்த உடன்படிக்கையைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. தாவீதின் சந்ததியும், ராஜ்யபாரமும் நிலைத்து நிற்கும். ஆதி 12 ஆவது, 15 ஆவது, 17 ஆவது ஆகிய அதிகாரங்களில் ஆபிரகாமின் உடன்படிக்கை விவரித்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆபிரகாமின் சந்ததி கடற்கரை மணலத்தனையாக எண்ண முடியாத அளவுக்குத் திரளாக இருப்பார்கள். அவர்கள் வாக்குத்தத்த தேசத்தில் குடியிருப்பார்கள் என்பது ஆபிரகாமின் உடன்படிக்கையாகும்.

இவ்விரண்டு உடன்படிக்கைகளும் நிபந்தனைக்குட்பட்டவை. கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது இந்த உடன்படிக்கை நிறைவேறும். ஒரு சிலர் இவ்விரண்டு உடன்படிக்கைகளுக்கும் எந்தவித நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை என்று கூறுகிறார்கள். மனுஷன் தன் கிரியைகளினால் தேவனுடைய கிருபையைச் சம்பாதிக்க முடியாது. நம்முடைய கிரியைகளினால் நாம் இரட்சிக்கப்பட முடியாது. (எபே 2:8-9) இது மெய்தான். ஆனாலும் கர்த்தரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிவதே இரட்சிப்பின் ஆரம்பநிலை. இரட்சிப்பின் ஆரம்ப நிலைக்கு வராமல், முடிவு நிலைக்குப் போகமுடியாது. (1யோவான் 1:7).

ஆனாலும் இவ்விரண்டு உடன்படிக்கைகளும் நிறைவேற கர்த்தர் அதற்கென்று நியமித்திருக்கும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியம். நாம் ஜீவிக்கும் இந்த உலகத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, நீதியாய் ஜீவிக்க வேண்டும். தெய்வ பக்தியுடையவர்களாக இருக்க வேண்டும். (2கொரி 5:17-18; 2கொரி 7:1; தீத்து 2:11-13; எபி 12:14; 1யோவான் 1:7).

இவ்விரண்டு உடன்படிக்கைகளும் நிபந்தனைக்குட்பட்டவை அல்ல என்றால், இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டியதே அவசியமேயில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமும், கர்த்தருக்குக் கீழ்ப்படியாவிட்டால் சாபமும் அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.

தேவனுடைய பிள்ளைகள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல், பாவத்தில் ஜீவித்து, கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். இதனால் அவர்களுக்கு வாதைகள் உண்டாயிற்று. அந்நிய தேசத்தின் சிறையிருப்பிற்குட்பட்டார்கள். தேசங்களில் சிதறிப்போனார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் மனந்திரும்பி, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும். (லேவி 26; உபா 28). "அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன்" என்று கர்த்தர் தாவீதிடம் அவனுடைய குமாரனைப் பற்றித் தெளிவாகக் கூறியிருக்கிறார். (2சாமு 7:14) இஸ்ரவேலின் வரலாற்றில் தாவீதின் குமாரரும், இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்தார்கள். இதனால் பல நூற்றாண்டுகளாக அவர்கள் வாதைகளை அனுபவித்து வருகிறார்கள்.

"நாத்தான்" (Nathan) - இந்தப் பெயருக்கு "அவர் கொடுத்திருக்கிறார்" **"he hath given"** என்று பொருள்.

7 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "நாத்தான்"கள்

1. ஒரு தீர்க்கதரிசி. தாவீது, சாலொமோன் ஆகியோரின் ஆலோசகர். (2சாமு 7:2-17; 2சாமு 12:1-15; 1இராஜா 1; 1நாளா 17). இஸ்ரவேலின் வரலாற்றை இவர் எழுதினார். (2நாளா 9:29)
2. தாவீதின் குமாரன். (2சாமு 5:14; 1நாளா 3:5; 1நாளா 14:4) கிறிஸ்துவின் முன்னோரில் ஒருவர். (லூக்கா 3:31; சக 12:12)
3. ஈகாலின் தகப்பன் (2சாமு 23:36)
4. சாலொமோனின் ஆட்சிக்காலத்தில் இருந்த ஒரு மனுஷன். (1இராஜா 4:5)
5. யூதா கோத்திரத்தான் (1நாளா 2:36)
6. யோவேலின் சகோதரன்(1நாளா 11:38)
7. சிறையிருப்பிலிருந்து திரும்பியவன். (எஸ்றா 8:16)
8. பானியின் குமாரன் (எஸ்றா 10:39)
9. இஸ்ரவேலில் ஒரு தலைவன் (சக 12:12)

"கேதுருமரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணும்போது" - தீருவின் ராஜாவாகிய ஈராம் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்தான். தாவீது அந்த வீட்டில் குடியேறினான். (2சாமு 5:11-12). தாவீதின் வீடு மிகவும் நேர்த்தியாக கேதுருமரங்களால் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் தேவனுடைய பெட்டியோ திரைகளின் நடுவில் வாசமாயிருக்கிறது. கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்தில் வாசம்பண்ணுகிறார். தாவீது மாளிகையில் வாசம்பண்ணுகிறான். இது தாவீதின் மனதிற்கு விசனமாயிருந்தது. தேவனுக்கு ஒரு நிலையான ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்னும் தன் விருப்பத்தைத் தாவீது நாத்தானிடம் அறிவிக்கிறான்.

"திரைகள்" (curtains) - மோசே, தாவீது ஆகியோரின் காலத்து ஆசரிப்புக் கூடாரத்தை இந்த வார்த்தை தெளிவாக விளக்குகிறது. (யாத் 26).

"நீர் போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும்" - நாத்தான் கூறியது ஓரளவு மட்டுமே உண்மையான வாக்கியம். தேவன் தாவீதோடு இருக்கிறார். கர்த்தருக்கு ஆலயம் கட்ட வேண்டும் என்னும் தாவீதின் விருப்பத்தை அங்கிகரிக்கிறார். ஆனால் தாவீதால் கர்த்தருக்கு ஆலயம் கட்ட முடியாது. அவன் ஆலயத்திற்குத் தேவையான பொருட்களை மட்டுமே சேகரித்துத் தரவேண்டும். இதுவே கர்த்தரின் விருப்பம். (1நாளா 22:1-16). ஆலயத்தைக் கட்டப்போவது யார் என்பதைக்குறித்து, பின்பு நாத்தான் தாவீதிடம் கூறினான். (1நாளா 17:4-15).

9. தாவீதோடு உடன்படிக்கை - (1நாளா 17:7; 57-58)

(1) உடன்படிக்கை செய்த வேளை

2சாமு 7:4 அன்று ராத்திரியிலே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி அவர்:

2சாமு 7:5 நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி: கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் வாசமாயிருக்கத் தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?

2சாமு 7:6 நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணின நாள்முதற் கொண்டு இந்நாள்வரைக்கும், நான் ஒரு ஆலயத்திலே வாசம் பண்ணாமல், கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினேன்.

2சாமு 7:7 நான் இஸ்ரவேலாகிய என் ஜனத்தை மேய்க்கும்படி கட்டளையிட்ட இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தையாவது நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுரு மரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று நான் இஸ்ரவேல் புத்திரருக்குள் உலாவிவந்த எவ்விடத்திலாவது யாதொரு வார்த்தையைச் சொன்னதுண்டோ?

7 அதிகாரம்

"அன்று ராத்திரியிலே" - தாவீதும், நாத்தானும் பேசிக்கொண்ட நாளுக்கு மறுநாள் ராத்திரியில். (2சாமு 7:1-4).

"கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி" - கர்த்தர் ஒரு தரிசனத்தில் நாத்தானுக்குத் தம்முடைய வார்த்தைகளோடே வெளிப்பட்டார். (2சாமு 7:4,17).

ராத்திரியிலே கர்த்தருடைய கிரியைகள்

1. அபிமெலேக்குக்கு ஒரு சொப்பனம் கொடுத்தார். (ஆதி 20:3)
2. ஆபிரகாமிற்குத் தரிசனமானார். (ஆதி 15)
3. ஈசாக்கிற்குத் தரிசனமானார். (ஆதி 26:24)
4. லாபானுக்கு ஒரு சொப்பனம் கொடுத்தார். (ஆதி 31:24)
5. சுயம்பாகிக்கும், பானபாத்திரக்காரனுக்கும் சொப்பனங்களைக் கொடுத்தார். (ஆதி 40:5; ஆதி 41:11)
6. யாக்கோபிற்குத் தரிசனங்களைக் கொடுத்தார். (ஆதி 46:2)
7. பிலேயாமிடம் வந்தார். (எண் 22:20)
8. கிதியோனுக்குத் தரிசனமானார். (நியா 6:25-27)
9. இரண்டு வெவ்வேறு இரவுகளில் கர்த்தர் கிதியோனுக்கு இரண்டு அற்புதங்களைச் செய்தார். (நியா 6:36-40)
10. சாமுவேலிடம் பேசினார்.(1சாமு 3:1-21)
11. சாமுவேலிடம் மறுபடியும் பேசினார். (1சாமு 15:16)
12. நாத்தானிடம் பேசினார். (2சாமு 7:4)
13. சாலொமோனுக்கு சொப்பனத்தில் தரிசனமானார். (1இராஜா 3:5; 2நாளா 1:7)
14. சாலொமோனுக்கு மறுபடியும் தரிசனமானார். (2நாளா 7:12)
15. தானியேலுக்கு தரிசனங்களைக் கொடுத்தார். (தானி 2:19)
16. தானியேலுக்கு மற்றொரு தரிசனத்தைக் கொடுத்தார். (தானி 7:2,13)
17. சகரியாவுக்குத் தரிசனங்களைக் கொடுத்தார். (சக 1:8)
18. யோசேப்பிற்குச் சொப்பனத்தைக் கொடுத்தார். (மத் 2:14)
19. அப்போஸ்தலர்களை விடுவித்தார். (அப் 5:19)
20. பேதுருவை விடுவித்தார். (அப் 12:6)
21. பவுலுக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்தார். (அப் 16:9)
22. பவுலோடு பேசினார். (அப் 18:9)
23. பவுலுக்கு அருகில் நின்றார்.(அப் 23:11)
24. பவுலுக்குத் தரிசனமானார்.(அப் 27:23)

"என் தாசனாகிய தாவீது" - கர்த்தர் தாவீதை மிகவும் அன்பாக இவ்வாறு அழைத்திருக்கிறார். தாவீதும் கர்த்தரிடத்தில் தம்மைப் பற்றிக் கூறும்போது மிகவும் தாழ்மையோடும், அவரோடு நெருங்கிய ஐக்கியமாகவும் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறான். அதன் விவரம் வருமாறு:

1. உமது அடியான் (2சாமு 7:20,21,25, 27,28,29).
2. உமது அடியானாகிய தாவீது (2சாமு 7:26)

"நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?" - இந்தக் கேள்விக்கு "நீ எனக்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்" என்று பொருள். (1நாளா 17:4)

"கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினேன்" - தேவாலயமும், ஆசரிப்புக் கூடாரமும் ஒன்றல்ல என்பதை விளக்கும் வாக்கியம்.

II சாமுவேல் - தொகுப்புரை

7 அதிகாரம்

(2) கர்த்தர் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கொடுப்பார் - (1நாளா 17:3-10; 1இராஜா 6:11-13)

2சாமு 7:8 இப்போதும் நீ என் தாசனாகிய தாவீதை நோக்கி: சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நீ இஸ்ரவேல் என்கிற என் ஜனங்களுக்கு அதிபதியாயிருக்கும் படி, ஆடுகளின் பின்னே நடந்த உன்னை நான் ஆட்டுமந்தையை விட்டு எடுத்து,

2சாமு 7:9 நீ போன எவ்விடத்திலும் உன்னோடே இருந்து, உன் சத்துருக்களை யெல்லாம் உனக்கு முன்பாக நிர்மூலமாக்கி, பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை உனக்கு உண்டாக்கினேன்.

2சாமு 7:10 நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன்போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளைக் கட்டளையிட்ட நாள்வரையில் நடந்ததுபோலும், நியாயக் கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கும்படி அவர்களை நாட்டினேன்.

2சாமு 7:11 உன்னுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் உன்னை நீங்கலாக்கி, இளைப்பாறவும் பண்ணினேன்; இப்போதும் கர்த்தர் உனக்கு வீட்டை உண்டுபண்ணுவார் என்பதைக் கர்த்தர் உனக்கு அறிவிக்கிறார்.

"ஆடுகளின் பின்னே நடந்த உன்னை" - (1சாமு 16)

தேவனுடைய கடந்த காலக் கிரியைகள்

1. கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் 540 வருஷங்களாக உலாவினேன். (2சாமு 7:6)
2. இஸ்ரவேல் புத்திரருக்குள் உலாவினேன். (2சாமு 7:7)
3. நீங்கள் எனக்குக் கேதுரு மரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று நான் கேட்கவில்லை.
4. ஆடுகளின் பின்னே நடந்த தாவீதை நான் ஆட்டுமந்தையை விட்டு எடுத்தேன். (2சாமு 7:7, 2சாமு-8)
5. தாவீது போன எவ்விடத்திலும் அவனோடே இருந்தேன். (2சாமு 7:9)
6. தாவீதின் சத்துருக்களையெல்லாம் அவனுக்கு முன்பாக நிர்மூலமாக்கினேன்.
7. பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை தாவீதுக்கு உண்டாக்கினேன்.

தீர்க்கதரிசன எண் - 3

"நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி......" (2சாமு 7:10-16) இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி நிறைவேறிற்று. மற்ற பகுதி இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும், ஆயிரம் வருஷ அரசாட்சியின்போதும் புதிய பூமியின் காலத்திலும் நிறைவேறும்.

கர்த்தர் தாவீதுக்கு முன்னறிவித்த காரியங்கள்

1. நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தினேன். (2சாமு 7:10)
2. அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்க அவர்களை நாட்டினேன்.
3. இனி அவர்கள் அலையாமல் இருப்பார்கள்.
4. அவர்களுடைய சொந்த ஸ்தலங்களில் குடியிருப்பார்கள்.
5. நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமல் இருப்பார்கள்.

II சாமுவேல் - தொகுப்புரை

7 அதிகாரம்

6. கர்த்தர் உனக்கு வீட்டை உண்டு பண்ணுவார் *(2சாமு 7:11)*

7. நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். *(2சாமு 7:12)*

8. அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்.

9. அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். *(2சாமு 7:13)*

10. நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான் *(2சாமு 7:14)*

11. அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன்!

12. உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்க மாட்டேன். *(2சாமு 7:15)*

13. உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும் *(2சாமு 7:16)*

14. உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்.

"நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருமே வாக்குத்தத்த தேசத்தில் குடியேறுவார்கள். அப்போதிலிருந்து அவர்கள் எங்கும் அலையாமல் தங்கள் தேசத்திலேயே குடியிருப்பார்கள். நியாயக்கேட்டின் மக்கள் இனிமேல் அவர்களைச் சிறுமைப்படுத்த மாட்டார்கள். *(2சாமு 7:10)*. இது வருங் காலத்தில் நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனமாகும். இந்தத் தீர்க்கதரிசனம் எப்போது நிறைவேறும் என்பதற்கு மேலும் பல தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குத்தத்த தேசத்தை நியமித்திருக்கிறார். *(ஆதி 13:14-17; ஆதி 15:18-21; ஆதி 17:7-8; ஆதி 26:3-4;ஆதி 28:4,13-15;ஆதி 35:11-12)*

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரண்டு முறை வாக்குத்தத்த தேசத்தில் நாட்டினார். மோசே, யோசுவா ஆகியோரின் காலத்தில் முதன் முதலாக இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் குடியேறினார்கள். *(எண் 32; யோசு 13:1-21:45)* அசீரிய, பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, இஸ்ரவேல் புத்திரர் இரண்டாம் முறையாக வாக்குத்தத்த தேசத்தில் குடியேறினார்கள்.

கானான் தேசத்தில் முதன் முறையாகக் குடியேறிய பின்பு, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்களுடைய துன்மார்க்கம் மிகுதியாயிற்று. இதனால் கர்த்தர் அவர்களைத் தேசத்திலிருந்து அகற்றிப்போட்டார். *(2இராஜா 17, 2இராஜா 24)*.

வாக்குத்தத்த தேசத்தில் இரண்டாம் முறையாகக் குடியேறிய பின்பும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். இதனால் கர்த்தர் அவர்களைத் தேசங்கள் மத்தியில் சிதறடித்தார். *(தானி 9:26-27; மத் 23:37-39; மத் 24:2-3; லூக்கா 21:20-24)*.

இஸ்ரவேல் புத்திரரை மறுபடியும் கூட்டிச் சேர்ப்பதாகக் கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் தேசத்தில் குடியேறுவார்கள். அதன் பின்பு அவர்கள் எங்கும் அலைந்து திரிவதில்லை. நியாயக்கேட்டின் மக்கள் இதற்கு முன்பு அவர்களைச் சிறுமைப்படுத்தியது போன்று, இனிமேல் சிறுமைப்படுத்தமாட்டார்கள். *(2சாமு 7:10; உபா 4:25-30; உபா 30:1-10; ஏசா 11:10-16; ஏசா 60:8-22; ஏசா 66:19-21; எரே3:14-25; எரே 16:14-21; எரே 23:3-8; எரே 30:1-24; எரே 31:18-40;எரே 32:37-44; எரே 33:6-26; எசே 11:17-21; எசே 20:33-44;எசே 34:11-31; எசே 36:1-37:28; மத் 24:31)*.

"உன்னுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் உன்னை நீங்கலாக்கி" - இது தாவீதின் காலத்தைக் குறிக்கும் வாக்கியம். இஸ்ரவேல் தன்னுடைய எல்லா சத்துருக்களுக்கும் நீங்கி, இளைப்பாறும். அதன் பின்பு, அந்த இளைப்பாறுதல் முறிக்கப்படும். பல நூற்றாண்டுகளாக இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேசங்கள் மத்தியில் அலைந்து திரிவார்கள். இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி, தாவீதின் காலத்தில் உண்டாகும் இளைப்பாறுதலையும், மற்றொரு பகுதி புதிய பூமியில் உண்டாகும் இளைப்பாறுதலையும் குறிக்கும்.

II சாமுவேல் - தொகுப்புரை

7 அதிகாரம்

"கர்த்தர் உனக்கு வீட்டை உண்டு பண்ணுவார்" - கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட விரும்புவதாகத் தாவீது கூறினான். ஆனால் கர்த்தரோ தாவீதிற்கு ஒரு வீட்டைக் கட்டுவதாகக் கூறுகிறார். தாவீது கர்த்தருக்குப் பௌதீகப் பொருட்களால் ஆன ஆலயத்தைக் கட்டுவதாகக் கூறுகிறான். ஆனால் கர்த்தரோ தாவீதுக்கு ஆவிக்குரிய, நித்திய, ஜீவனுக்குரிய வீட்டைக் கட்டுவதாகக் கூறுகிறார். தாவீதின் சந்ததி ஒருபோதும் அழிந்துபோவதில்லை. ஆனாலும், கர்த்தர் தாவீதுக்கு ஒரு பௌதீகப் பொருளால் ஆன வீட்டையும் கட்டிக் கொடுத்தார். இஸ்ரவேல் தேசம் அழிந்துபோன போது, தாவீதின் வீடும் அழிந்து போயிற்று. கர்த்தர் மறுபடியும் வந்து, தாவீதின் வீட்டைக் கட்டுவார் என்று பல தீர்க்கதரிசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. இது சபைக்காலத்துக்குப் பின்பு வருங்காலத்தில் நிறைவேறும். (ஏசா 11:1-16; ஓசி 3:4-5; ஆமோ 9:11-15). எல்லா தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் இதற்கு ஒத்திருப்பதாக யாக்கோபு கூறியிருக்கிறார். (அப் 15:13-18).

(3) தாவீதின் குமாரன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவான் - (1நாளா 17:11-15)

2சாமு 7:12 உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும் போது, நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்.

"நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது" - இந்த நித்திரை மரணத்தைக் குறிக்கும். மரணம் என்பது ஆவி சரீரத்திலிருந்து பிரிந்துபோகும் நிலைமை. சரீரம் மரித்த பின்பு, அது மண்ணுக்குப்போகும். ஆத்தும நித்திரையென்று ஒரு நிலையும் இல்லை. ஆத்துமா ஒருபோதும் மரிப்பதில்லை. அது நித்தியமானது.

"உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்" - இந்த வாக்கியத்தில் முன்னறிவிக்கப்பட்டிருக்கும் காரியங்கள்.

1. தாவீதின் கர்ப்பப்பிறப்பு அவனுடைய சிங்காசனத்தில் அமர்ந்திருப்பான். (1இராஜா 1:10-39)

2. தாவீதின் அந்தக் குமாரன் இன்னும் பிறக்கவில்லை - தாவீது இன்னும் பத்சேபாளைச் சந்திக்கவில்லை. (2சாமு 11:1-27)

3. கர்த்தர் அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவார்.

(4) தாவீதின் குமாரன் தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவான் - (1நாளா 17:11; ஏசா 9:6-7; சக 6:12; லூக் 1:32-35)

2சாமு 7:13 அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.

"அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்" - சாலொமோனில் இது நிறைவேறிற்று. (1இராஜா 5-8) மேலும் தாவீதின் குமாரனாகிய மேசியாவிலும் இது நிறைவேறிற்று. (சக 6:13-14).

"அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்" - தாவீதின் நித்திய சிங்காசனம் இன்னும் ஸ்தாபனம் பண்ணப்படவில்லை. ராஜாக்களின் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அவனுடைய சிங்காசனம் தற்காலிகமானது. அது முடிவுற்றது. இனிமேல் வரப்போகிற ராஜ்யபாரம் நித்தியமானது. (ஏசா 9:6-7; எரே 30:9; எசே 36-37; ஓசி 3:4-5; சக 14; லூக்கா 1:32-33; வெளி 11:15;வெளி 20:1-10; வெளி 22:4-6).

(5) தாவீதின் வீடும் இராஜ்யமும் என்றென்றைக்கும் ஸ்திரப்பட்டிருக்கும்

2சாமு 7:14 நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்; அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன்.

7 அதிகாரம்

2சாமு 7:15 உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனை விட்டு விலக்கமாட்டேன்.

2சாமு 7:16 உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்கிறார் என்று சொல்லச்சொன்னார்.

2சாமு 7:17 நாத்தான் இந்த எல்லா வார்த்தைகளின்படியும், இந்த எல்லாத் தரிசனத்தின்படியும், தாவீதுக்குச் சொன்னான்.

"நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்" - இயேசு கிறிஸ்துவைப் பற்றி மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. (எபி 1:5) இந்த வாக்கியம் சாலொமோனிலும், கிறிஸ்துவிலும் இரண்டு முறை நிறைவேறியிருக்கிறது.

"அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய பிரம்பினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன்" - சாலொமோன் பாவம் செய்தான். அதனால் தண்டிக்கப்பட்டான். (1இராஜா 11). தாவீதின் குமாரனாகிய கிறிஸ்துவோ ஒரு பாவமும் செய்யவில்லை. ஆனாலும் நாம் அவருக்குள் நீதிமானாக இருக்கும் பொருட்டு, அவர் நம்முடைய பாவங்களையெல்லாம் சுமந்தார். அவர் நமக்காகப் பாவமானார். (ஏசா 53; 2கொரி 5:14-21; 1பேதுரு 2:22-24).

"சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினது போல அவனைவிட்டு விலக்க மாட்டேன்" - கர்த்தர் தமது கிருபையைச் சவுலிடத்திலிருந்து முழுவதுமாக விலக்கிப் போட்டார். அதுபோல சாலொமோனுக்குச் செய்யமாட்டார். (1இராஜா 11).

சவுலைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கும் காரியம்

1. சவுலிடத்திலிருந்து கர்த்தர் தமது கிருபையை விலக்கினார்.
2. கர்த்தர் அவனைத் தள்ளிவிட்டார்.

கர்த்தர் தாவீதுக்குக் கூறிய ஆசீர்வாதம்

1. உன் வீடு என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்.
2. உன் ராஜ்யம் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்.
3. உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்.

"உன்வீடும், உன் ராஜ்யமும்" - வீடு என்பது தாவீதின் ராஜாசனத்திற்கு வந்த அவனுடைய குடும்பத்தாரைக் குறிக்கும். தாவீதின் ராஜாசனம் யோயாக்கீனில் (Jehoiachin) முடிவுற்றது. இவனுடைய மறுபெயர் கோனியா (Coniah). இஸ்ரவேல் புத்திரர் சிறையிருப்புகளுக்குப் போனபோது, தாவீதின் ராஜ்யம் முடிவு பெற்றது. (எரே 22:23-30). தாவீதின் சந்ததியில் அதன் பின்பு வேறு எவரும் யூதாவிலும், எருசலேமிலும் ஆட்சி புரியவில்லை. சிதேக்கியாவின் (Zedekiah) காலத்தில் ராஜ்யபாரம் தாவீதின் வம்சத்தை விட்டு அகன்றுபோனது. இவன் யூதாவின் ராஜாக்களின் வம்சத்தில் வரவில்லை. (2இராஜா 24:6-20). மத்தேயு 1 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றிலும் சிதேக்கியா இடம் பெறவில்லை. லூக்கா 3 ஆவது அதிகாரத்தில் நாத்தான் மூலமாக வரும் தாவீதின் வம்சவழியிலும் இவன் இடம்பெறவில்லை.

தாவீதின் ராஜ்யம் யூதாவில் முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்டது. (2சாமு 2:7) அதன் பின்பு, இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கும் தாவீது ராஜாவானான். (2சாமு 5:1-5) இது தாவீதின் ஆரம்பகால ராஜ்யமாகும். மேசியாவின் காலத்தில் இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் ஒன்றுசேர்க்கப்படும்போது, அந்த ராஜ்யம் தாவீதின் ஆரம்பகாலத்து ராஜ்யத்தைப் போல இருக்கும். அப்போது மேசியா இஸ்ரவேல் புத்திரரை பாலஸ்தீனத்தில் நித்திய காலமாக ஆட்சி புரிவார். (2சாமு 7:16; ஏசா 9:6-7; ஏசா 11:10-16; எரே 30:9; எசே 36-37; ஓசி 3:4-5; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 19:11-20:10).

7 அதிகாரம்

2சாமுவேல் 7:16 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் வீடு, ராஜ்யம், ராஜாசனம் ஆகியவை நித்தியமானவை. (2சாமு 7:16; ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10). நேபுகாத்நேச்சார் எருசலேமைக் கைப்பற்றியபோது, இவை மூன்றுமே ஒழிந்துபோயிற்று. அதன் பின்பு, இம்மூன்றில் ஒன்றுகூட மறுபடியும் ஸ்தாபிக்கப்படவில்லை. ராஜ்யமும், ராஜாசனமும் சிதேக்கியாவை விட்டு, அகன்றுபோயிற்று. மேசியா வரும் வரையிலும் அது தாவீதின் வம்சத்திலிருந்து பிரிந்திருக்கும். மேசியா அதன்பின்பு அதை ஆளுகை செய்வார். (சங் 2; ஏசா 9:6-7; ஏசா 16:4; எரே 3:14-18; எரே 16:14-21; எரே 23:3-8,20; எரே 30:3-24; எரே 31:8-14,27-40; எரே 32:37-44; எரே 33:3-26; எரே 50:19-20; எசே 11:17-21; எசே 20:33-44;எசே 21:27;எசே 28:25-26; எசே 34:11-31; எசே 36:3-38; எசே 37:1-28; எசே 38:8-21; எசே 39:1-39; எசே 43:7; எசே 47:13-48:35; தானி 2:44-45; தானி 7:13-14,27; ஓசி 3:4-5; யோவே 2-3; ஆமோ 9:11-15; ஒப 17-21; மீகா 4-5; சக 12-14; லூக்கா 1:32-33; அப் 15:13-18; வெளி 11:15; வெளி 20:1-10). தாவீதின் வீடு, ராஜ்யம், ராஜாசனம் ஆகியவை அகற்றப்படும். அதன் பின்பு, மேசியாவின் காலத்தில் அவை மறுபடியும் ஸ்தாபிக்கப்படும்.

(6) தாவீதின் ஜெபம் - (1நாளா 17:16-26)

2சாமு 7:18 அப்பொழுது தாவீதுராஜா உட்பிரவேசித்து, கர்த்தருடைய சமுகத்திலிருந்து கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?

2சாமு 7:19 கர்த்தராகிய ஆண்டவரே, இது இன்னும் உம்முடைய பார்வைக்குச் கொஞ்சகாரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற தேவரீர் உம்முடைய அடியானுடைய வீட்டைக் குறித்து, வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே.

2சாமு 7:20 இனி தாவீது உம்மிடத்தில் சொல்ல வேண்டியது என்ன? கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நீர் உமது அடியானை அறிவீர்.

2சாமு 7:21 உம்முடைய வாக்குத்தத்தத்தினிமித்தமும், உம்முடைய சித்தத்தின்படியேயும், இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் உமது அடியானுக்கு அறிவிக்கும்படிக்குத் தயவுசெய்தீர்.

2சாமு 7:22 ஆகையால் தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர் என்று விளங்குகிறது; நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களின் படியும், தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத்தவிர வேறே தேவனும் இல்லை.

2சாமு 7:23 உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? பூலோகத்து ஜாதிகளில் இந்த ஒரே ஜாதியைத் தேவன் தமக்கு ஜனமாக மீட்கிறதற்கும் தமக்குக் கீர்த்தி விளங்கப்பண்ணுகிறதற்கும் ஏற்பட்டாரே; தேவரீர் எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டு வந்த உம்முடைய ஜனத்திற்குமுன்பாகப் பயங்கரமான பெரிய காரியங்களை நடத்தி, உம்முடைய தேசத்திற்கும், அதிலிருந்த ஜாதிகளுக்கும், அவர்கள் தேவர்களுக்கும், உமது மகிமையை விளங்கச்செய்து,

2சாமு 7:24 உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் என்றைக்கும் உம்முடைய ஜனமாயிருப்பதற்கு அவர்களைத் திடப்படுத்தி, கர்த்தராகிய நீர்தாமே அவர்களுக்குத் தேவனானீர்.

2சாமு 7:25 இப்போதும் தேவனாகிய கர்த்தாவே, நீர் உமது அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தையை என்றென்றைக்கும் நிலைவரப்படுத்த, தேவரீர் சொன்னபடியே செய்தருளும்.

2சாமு 7:26 அப்படியே சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேலின் மேல் தேவனானவர் என்று சொல்லி, உம்முடைய நாமம் என்றென்றைக்கும் மகிமைப்படுவதாக; உமது அடியானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாக நிலைநிற்பதாக.

7 அதிகாரம்

2சாமு 7:27 உனக்கு வீடுகட்டுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தராயிருக்கிற நீர் உமது அடியானின் செவிக்கு வெளிப்படுத்தினீர்; ஆகையால் உம்மை நோக்கி இந்த விண்ணப்பத்தைச் செய்ய உமது அடியானுக்கு மனத்தைரியம் கிடைத்தது.

2சாமு 7:29 இப்போதும் கர்த்தராகிய ஆண்டவரே, நீரே தேவன்; உம்முடைய வார்த்தைகள் சத்தியம்; தேவரீர் உமது அடியானுக்கு இந்த நல்விசேஷங்களை வாக்குத்தத்தம்பண்ணினீர்.

2சாமு 7:29 இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்; கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர், உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பதாக என்றான்.

"தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்?" - கர்த்தர் தாவீதுக்கு வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் கூறுகிறார். இதைக் கேட்டவுடன் தாவீது பெருமைப்படாமல், உள்ளத்தில் தாழ்மையோடு கர்த்தருடைய சமுகத்தில் தன் விண்ணப்பங்களை ஏறெடுக்கிறான். (2சாமு 7:18-29).

தாவீது ஜெபத்தில் கர்த்தரிடம் கூறிய காரியங்கள்

1. நான் எம்மாத்திரம்?
2. என் வீடும் எம்மாத்திரம்?
3. இது இன்னும் உம்முடைய பார்வைக்குச் கொஞ்சகாரியமாயிருக்கிறது.
4. உம்முடைய அடியானுடைய வீட்டைக் குறித்து, வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே.
5. இனி தாவீது உம்மிடத்தில் சொல்ல வேண்டியது என்ன? (2சாமு 7:20)
6. கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நீர் உமது அடியானை அறிவீர்.
7. உம்முடைய வாக்குத்தத்தத்தினிமித்தமும், உம்முடைய சித்தத்தின்படியேயும், இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் உமது அடியானுக்கு அறிவிக்கும்படிக்குத் தயவுசெய்தீர். (2சாமு 7:21).
8. தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர். (2சாமு 7:22).
9. தேவரீருக்கு நிகரானவர் இல்லை
10. உம்மைத்தவிர வேறே தேவனும் இல்லை.
11. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? (2சாமு 7:23).
12. பூலோகத்து ஜாதிகளில் இந்த ஒரே ஜாதியைத் தேவன் தமக்கு ஜனமாக மீட்டுக்கொண்டீர்.
13. தமக்குக் கீர்த்தி விளங்கப் பண்ணுகிறதற்கும் ஏற்பட்டீர்.
14. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் என்றைக்கும் உம்முடைய ஜனமாயிருப்பதற்கு அவர்களைத் திடப்படுத்தினீர். (2சாமு 7:24).
15. கர்த்தராகிய நீர்தாமே அவர்களுக்குத் தேவனானீர்.
16. நீர் உமது அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தையை என்றென்றைக்கும் நிலைவரப்படுத்த, தேவரீர் சொன்னபடியே செய்தருளும். (2சாமு 7:25).
17. உம்முடைய நாமம் என்றென்றைக்கும் மகிமைப்படுவதாக (2சாமு 7:26).
18. சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேலின் மேல் தேவனானவர்.
19. உமது அடியானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாக நிலைநிற்பதாக.

II சாமுவேல் - தொகுப்புரை

7 அதிகாரம்

20. உனக்கு வீடுகட்டுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தராயிருக்கிற நீர் உமது அடியானின் செவிக்கு வெளிப்படுத்தினீர் (2சாமு 7:27).

21. ஆகையால் உம்மை நோக்கி இந்த விண்ணப்பத்தைச் செய்ய உமது அடியானுக்கு மனத்தைரியம் கிடைத்தது.

22. கர்த்தராகிய ஆண்டவரே, நீரே தேவன். (2சாமு 7:28).

23. உம்முடைய வார்த்தைகள் சத்தியம்.

24. தேவரீர் உமது அடியானுக்கு இந்த நல்விசேஷங்களை வாக்குத்தத்தம் பண்ணினீர்.

25. உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும். (2சாமு 7:29).

26. உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக.

தாவீது கர்த்தருக்கேற்ற இருதயத்தை உடையவன். இஸ்ரவேலின் ராஜா தேவனைக் குறித்து, இவ்வாறு தியானித்து, தமது ஜெபத்தை ஏறெடுக்கிறான். புதிய ஏற்பாட்டில் பல பகுதிகளில் இதுபோன்ற ஜெபம் ஏறெடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருக்குப் பிரியமான காரியம் என்ன என்பதும், அவருடைய இருதயத்தில் அவர் நேசிக்கும் மனுஷரைக் குறித்து இருக்கும் சிந்தனை என்ன என்பதும் இந்த ஜெபத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தாவீது தன் ஜெபத்தில் கர்த்தரைப் பற்றிக் கூறியிருக்கும் வார்த்தைகள்

1. கர்த்தராகிய ஆண்டவர். (2சாமு 7:19)
2. வழிநடத்துகிறவர். (2சாமு 7:19)
3. தீர்க்கதரிசி, ஜீவியங்களைத் திட்டமிடுகிறவர்.
4. சர்வஞானமுள்ளவர். (2சாமு 7:20)
5. இரகசியங்களை வெளிப்படுத்துகிறவர். (2சாமு 7:21)
6. பெரியவர் (2சாமு 7:22)
7. தேவரீருக்கு நிகரானவர் இல்லை. (2சாமு 7:22)
8. கர்த்தரைத் தவிர வேறே தேவன் இல்லை.
9. பூமியின்மீது ஒரு விசேஷித்த தேசமாகக் கர்த்தர் இஸ்ரவேலை மீட்டுக் கொண்டார். (2சாமு 7:23-24)
10. அற்புதங்களைச் செய்கிறவர். (2சாமு 7:23)
11. இஸ்ரவேலின் தேவன்(2சாமு 7:24,26)
12. சத்தியமுள்ள தேவன். (2சாமு 7:28)

“மனுஷர் முறைமை” - ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார்.(ஆதி 3:15) தாவீதின் வம்சத்தில் மேசியாவாகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு நித்திய ராஜாவாக வருவார். (சங் 8:5-6)

“ஒரே ஜாதி” - தாவீதின் காலத்தில் யூதா கோத்திரமும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரங்களும் ஒரே தேசமாயிற்று. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, இஸ்ரவேல் கோத்திரங்களெல்லாம் ஒரே தேசமாகும். அப்போது எசே 37:11-28 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும். இஸ்ரவேல் தேசம் ஒரே ஜாதியாக இருக்கும். இரண்டு ஜாதியாக இராது. (2சாமு 7:23) கர்த்தருக்குள் அவர்கள் நித்தியமாகத் திடப்படுத்தப் பட்டிருப்பார்கள். (2சாமு 7:24) தாவீதின் குடும்பத்தார் அவர்களை நித்தியமாக ஆளுகை செய்வார்கள். (2சாமு 7:25-29). இந்த உடன்படிக்கையை இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரோடும் கர்த்தர் ஏற்படுத்தியிருக்கிறார். லேவிரையும் சேர்த்தால் இவர்கள் பதின்மூன்று கோத்திரங்களாக இருப்பார்கள். ஆகையினால் நித்திய இஸ்ரவேல் என்பது பத்து கோத்திரங்களால் ஆனதல்ல. இஸ்ரவேல் தேசத்திலிருந்து யூதாவைப் பிரிக்க முடியாது. எல்லாக் கோத்திரத்தாரும் ஒன்றுபோலவே ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

II சாமுவேல் - தொகுப்புரை

7 அதிகாரம்

கர்த்தருடைய மகாபெரிதான நோக்கங்கள்

1. இஸ்ரவேலைத் தமக்கு ஜனமாக மீட்பது.
2. தமக்குக் கீர்த்தி விளங்கப்பண்ணுவது.
3. தமது மகிமையை விளங்கச் செய்ய தம்முடைய ஜனத்திற்குமுன்பாகப் பயங்கரமான பெரிய காரியங்களை நடத்துவது.

தாவீதின் விண்ணப்பம்

1. தேவரீர் சொன்னபடியே செய்தருளும்.
2. உம்முடைய நாமம் என்றென்றைக்கும் மகிமைப்படுவதாக. *(2சாமு 7:26)*
3. உமது அடியானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாக நிலைநிற்பதாக.
4. உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும். *(2சாமு 7:29)*
5. உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக.

"உம்மை நோக்கி இந்த விண்ணப்பத்தைச் செய்ய உமது அடியானுக்கு மனத்தைரியம் கிடைத்தது" - மனுஷருக்குத் தேவைகள் வரும்போது, கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு வந்து, ஜெபித்துப் பழகவேண்டும். அதுபோலவே கர்த்தர் செய்த நன்மைகளையும் நினைத்து, அவரைத் துதிக்கவும் பழகிக்கொள்ள வேண்டும். (எபி 4:14-16; எபி 10:19-23).

8 அதிகாரம்

IV. தாவீதின் இராஜ்யம் பூரணமாக ஸ்தாபிக்கப்படுகிறது - (1நாளா 18:1-20:8)

1. பெலிஸ்தரின்மீது வெற்றி - (1நாளா 18:1)

2சாமு 8:1 இதற்குப்பின்பு தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, மேத்தேக் அம்மாவைப் பிடித்துக்கொண்டான்.

"இதற்குப்பின்பு" - தாவீதின் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின்பு. (2சாமு 7:1-29).

தாவீது கீழ்ப்படுத்திய ஜாதிகள்

1. பெலிஸ்தியர் (2சாமு 8:1)
2. மோவாபியர் (2சாமு 8:2)
3. சோபாவின் புத்திரர் (2சாமு 8:3)
4. சீரியர் (2சாமு 8:5)
5. அம்மோனியர் (2சாமு 8:12)
6. அமலேக்கியர் (2சாமு 8:12)
7. ஏதோமியர் (2சாமு 8:14).

"மேத்தேக் அம்மா" **(Metheg-ammah)** - இது பெலிஸ்தரின் தாய்ப்பட்டணம் என்று கருதப்படுகிறது. (1நாளா 18:1).

2. மோவாபியரின்மீது வெற்றி - (1நாளா 18:2)

2சாமு 8:2 அவன் மோவாபியரையும் முறிய அடித்து, அவர்களைத் தரைமட்டும் பணியப்பண்ணி, அவர்கள்மேல் நூல் போட்டு, இரண்டுபங்கு மனுஷரைக் கொன்றுபோட்டு, ஒரு பங்கை உயிரோடே வைத்தான்; இவ்விதமாய் மோவாபியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங்கட்டுகிறவர்களானார்கள்.

2சாமு 8:3 ரேகோபின் குமாரனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜா ஐபிராத்து நதியண்டையில் இருக்கிற சீமையைத் திரும்பத் தன் வசமாக்கிக் கொள்ளப்போகையில், தாவீது அவனையும் முறிய அடித்து,

"அவர்கள்மேல் நூல்போட்டு" - தாவீது மோவாபியரை இரண்டு பிரிவாகப் பிரித்தான். ஒரு பிரிவினர் மரிக்க வேண்டியவர்கள். மற்றொரு பிரிவினர் உயிரோடு வைக்கப்பட வேண்டியவர்கள். இதை அவன் நூல்போட்டுப் பிரித்தான். (1நாளா 18:4).

"ஆதாதேசர்" **(Hadadezer)** - இந்தப் பெயருக்கு "வலிமையே உதவி" **"mighty is the help"** என்று பொருள். (2சாமு 8:3-12; 1இராஜா 11:23) மறுபெயர் ஆதாரேசர் **(Hadarezer)** (2சாமு 10:15-19; 1நாளா 18:3-10; 1நாளா 19:16,19).

"ரேகோப்" **(Rehob)** - இந்தப் பெயருக்குத் "திறந்தவெளி" **"open space"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ரேகோப்"புகள்

1. ஆதாதேசரின் தகப்பன் (2சாமு 8:3,12)
2. நெகேமியாவின் கீழிருந்த ஒரு லேவியன். (நெகே 10:11)

இந்தப் பெயரில் ஒரு பட்டணமும் உள்ளது. (எண் 13:21; யோசு 19:28-30; யோசு 21:31; நியா 1:31; 1நாளா 6:75).

"சோபா" **(Zobah)** - இந்தப் பெயருக்குத் "தோட்டம்" **"plantation"** என்று பொருள். இது ஒரு பட்டணத்தின் பெயரும், சீரியாவிற்கு அருகிலுள்ள ஐபிராத்து நதிக்கரையில் அமைந்துள்ள ஒரு தேசத்தின் பெயருமாகும். (2சாமு 8:3-12; 2சாமு 23:36; 1சாமு 14:47; 1இராஜா 11:23-24; 1நாளா 18:3-9; 1நாளா 19:6). மறுபெயர் **Zoba** (2சாமு 10:7-8).

"ஐபிராத்து நதியண்டையில்" - ஐபிராத்து வாக்குத்தத்த தேசத்தின் கிழக்கு எல்லையாகும். முதன் முறையாக இப்போது இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சுதந்தரவீதத்தை ஐபிராத்து நதி வரையிலும் விஸ்தரிக்கிறார்கள்.(ஆதி 15:18-21; 1நாளா 18:3).

8 அதிகாரம்

3. சோபாவின்மீதும், சீரியாவின்மீதும் வெற்றி - (1நாளா 18:3; 2இராஜா 16:5)

2சாமு 8:4 அவனுக்கு இருந்த இராணுவத்தில் ஆயிரத்து எழுநூறு குதிரைவீரரையும், இருபதினாயிரம் காலாட்களையும் பிடித்து, இரதங்களில் நூறு இரதங்களை வைத்துக்கொண்டு, மற்றவைகளையெல்லாம் துண்டாடிப் போட்டான்.

2சாமு 8:5 சோபாவின் ராஜாவாகிய ஆதாதேசருக்கு உதவிசெய்ய தமஸ்குப் பட்டணத்தாராகிய சீரியர் வந்தார்கள்; தாவீது சீரியரில் இருபத்தீராயிரம்பேரை வெட்டிப்போட்டு,

2சாமு 8:6 தமஸ்குக்கடுத்த சீரியாவிலே தாணையங்களை வைத்தான்; சீரியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங் கட்டினார்கள்; தாவீது போன இடத்திலெல்லாம், கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.

2சாமு 8:7 ஆதாதேசரின் சேவகருடைய பொற்பரிசைகளைத் தாவீது எடுத்து, அவைகளை எருசலேமுக்குக் கொண்டு வந்தான்.

2சாமு 8:8 ஆதாதேசரின் பட்டணங்களாகிய பேத்தாகிலும் பேரொத்தாயிலுமிருந்து தாவீதுராஜா மகா திரளான வெண்கலத்தையும் எடுத்துக் கொண்டுவந்தான்.

“ஆதாதேசரின் சேவகர்” - இவர்களில் எத்தனை பேருக்கு பொற்பரிசைகள் இருந்தது என்பது தெரியவில்லை. ஒருவேளை இந்தச் சேவகர்களில் மிகவும் முக்கியமானவர்களுக்கு மட்டும் பொற்பரிசைகள் இருந்திருக்கலாம். மேலும் இது பொன்னால் செய்யப்பட்ட பரிசை அல்ல. இது ஒரு அணிகலன் என்றும் ஒரு கருத்து உள்ளது. இஸ்ரவேலில் நூற்றுக் கணக்கான பொற்பரிசைகளைப் பற்றி குறிப்பிடப் பட்டிருக்கிறது. (1இராஜா 10:17; 1இராஜா 14:26,27; 2நாளா 9:16; 2நாளா 12:9-10).

“பொற்பரிசைகள்” (shields of gold) - தேவாலயத்தைக் கட்டுவதற்குத் தாவீது பொன்னைச் சேகரிக்கிறான். இந்தப் பொற்பரிசைகளைத் தாவீது எடுத்து, அவற்றை எருசலேமிற்குக் கொண்டுவந்தான். மொத்தம் எத்தனை பொற்பரிசைகள் என்று தெரியவில்லை. அந்நிய தேசங்களிலிருந்து ஏராளமான பொன்னையும், வெள்ளியையும் தாவீது கொண்டு வந்தான். இவை தவிர, ஜனங்களும் அவனுக்குப் பொன்னையும், வெள்ளியையும் கொடுத்தார்கள். (2சாமு 8:7,10-11) வெண்கலத்தையும் கொடுத்தார்கள். (2சாமு 8:8). தாவீது கொள்ளைப் பொருட்களையெல்லாம் எருசலேமிற்குக் கொண்டு வந்து தேவாலயத்தைக் கட்டும் பணிக்காகச் சேமித்து வைத்தான். (1நாளா 18:7-11).

“பேத்தா” (Betah) - இந்தப் பெயருக்கு “இரகசியம்” "confidence" என்று பொருள். சோபாவிலுள்ள ஒரு பட்டணம். மறுபெயர் திப்காத் (Tibhath) (1நாளா 18:8).

“பேரொத்தாய்” (Berothai) - இந்தப் பெயருக்கு “என் துரவுகள்” "my wells" என்று பொருள். சோபாவிலுள்ள ஒரு பட்டணம். மறுபெயர்கள் கூன் (Chun) (1நாளா 18:8), பேரொத்தா (Berothah) (எசே 47:16).

4. ஆமாத்தின் ராஜாவாகிய தோயியோடு சமாதானம் - (1நாளா 18:9-10)

2சாமு 8:9 தாவீது ஆதாதேசருடைய எல்லா இராணுவத்தையும் முறிய அடித்த செய்தியை ஆமாத்தின் ராஜாவாகிய தோயீகேட்டபோது,

2சாமு 8:10 ஆதாதேசர் தோயீயின்மேல் எப்போதும் யுத்தம்பண்ணிக்கொண்டிருந்த படியால், ராஜாவாகிய தாவீதின் சுக செய்தியை விசாரிக்கவும், அவன் ஆதாதேசரோடே யுத்தம்பண்ணி, அவனை முறிய அடித்தற்காக அவனுக்கு வாழ்த்துதல் சொல்லவும், தோயீ தன் குமாரனாகிய யோராமை ராஜாவினிடத்தில் அனுப்பினான். மேலும் யோராம் தன் கையிலே வெள்ளியும் பொன்னும் வெண்கலமுமான தட்டு முட்டுகளைக் கொண்டுவந்தான்.

8 அதிகாரம்

2சாமு 8:11 அவன் கொண்டு வந்தவைகளைத் தாவீதுராஜா கீழ்ப்படுத்தின சீரியர், மோவாபியர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தர், அமலேக்கியர் என்னும் சகல ஜாதியர்களிடத்திலும்,

2சாமு 8:12 ரேகோபின் குமாரனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜா வினிடத்திலும் கொள்ளையிட்டதிலும் எடுத்து, கர்த்தருக்கு நியமித்த வெள்ளியோடும் பொன்னோடுங்கூட கர்த்தருக்குப் பிரதிஷ்டைபண்ணினான்.

"யோராம்" (Joram) - இந்தப் பெயருக்கு "யெகோவா உயர்த்தப்பட்டிருக்கிறார்" "Jehovah is exalted" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "யோராம்"கள்

1. தோயீயின் குமாரன் (2சாமு 8:10) மறுபெயர் அதோராம் (Hadoram) இந்தப் பெயருக்கு "அதா உயர்த்தப் பட்டிருக்கிறார்" "Hadah is exalted" (1நாளா 18:10) என்று பொருள்.
2. யோசபாத்தின் குமாரன் (2இராஜா 8:16-29; 2இராஜா 11:2; 1நாளா 3:11; மத் 1:8)
3. ஆகாபின் குமாரன் (2இராஜா 8:16-29;2இராஜா 9:14-29)
4. ஒரு லேவியன் (1நாளா 26:25)
5. ஒரு ஆசாரியன் (2நாளா 17:8)

"கர்த்தருக்கு நியமித்த" - யுத்தத்தின் கொள்ளைப் பொருட்களையும், வெகுமதிகளையும் தாவீது தேவாலயம் கட்டுவதற்காக அர்ப்பணம் செய்தான். (2சாமு 8:11-12).

5. ஏதோமின்மீது வெற்றி - (1நாளா 18:11)

2சாமு 8:13 தாவீது உப்புப் பள்ளத்தாக்கிலே பதினெண்ணாயிரம் சீரியரை முறிய அடித்துத் திரும்பினதினால் கீர்த்திபெற்றான்

2சாமு 8:14 ஏதோமில் தாணையங்களை வைத்தான்; ஏதோம் எங்கும் அவன் தாணையங்களை வைத்ததினாலே, ஏதோமியர் எல்லாரும் தாவீதைச் சேவிக்கிறவர்களானார்கள்; தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.

6. தாவீதின் ஆளுகையின் சிறப்பு - (1நாளா 18:14)

2சாமு 8:15 இப்படியே தாவீது இஸ்ரவேல் அனைத்தின்மேலும் ராஜாவாயிருந்தான்; அவன் தன்னுடைய எல்லா ஜனத்திற்கும் நியாயமும் நீதியும் செய்துவந்தான்.

"இஸ்ரவேல் அனைத்தின்மேலும்" - இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தின்மீதும் தாவீது ராஜாவானான். எல்லா ஜனத்திற்கும் நியாயமும் நீதியும் செய்துவந்தான். எல்லாருக்கும் பட்சபாதம் காண்பிக்காமல் நீதியாய் நியாயம் விசாரித்தான்.

7. தாவீதின் அதிகாரிகள் - (15:12; 20:23; 1நாளா 11:10; 27:25)

2சாமு 8:16 செருயாவின் குமாரனாகிய யோவாப் இராணுவத் தலைவனாயிருந்தான்; அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரியாயிருந்தான்.

2சாமு 8:17 அகிதூபின் குமாரன் சாதோக்கும், அபியத்தாரின் குமாரன் அகிமெலேக்கும் ஆசாரியராயிருந்தார்கள்; செராயா சம்பிரதியாயிருந்தான்.

2சாமு 8:18 யோய்தாவின் குமாரன் பெனாயா கிரேத்தி யருக்கும் பிலேத்தி யருக்கும் தலைவனாயிருந்தான்; தாவீதின் குமாரரோ பிரதானிகளாயிருந்தார்கள்.

8 அதிகாரம்

தாவீதின் ராஜ்யத்தில் தலைவர்கள்

1. யோவாப் - ராணுவத்தலைவன் (2சாமு 8:16; 2சாமு 20:23)
2. யோசபாத் - மந்திரி (2சாமு 20:24)
3. சாதோக்கும், அகிமெலேக்கும் - பிரதான ஆசாரியர்கள் (2சாமு 8:17)
4. சேவா - சம்பிரதி (2சாமு 20:25)
5. பெனாயா - கிரேத்தியர்மேலும், பிலேத்தியர்மேலும் தலைவன் (2சாமு 8:18; 2சாமு 20:23)
6. தாவீதின் குமாரர்கள் - பிரதானிகள் (2சாமு 20:26)

"மந்திரி" **(recorder)** - ராஜாவின் வாழ்க்கையிலும், ராஜாங்கத்திலும் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் எழுதுகிறவர்.

"சாதோக்" **(Zadok)** - இந்தப் பெயருக்கு "நீதி" **"righteous"** என்றுபொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "சாதோக்"குகள்

1. தாவீதின் பிரதான ஆசாரியர் (2சாமு 8:17; 2சாமு 15:24-35; 2சாமு 17:15; 2சாமு 18:19-27; 2சாமு 19:11; 2சாமு 20:25; 1இராஜா 1:8-45; 1இராஜா 2:35; 1இராஜா 4:2-4; 2இராஜா 15:33; 1நாளா 6:8,12,53; 1நாளா 9:11; 1நாளா 12:28; 1நாளா 15:11; 1நாளா 16:39; 1நாளா 18:16; 1நாளா 24:3-6,31; 1நாளா 27:17; 1நாளா 29:22; எஸ்றா 7:2; நெகே 11:11; எசே 40:46; எசே 43:19; எசே 44:15; எசே 48:11)
2. யோதாமின் தாத்தா (2நாளா 27:1)
3. பானாவின் குமாரன் (நெகே 3:4)
4. இம்மேரின் குமாரன் (நெகே 3:29)
5. இஸ்ரவேலின் தலைவன் (நெகே 10:21)
6. நெகேமியாவின் பொக்கிஷக்காரன் (நெகே 13:13)

"அகிதூப்" **(Ahitub)** - இந்தப் பெயருக்கு "நன்மையின் தகப்பன்" **"father of goodness"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "அகிதூப்"புகள்

1. பினெகாசின் குமாரன் (1சாமு 14:3; 1சாமு 22:9-20)
2. சாதோக்கின் தகப்பன் (2சாமு 8:17; 1நாளா 6:7-12,52; 1நாளா 9:11; 1நாளா 18:16)
3. நெகேமியாவின் காலத்திலிருந்த ஆசாரியன் (எஸ்றா 7:2; நெகே 11:11)

"அகிமெலேக்கு" **(Ahimelech)** - (1சாமு 21:1)

"செராயா" **(Seraiah)** - இந்தப் பெயருக்கு "யெகோவா பிரபுவாயிருக்கிறார்" **"Jehovah is prince"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "செராயா"க்கள்

1. தாவீதின் சம்பிரதி (2சாமு 8:17) மறுபெயர் **"Shavsha"** (1நாளா 18:16)
2. யூதாவில் இருந்த பிரதான ஆசாரியன் (2இராஜா 25:18; 1நாளா 6:14; எஸ்றா 7:1; எரே 52:24)
3. தன்கூமேத்தின் குமாரன் (2இராஜா 25:23; எரே 40:8)
4. கேனாசின் குமாரன் (1நாளா 4:13-14)
5. சிமியோனியன் (1நாளா 4:35)
6. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன் (எஸ்றா 2:2; நெகே 10:2; நெகே 12:1,12)

II சாமுவேல் - தொகுப்புரை

8 அதிகாரம்

7. ஒரு ஆசரியன் (நெகே 11:11; நெகே 12:1)
8. யோயாக்கீமின் அதிகாரி (எரே 36:26)
9. யூதாவின் பிரபு (எரே 51:59-61)

“பெனாயா” **(Benaiah)** - இந்தப் பெயருக்கு “யெகோவா ஞானமுள்ளவர்” **"Jehovah is intelligent"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் “பெனாயா”க்கள்

1. ஒரு லேவியன் (2சாமு 8:18; 2சாமு 20:23; 2சாமு 23:20-23; 1இராஜா 1:8-44; 1இராஜா 2:25-46; 1இராஜா 4:4)
2. தாவீதின் பராக்கிரமசாலி 2சாமு 23:30; 1நாளா 11:31; 1நாளா 27:14)
3. ஒரு சிமியோனிய குடும்பத்தின் தலைவன் (1நாளா 4:36)
4. ஒரு ஆசாரியன் (1நாளா 15:18,24; 1நாளா 16:5-6)
5. ஒரு ஆலோசனைக்காரனின் தகப்பன் (1நாளா 27:34)
6. யகாசியேலின் தாத்தா (2நாளா 20:14)
7. எசேக்கியாவின் கீழிருந்த ஒரு லேவியன் (2நாளா 31:13)
8. எஸ்றாவின்கீழ் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன். (எஸ்றா 10:25)
9. பாகாத்மோவாபின் குமாரன் (எஸ்றா 10:30)
10. பானியின் குமாரன் (எஸ்றா 10:34)
11. நேபோவின் குமாரன் (எஸ்றா 10:43)
12. யூதாவின் அதிபதி (எசே 11:1,13)

“கிரேத்தியரும் பிலேத்தியரும்” - இவ்விரு பிரிவினரும் தாவீதின் சேனையில் முக்கிய அங்கம் வகித்தவர்கள். ராஜாவின் மெய்க்காவலாளர்களாக இருந்தார்கள். கிரேத்தியர் பெலிஸ்தரோடு தொடர்புடையவர்களாக இருக்கலாம். பிலேத்தியர் என்பது பெலிஸ்தரின் மறுபெயர் என்பது ஒருசிலருடைய கருத்து. ஆனால் இவர்கள் ரூபன் கோத்திரத்தார் அல்லது யூதா கோத்திரத்தார் என்றும் சிலர் கூறுகிறார்கள்.

9 அதிகாரம்

8. சவுலின் குடும்பத்தாருக்கு இரக்கம்

2சாமு 9:1 யோனத்தான்நிமித்தம் என்னால் தயவுபெறத்தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் இன்னும் மீதியாயிருக்கிறவன் உண்டா என்று தாவீது கேட்டான்.

2சாமு 9:2 அப்பொழுது சவுலின் வீட்டு வேலைக்காரனாகிய சீபா என்னும் பேருள்ளவனைத் தாவீதினிடத்தில் அழைத்துவந்தார்கள்; ராஜா அவனைப் பார்த்து; நீதானா சீபா என்று கேட்டான்; அவன் அடியேன்தான் என்றான்.

2சாமு 9:3 அப்பொழுது ராஜா: தேவன் நிமித்தம் நான் சவுலின் குடும்பத்தாருக்குத் தயைசெய்யும்படி அவன் வீட்டாரில் யாதொருவன் இன்னும் மீதியாய் இருக்கிறானா என்று கேட்டதற்கு, சீபா ராஜாவைப் பார்த்து: இன்னும் யோனத்தானுக்கு இரண்டு கால்களும் முடமான ஒரு குமாரன் இருக்கிறான் என்றான்.

2சாமு 9:4 அவன் எங்கே என்று ராஜா கேட்டதற்கு, சீபா ராஜாவைப் பார்த்து: இதோ, அவன் லோதேபாரிலே அம்மியேலின் குமாரனாகிய மாகீரின் வீட்டில் இருக்கிறான் என்றான்.

2சாமு 9:5 அப்பொழுது தாவீதுராஜா அவனை லோதேபாரிலிருக்கிற அம்மியேலின் குமாரனாகிய மாகீரின் வீட்டிலிருந்து அழைப்பித்தான்.

2சாமு 9:6 சவுலின் குமாரனாகிய யோனத்தானின் மகன் மேவிபோசேத் தாவீதினிடத்தில் வந்தபோது, முகங்குப்புற விழுந்து வணங்கினான்; அப்பொழுது தாவீது: மேவிபோசேத்தே என்றான்; அவன்: இதோ, அடியேன் என்றான்.

2சாமு 9:7 தாவீது அவனைப் பார்த்து: நீ பயப்படாதே; உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாய் உனக்குத் தயைசெய்து, உன் தகப்பனாகிய சவுலின் நிலங்களை யெல்லாம் உனக்குத் திரும்பக் கொடுப்பேன்; நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய் என்றான்.

2சாமு 9:8 அப்பொழுது அவன் வணங்கி: செத்த நாயைப்போலிருக்கிற என்னை நீர் நோக்கிப்பார்க்கிறதற்கு, உமது அடியான் எம்மாத்திரம் என்றான்.

2சாமு 9:9 ராஜா சவுலின் வேலைக் காரனாகிய சீபாவை அழைப்பித்து, அவனை நோக்கி: சவுலுக்கும் அவர் வீட்டார் எல்லாருக்கும் இருந்த யாவையும் உன் எஜமானுடைய குமாரனுக்குக் கொடுத்தேன்.

2சாமு 9:10 ஆகையால் நீ உன் குமாரரையும் உன் வேலைக்காரரையும் கூட்டிக்கொண்டு, உன் எஜமானுடைய குமாரன் புசிக்க அப்பம் உண்டாயிருக்கும் படி, அந்த நிலத்தைப் பயிரிட்டு, அதின் பலனைச் சேர்ப்பாயாக; உன் எஜமானுடைய குமாரன் மேவிபோசேத் நித்தம் என் பந்தியிலே அப்பம் புசிப்பான் என்றான்; சீபாவுக்குப் பதினைந்து குமாரரும் இருபது வேலைக்காரரும் இருந்தார்கள்.

2சாமு 9:11 சீபா, ராஜாவை நோக்கி; ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் உமது அடியானாகிய நான் செய்வேன் என்றான். ராஜகுமாரரில் ஒருவனைப் போல, மேவிபோசேத் என் பந்தியிலே அசனம் பண்ணுவான் என்று ராஜா சொன்னான்.

2சாமு 9:12 மேவிபோசேத்திற்கு மீகா என்னும் பேருள்ள சிறுவனாகிய ஒரு குமாரன் இருந்தான், சீபாவின் வீட்டிலே குடியிருந்த யாவரும் மேவிபோசேத்திற்கு வேலைக்காரராயிருந்தார்கள்.

2சாமு 9:13 மேவிபோசேத் ராஜாவின் பந்தியில் நித்தம் அசனம் பண்ணுகிறவனாயிருந்தபடியினால், எருசலேமிலே குடியிருந்தான்; அவனுக்கு இரண்டு காலும் முடமாயிருந்தது.

9 அதிகாரம்

"சவுலின் குடும்பத்தாருக்குத் தயை செய்யும்படி" - தாவீது தேவனுடைய அன்பின் நிமித்தம் நல்ல சுபாவமுடையவனாக இருக்கிறான். அவனிடத்தில் மன்னிக்கும் சுபாவமும், சரியானதைச் செய்ய வேண்டுமென்னும் ஆர்வமும் உள்ளது. அவன் கொலைசெய்து, ஏமாற்றி, விபசாரம் செய்த காலத்தில்கூட தன்னுடைய பாவத்தை அங்கிகரித்திருக்கிறான். தன்னுடைய தவற்றைச் சரி பண்ணுவதற்கு முயற்சி பண்ணணியிருக்கிறான். (2சாமு 12:1-23). இப்போது தாவீதின் ராஜாங்கத்தில் அமைதியும், செழிப்பும் உண்டாயிருக்கிறது. சவுலின் குடும்பத்தாருக்கு ஒரு குறையும் வரக்கூடாது என்று விரும்புகிறான். அவனுடைய குடும்பத்தில் யாராவது இன்னும் மீதியாக இருந்தால் அவர்களுக்குத் தயைசெய்ய விரும்புகிறான். இது தாவீதின் பெருந்தன்மையையும், மன்னிக்கும் சுபாவத்தையும் காண்பிக்கிறது.

"சீபா" **(Ziba)** - இந்தப் பெயருக்கு "வலிமை" **"strength"** என்று பொருள். இவன் சவுலின் வேலைக்காரன். மேவிபோசேத்தின் சொத்தில் பாதியை இவன் ஏமாற்றிப் பெற்றுக் கொண்டான். (2சாமு 9:2-12; 2சாமு 16:1-4; 2சாமு 19:17,29).

"மாகீர்" **(Machir)** - இந்தப் பெயருக்கு "விற்கிறவன்" **"salesman"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "மாகீர்"கள்

1. இவன் மனாசேயின் குமாரன். (ஆதி 50:23; எண் 26:29;எண் 27:1)
2. அம்மியேலின் குமாரன் (2சாமு 9:4-5; 2சாமு 17:27)

"அம்மியேல்" **(Ammiel)** - இந்தப் பெயருக்கு "என் உறவினர் தேவனாயிருக்கிறார்" **"my kinsman is God"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "அம்மியேல்"கள்

1. கெமல்லியின் குமாரன் (எண் 13:12)
2. மாகீரின் தகப்பன் (2சாமு 9:4-5; 2சாமு 17:27)
3. பத்சேபாளின் தகப்பன் (1நாளா 3:5)
4. ஆசரிப்புக்கூடாரத்தில் வாசற்காக்கிறவன் (1நாளா 26:5)

"லோதேபார்" **(Lo-debar)** - காத்திலுள்ள ஒரு இடம். மகனாயீமிற்கு அருகில் யோர்தானுக்கு அப்பால் உள்ளது. (2சாமு 9:4-5; 2சாமு 17:27). மறுபெயர் தெபீர் **(Debir)** (யோசு 13:26).

"மேவிபோசேத்" **(Mephibosheth)** - இந்தப் பெயருக்கு "அழிக்கும் அவமானம்" **"destroying shame"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "மேவிபோசேத்"துகள்

1. யோனத்தானின் குமாரன் (2சாமு 4:4; 2சாமு 9:6-13; 2சாமு 16:1,4; 2சாமு 19:24-30; 2சாமு 21:7)
2. சவுலின் குமாரன் (2சாமு 21:8)

"முகங்குப்புற விழுந்து வணங்கினான்" - மேவிபோசேத்திற்கு 17 அல்லது 20 வயதாக இருக்கும். தாவீதின் காலில் விழுந்து வணங்குகிறான். தாவீதுக்கு 12 வயதாக இருந்தபோது அவன் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். (2சாமு 4:4). மேவிபோசேத்திற்குத் திருமணமாகி ஒரு குமாரனும் இருக்கிறான். அவன் பெயர் மீகா (2சாமு 9:12).

"உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம்" - முதலாவது தாவீது சவுலின் குடும்பத்தின் நிமித்தம் அவனுடைய குடும்பத்தாரில் யாருக்காவது தயை செய்ய விரும்பினான். ஆனால் இப்போது இதை யோனத்தான் நிமித்தம் செய்ய விரும்புகிறான். (2சாமு 9:3) சவுலின் மற்ற குமாரர்கள் அவனுடைய மறுமனையாட்டிக்குப் பிறந்தவர்கள். ஆகையினால் அவர்கள் சவுலின் குடும்பத்தில் சேராதவர்கள். யோனத்தானும் மேவிபோசேத்தும், சவுலின் குடும்பத்தில் வந்தவர்களாகத் தாவீது அவர்களை அங்கிகரிக்கிறான். (2சாமு 21:7-8).

II சாமுவேல் - தொகுப்புரை

9 அதிகாரம்

"சவுலுக்கும் அவர் வீட்டார் எல்லாருக்கும் இருந்த யாவையும் உன் எஜமானுடைய குமாரனுக்குக் கொடுத்தேன்" - சவுலுக்குரிய எல்லாவற்றையும் தாவீது மேவிபோசேத்திற்குக் கொடுக்கிறான். சீபா அந்த நிலத்தையெல்லாம் பயிரிட்டு, அதன் பலனைச் சேர்க்க வேண்டும். (2சாமு 9:9-13) ஆனால் சீபாவோ தன்னுடைய எஜமானாகிய மேவிபோசேத்தை வஞ்சிக்க முயற்சி பண்ணினான். (2சாமு 16:1-4) ஆனால் அவனுடைய ஏமாற்றுத்தனம் வெளிப்பட்டு விட்டது. தாவீது அவனுக்குத் தண்டனை கொடுக்கவில்லை. தாவீது தன்னுடைய வார்த்தையைக் காத்துக் கொண்டான். மேவிபோசேத்தும் தாவீதை வஞ்சித்தான். (2சாமு 19:25-30).

"மீகா" (Micha) - இந்தப் பெயருக்கு "யெகோவாவைப் போன்றவன்" **"like Jehovah"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "மீகா"க்கள்

1. மேவிபோசேத்தின் குமாரன் (2சாமு 9:12)
2. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த லேவியன் (நெகே 11:17,22)
3. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த மற்றொரு லேவியன் (நெகே 10:11)

10 அதிகாரம்

9. அம்மோனியர் - சீரியரோடு யுத்தம்

- (1நாளா 19; 2இராஜா 16:5)

(1) தாவீதின் நல்ல எண்ணத்தை ஆனூன் தவறாகப் புரிந்து கொள்கிறான்

2சாமு 10:1 அதன்பின்பு அம்மோன் புத்திரரின் ராஜா மரித்துப்போனான்; அவன் குமாரனாகிய ஆனூன் அவன் பட்டத்திற்கு ராஜாவானான்.

2சாமு 10:2 அப்பொழுது தாவீது: ஆனூனின் தகப்பனாகிய நாகாஸ் எனக்குத் தயை செய்ததுபோல, அவன் குமாரனாகிய இவனுக்கு நான் தயைசெய்வேன் என்று சொல்லி, அவன் தகப்பனுக்காக அவனுக்கு ஆறுதல் சொல்ல, தன் ஊழியக்காரரை அனுப்பினான்; தாவீதின் ஊழியக்காரர் அம்மோன் புத்திரரின் தேசத்திலே வந்தபோது,

2சாமு 10:3 அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் தங்கள் ஆண்டவனாகிய ஆனூனைப் பார்த்து: தாவீது ஆறுதல் சொல்லுகிறவர்களை உம்மிடத்தில் அனுப்பினது, உம்முடைய தகப்பனைக் கனம்பண்ணுகிறதாய் உமக்குத் தோன்றுகிறதோ? இந்தப் பட்டணத்தை ஆராய்ந்து, உளவுபார்த்து, அதைக் கவிழ்த்துப்போட அல்லவோ தாவீது தன் ஊழியக்காரரை உம்மிடத்திற்கு அனுப்பினான் என்றார்கள்.

"ஆனூன்" (Hanun) - இந்தப் பெயருக்கு "கிருபையுள்ளவன்" "gracious" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஆனூன்"கள்

1. அம்மோன் புத்திரரின் ராஜாவான நாகாசின் குமாரன். (2சாமு 10:1-4; 1நாளா 19:2-6)
2. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஒருவன். (நெகே 3:13)
3. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த மற்றொருவன் (நெகே 3:30)

"அவன் குமாரனாகிய இவனுக்கு நான் தயைசெய்வேன்" - நாகாஸ் தாவீதுக்குத் தயை செய்தான். அதுபோல நாகாசின் குமாரனுக்குத் தாவீதும் தயை செய்ய விரும்புகிறான். தாவீதின் எண்ணம் தூய்மையானது. (2சாமு 10:20). ஆனால் ஆனூனோ தாவீதின் நல்ல எண்ணத்தைச் சந்தேகப்படுகிறான். தன்னுடைய ராஜ்யபாரத்தை இறக்குவதற்காகத் தாவீது வேவுகாரரை அனுப்பியதாகச் சந்தேகப் படுகிறான். (2சாமு 10:3). அம்மோன் புத்திரர் தாவீதின் ஊழியக்காரரை அவமானப் படுத்தினார்கள். இதன் விளைவாக யுத்தம் உண்டாயிற்று. (2சாமு 10:4-14)

"உம்முடைய தகப்பனைக் கனம் பண்ணுகிறதாய் உமக்குத் தோன்றுகிறதோ?" - ஒரு மனுஷன் மற்றவனுக்குத் தயவு பண்ணுவதை இந்த உலகம் தவறாகப் புரிந்து கொள்கிறது. ஏனெனில் இந்த உலகத்தில் சுயமும், தற்பெருமையும் அதிகமாக இருக்கிறது. ஒவ்வொருவரும் மற்றவரைப் பற்றி புறங்கூறுகிறார்கள். இதே நிலைமையே அம்மோன் புத்திரர் மத்தியிலும் காணப்படுகிறது.

(2) தாவீதின் ஊழியக்காரருக்கு அவமானம் - (1நாளா 19:4-5)

2சாமு 10:4 அப்பொழுது ஆனூன்: தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து, அவர்களுடைய ஒருபக்கத்துத் தாடியைச் சிரைத்து, அவர்களுடைய வஸ்திரங்களை இருப்பிடமட்டும் வைத்துவிட்டு, மற்றப்பாதியைக் கத்தரித்துப்போட்டு, அவர்களை அனுப்பிவிட்டான்.

2சாமு 10:5 அது தாவீதுக்கு அறிவிக்கப் பட்டபோது, ராஜா, அந்த மனுஷர் மிகவும் வெட்கப்பட்டபடியினால், அவர்களுக்கு எதிராக ஆட்களை அனுப்பி, உங்கள் தாடி வளரும்மட்டும் நீங்கள் எரிகோவிலிருந்து, பிற்பாடு வாருங்கள் என்று சொல்லச் சொன்னான்.

10 அதிகாரம்

"அவர்களுடைய ஒருபக்கத்துத் தாடியைச் சிரைத்து......" - ஆனூன் தாவீதின் ஊழியக்காரரை மிகவும் அவமானப்படுத்தி விட்டான். எபிரெயருக்கு அவர்களுடைய தாடி ஆண்மையைக் குறிக்கும் அடையாளம். ஆனூன் பாதித்தாடியை மட்டும் சிரைத்து விட்டான். இதைப் பார்க்கும் எல்லோரும் நகைப்பார்கள். தாவீதின் ஊழியக்காரர் வேடிக்கைப் பொருளாகி விட்டார்கள். எபிரெயர்கள் தங்களுடைய தாடிகளைச் சுத்தமாகப் பராமரிப்பது வழக்கம். பெலிஸ்தர் மத்தியில் தாவீது பித்தம் கொண்டவன்போல நடித்தபோது, அவன் தன் வாயிலிருந்து நுரையைத் தன் தாடியில் விழப் பண்ணிக் கொண்டிருந்தான். (1சாமு 21:13). எபிரெயர்கள் தாடியை அசுத்தப்படுத்த மாட்டார்கள். ஆனூன் தாவீதின் ஊழியக்காரரை அவமானப்படுத்தியது மதியீனமான காரியம். ரெகொபெயாமைப் போல ஆனூனும் தவறு செய்து விட்டான். (1இராஜா 12).

(3) முதலாவது யுத்தம் - அம்மோனியர் மீதும் சீரியர்மீதும் வெற்றி - (1நாளா 19:6-16)

2சாமு 10:6 அம்மோன் புத்திரர் தாங்கள் தாவீதுக்கு அருவருப்பானதைக் கண்ட போது, ஸ்தானாபதிளை அனுப்பி, பெத்ரேகோப் தேசத்துச் சீரியரிலும், சோபாவிலிருக்கிற சீரியரிலும் இருபதினாயிரம் காலாட்களையும், மாக்காதேசத்து ராஜாவினிடத்தில் ஆயிரம்பேரையும், இஷ்தோபிலிருக்கிற பன்னீராயிரம்பேரையும், கூலி ப்படையாக அழைப்பித்தார்கள்.

2சாமு 10:7 அதைத் தாவீது கேள்விப்பட்ட போது, யோவாபையும் பராக்கிரமசாலிகளாகிய சமஸ்த இராணுவத்தையும் அனுப்பினான்.

2சாமு 10:8 அம்மோன் புத்திரர் புறப்பட்டு, ஒலிமுகவாசலண்டையிலே போர்செய்ய அணிவகுத்து நின்றார்கள்; ஆனாலும் சோபாவிலும் ரேகோபிலுமிருந்துவந்த சீரியரும், இஷ்தோபிலும் மாக்காவிலுமிருந்து வந்த மனுஷரும், வெளியிலே பிரத்தியேகமாயிருந்தார்கள்.

2சாமு 10:9 யோவாபோ இராணுவங்களின் படைமுகம் தனக்கு முன்னும் பின்னும் இருக்கிறதைக் காணகையில், அவன் இஸ்ரவேலிலே தெரிந்துகொள்ளப்பட்ட எல்லா இராணுவங்களிலும் ஒரு பங்கைப் பிரித்தெடுத்து, அதைச் சீரியருக்கு எதிராக அணிவகுத்து நிறுத்தி,

2சாமு 10:10 மற்ற ஜனத்தை அம்மோன் புத்திரருக்கு எதிராக அணிவகுத்து நிறுத்தும்படி தன் சகோதரனாகிய அபிசாயினிடத்தில் ஒப்புவித்து:

2சாமு 10:11 சீரியர் கைமிஞ்சுகிறதாயிருந்தால் நீ எனக்கு உதவிசெய்யவேண்டும்; அம்மோன் புத்திரர் கை மிஞ்சுகிறதாயிருந்தால் நான் உனக்கு உதவிசெய்ய வருவேன்.

2சாமு 10:12 தைரியமாயிரு; நம்முடைய ஜனத்திற்காகவும், நம்முடைய தேவனுடைய பட்டணங்களுக்காகவும் சவுரியத்தைக் காட்டுவோம்; கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக என்றான்.

2சாமு 10:13 யோவாபும் அவனோடிருந்த ஜனமும் சீரியர்மேல் யுத்தம்பண்ணக் கிட்டினார்கள்; அவர்கள் அவனுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்.

2சாமு 10:14 சீரியர் முறிந்தோடுகிறதை அம்மோன் புத்திரர் கண்டபோது, அவர்களும் அபிசாயிக்கு முன்பாக முறிந்தோடிப் பட்டணத்திற்குள் புகுந்தார்கள்; அப்பொழுது யோவாப் அம்மோன் புத்திரரை விட்டுத் திரும்பி எருசலேமுக்கு வந்தான்.

10 அதிகாரம்

"அம்மோன் புத்திரர் தாங்கள் தாவீதுக்கு அருவருப்பானதைக் கண்டபோது" - தாவீதின் ஊழியக்காரரை அவமானப்படுத்தினால் என்ன ஆகும் என்பது அம்மோன் புத்திரருக்குத் தெரியும். தாவீது யுத்தம் பண்ண வருவான். ஆகையினால் அம்மோன் புத்திரரும் யுத்தம் பண்ண ஆயத்தமாக இருக்கிறார்கள். 33,000 பேரைக் கூலிப்படையாக அழைப்பித்தார்கள். தாவீதுக்கு இது தெரிய வந்தபோது, அவன் யோவாபையும், இஸ்ரவேலின் பராக்கிரமசாலிகள் அனைவரையும் அம்மோன் புத்திரருக்கு எதிராக யுத்தம் பண்ண அனுப்பினான். (2சாமு 10:7) அம்மோன் புத்திரரின் தலைநகரமான ரப்பாவில் **(Rabbah)** யுத்தம் நடைபெற்றது. (2சாமு 10:8; 2சாமு 11:1). யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரர் வெற்றி பெற்றார்கள். (2சாமு 10:9-14).

"பெத்ரேகோப்" **(Beth-rehob)** - லீபனோனின் கீழ்ப்பகுதியிலுள்ள தேசத்தின் தலைநகரம். (நியா 18:28).

"சோபா" **(Zoba, Zobah)** - சீரியாவிற்கும், ஐபிராத்து நதிக்கும் இடையிலுள்ள தேசம். (2சாமு 8:3).

"மாக்கா" **(Maacah)** - யோர்தானுக்குக் கிழக்கில் எர்மோன் மலைக்கு அருகிலுள்ள இடம். (2சாமு 10:6,8).

"இஷ்தோப்" **(Ish-tob)** - மறுபெயர் தோப் **(Tob)** சீரியாவிற்குத் தென்கிழக்கிலுள்ள பகுதி. (2சாமு 10:6,8; நியா 11:3-5).

"கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" - யோவாப் கர்த்தரைத் தன் தேவனாக அங்கிகரித்திருக்கிறான் என்பதற்கு இந்த வாக்கியம் மட்டுமே சான்றுபகருகிறது.

(4) இரண்டாவது யுத்தம் - சீரியர் தோற்று ஓடுகிறார்கள் - (1நாளா 19:17)

2சாமு 10:15 தங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதைச் சீரியர் கண்டபோது, ஒருமிக்கக் கூடினார்கள்.

2சாமு 10:16 ஆதாரேசர் நதிக்கு அப்பாலிருந்த சீரியரையும் அழைத்தனுப்பினான்; அவர்கள் ஏலாமுக்கு வந்தார்கள்; ஆதாரேசருடைய படைத்தலைவனாகிய சோபாக் அவர்களுக்கு முன்னாலே சென்றான்.

2சாமு 10:17 அது தாவீதுக்கு அறிவிக்கப் பட்டபோது, அவன் இஸ்ரவேலையெல்லாம் கூட்டிக்கொண்டு, யோர்தானைக் கடந்து, ஏலாமுக்குப் போனான்; சீரியர் தாவீதுக்கு எதிராக இராணுவங்களை அணிவகுத்து நின்றார்கள்; அவனோடு யுத்தம்பண்ணுகிறபோது,

2சாமு 10:18 சீரியர் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்; தாவீது சீரியரில் எழுநூறு இரதவீரரையும் கொன்று, அவர்களுடைய படைத் தலைவனாகிய சோபாகையும் சாகும்படி வெட்டிப்போட்டான்.

2சாமு 10:19 அப்பொழுது ஆதாரேசரைச் சேவிக்கிற சகல ராஜாக்களும் தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதைக் கண்டு, இஸ்ரவேலரோடே சமாதானம்பண்ணி, அவர்களைச் சேவித்தார்கள். அப்புறம் அம்மோன் புத்திரருக்கு உதவிசெய்ய சீரியர் பயப்பட்டார்கள்.

"ஒருமிக்கக் கூடினார்கள்" - இஸ்ரவேல் புத்திரர் தங்களை முறியடிப்பதைச் சீரியர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் இஸ்ரவேலரிடம் தோற்க விரும்பவில்லை. (2சாமு 10:13) ஆகையினால் ஐபிராத்து நதிக்கு அப்பாலுள்ள தேசங்களில் இருந்த எல்லா சீரியர்களையும் ஒருமிக்கக்கூடிவரச் செய்தார்கள். (2சாமு 10:15-16) தாவீது தன்னுடைய சேனையை அவர்களுக்கு எதிராகத் திருப்பி, சீரியரைத் தோற்கடித்தான். (2சாமு 10:16-19).

"நதி" - ஐபிராத்து நதி.

"ஏலாம்" **(Helam)** - யோர்தானுக்கு அப்பால் மனாசேயின் கிழக்குப் பகுதியிலுள்ள எல்லைப் பட்டணம். (2சாமு 10:16-17).

"சோபாக்" **(Shobach)** - இந்தப் பெயருக்கு "விரிவு" **"expansion"** என்று பொருள். (2சாமு 10:16-18). மறுபெயர் சோப்பாக் **(Shophach)** (1நாளா 19:16-18).

10 அதிகாரம்

சீரியரோடு யுத்தம்

இந்த வசனப்பகுதியில் தாவீது எழுநூறு இரதவீரரைக் கொன்றான் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த யுத்தத்தை விளக்கும் மற்றொரு வசனப்பகுதியான 1நாளா 19:18 ஆவது வசனத்தில் தாவீது ஏழாயிரம் இரத வீரரைக் கொன்றான் என்று கூறப்பட்டிருக்கிறது. எண்ணிக்கையில் காணப்படும் இந்த வேறுபாடு பிரதியெடுத்தவர்களின் தவறாக இருக்கலாம். எபிரெய மொழியில் எழுத்துக்களே எண்களாகப் பயன்படுத்தப்படுகிறது.

11 அதிகாரம்

(5) மூன்றாவது யுத்தம் - அம்மோன்மீது வெற்றி - (1நாளா 20:1)

2சாமு 11:1 மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வந்தபோது, தாவீது யோவாபையும், அவனோடேகூடத் தன் சேவகரையும், இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கை போடவும் அனுப்பினான். தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான்.

"மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வந்தபோது" - மழை பெய்யாத வசந்தகாலம் யுத்தம் பண்ணுவதற்கு உகந்த காலமாகும். இக்காலத்தில் வெயிலோ அல்லது குளிரோ அதிகமாக இராது.

"அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கைபோடவும் அனுப்பினான்" - தாவீதின் சேவகர்களை அம்மோன் புத்திரரின் அதிபதிகள் அவமானப்படுத்தி விட்டார்கள். இதற்காகத் தாவீது அவர்கள்மீது யுத்தம் பண்ணினான். இது மூன்றாவது யுத்தமாகும். (2சாமு 10:1-5)

மூன்று யுத்தங்கள்

1. அம்மோன் புத்திரர்மீதும், சீரியர்மீதும் யுத்தம். (2சாமு 10:6-14)
2. சீரியர்மீது யுத்தம் (2சாமு 10:15-19)
3. அம்மோன் புத்திரர்மீது யுத்தம் (2சாமு 11:1-27). இந்த யுத்தத்தில் அம்மோன் புத்திரர் தோல்வியுற்றார்கள். அவர்களுடைய தலைநகரமாகிய ரப்பா பிடிக்கப்படும் வரையிலும் முற்றிக்கை போடப்பட்டது. (2சாமு 11:1,25; 2சாமு 12:26-31)

"தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான்" - தாவீதும் யுத்தத்திற்குப் போயிருந்தால், பத்சேபாள் மூலமாக அவனுக்குச் சோதனை வந்திருக்காது.

V. தாவீதின் பாவமும் மனந்திரும்புவதும் - (2சாமு 11:2-12:14)

1. தாவீதின் சோதனை

2சாமு 11:2 ஒருநாள் சாயங்காலத்தில் தாவீது தன் படுக்கையிலிருந்து எழுந்து, அரமனை உப்பரிகையின்மேல் உலாத்திக் கொண்டிருக்கும்போது, ஸ்நானம் பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிகையின்மேலிருந்து கண்டான்; அந்த ஸ்திரீ வெகு சௌந்தரவதியாயிருந்தாள்.

2சாமு 11:3 அப்பொழுது தாவீது, அந்த ஸ்திரீ யார் என்று விசாரிக்க ஆள் அனுப்பினான்; அவள் எலியாமின் குமாரத்தியும், ஏத்தியனான உரியாவின் மனைவியுமாகிய பத்சேபாள் என்றார்கள்.

தாவீதுடைய வீழ்ச்சியின் பாதைகள்

1. தாவீது தன் படுக்கையிலிருந்து எழுந்திருந்தான். (2சாமு 11:2)
2. அரமனை உப்பரிகையின்மேல் உலாத்திக் கொண்டிருந்தான்.
3. ஸ்நானம்பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிகையின்மேலிருந்து கண்டான்.
4. அந்த ஸ்திரீயின்மீது ஆசைப்பட்டான்.
5. அந்த ஸ்திரீ யார் என்று விசாரிக்க ஆள் அனுப்பினான் (2சாமு 11:3)
6. தாவீது அவளை அழைத்துவரச் சொன்னான் (2சாமு 11:4)
7. அவளோடே சயனித்தான்.

"அந்த ஸ்திரீ யார் என்று விசாரிக்க ஆள் அனுப்பினான்" - கிழக்குதேசத்தில் ராஜாவுக்கு ஒரு ஸ்திரீயின்மீது விருப்பம் இருக்குமென்றால், அவளைத் தன் அரண்மனைக்கு அழைத்துவர ராஜா தன் சேவகரை அனுப்புவது வழக்கம். அவளுக்கு அரண்மனையில் தங்குவதற்கு ஒரு வாசஸ்தலம் கொடுக்கப்படும். ராஜா அவளைத் தன் மனைவியாகத் தேர்ந்தெடுத்தால், அதற்குரிய அறிவிப்பை ராஜா தெரியப் படுத்துவான்.

11 அதிகாரம்

ஆனால் இந்தச் சம்பவத்தில் பத்சேபாள் ஏற்கெனவே திருமணமானவள். அவள் மாற்றானின் மனைவி. தாவீது பத்சேபாளை அழைத்து, அவளுக்கு ஏதாவது ஆசை வார்த்தைகளைக் கூறியிருந்திருப்பான். தன்னுடைய குமாரன் ராஜாவாக ஆக வேண்டும் என்பது பத்சேபாளின் விருப்பமாக இருந்திருக்க வேண்டும். ஆகையினால், தான் கர்ப்பம் தரித்திருக்கும் விஷயத்தை உடனடியாகத் தாவீதுக்கு அறிவிக்க ஆள் அனுப்பினாள். (2சாமு 11:5) சாலொமோனுக்கு ராஜ்யபாரத்தை வாங்கிக் கொடுப்பதில் தீவிரமாகச் செயல்பட்டாள். (1இராஜா 1:13,15,17,28).

பத்சேபாள் தந்திரமுள்ளவள். ஒருவேளை அவளுடைய அழகு தாவீதை மயக்கியிருக்கலாம். பத்சேபாளோடு தாவீது செய்த பாவத்திற்கு அவன் தகுந்த தண்டனையை அனுபவித்தான். அகித்தோப்பேல் பத்சேபாளின் தாத்தா. (2சாமு 11:3; 2சாமு 23:34) இவன் தாவீதுக்கு எதிராக எழும்பினான். (2சாமு 15:12,31-37; 2சாமு 16:20-23; 2சாமு 17:7-23).

"பத்சேபாள்" **(Bath-sheba)** - இந்தப் பெயருக்கு "ஓர் ஆணையின் குமாரத்தி" **"daughter of an oath"** என்று பொருள். (2சாமு 11:3; 2சாமு 12:24; 1இராஜா 1:11-31; 1இராஜா 2:13-19; சங் 51, மத் 1:6)

"எலியாம்" **(Eliam)** - இந்தப் பெயருக்கு "ஜனங்களுக்குத் தேவனுடைய ஸ்தாபகர்" **"God's founder of the people"** என்று பொருள். இவன் பத்சேபாளின் தகப்பனும், அகித்தோப்பேலின் குமாரனுமாவான். (2சாமு 11:3; 2சாமு 23:34). மறுபெயர் அம்மியேல் **Ammiel** (2சாமு 9:4).

"உரியா" **(Uriah)** - இந்தப் பெயருக்கு "யெகோவா ஒளியாயிருக்கிறார்" **"Jehovah is light"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "உரியா"க்கள்

1. பத்சேபாளின் கணவன் - ஏத்தியன் (2சாமு 11:3-26; 2சாமு 12:9-15; 2சாமு 23:39; 1இராஜா 15:5; 1நாளா 11:41). மறுபெயர் **"Urias"** (மத் 1:6). இவன் தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன்.
2. ஓர் ஆசாரியன் (ஏசா 8:2)
3. எஸ்றாவின் காலத்திலிருந்த ஓர் ஆசாரியன் (எஸ்றா 8:33)

2. தாவீது பத்சேபாளுடன் செய்த பாவம்

2சாமு 11:4 அப்பொழுது தாவீது ஆள் அனுப்பி அவளை அழைத்துவரச் சொன்னான்; அவள் அவனிடத்தில் வந்தபோது, அவளோடே சயனித்தான்; பிற்பாடு அவள் தன் தீட்டு நீங்கும்படி சுத்திகரித்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போனாள்.

"அவள் அவனிடத்தில் வந்தபோது" - பத்சேபாள் தாவீதுக்கு மறுப்பு சொன்னதாகவோ, அல்லது தாவீதின் ஆட்கள் அவளைக் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றதாகவோ குறிப்பு எதுவும் இல்லை.

தாவீது உரியாவிற்கு எதிராகச் செய்த பாவம்

1. உரியாவின் மனைவியாகிய பத்சேபாளோடு தாவீது விபசாரம் பண்ணினான். (2சாமு 11:4)
2. தன்னுடைய பாவத்தை மூடி மறைக்க முயற்சி பண்ணினான். (2சாமு 11:6-8)
3. உரியாவைக் குடித்து வெறிக்கச் செய்து, அவனை அவனுடைய மனைவியினிடத்தில் அனுப்ப முயற்சி பண்ணினான். (2சாமு 11:12-13)

11 அதிகாரம்

4. உரியாயுத்தத்தில் மரித்துப்போவதற்குக் காரணமாக இருந்தான். (2சாமு 11:14-27) தாவீதே உரியாவைப் பட்டயத்தால் மடிவித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. (2சாமு 12:9)

"பிற்பாடு அவள் தன் தீட்டு நீங்கும்படி சுத்திகரித்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போனாள்" - இது ஒருவேளை சூதகஸ்திரீயின் சுத்திகரிப்பாக இருக்கலாம். பத்சேபாள் சுத்திகரிப்பு செய்யும் சடங்குகளை ஒழுங்காகச் செய்தாள். ஆனால் தன் கணவனுக்கு உண்மையான மனைவியாக இருக்க வேண்டுமென்னும் பிரமாணத்தைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டாள். (2சாமு 11:2,4).

3. பத்சேபாள் கர்ப்பம் தரிக்கிறாள்

2சாமு 11:5 அந்த ஸ்திரீ கர்ப்பம் தரித்து, தான் கர்ப்பவதியென்று தாவீதுக்கு அறிவிக்கும்படி ஆள் அனுப்பினாள்.

"தான் கர்ப்பவதியென்று தாவீதுக்கு அறிவிக்கும்படி ஆள் அனுப்பினாள்" - பத்சேபாள் கர்ப்பவதியானாள். இந்தச் செய்தியைத் தாவீதுக்கு உடனடியாக அறிவிக்கும்படி ஆள் அனுப்பினாள். தாவீது தன் பாவத்தை மூடி மறைக்க முயற்சி பண்ணினான். யுத்தகளத்தில் இருக்கும் அவளுடைய புருஷன் உரியாவை வீட்டிற்கு வரவழைத்தான். இதனால் பத்சேபாளின் கர்ப்பத்திற்கு உரியாவே காரணமென்று ஜனங்கள் நினைப்பார்கள் என்பது தாவீதின் எண்ணம். (2சாமு 11:6-17). மேலும் இஸ்ரவேல் தேசத்தில் வேசித்தனத்திற்கும், விபசாரத்திற்கும் மரண தண்டனை கொடுக்கப்படும். பத்சேபாளுக்கும், இந்தப் பிரமாணத்தின் பிரகாரம் மரண தண்டனையே கிடைக்கும். ஆகையினால் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கு அவள் ஒருவேளை தாவீதின் உதவியை நாடியிருந்திருக்கலாம். (லேவி 20:10).

4. பத்சேபாளையும் உரியாவையும் இணைக்க தாவீது முயற்சி பண்ணுகிறான்

2சாமு 11:6 அப்பொழுது தாவீது: ஏத்தியனாகிய உரியாவை என்னிடத்தில் அனுப்பு என்று யோவாபினண்டைக்கு ஆள் அனுப்பினான்; அப்படியே யோவாப் உரியாவைத் தாவீதினிடத்திற்கு அனுப்பினான்.

2சாமு 11:7 உரியா அவனிடத்தில் வந்தபோது, தாவீது அவனைப் பார்த்து: யோவாப் சுகமாயிருக்கிறானா, ஜனங்கள் சுகமாயிருக்கிறார்களா, யுத்தத்தின் செய்தி நற்செய்தியா என்று விசாரித்தான்.

2சாமு 11:8 பின்பு தாவீது உரியாவை நோக்கி: நீ உன் வீட்டிற்குப் போய், பாதசுத்தி செய் என்றான்; உரியா ராஜஅரமனையிலிருந்துபுறப்பட்டபோது, ராஜாவினிடத்திலிருந்து உச்சிதமான பதார்த்தங்கள் அவன் பின்னாலே அனுப்பப்பட்டது.

"உரியா அவனிடத்தில் வந்தபோது" - உரியா தன் மனைவியோடு சேர்ந்திருப்பதற்காகவே தாவீது அவனை யுத்தகளத்திலிருந்து வரவழைத்திருக்கிறான். (2சாமு 11:7-13).

"நீ உன் வீட்டிற்குப் போய், பாதசுத்தி செய் என்றான்" - உரியா தன் வீட்டிற்குப்போய் பத்சேபாளோடு சேர்ந்திருக்க வேண்டும் என்பது தாவீதின் எண்ணம். இதனால் தாவீதின் பாவம் மறைக்கப்படும். பத்சேபாளும் தண்டனையிலிருந்து தப்புவிக்கப்படுவாள். அவளுக்கு அவமானம் நேரிடாது. இந்தச் சமயத்தில் உரியாவைக் கொல்ல வேண்டுமென்றோ, அல்லது பத்சேபாளைத் தனது மனைவியாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்றோ தாவீதிடம் திட்டம் இருந்ததாகத் தெரியவில்லை. உரியா ராஜ அரமனையிலிருந்து புறப்பட்டான். அவன் தன் வீட்டிற்குப் போகிறான் என்று நினைத்து தாவீது ராஜா உச்சிதமான பதார்த்தங்களை அவன் பின்னாலே அனுப்பினான். உரியாவைத் தாவீதுதான் பத்சேபாளிடம் அனுப்பியதாக அவளுக்குத் தெரிய வேண்டும் என்று இவ்வாறு வெகுமதிகளை அனுப்பினான். ஆனால் உரியாவோ தன் வீட்டிற்குப் போகாமல், ராஜ அரமனையின் வாசலிலே தன் ஆண்டவனுடைய எல்லாச் சேவகரோடுங்கூட படுத்துக் கொண்டான். (2சாமு 11:8-11).

II சாமுவேல் - தொகுப்புரை

11 அதிகாரம்

5. உரியாவின் நல்ல பண்பு

2சாமு 11:9 ஆனாலும் உரியா தன் வீட்டிற்குப் போகாமல், ராஜ அரமனையின் வாசலிலே தன் ஆண்டவனுடைய எல்லாச் சேவகரோடுங்கூட படுத்துக் கொண்டிருந்தான்.

2சாமு 11:10 உரியா தன் வீட்டிற்குப் போகவில்லையென்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாவீது உரியாவை நோக்கி: நீ பயணத்திலிருந்து வந்தவன் அல்லவா, நீ உன் வீட்டிற்குப் போகாதிருக்கிறது என்ன என்று கேட்டான்.

2சாமு 11:11 உரியா தாவீதை நோக்கி: பெட்டியும் இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்களிலே தங்கி, என் ஆண்டவனாகிய யோவாபும் என் ஆண்டவனின் சேவகரும் வெளியிலே பாளயமிறங்கியிருக்கையில், நான் புசிக்கிறதற்கும், குடிக்கிறதற்கும், என் மனைவியோடே சயனிக்கிறதற்கும், என் வீட்டிற்குள் பிரவேசிப்பேனா? நான் அப்படிச் செய்கிறதில்லை என்று உம்முடைய பேரிலும் உம்முடைய ஆத்துமாவின்பேரிலும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன் என்றான்.

"ஆனாலும் உரியா தன் வீட்டிற்குப் போகாமல்" - யுத்த களத்திலிருந்து வருகிறவர்கள் பொதுவாகத் தங்கள் வீட்டிற்குப்போக விரும்புவார்கள். தங்கள் மனைவி, பிள்ளைகளைப் பார்க்க வேண்டுமென்னும் விருப்பம் அவர்களுக்கு இருக்கும். பத்சேபாளும் சௌந்தரியவதி. ஆகையினால், உரியா உடனடியாகத் தன் வீட்டிற்குப்போவான் என்று தாவீது நினைத்தான். ஆனால் உரியா ஒரு வித்தியாசமான மனுஷனாக இருக்கிறான். அவன் பல மாதங்களாக பத்சேபாளை விட்டுப் பிரிந்து, யுத்தகளத்தில் இருந்தவன். ஆனாலும் ராஜா அவனை வீட்டிற்குப் போகுமாறு அனுப்பியபோது, அவன் தன் வீட்டிற்குப் போகாமல், ராஜ அரமனையின் வாசலிலே தன் ஆண்டவனுடைய எல்லாச் சேவகரோடுங்கூட படுத்துக்கொண்டான்.

இது தாவீது எதிர்பார்க்காத சம்பவம். தாவீது ஒரு பாவம் செய்தான். அதை மூடி மறைக்கப்பார்த்தான். ஆனாலும் முடியவில்லை. இதனால் தாவீதின் ஜீவியத்தில் பாவம் பெருகிற்று.

"நீ உன் வீட்டிற்குப் போகாதிருக்கிறது என்ன" - உரியா ஏன் வீட்டிற்குப் போகவில்லை என்பதை தாவீதால் புரிந்து கொள்ள முடியவில்லை. உரியாவிற்கு வீட்டிற்குப் போகவேண்டுமென்னும் விருப்பம் இருந்திருக்க வேண்டும். ராஜாவும் அவனை வீட்டிற்குப் போகுமாறு கட்டளையிடுகிறார். ஆனால் அவனோ ராஜா அரண்மனையின் வாசலில் படுத்துக் கொண்டிருக்கிறான். தாவீதால் தன் பாவத்தை மூடி மறைக்க முடியவில்லை. தான் ஏற்கெனவே செய்த பாவத்தைமூடி மறைப்பதற்காக இப்போது மற்றொரு பாவம் செய்கிறான். (2சாமு 11:10-13).

"பெட்டியும் இஸ்ரவேலும் யூதாவும் கூடாரங்களிலே தங்கி" - உரியா ஒரு பராக்கிரமசாலி. நல்ல கொள்கை உடையவன். தன்னுடைய சொந்த சந்தோஷத்தைவிட தேசத்தின் பாதுகாப்பே முக்கியம் என்று நினைக்கிறவன். மற்ற யுத்தவீரர்கள் எல்லோரும் யுத்தகளத்திலுள்ள கூடாரங்களில் தங்கியிருக்கிறார்கள். எந்தவேளையிலும் அவர்களுடைய ஜீவனுக்கு ஆபத்து வரலாம். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் யுத்தகளத்தில் உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான்மட்டும் குடும்ப சுகத்தை அனுபவிக்க உரியா விரும்பவில்லை. இங்கு ஒரு யுத்தவீரன் நீதியாகச் செயல்படுகிறான். ஆனால் இஸ்ரவேலின் ராஜாவோ அநீதியிழைக்கிறான்.

6. உரியாவைக் குடித்து வெறிக்கப் பண்ணுகிறான்

2சாமு 11:12 அப்பொழுது தாவீது உரியாவை நோக்கி: இன்றைக்கும் நீ இங்கேயிரு; நாளைக்கு உன்னை அனுப்பிவிடுவேன் என்றான்; அப்படியே உரியா அன்றும் மறுநாளும் எருசலேமில் இருந்தான்.

2சாமு 11:13 தாவீது அவனைத் தனக்கு முன்பாகப் புசித்துக் குடிக்கிறதற்கு அழைத்து, அவனை வெறிக்கப் பண்ணினான்; ஆனாலும் அவன் தன் வீட்டுக்குப் போகாமல், சாயங்காலத்திலே தன் ஆண்டவனின் சேவகரோடே தன் படுக்கையிலே படுத்துக்கொண்டான்.

11 அதிகாரம்

"இன்றைக்கும் நீ இங்கேயிரு" - பத்சேபாளோடு தான் செய்த பாவத்தை எப்படி மூடிமறைக்கலாம் என்பதிலேயே தாவீதின் கவனம் இருக்கிறது. தனக்கு யோசிக்கக் காலஅவகாசம் வேண்டுமென்பதற்காக உரியாவை மேலும் ஒருநாள் தன்னோடு தங்கியிருக்க வைக்கிறான். அப்போது தாவீது அவனைத் தனக்கு முன்பாகப் புசித்துக் குடிக்கிறதற்கு அழைத்து, அவனை வெறிக்கப் பண்ணினான். வெறித்திருக்கும் உரியா தன் வீட்டிலுள்ள பத்சேபாளிடத்திற்குப் போய் விடுவான் என்று தாவீது நினைத்தான். ஆனாலும் அவன் தன் வீட்டுக்குப் போகாமல், சாயங்காலத்திலே தன் ஆண்டவனின் சேவகரோடே தன் படுக்கையிலே படுத்துக் கொண்டான். தாவீதால் தன்னுடைய பாவத்தை இன்னும் மூடி மறைக்க முடியவில்லை. (2சாமு 11:12-13).

"அவனை வெறிக்கப்பண்ணினான்" - ஒரு மனுஷனைக் குடித்து வெறிக்கப்பண்ணுவதே பாவமான செயல். தன்னுடைய பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்குப் பதிலாகத் தாவீது மேலும் மேலும் பாவம் செய்து கொண்டே போகிறான்.

7. உரியாவைக் கொல்ல சூழ்ச்சி

2சாமு 11:14 காலமே தாவீது யோவாபுக்கு ஒரு நிருபத்தை எழுதி, உரியாவின் கையில் கொடுத்து அனுப்பினான்.

2சாமு 11:15 அந்த நிருபத்திலே: மும்முரமாய் நடக்கிற போர்முகத்திலே நீங்கள் உரியாவை நிறுத்தி, அவன் வெட்டுண்டு சாகும்படிக்கு, அவனை விட்டுப் பின்வாங்குங்கள் என்று எழுதியிருந்தான்.

"காலமே" - உரியா தாவீதிடம் வந்து மூன்றுநாள் ஆயிற்று. இன்னும் அவன் தன் வீட்டிற்குப்போகவில்லை. மறுபடியும் யுத்தகளத்திற்குப் போவதற்கு ஆயத்தமாக இருக்கிறான். யுத்தத்தில் ஜெயிக்க வேண்டும் அல்லது மடிந்து போகவேண்டும் என்னும் வைராக்கியத்தோடு இருக்கிறான்.

மூன்றாம் நாளில் தாவீது தன் பாவத்தை மூடி மறைக்க மற்றொரு யோசனை பண்ணுகிறான். உரியாவைக் கொன்றுபோட சதிபண்ணுகிறான். யுத்த களத்தில் யோவாப் சேனைத்தளபதியாக இருக்கிறான். தாவீது யோவாபுக்கு ஒரு நிருபத்தை எழுதி, உரியாவின் கையில் கொடுத்து அனுப்பினான். அந்த நிருபத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்ன என்பது உரியாவிற்குத் தெரியாது. தன்னுடைய மரண சாசனத்தையே உரியா யுத்தகளத்திற்கு எடுத்துச் செல்கிறான். (2சாமு 11:14-15).

தாவீது தன் மனைவியினிடத்தில் அநியாயமாகப் பாவம் செய்திருப்பான் என்னும் எண்ணம் உரியாவின் உள்ளத்தில் சிறிதும் இல்லை. ஆகையினால் அவன் ராஜா சொல்வதையெல்லாம் கேட்கிறான். உரியா செத்துப்போனால்தான் தன்னுடைய பிரச்சனை தீரும் என்று தாவீது நினைக்கிறான். மும்முரமாய் நடக்கிற போர்முகத்திலே உரியாவை நிறுத்தி, அவன் வெட்டுண்டு சாகும்படிக்கு அவனை விட்டுப் பின்வாங்க வேண்டும் என்று அந்த நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது. யுத்தத்தில் வீரர்கள் மடிந்துபோவது இயல்புதான். ஆனால் இங்கு உரியா இயல்பாக மரிக்கவில்லை. தாவீதே அவனைக் கொன்றுபோட்டான். (2சாமு 11:15; 2சாமு 12:9; 1இராஜா 15:5).

உரியா யோவாபிடம் தாவீதின் நிருபத்தைக் கொடுத்தான். தாவீதின் அநீதி யோவாபுக்குத் தெரியவருகிறது. தாவீதோடு மேலும் நெருக்கமாக இருப்பதற்கு யோவாபுக்கு இதனால் வாய்ப்பு கிடைக்கிறது. அம்மோன் புத்திரரோடு நடைபெற்ற யுத்தத்தில் இஸ்ரவேலில் அநேகர் மாண்டுபோனாலும், தாவீது இதனால் யோவாபைக் கடிந்து கொள்ளவே இல்லை. தாவீதின் அநீதி யோவாபுக்குத் தெரிகிறது. இனிமேல் அது சமஸ்த இஸ்ரவேலுக்கும் தெரியப்போகிறது. (2சாமு 11:18-24).

8. உரியாவின் மரணம்

2சாமு 11:16 அப்படியே யோவாப் அந்தப் பட்டணத்தைச் சூழக் காவல் போட்டிருக்கையில் பராக்கிரமசாலிகள் இருக்கிறார்கள் என்று தான் அறிந்த இடத்தில் உரியாவை நிறுத்தினான்

11 அதிகாரம்

2சாமு 11:17 பட்டணத்து மனுஷர் புறப்பட்டு வந்து யோவாபோடே யுத்தம் பண்ணுகையில், தாவீதின் சேவகராகிய ஜனத்தில் சிலர் பட்டார்கள்; ஏத்தியனாகிய உரியாவும் செத்தான்.

"ஏத்தியனாகிய உரியாவும் செத்தான்" - போர்முகத்தில் உரியா செத்துப்போனான். இனிமேல் தாவீதுக்கும், பத்சேபாளுக்கும் இடையில் யாருமில்லை. அவர்கள் இருவரும் விரும்பினால் தங்களுடைய பாவத்தை மறைத்துக் கொள்ளலாம். ஆனால் கர்த்தருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. (2சாமு 11:16-17).

9. யோவாப் தாவீதுக்கு செய்தி அனுப்புகிறான்

2சாமு 11:18 அப்பொழுது யோவாப் அந்த யுத்தத்தின் செய்திகளையெல்லாம் தாவீதுக்கு அறிவிக்க ஆள் அனுப்பி,

2சாமு 11:19 தான் அனுப்புகிற ஆளை நோக்கி: நீ யுத்தத்தின் செய்திகளையெல்லாம் ராஜாவுக்குச் சொல்லித் தீர்ந்தபோது,

2சாமு 11:20 ராஜாவுக்குக் கோபம் எழும்பி, அவர்: நீங்கள் பட்டணத்திற்கு இத்தனை கிட்டப்போய் யுத்தம்பண்ணவேண்டியது என்ன? அலங்கத்தில் நின்று எய்வார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா?

2சாமு 11:21 எருப்பேசேத்தின் குமாரன் அபிமெலேக்கைக் கொன்றது யார்? தேபேசிலே ஒரு பெண்பிள்ளை அலங்கத்திலிருந்து ஒரு எந்திரக்கல்லின் துண்டை அவன்மேல் போட்டதினால் அல்லவோ அவன் செத்தான்; நீங்கள் அலங்கத்திற்கு இத்தனை கிட்டப்போனது என்ன என்று உன்னோடே சொன்னால், அப்பொழுது நீ, உம்முடைய சேவகனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான் என்று சொல் என்றான்.

"நீ யுத்தத்தின் செய்திகளையெல்லாம் ராஜாவுக்குச் சொல்லித் தீர்ந்தபோது" - பட்டணத்து மனுஷர் புறப்பட்டு வந்து யோவாபோடே யுத்தம் பண்ணுகையில், தாவீதின் சேவகராகிய ஜனத்தில் சிலர் பட்டார்கள். இந்தச் செய்தியைத் தாவீதிடம் அறிவித்தால் அவனுக்குக் கோபம் வரும் என்று யோவாபுக்குத் தெரியும். ஆகையினால் உரியாவின் மரணச் செய்தியை உடனடியாக அறிவியாமல் தாவீதின் சேவகராகிய ஜனங்கள் மடிந்துபோனதை முதலாவது கூறிவிட்டு, அதன் பின்பு, உரியாவும் மரித்துப்போனதை யோவாப் சொல்லி அனுப்புகிறான். (2சாமு 11:19-24).

"எருப்பேசேத்" (Jerubbesheth) - இந்தப் பெயருக்கு "குழப்பம் வழக்காடட்டும்" **"let confusion defend itself"** என்று பொருள். இது கிதியோனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் புதிய பெயர். கிதியோனின் விக்கிரகாராதனையின் நிமித்தமாக பரிசுத்த ஆவியானவர் அவனுடைய பெயரை இவ்வாறு மாற்றியிருக்கலாம். (நியா 8:27-35).

"தேபேசிலே ஒரு பெண்பிள்ளை" - (நியா 9:1,52-57)

10. உரியாவின் மரணச் செய்தியும் தாவீதின் கடின இருதயமும் - (வசனம் 20-21)

2சாமு 11:22 அந்த ஆள் போய், உட்பிரவேசித்து, யோவாப் தன்னிடத்தில் சொல்லியனுப்பின செய்திகளையெல்லாம் தாவீதுக்கு அறிவித்து,

2சாமு 11:23 தாவீதைப் பார்த்து: அந்த மனுஷர் கைமிஞ்சி, அவர்கள் வெளியே எங்களுக்கு எதிராகப் புறப்பட்டு வந்தபோது, நாங்கள் பட்டணவாசல் மட்டும் அவர்களைத் துரத்தினோம்.

2சாமு 11:24 அப்பொழுது வில்வீரர் அலங்கத்திலிருந்து உம்முடைய சேவகரின் மேல் எய்ததினால், ராஜாவின் சேவகரில் சிலர் செத்தார்கள்; உம்முடைய சேவகனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான் என்றான்.

11 அதிகாரம்

2சாமு 11:25 அப்பொழுது தாவீது அந்த ஆளை நோக்கி: நீ யோவாபினிடத்தில் போய், இந்தக் காரியத்தைப்பற்றி விசாரப்பட வேண்டாம்; பட்டயம் ஒருவேளை ஒருவனையும், ஒருவேளை வேறொருவனையும் பட்சிக்கும்; நீ யுத்தத்தைப் பலக்கப்பண்ணி, பட்டணத்தை இடித்துப்போடு என்று அவனுக்குத் திடஞ்சொல் என்றான்.

"உம்முடைய சேவகனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான்" - தாவீதின் சேவகர் பலர் மரித்துப்போன செய்தியைக் கேட்டபோது அவனுக்குக் கோபம் வந்திருக்கும். ஆனால் உரியா செத்துப்போனான் என்னும் செய்தியைக் கேட்டபோது, தாவீதின் கோபம் தணிந்து போகும். தாவீது தேவனுடைய மனுஷன். ஆனாலும் மாம்ச இச்சைக்கு அவன் இடம் கொடுத்து, பத்சேபாளோடு பாவம் செய்து, அவளுடைய புருஷனாகிய உரியாவையும் கொன்றுபோடுகிறான். உரியா உயிரோடு இருந்தால், தன் பாவம் வெளியரங்கமாகி விடும் என்று தாவீது பயந்தான். உரியாவின் மரணத்தினால் தாவீதின் பயம் அற்றுப்போயிற்று. இனிமேல் ஒரு பிரச்சனையும் இல்லை என்று தாவீது நினைத்தான். ஆனால் அதற்குப் பின்புதான், பெரிய பிரச்சனைகள் ஆரம்பமாயிற்று. தான் செய்த பாவத்திற்காகத் தாவீது கர்த்தரோடு ஒப்புரவாகவில்லை. தம்முடைய ஊழியக்காரரிடத்தில் நீதியை எதிர்பார்க்கும் நியாயாதிபதியாகிய கர்த்தர் தாவீதை நியாயம் விசாரிக்கிறார். (2சாமு 12:1-25; 2சாமு 15:1-18:33).

"இந்தக் காரியத்தைப்பற்றி விசாரப்பட வேண்டாம்" - உரியா மரித்துப்போனதினால் தாவீதின் மனச்சாட்சியும் மரித்துப்போயிற்று. தன்னுடைய பாவத்திற்கு ஏற்ற தண்டனையைத் தாவீது அனுபவிக்கப்போகிறான்.

11. தாவீது பத்சேபாளை மனைவியாகச் சேர்த்துக் கொள்கிறான்

2சாமு 11:26 தன் புருஷனாகிய உரியா செத்தான் என்று அவன் மனைவி கேள்விப்பட்டபோது, அவள் தன் நாயகனுக்காக இழவு கொண்டாடினாள்.

2சாமு 11:27 துக்கநாள் சென்றபின்பு, தாவீது அவளை அழைத்தனுப்பி, தன் வீட்டிலே சேர்த்துக்கொண்டான்; அவள் அவனுக்கு மனைவியாகி, அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். தாவீது செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது.

"அவள் தன் நாயகனுக்காக இழவு கொண்டாடினாள்" - பத்சேபாள் உரியாவுக்காக இழவு கொண்டாடினாலும், அவனுடைய மரணத்திற்குக் காரணமாக இருந்த தாவீதோடு சேர்ந்து வாழ்வதற்கு அவள் உறவு கொண்டாடுகிறாள். (2சாமு 11: 26-27).

"துக்கநாள் சென்றபின்பு" - இஸ்ரவேல் புத்திரர் ஏழு நாட்களுக்கு துக்கம் அனுசரிப்பது வழக்கம். பத்சேபாள் கர்ப்பமாக இருக்கிறாள். அது மற்றவர்களுக்கு தெரிந்து விடக்கூடாது என்பதற்காகத் தாவீது உடனடியாக அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்டான்.

"தாவீது செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது" - எல்லாப் பாவமும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருக்கும். ஏற்ற வேளையில் கர்த்தர் மனுஷருடைய பாவங்களை நியாயம் விசாரிப்பார். (மத் 16:27; அப் 17:31; ரோமர் 2:12-16; ரோமர் 14:10; 2கொரி 5:10).

12 அதிகாரம்

12. தாவீது தன்பாவத்துக்காக மனம் வருந்துகிறான்

(1) நாத்தானின் உவமை

2சாமு 12:1 கர்த்தர் நாத்தானைத் தாவீதினிடத்தில் அனுப்பினார்; இவன் அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள், ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன்.

2சாமு 12:2 ஐசுவரியவானுக்கு ஆடுமாடுகள் வெகு திரளாயிருந்தது.

2சாமு 12:3 தரித்திரனுக்கோ தான் கொண்டு வளர்த்த ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது; அது அவனோடும் அவன் பிள்ளைகளோடுங்கூட இருந்து வளர்ந்து, அவன் வாயின் அப்பத்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே குடித்து, அவன் மடியிலே படுத்துக்கொண்டு, அவனுக்கு ஒரு மகளைப்போல இருந்தது.

2சாமு 12:4 அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான்; அவன் தன்னிடத்தில் வந்த வழிப்போக்கனுக்குச் சமையல் பண்ணுவிக்க, தன்னுடைய ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல், அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதைத் தன்னிடத்தில் வந்த மனுஷருக்குச் சமையல் பண்ணுவித்தான் என்றான்.

(2) தாவீதின் கோபம்

2சாமு 12:5 அப்பொழுது தாவீது: அந்த மனுஷன்மேல் மிகவும் கோபமூண்டவனாகி, நாத்தானைப் பார்த்து: இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்திற்குப் பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்.

2சாமு 12:6 அவன் இரக்கமற்றவனாயிருந்து, இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பச் செலுத்தவேண்டும் என்றான்.

"அந்த மனுஷன்மேல் மிகவும் கோபமூண்டவனாகி" - நாத்தான் தாவீதைப் பார்த்து, ஒரு கதையைக் கூறுகிறான். இந்தக் கதையில் அநீதி செய்யும் ஐசுவரியவான்மீது தாவீதுக்கு மிகவும் கோபம் வருகிறது. தாவீது நீதியான மனுஷன். நீதி செய்கிறவன். ஆகையினால் நாத்தான் கூறிய கதையில் அநீதி செய்தவனைக்குறித்து, "இந்தக் காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்திற்குப் பாத்திரன்" என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொன்னான். தனது தீர்ப்பை உடனடியாக அறிவிக்கிறான். இந்தத் தீர்ப்பு மோசேயின் பிரமாணத்தில் களவு செய்கிறவனுக்குக் கொடுக்கப்படும் தீர்ப்புக்கு முரணானதாகும். (யாத் 22:1) தாவீது இந்தத் தீர்ப்போடு சேர்த்து, "அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பச் செலுத்தவேண்டும்" என்று கூறுவது நியாயப்பிரமாணத்திற்கு ஒத்துப்போகிறது. (2சாமு 12:6). நாத்தான் தாவீதைப் பற்றித்தான் பேசுகிறான் என்பது தாவீதுக்கே இன்னும் தெரியவில்லை. வேறு யாருக்கோ தீர்ப்பு சொல்வதுபோல தாவீது அவசரப்பட்டு, தனக்கே தீர்ப்புக் கூறிக்கொண்டிருக்கிறான்.

"அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பச் செலுத்தவேண்டும்" - தாவீதின் பாவத்தினால் ஏற்பட்ட விளைவு மிகவும் பரிதாபமாக இருக்கிறது. உரியா போர்முகத்தில் கொல்லப்பட்டான். அந்த ஆட்டுக்குட்டியை இனிமேல் திரும்ப உயிரோடு கொண்டுவர முடியாது.

12 அதிகாரம்

(3) நீயே அந்த மனுஷன்

2சாமு 12:7 அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி: நீயே அந்த மனுஷன்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி, உன்னைச் சவுலின் கைக்குத் தப்புவித்து,

2சாமு 12:8 உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து, உன் ஆண்டவனுடைய ஸ்தீரிகளையும் உன் மடியிலே தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்; இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன்.

2சாமு 12:9 கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய, வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்று போட்டாய்.

"நீயே அந்த மனுஷன்" - தீர்க்கதரிசி கர்த்தர் வெளிப்படுத்தும் செய்தியை உண்மையோடும், பக்தியோடும், பயமில்லாமலும் பேசவேண்டும். யாரிடத்தில் சொல்லவேண்டுமோ அவரிடத்தில் நேரடியாகச் சொல்ல வேண்டும். இதனால் பல சமயங்களில் தீர்க்கதரிசிகளுக்கு பல உபத்திரவங்கள் உண்டாயிற்று. நாத்தான் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, தாவீதை நோக்கி, "நீயே அந்த மனுஷன்" என்று தைரியமாகக் கூறுகிறான்.

கர்த்தர் தாவீதிற்குச் செய்திருக்கும் காரியங்கள் (2சாமு 12:7-8)

1. நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினேன்.
2. உன்னைச் சவுலின் கைக்குத் தப்புவித்தேன்.
3. உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்தேன்.
4. உன் ஆண்டவனுடைய ஸ்தீரிகளையும் உன் மடியிலே தந்தேன்.
5. இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்.

தாவீதிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்

1. கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய, வார்த்தையை நீ அசட்டை பண்ணினாய்.
2. ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்தாய்.
3. அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டாய்.

(4) தாவீதின் மீது சாபம்

2சாமு 12:10 இப்போதும் நீ என்னை அசட்டை பண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்ட படியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்.

2சாமு 12:11 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான்.

II சாமுவேல் - தொகுப்புரை

12 அதிகாரம்

2சாமு 12:12 நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான்.

2சாமு 12:13 அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில்: நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன் என்றான். நாத்தான் தாவீதை நோக்கி: நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார்.

2சாமு 12:14 ஆனாலும் இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும் என்று சொல்லி, நாத்தான் தன் வீட்டுக்குப் போய்விட்டான்.

தீர்க்கதரிசன எண் - 4

"பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்......" (2சாமு 12:10-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நாத்தான் தாவீதிடம் முன்னறிவித்த காரியங்கள்

1. பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும். (2சாமு 12:10)
2. நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணுவேன். (2சாமு 12:11; 2சாமு 15:1-18:33)
3. உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன் (2சாமு 12:11; 2சாமு 15:16)
4. அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான். (2சாமு 12:11; 2சாமு 16:21-23)
5. நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் (2சாமு 12:12; 2சாமு 16:21-23)
6. நீ சாகாதபடிக்கு, கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார். (2சாமு 12:13)
7. இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தாய். (2சாமு 12:14)
8. உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும் (2சாமு 12:14)

தான் செய்த பாவத்திற்குத் தாவீது அனுபவித்த தண்டனைகள்

1. தாவீதின் காலம் முழுவதும் யுத்தங்கள் நடைபெற்றது. (2சாமு 12:10; 2சாமு 15:1-18:33; 2சாமு 20:13-26; 2சாமு 21:15-22)
2. தாவீதின் குடும்பத்திற்குள் அவனுக்கு எதிராகக் கலகம் உண்டாயிற்று. (2சாமு 12:11-12; 2சாமு 15:1-18:33)
3. தாவீதின் குமாரனே அவனுடைய மறுமனையாட்டிகளிடத்தில் விபசாரம் பண்ணினான். (2சாமு 12:11-12; 2சாமு 16:20-23)
4. இஸ்ரவேல் எல்லோருக்கும் பாவங்கள் வெளியரங்கமாயிற்று. (2சாமு 12:12; 2சாமு 15:1-18:33)
5. கர்த்தருடைய சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரைத் தூஷித்தார்கள். (2சாமு 12:14)
6. பத்சேபாளுக்குப் பிறந்த பிள்ளை மரித்துப் போயிற்று. (2சாமு 12:14)
7. பல நாட்களாக உபவாசித்தும், ஜெபித்தும் கர்த்தரிடத்திலிருந்து பதில் வரவில்லை. (2சாமு 12:16-18)
8. தாவீதின் சொந்த குமாரனே அவனுடைய மகளைக் கற்பழித்துவிட்டான். (2சாமு 13:1-22)

12 அதிகாரம்

9. தாவீதின் ஒரு மகன் மற்றொரு மகனைக் கொலைசெய்து போட்டான். (2சாமு 13:23-36)

10. மற்றொரு மகன் தாவீதைவிட்டு ஓடிப்போனான். (2சாமு 13:37-39)

11. தாவீதிற்கும் ஓடிப்போன மகனுக்கும் விரோதம் உண்டாயிற்று. (2சாமு 14:1-33)

12. தாவீதின் சொந்த ஜனங்களே அவனை ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். (2சாமு 15:1-12)

13. தாவீதின் சொந்த நண்பர்கள் அவனுக்குத் துரோகம் பண்ணினார்கள். (2சாமு 15:12-13)

14. தாவீது தன் சொந்ததேசத்தையும், ராஜாங்கத்தையும் விட்டு ஓடிப்போனான். (2சாமு 15:13-18:33)

15. சாதாரண வேலைக்காரன் ஒருவன் தாவீதைச் சபித்தான்.(2சாமு 16:5-14)

16. மற்றொரு குமாரனும் இஸ்ரவேல் புத்திரரில் அநேகரும் மரித்துப் போனார்கள். (2சாமு 18:7-18)

17. இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு இடையில் சண்டை சச்சரவுகள் உண்டாயிற்று.(2சாமு19:41-20:3,13-26)

18. தாவீது தன் பத்து மறுமனையாட்டிகளை இழந்தான். (2சாமு 20:3)

19. தாவீதின் மற்றொரு குமாரன் அவனுக்கு விரோதமாக எழும்பினான். (1இராஜா 1:5-9)

20. இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் மரித்துப் போனார்கள். (1இராஜா 1 1:10-2இராஜா 2:46)

பாவத்தை உணர்த்தும் உபாயங்கள்

1. உவமை (2சாமு 12:1-14)
2. கர்த்தருடைய மகத்துவம் (யோபு 42:1-6)
3. கர்த்தருடைய மகிமை (ஏசா 6:5)
4. கர்த்தருடைய வார்த்தை (ஏசா 55:11; ரோமர் 1:16)
5. கர்த்தருடைய வல்லமை (லூக்கா 5:8)
6. மனுஷருடைய உபத்திரவங்கள் (லூக்கா 15:14,18)
7. பரிசுத்த ஆவியானவர் (யோவான் 16:7-11)

தாவீதின் குமாரரில் மரித்துப்போனவர்கள்

1. பத்சேபாளின்குமாரன்(2சாமு 12:15-23)
2. அம்னோன் - அப்சலோம் இவனைக் கொன்றுபோட்டான். (2சாமு 13:23-39)
3. அப்சலோம் - யோவாப் இவனைக் கொன்றுபோட்டான். (2சாமு 18:9-18)
4. அதோனியா - சாலொமோன் இவனைக் கொன்றுபோட்டான். (1இராஜா 2:13-25)

VI. தாவீதின் பாவத்திற்குத் தண்டனைகள் - (2சாமு 12:15-19:8)

1. தாவீதின் பிள்ளை செத்துப் போயிற்று

2சாமு 12:15 அப்பொழுது கர்த்தர் உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண்பிள்ளையை அடித்தார்; அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருந்தது.

2சாமு 12:16 அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காக தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணி, உபவாசித்து, உள்ளேபோய், இராமுழுவதும் தரையிலே கிடந்தான்.

12 அதிகாரம்

2சாமு 12:17 அவனைத் தரையிலிருந்து எழுந்திருக்கப்பண்ண, அவன் வீட்டிலுள்ள மூப்பரானவர்கள் எழுந்து, அவனண்டையில் வந்தாலும், அவன் மாட்டேன் என்று சொல்லி, அவர்களோடே அப்பம் சாப்பிடாமல் இருந்தான்.

2சாமு 12:18 ஏழாம்நாளில், பிள்ளை செத்துப்போயிற்று. பிள்ளை செத்துப் போயிற்று என்று தாவீதின் ஊழியக்காரர் அவனுக்கு அறிவிக்க ஐயப்பட்டார்கள்: பிள்ளை உயிரோடிருக்கையில், நாம் அவரோடே பேசுகிறபோது, அவர் நம்முடைய சொற்கேட்கவில்லை; பிள்ளை செத்துப்போயிற்று என்று அவரோடே எப்படிச் சொல்லுவோம்? அதிகமாக வியாகுலப்படுவாரே என்று பேசிக்கொண்டார்கள்.

2சாமு 12:19 தாவீது தன் ஊழியக்காரர் இரகசியமாய்ப் பேசிக்கொள்ளுகிறதைக் கண்டு, பிள்ளை செத்துப்போயிற்று என்று அறிந்து, தன் ஊழியக்காரரை நோக்கி: பிள்ளை செத்துப்போயிற்றோ என்று கேட்டான்; செத்துப்போயிற்று என்றார்கள்.

"அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருந்தது" - பத்சேபாள் ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றெடுத்தாள். ஆனால் அந்த பிள்ளை ஆரோக்கியமாக இல்லை. அந்தக் குழந்தைக்கு வியாதி வர கர்த்தர் அனுமதித்தார். அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருந்தது. தாவீது அந்தக் குழந்தை குணமாக வேண்டுமென்று ஏழுநாள் உபவாசம்பண்ணி ஜெபித்தான். அவனுடைய பிரார்த்தனைக்குக் கர்த்தர் பதில் கொடுக்கவில்லை. அவனுடைய ஆண்பிள்ளை மரித்துப்போயிற்று. (2சாமு 12:16-17).

"பிள்ளை செத்துப்போயிற்று என்று தாவீதின் ஊழியக்காரர் அவனுக்கு அறிவிக்க ஐயப்பட்டார்கள்" - பிள்ளை வியாதியாக இருக்கும்போதே தாவீது தேவனிடத்தில் அந்தப் பிள்ளைக்காக பிரார்த்தனை பண்ணி, உபவாசித்து, தரையிலே விழுந்து கிடந்தான். பிள்ளை செத்துப்போயிற்று என்று சொன்னால், தாவீதுக்கு என்ன ஆகுமோ என்று அவனுடைய ஊழியக்காரர்கள் நினைத்தார்கள். ஆனால் தாவீதோ பிள்ளை செத்துப்போயிற்று என்று கேட்டபோது, தரையை விட்டு எழுந்து, ஸ்நானம்பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்துகொண்டு, தன் வீட்டுக்கு வந்து, போஜனம் பண்ணினான். மேலும் "இனி நான் அதைத் திரும்பிவரப் பண்ணக் கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை" என்று மரணத்திற்கு ஒரு வியாக்கியானமும் கூறினான். (2சாமு 12: 18-23).

2. தேவன்மீதுள்ள விசுவாசத்தைத் தாவீது புதுப்பிக்கிறான்

2சாமு 12:20 அப்பொழுது தாவீது தரையை விட்டு எழுந்து, ஸ்நானம் பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்து கொண்டு, தன் வீட்டுக்கு வந்து, போஜனம் கேட்டான்; அவன் முன்னே அதை வைத்தபோது புசித்தான்.

2சாமு 12:21 அப்பொழுது அவன் ஊழியக்காரர் அவனை நோக்கி: நீர் செய்கிற இந்தக் காரியம் என்ன? பிள்ளை உயிரோடிருக்கையில் உபவாசித்து அழுதீர்; பிள்ளை மரித்த பின்பு, எழுந்திருந்து அசனம் பண்ணுகிறீரே என்றார்கள்.

2சாமு 12:22 அதற்கு அவன்: பிள்ளை இன்னும் உயிரோடிருக்கையில், பிள்ளை பிழைக்கும்படிக்குக் கர்த்தர் எனக்கு இரங்குவாரோ, எப்படியோ, யாருக்குத் தெரியும் என்று உபவாசித்து அழுதேன்.

12 அதிகாரம்

2சாமு 12:23 அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்கவேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பிவரப் பண்ணக் கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை என்றான்.

தன் குமாரன் மரித்தபின்பு, தாவீது செய்த காரியங்கள்

1. படுத்திருந்த தரையை விட்டு எழுந்தான். *(2சாமு 12:20)*
2. ஸ்நானம் பண்ணினான்.
3. எண்ணெய்பூசிக்கொண்டான்.
4. தன் வஸ்திரங்களை மாற்றினான்.
5. கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்தான்.
6. கர்த்தரைப் பணிந்துகொண்டான்.
7. தன் வீட்டுக்கு திரும்பி வந்தான்.
8. போஜனம் பண்ணினான்.
9. தன்ஊழியக்காரரோடு பேசினான். *(2சாமு 12:21-23)*
10. தாவீது தன் மனைவியாகிய பத்சேபாளுக்கு ஆறுதல் சொல்லி, அவளிடத்தில் போய், அவளோடே சயனித்தான். *(2சாமு 12:24)*
11. அடுத்து பிறந்த குமாரனுக்குச் சாலொமோன் என்று பெயரிட்டான்.

"நீர் செய்கிற இந்தக் காரியம் என்ன?" - பிள்ளை உயிரோடிருக்கையில் உபவாசித்து அழுதான். பிள்ளை மரித்த பின்பு, எழுந்திருந்து அசனம்பண்ணினான். இது தாவீதின் ஊழியக்காரருக்கு ஆச்சரியமாக இருந்தது. பொதுவாக மரித்தவர்களுக்காகத் துக்கம் கொண்டாடுவது வழக்கம். மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு மரித்தோரின் உறவினர் துக்கம் அனுசரிப்பார்கள். அவர்களுடைய உற்றார், உறவினர் எல்லோரும் வந்து அவர்களுக்கு ஆறுதல் கூறுவார்கள். அவர்களைப் போஜனம் பண்ணுமாறும், நல்ல வஸ்திரங்களை அணியுமாறும் கேட்டுக் கொள்வார்கள். ஆனால் தாவீதோ இங்கு பழக்கத்திற்கு நேர்மாறாகச் செயல்படுகிறான். ஆகையினால் தாவீதின் ஊழியக்காரர் அவனைப் பார்த்து "நீர் செய்கிற இந்தக் காரியம் என்ன?" என்று கேட்டார்கள்.

"நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை" - நாம் மரிக்கும் பொழுது நமது ஆவி சரீரத்தை விட்டுப் பிரிந்து போகிறது. நமது ஆத்துமா நித்தியமானது. அது ஒருபோதும் மரித்துப்போவதில்லை. மரித்துப் போன நமது சரீரமும், உயிர்த்தெழும் நாளிலே மறுரூபமடைந்து, அதன் ஆத்துமாவோடு சேர்ந்து கொள்ளும். இதைத் தாவீது அறிந்து வைத்து, இவ்வாறு கூறுகிறான். மரித்துப் போனவர் மறுபடியும் இந்தப் பூமிக்குத் திரும்பி வருவதில்லை. சவுல் அஞ்சனம் பார்க்கும் ஸ்திரீயிடம் மரித்துப்போன சாமுவேலை வரச்சொன்னான். சாமுவேல் மறுபடியும் வரவில்லை. சாமுவேலைப்போல வேஷம் தரித்த, பிசாசின் ஆவி சாமுவேலின் சார்பாகப் பேசிற்று. *(1சாமு 28; 1நாளா 10:13-14).*

3. சாலொமோனின் பிறப்பு - *(மத் 1:6)*

2சாமு 12:24 பின்பு தாவீது தன் மனைவியாகிய பத்சேபாளுக்கு ஆறுதல் சொல்லி, அவளிடத்தில் போய், அவளோடே சயனித்தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்குச் சாலொமோன் என்று பேரிட்டான்; அவனிடத்தில் கர்த்தர் அன்பாயிருந்தார்.

2சாமு 12:25 அவர் தீர்க்கதரிசியாகிய நாத்தானை அனுப்ப, அவன் கர்த்தரின் நிமித்தம் அவனுக்கு, யெதிதியா என்று பேரிட்டான்.

12 அதிகாரம்

"சாலொமோன்" **(Solomon)** - இந்தப் பெயருக்கு "சமாதானம்" **"peace or peaceable"** என்று பொருள். சாலொமோனின் வரலாறு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. *(2சாமு 5:14; 2சாமு 12:24; 1இராஜா 1:1-12:23; 2இராஜா 21:7; 2இராஜா 23:13; 2இராஜா 24:13; 2இராஜா 25:16; 1நாளா. 3:5; 1நாளா 6:10,32; 1நாளா 14:4; 1நாளா 22:5-17; 1நாளா 23:1; 1நாளா 28:5-20; 1நாளா 29:1-28; 1நாளா 1:1-12:9)* சாலொமோன் பல நீதிமொழிகளை எழுதினான். *(நீதி 1:1; நீதி 10:1; நீதி 25:1).*

"யெதிதியா" **(Jedidiah)** - இந்தப் பெயருக்கு "யெகோவாவினால் நேசிக்கப்படுகிறவன்" **"beloved of Jehovah"** என்று பொருள். இது சாலொமோனுக்குக் கொடுக்கப்பட்ட புதிய பெயர். ஆனால் இது இந்த வசனத்தில் மட்டுமே காணப்படுகிறது.

4. அம்மோனியரோடு யுத்தம் -
(2சாமு 10:1-11:1; 1நாளா 20:1-5)

2சாமு 12:26 அதற்குள்ளே யோவாப் அம்மோன் புத்திரருடைய ரப்பா பட்டணத்தின் மேல் யுத்தம்பண்ணி, ராஜதானியைப்பிடித்து,

2சாமு 12:27 தாவீதினிடத்தில் ஆள் அனுப்பி, நான் ரப்பாவின்மேல் யுத்தம் பண்ணி, தண்ணீர் ஓரமான பட்டணத்தைப் பிடித்துக்கொண்டேன்.

2சாமு 12:28 நான் பட்டணத்தைப் பிடிக்கிறதினால், என் பேர் வழங்காத படிக்கு, நீர் மற்ற ஜனங்களைக் கூட்டிக் கொண்டுவந்து, பட்டணத்தை முற்றிக்கை போட்டு, பிடிக்கவேண்டும் என்று சொல்லச்சொன்னான்.

2சாமு 12:29 அப்படியே தாவீது ஜனங்களையெல்லாம் கூட்டிக்கொண்டு, ரப்பாவுக்குப் போய், அதின்மேல் யுத்தம்பண்ணி, அதைப்பிடித்தான்.

2சாமு 12:30 அவர்களுடைய ராஜாவின் தலைமேலிருந்த கிரீடத்தை எடுத்துக் கொண்டான்; அது ஒரு தாலந்து நிறைபொன்னும்; இரத்தினங்கள் பதித்ததுமாயிருந்தது; அது தாவீதினுடைய தலையில் வைக்கப்பட்டது; பட்டணத்திலிருந்து ஏராளமான கொள்ளையைக் கொண்டுபோனான்.

2சாமு 12:31 பின்பு அதிலிருந்த ஜனங்களை அவன் வெளியே கொண்டு போய், அவர்களை வாள்களுக்கும், இருப்புப் பாரைகளுக்கும், இருப்புக் கோடரிகளுக்கும், உட்படுத்தி, அவர்களைச் செங்கற்சூளையையும் கடக்கப்பண்ணினான்; இப்படி அம்மோன் புத்திரரின் பட்டணங்களுக்கெல்லாம் செய்து, தாவீது எல்லா ஜனத்தோடுங் கூட எருசலேமுக்குத் திரும்பினான்.

"தண்ணீர் ஓரமான பட்டணம்" **(city of waters)** - இதற்குத் தண்ணீர் நிரம்பியுள்ள பட்டணம் என்று பொருள். இந்தப் பட்டணத்தைப் பிடித்துக் கொண்டால் ரப்பாவிற்குத் தண்ணீர் வராது. தாவீது இங்கு வந்து இந்தப் பட்டணத்தைப் பிடித்தான். *(2சாமு 12:27-29).*

"அவர்களை வாள்களுக்கும், இருப்புப் பாரைகளுக்கும், இருப்புக் கோடரிகளுக்கும், உட்படுத்தி" - ரப்பாவின் ஜனங்களைத் தாவீது அடிமைகளாக்கினான். இந்த வேலைகளையெல்லாம் செய்வதற்கு அவர்களை உட்படுத்தினான். *(1நாளா 20:3)* தாவீது அவர்களை வாள்களால் அறுத்துப்போடவில்லை. இது தேவனுடைய திட்டமல்ல. ஜனங்களை உயிரோடு எரிப்பது, இருப்புக்கோடரிகளால் கொன்றுபோடுவது ஆகியவை புறஜாதியாரின் கிரியைகள்.

II சாமுவேல் - தொகுப்புரை

12 அதிகாரம்

"அவர்களைச் செங்கற்சூளையையும் கடக்கப் பண்ணினான்" - ரப்பாவின் ஜனங்களைச் செங்கற்சூளைகளில் வேலை வாங்கி, அவர்களைச் செங்கல் அறுக்க வைத்தான். ரப்பாவின் ஜனங்கள் எந்தெந்த வேலைகளைத் திறமையாகச் செய்வார்களோ அந்தெந்த வேலைகளையெல்லாம் அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தான். (எரே 43:9-11). பாலஸ்தீன தேசத்தில் செங்கற்சூளைகள் இருந்ததில்லை என்று ஒருசிலர் கூறுகிறார்கள். ஆனால் நிம்ரோத்தின் காலத்திலேயே செங்கல்கள் சுடப்பட்டதற்கான குறிப்புக்கள் இருந்தன. (ஆதி 11:3).

"தாவீது எல்லா ஜனத்தோடுங்கூட எருசலேமுக்குத் திரும்பினான்" - தாவீதுக்கு ஏராளமான அமஞ்சியாட்கள் யுத்தத்தின் மூலமாகக் கிடைத்திருக்கிறார்கள். (1நாளா 22:2,15) நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் அடிமைகளைத் தங்களுடைய வேலைகளைச் செய்வதற்கு உட்படுத்தலாம். (உபா 29:11; யோசு 9:27). இதன் பின்பு, தேவாலயத்தைக் கட்டுவதற்கு இஸ்ரவேல் தேசத்தாரையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். (1இராஜா 5:13; 1இராஜா 9:15-22).

13 அதிகாரம்

5. தாவீதின் குடும்பப் பிரச்சனைகள் - (2சாமு 13:1-14:33)

(1) அம்னோன் தாமார்மீது மோகங்கொள்கிறான்

2சாமு 13:1 இதற்குப்பின்பு தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்குத் தாமார் என்னும் பேருள்ள சவுந்தரியமுள்ள ஒரு சகோதரி இருந்தாள்; அவள்மேல் தாவீதின் குமாரன் அம்னோன் மோகங் கொண்டான்.

2சாமு 13:2 தன் சகோதரியாகிய தாமாரினிமித்தம் ஏக்கங் கொண்டு வியாதிப்பட்டான்; அவள் கன்னியாஸ்திரீயாயிருந்தாள்; அவளுக்குப் பொல்லாப்புச் செய்ய, அம்னோனுக்கு வருத்தமாய்க் கண்டது.

2சாமு 13:3 அம்னோனுக்குத் தாவீதுடைய தமையன் சிமியாவின் குமாரனாகிய யோனதாப் என்னும் பேருள்ள ஒரு சிநேகிதன் இருந்தான்; அந்த யோனதாப் மகா தந்திரவாதி.

2சாமு 13:4 அவன் இவனைப் பார்த்து: ராஜகுமாரனாகிய நீ, நாளுக்குநாள் எதினாலே இப்படி மெலிந்துபோகிறாய், எனக்குச் சொல்லமாட்டாயா என்றான். அதற்கு அம்னோன்: என் சகோதரன் அப்சலோமின் சகோதரியாகிய தாமாரின்மேல் நான் ஆசை வைத்திருக்கிறேன் என்றான்.

"இதற்குப்பின்பு" - இந்த நிகழ்ச்சி சாலொமோன் பிறந்த பின்பும், 2சாமு 12:24-31 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் அம்மோனியரின் யுத்தம் முடிவு பெற்ற பின்பும் நடந்த சம்பவமாகும். இப்போது தாவீதுக்குச் சுமார் 53 வயதும், அம்னோனுக்கு 22 வயதும், அப்சலோமுக்கு 20 வயதும், தாமாருக்கு 15 வயதும், சாலொமோனுக்கு 2 வயதுமாக இருக்க வேண்டும்.

"அப்சலோம்" **(Absalom)** - இந்தப் பெயருக்கு "சமாதானத்தின் தகப்பன்" **"father of peace"** என்று பொருள். இவன் தாவீதின் மூன்றாவது குமாரன். மாகாளுக்குப் பிறந்தவன். இவள் கேசூரின் ராஜஸ்திரீ. அப்சலோம் சவுந்தரியவானாகவும், சாதுரியமாகப் பேசக்கூடியவனுமாக இருக்கிறான். ஆனால் கள்ளம் கபடமுள்ளவன். தெய்வ பயமற்றவன். ஏமாற்றுக்காரன். கொலைகாரன். இவன் தன் சகோதரனைக் கொன்றுபோட்டான். தகப்பனை ஏமாற்றினான். தேசத்தை ராஜ்யபாரம் பண்ணுவதற்கு இவனுக்கு எந்தத் தகுதியும் இல்லை. ஆனாலும் ராஜாவாக வேண்டுமென்று விரும்பினான். முடிவில் ஒன்றுமில்லாமல் மரித்துப்போனான். வேதாகமத்தில் இவனைப் பற்றிய வரலாறு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் உள்ளது. (2சாமு 3:3; 2சாமு 13:1-19:10; இராஜா 6; 1இராஜா 2:7,28; 1நாளா 3:2; நாளா11:20-21) தாவீது அப்சலோமிடமிருந்து தப்பித்து ஓடினபோது, 3ஆவது சங்கீதத்தை இயற்றினார்.

"தாமார்" **(Tamar)** - இந்தப் பெயருக்கு "பனைமரம்" **"palm tree"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "தாமார்"கள்

1. யூதாவின் மருமகள் (ஆதி 38:6-30; ரூத் 4:12; 1நாளா 2:4). மறுபெயர் **"Thamar"** (மத் 1:3)
2. அப்சலோமின் சகோதரி (2சாமு13:1-32; 1நாளா 3:9)
3. அப்சலோமின்குமாரத்தி (2சாமு 14:27)

தாமார் என்னும் பெயரில் சவக்கடலுக்குத் தெற்கில் ஒரு பட்டணமும் உள்ளது. (எசே 47:19; எசே 48:28).

"அம்னோன்" **(Amnon)** - இந்தப் பெயருக்கு "உண்மையுள்ளவன்" **"faithful"** என்று பொருள்.

II சாமுவேல் - தொகுப்புரை

13 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "அம்னோன்"கள்

1. தாவீதின் மூத்தகுமாரன். (2சாமு 13:1; 2சாமு 3:2; 2சாமு 13:1-39; 1நாளா 3:1)
2. ஷீமோனின் குமாரன். (1நாளா 4:20)

தாமார்மீது அம்னோனின் மோகம்

அம்னோன் தன் சகோதரியாகிய தாமார்மீது ஆசைப்படுகிறான். நெருங்கின உறவினரிடையே விவாகம் நடைபெறுவதை மோசேயின் பிரமாணம் தடைபண்ணுகிறது. (லேவி 18:11) ஆனால் இதற்கு முன்பு ஆபிரகாமும், புறஜாதி ஜனங்களும் நெருங்கிய உறவில் விவாகம் செய்திருக்கிறார்கள். அம்னோன் அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து தன் சகோதரியாகிய தாமாரை விவாகம் பண்ண வேண்டுமென்று விரும்புகிறான். அக்காலத்தில் கன்னிப்பெண்கள் மற்ற புருஷர்களோடு சேர்ந்து பழகமாட்டார்கள். அவர்களுக்குரிய அந்தப்புரங்களில் வசித்து வருவார்கள். வேறு ஆடவரைப் பார்க்க வேண்டுமென்றால், தனியாகச் சந்திக்க முடியாது. மற்றவர்கள் முன்னிலையில் பெற்றோரின் அனுமதி பெற்றுதான் சந்திக்க முடியும். இந்தப் பழக்கவழக்கங்களின் மத்தியில் அம்னோன் தன் சகோதரியைச் சந்திக்க விரும்புகிறான். இதற்காக அவன் வியாதிக்காரனைப்போல தன் படுக்கையில் படுத்துக் கொள்கிறான். தனக்கு பணிபுரிய வந்த தன் சகோதரியைக் கெடுத்துப் போடுகிறான். (2சாமு 13:1-2).

"யோனதாப்" **(Jonadab)** - இந்தப் பெயருக்கு "யெகோவா பெருந்தன்மை வாய்ந்தவர்" **"Jehovah is liberal"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "யோனதாப்"புகள்

1. சிமியாவின் குமாரன். சிமியாவின் மறுபெயர் சம்மா **(Shammah)**. (2சாமு 13:3-5,32-35; 1சாமு 16:9)
2. ரேகாபின் குமாரன் (எரே 35:6-19)

"மகா தந்திரவாதி" - யோனதாப் அம்னோனின் சிநேகிதன். ஒரு கன்னிப் பெண்ணைக் கெடுத்துப் போடும் அளவிற்கு இவன் தன் சிநேகிதனுக்குத் துராலோசனை கூறினான். மிகவும் மோசமான தந்திரவாதி.

(2) தாமாரைக் கற்பழிக்க அம்னோனின் திட்டம்

2சாமு 13:5 அப்பொழுது யோனதாப் அவனைப் பார்த்து: நீ வியாதிக்காரனைப் போல உன் படுக்கையின்மேல் படுத்துக் கொள்; உன்னைப்பார்க்கிறதற்கு உன் தகப்பனார் வரும்போது, நீ, என் சகோதரியாகிய தாமார் வந்து, எனக்குப் போஜனம்கொடுத்து, அவள் கையிலே சாப்பிடும்படிக்கு நான் பார்க்க, என் கண்களுக்கு முன்பாக சமைக்கும்படி தயவுசெய்யவேண்டும் என்று சொல் என்றான்.

"நீ வியாதிக்காரனைப்போல உன் படுக்கையின்மேல் படுத்துக்கொள்" - தன்னுடைய ஆசையை நிறைவேற்றுவதற்காக அம்னோன் ஒரு வியாதிக்காரனைப் போல தன் படுக்கையின்மேல் படுத்துக் கொண்டான். மிகவும் தந்திரமாகச் செயல்படுகிறான். எவ்வளவுதான் தந்திரமாகப் பாவம் செய்தாலும், கர்த்தருடைய பார்வையிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. மனுஷனுடைய தந்திரம் பாவம் செய்த மனுஷனைப் பாவத்தின் தண்டனையிலிருந்து தப்பிக்க வைக்காது. பாவத்தின் விளைவுகளை மனுஷனுடைய தந்திரம் அகற்றிப்போடாது. மனுஷனுடைய தந்திரம்கர்த்தருடையகோபாக்கினையிலிருந்து மனுஷரை இரட்சிக்காது.

(3) தாவீது உண்மை நிலவரம் தெரியாமல் தாமாரை அம்னோனிடம் அனுப்புகிறான்

2சாமு 13:6 அப்படியே அம்னோன் வியாதிக்காரனபோல் படுத்துக் கொண்டு, ராஜா தன்னைப் பார்க்கவந்தபோது, ராஜாவை நோக்கி: என் சகோதரியாகிய தாமார் வந்து நான் அவள் கையினாலே சாப்பிடும்படிக்கு, என் கண்களுக்கு முன்பாக இரண்டு நல்ல பணியாரங்களைப் பண்ணும்படி உத்தரவுகொடுக்கவேண்டும் என்றான்.

13 அதிகாரம்

2சாமு 13:7 அப்பொழுது தாவீது: வீட்டுக்குத் தாமாரிடத்தில் ஆள் அனுப்பி, நீ உன் சகோதரனாகிய அம்னோன் வீட்டுக்குப் போய், அவனுக்கு சமையல் பண்ணிக்கொடு என்று சொல்லச் சொன்னான்.

"அப்படியே அம்னோன் வியாதிக்காரனபோல் படுத்துக்கொண்டு" - அம்னோன் யோனதாபின் ஆலோசனையை அப்படியே ஏற்றுக் கொள்கிறான். தாமாரைத் தனக்கு சமையல் பண்ணிக் கொடுப்பதற்கு தாவீதின் அனுமதியைப் பெற்றுக் கொள்கிறான். தாவீதும் அம்னோனைச் சந்தேகப்படவில்லை. தன் குமாரத்திக்குத் தன் குமாரனால் எந்தப் பாதிப்பும் வராது என்று நினைத்தான். தாமார் வீட்டிற்குள் வந்தபோது, மற்ற வேலைக்காரரையெல்லாம் அங்கிருந்து வெளியே அனுப்பிவிட்டு, அவளைக் கெடுத்துப்போட்டான். (2சாமு 13:7-14). தன்னுடைய ஆசையை நிறைவேற்றுவதற்காக அம்னோன் வியாதிக்காரன்போல் நடித்தான். தாவீதும் ஒரு சமயம் பெலிஸ்தரிடமிருந்து தப்பிப்பதற்காகப் பித்தங்கொண்டவன்போல் நடித்தான். (1சாமு 21:10-15). ஒருகாலத்தில் தகப்பன் நடித்தான். இப்போது குமாரன் நடிக்கிறான்.

"அவனுக்கு சமையல் பண்ணிக்கொடு" - அம்னோனுக்கு சமையல் பண்ணிக் கொடுக்குமாறு தாவீது தன் குமாரத்தியைக் கேட்டுக் கொண்டான். அவளும் தன் சகோதரனுக்குப் பணிவிடை செய்ய சம்மதம் தெரிவிக்கிறாள். தாமார் தன் சகோதரனாகிய அம்னோன் படுத்துக்கொண்டிருக்கிற வீட்டுக்குப் போய், மாவெடுத்துப் பிசைந்து, அவன் கண்களுக்கு முன்பாகத் தட்டி, பணியாரங்களைச் சுட்டு, சட்டியை எடுத்து, அவனுக்கு முன்பாக அவைகளை வைத்தாள்.

(4) அம்னோனின் பாவம்

2சாமு 13:8 தாமார் தன் சகோதரனாகிய அம்னோன் படுத்துக்கொண்டிருக்கிற வீட்டுக்குப் போய், மாவெடுத்துப் பிசைந்து, அவன் கண்களுக்கு முன்பாகத் தட்டி, பணியாரங்களைச் சுட்டு,

2சாமு 13:9 சட்டியை எடுத்து, அவனுக்கு முன்பாக அவைகளை வைத்தாள்; ஆனாலும் அவன் சாப்பிடமாட்டேன் என்றான்; பின்பு அம்னோன்: எல்லாரும் என்னை விட்டு வெளியே போகட்டும் என்றான்; எல்லாரும் அவனைவிட்டு வெளியே போனார்கள்.

2சாமு 13:10 அப்பொழுது அம்னோன் தாமாரைப் பார்த்து: நான் உன் கையினாலே சாப்பிடும்படிக்கு, அந்தப் பலகாரத்தை அறைவீட்டிலே கொண்டுவா என்றான்; அப்படியே தாமார் தான் செய்த பணியாரங்களை அறைவீட்டில் இருக்கிற தன் சகோதரனாகிய அம்மோனிடத்தில் கொண்டு போனாள்.

2சாமு 13:11 அவன் சாப்பிடும்படிக்கு அவள் அவைகளைக் கிட்ட கொண்டு வருகையில், அவன் அவளைப் பிடித்து, அவளைப் பார்த்து: என் சகோதரியே, நீ வந்து என்னோடே சயனி என்றான்.

2சாமு 13:12 அதற்கு அவள்: வேண்டாம், என் சகோதரனே, என்னை அவமானப் படுத்தாதே, இஸ்ரவேலிலே இப்படிச் செய்யத்தகாது; இப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம்.

2சாமு 13:13 நான் என் வெட்கத்தோடே எங்கே போவேன்? நீயும் இஸ்ரவேலிலே மதிகெட்டவர்களில் ஒருவனைப்போல ஆவாய்; இப்போதும் நீ ராஜாவோடே பேசு, அவர் என்னை உனக்குத் தராமல் மறுக்கமாட்டார் என்றாள்.

2சாமு 13:14 அவன் அவள் சொல்லைக் கேட்கமாட்டேன் என்று அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து, அவளைக் கற்பழித்தான்.

"அவன் கண்களுக்கு முன்பாகத் தட்டி, பணியாரங்களைச் சுட்டு" - அவன் சாப்பிடும் படிக்கு அவள் அவைகளைக் கிட்ட கொண்டு வருகையில், அவன் அவளைப் பிடித்து, அவளைப் பார்த்து: என் சகோதரியே, நீ வந்து என்னோடே சயனி என்று கூறி, அம்னோன் தன் ஆசையை வெளிப்படுத்தினான். (2சாமு 13:8-11).

13 அதிகாரம்

"இஸ்ரவேலிலே இப்படிச் செய்யத்தகாது" - தாமாருக்கு 15 வயதாகிறது. அம்னோனுக்கு 22 வயதாகிறது. ஆனாலும் அம்னோனைவிட தாமார் நீதியாய் பேசுகிறாள். இப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம் என்று தன் சகோதரனிடம் கூறுகிறாள். மேலும் தங்கள் விவாகத்தைப் பற்றி தாவீதிடம் பேசுமாறும் தாமார் ஆலோசனை கூறுகிறாள். *(2சாமு 13:12-14).*

"அவர் என்னை உனக்குத் தராமல் மறுக்க மாட்டார்" - அம்னோனையும், தன்னையும் தாவீது விவாகம் செய்து வைப்பான் என்று தாமார் நம்புகிறாள். ஒருவேளை தாவீது அதைச் செய்யாமல் மறுக்கலாம். தன் தகப்பன் இதற்குச் சம்மதிப்பானோ என்னும் சந்தேகம் அம்னோனுக்கு வருகிறது. ஆகையினால் அவன் தாமாரின் ஆலோசனையைக் கேட்கவில்லை. அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து, அவளோடே சயனித்து, அவளைக் கற்பழித்தான். *(2சாமு 13:13-26).*

(5) அம்னோன் தாமாரை வெறுக்கிறான் - *(யாத் 22:16-17; லேவி 18:6-9; உபா 22:28-30)*

2சாமு 13:15 பிற்பாடு அம்னோன் அவளை மிகவும் வெறுத்தான்; அவன் அவளை விரும்பின விருப்பத்தைப் பார்க்கிலும் அவளை வெறுத்த வெறுப்பு அதிகமாயிருந்தது. ஆகையால்; நீ எழுந்து போய்விடு என்று அம்மோன் அவளோடே சொன்னான்.

2சாமு 13:16 அப்பொழுது அவள்: நீ எனக்கு முந்தி செய்த அநியாயத்தைப் பார்க்கிலும், இப்பொழுது என்னைத் துரத்திவிடுகிற அந்த அநியாயம் கொடுமையாயிருக்கிறது என்றாள்; ஆனாலும் அவன் அவள் சொல்லைக் கேட்க மனதில்லாமல்,

2சாமு 13:17 தன்னிடத்தில் சேவிக்கிற தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு: நீ இவளை என்னை விட்டு வெளியே தள்ளி, கதவைப் பூட்டு என்றான்.

"அம்னோன் அவளை மிகவும் வெறுத்தான்" - அம்னோன் உண்மையில் தாமாரை நேசிக்கவில்லை. அவள்மீது மோகஆசை வைத்திருந்தான். அவன் செய்த தவறுக்கு அவனுக்கு மரணமே தண்டனையாகக் கிடைத்தது. அவளை வெறுத்து, தன் வீட்டை விட்டு வெளியேற்றி விட்டான்.

"என்னைத் துரத்திவிடுகிற அந்த அநியாயம் கொடுமையாயிருக்கிறது" - அம்னோன் தாமாரைக் கற்பழித்து ஏற்கெனவே அநியாயம் செய்திருக்கிறான். இப்போது தன் வீட்டை விட்டு அவளைத் துரத்திவிடுகிறான். இந்தச் சூழ்நிலையிலும் தாமார் நிதானமாகவும், விவேகமாகவும் பேசுகிறாள்.

"நீ இவளை என்னை விட்டு வெளியே தள்ளி, கதவைப் பூட்டு" - என்று அம்னோன் தன் வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டான். ஏற்கெனவே பாவம் செய்த பின்பு, அவன் மிகவும் கொடூரமாக மாறுகிறான். இது வரையிலும் அம்னோன் தாமாரை நேசித்தது போல நடித்திருக்கிறான். வேலைக்காரன் அவளை வெளியே தள்ளி, கதவைப் பூட்டினான். தாமாரோ தன் தலையின் மேல் சாம்பலை வாரிப் போட்டுக்கொண்டு, தான் தரித்திருந்த பலவர்ணமான வஸ்திரத்தைக் கிழித்து, தன் கையைத் தன் தலையின்மேல் வைத்து, சத்தமிட்டு அழுது கொண்டுபோனாள். *(2சாமு 13:17-18).*

(6) தாமாரின் துக்கம்

2சாமு 13:18 அப்படியே அவனிடத்தில் சேவிக்கிறவன் அவளை வெளியே தள்ளி, கதவைப் பூட்டினான்; அவள் பலவர்ணமான வஸ்திரத்தை உடுத்திக் கொண்டிருந்தாள்; ராஜ குமாரத்திகளாகிய கன்னிகைகள் இப்படிக்கொத்த சால்வைகளைத் தரித்துக் கொள்வார்கள்.

2சாமு 13:19 அப்பொழுது தாமார் தன் தலையின் மேல் சாம்பலை வாரிப் போட்டுக்கொண்டு, தான் தரித்திருந்த பலவர்ணமான வஸ்திரத்தைக் கிழித்து, தன் கையைத் தன் தலையின்மேல் வைத்து, சத்தமிட்டு அழுதுகொண்டு போனாள்.

13 அதிகாரம்

2சாமு 13:20 அப்பொழுது அவள் சகோதரனாகிய அப்சலோம் அவளைப் பார்த்து: உன் சகோதரனாகிய அம்னோன் உன்னோடிருந்தானோ? இப்போதும் என் சகோதரியே, நீ மவுனமாயிரு; அவன் உன்னுடைய சகோதரன்; இந்தக் காரியத்தை உன் மனதிலே வைக்காதே என்றான்; அப்படியே தாமார் தன் சகோதரனாகிய அப்சலோமின் வீட்டில் தனித்துக் கிலேசப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"தன் கையைத் தன் தலையின்மேல் வைத்து, சத்தமிட்டு அழுதுகொண்டுபோனாள்" - இஸ்ரவேல் தேசத்தில் ராஜகுடும்பத்தில் ஒரு கன்னிப்பெண்ணுக்கு அநீதி இழைக்கப் பட்டிருக்கிறது. தாமார் தன் அவமானத்தைத் தாங்க முடியாமல் தன் வஸ்திரத்தைக் கிழித்துக் கொண்டாள். தனக்கு நேர்ந்த கொடுமையான சம்பவத்தை எடுத்துக் கூறுவதற்காக தாமார் தன் சகோதரனாகிய அப்சலோமிடம் சத்தமிட்டு அழுதுகொண்டு போனாள்.

"அவள் சகோதரனாகிய அப்சலோம்" - அக்காலத்தில் கன்னிப்பெண்கள் அவர்களுடைய சகோதரரின் பாதுகாப்பில் பராமரிக்கப் படுவார்கள். தகப்பன்மார்களுக்கு பல மனைவிகள் இருப்பதற்கு வாய்ப்பு இருப்பதினால் கன்னிப்பெண்களைப் தகப்பனாரின் பொறுப்பில் பராமரிப்பாக வைக்கமாட்டார்கள். அதற்குப் பதிலாக சகோதரரின் பொறுப்பில் வைப்பது வழக்கம். தகப்பனாரால் பிள்ளைகளைக் கவனிக்க முடியாது. அவர்களுக்கு ஏராளமான மனைவிமார்களும், மறுமனையாட்டிகளும், ஏராளமான பிள்ளைகளும் இருப்பார்கள். எல்லா பிள்ளைகளையும் அவர்களால் பொறுப்பாகக் கவனிக்க முடியாது. (ஆதி 34:6-25).

"நீ மவுனமாயிரு" - அப்சலோமுக்குத் தன் சகோதரியின் பிரச்சனை புரிகிறது. தன் சகோதரியைக் கற்பழித்த அம்னோனைப் பழிவாங்குவதற்கு அந்த வேளையிலிருந்து வகை தேடுகிறான். (2சாமு 13:20-36).

(7) தாவீதின் கோபம் - (லேவி 21:17)

2சாமு 13:21 தாவீதுராஜா இந்தச் செய்திகளையெல்லாம் கேள்விப்பட்ட போது, வெகு கோபமாயெரிந்தான்.

"வெகு கோபமாயெரிந்தான்" - தாவீதுக்கும் தன் குமாரன்மீது கோபம் வருகிறது. ராஜா கோபப்பட்டு பிரயோஜனமில்லை. மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் குற்றம் செய்தவனுக்குத் தண்டனை தரவேண்டும். ஆனால் ராஜா அம்னோனைத் தண்டிக்க வில்லை. (லேவி 20:17).

(8) அம்னோனைக் கொல்ல அப்சலோமின் திட்டம்

2சாமு 13:22 அப்சலோம் அம்னோனோடே நன்மையாகிலும் தீமையாகிலும் பேசவில்லை; தன் சகோதரியாகிய தாமாரை அம்னோன் கற்பழித்த காரியத்தினிமித்தம் அப்சலோம் அவனைப் பகைத்தான்.

2சாமு 13:23 இரண்டு வருஷம் சென்றபின்பு, அப்சலோம் எப்பிராயீமுக்குச் சமீபமான பாலாத்சோரிலே ஆட்களை வைத்து, ஆடுகளை மயிர்கத்தரிக்கிற வேலையில் இருந்தான்; அங்கே ராஜகுமாரர் எல்லாரையும் விருந்துக்கு அழைத்தான்.

2சாமு 13:24 அவன் ராஜாவினிடத்தில் போய், ஆட்களை வைத்து ஆடுகளை மயிர்கத்தரிக்கிறேன்; ராஜாவும் அவருடைய ஊழியக்காரரும் உமது அடியானோடே வரும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்.

2சாமு 13:25 ராஜா அப்சலோமைப் பார்த்து: அப்படி வேண்டாம், என் மகனே; நாங்கள் எல்லாரும் வருவோமாகில் உனக்கு வெகு செலவுண்டாகும் என்றான்; அவனை வருந்திக்கேட்டாலும், அவன் போக மனதில்லாமல், அவனை ஆசீர்வதித்தான்.

13 அதிகாரம்

2சாமு 13:26 அப்பொழுது அப்சலோம்: அது கூடாதிருந்தால், என் சகோதரனாகிய அம்னோனாவது எங்களோடே வரும்படி அவனுக்கு உத்தரவு செய்யும் என்றான். அதற்கு ராஜா: அவன் உன்னோடே வரவேண்டியது என்ன என்றான்.

2சாமு 13:27 அப்சலோம் பின்னையும் அவனை வருந்திக் கேட்டுக்கொண்ட படியினால், அவன் அம்னோனையும், ராஜாவின் குமாரர் அனைவரையும் அவனோடே போகவிட்டான்.

"அப்சலோம் அம்னோனோடே நன்மையாகிலும் தீமையாகிலும் பேசவில்லை" - ஒன்றும் பேசவில்லை என்றால் ஆபத்து என்று பொருள். அப்சலோம் அம்னோனைப் பழிவாங்குவதற்கு ஏற்ற சமயத்திற்காகக் காத்திருக்கிறான். இரண்டு வருஷங்களாயிற்று. (2சாமு 13:23) அம்னோனைக் கொலைபண்ணுவதற்கு ஏற்ற சமயத்தை அப்சலோம் தெரிந்தெடுக்கிறான். அம்னோனை விருந்துக்கு அழைத்து, அவனைக் கொன்றுபோட்டான்.

"ஆட்களை வைத்து ஆடுகளை மயிர்கத்தரிக்கிறேன்" - எபிரெயர்கள் ஆடுகளை மயிர்க்கத்தரிக்கும்போது பெரிய விருந்து செய்வது வழக்கம். தங்கள் உற்றார் உறவினர் அனைவரையும் விருந்துக்கு அழைப்பார்கள். அப்சலோமும் ராஜகுமாரர் எல்லாரையும் விருந்துக்கு அழைத்தான். அப்சலோமையும், விருந்துக்கு அனுப்பி வைக்குமாறு தாவீதை வருந்திக் கேட்டுக் கொண்டான். தாவீது அம்னோனை அப்சலோமின் விருந்தில் பங்கு பெறுவதற்கு அனுப்பினான்.

"அம்னோனாவது எங்களோடே வரும்படி அவனுக்கு உத்தரவு செய்யும்" - அம்னோன் தாவீதின் மூத்தகுமாரன். ராஜாவின் சிம்மாசனத்திற்கு வாரிசாக இருக்கிறவன். ஆகையினால் இவன் பெயர் இங்கு விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது. அம்னோன் மீது தனக்கு இருக்கும் விரோதத்தை மறைத்துக் கொண்டு, அப்சலோம் தாவீதிடத்தில் பேசுகிறான். தாவீதும் அப்சலோமின் வார்த்தையை நம்புகிறான். தன்னுடைய பிள்ளைகள் மத்தியில் ஒற்றுமை வளரட்டும் என்று நினைத்து, தாவீது தன் குமாரரை விருந்துக்கு அனுப்பியிருந்திருக்க வேண்டும். (2சாமு 13:26-27).

(9) அம்னோனின் மரணம்

2சாமு 13:28 அப்சலோம் தன் வேலைக்காரரை நோக்கி: அம்னோன் திராட்சரசம் குடித்துக் களித்திருக்கும் சமயத்தை நன்றாய்ப் பார்த்திருங்கள்; அப்பொழுது நான்: அம்னோனை அடியுங்கள் என்று சொல்லுவேன்; உடனே நீங்கள் பயப்படாமல் அவனைக் கொன்றுபோடுங்கள்; நான் அல்லவோ அதை உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்; திடன்கொண்டு தைரியமாயிருங்கள் என்று சொல்லி யிருந்தான்.

2சாமு 13:29 அப்சலோம் கற்பித்தபடியே அப்சலோமின் வேலைக்காரர் அம்னோனுக்குச் செய்தார்கள்; அப்பொழுது ராஜகுமாரர் எல்லாரும் எழுந்திருந்து, அவரவர் தம்தம் கோவேறு கழுதையின்மேல் ஏறி ஓடிப்போனார்கள்.

"அம்னோனை அடியுங்கள் என்று சொல்லுவேன்" - அப்சலோம் இவ்வாறு கூறுவது அவனுடைய வேலைக்காரருக்கு ஓர் அடையாளம். அவன் அம்னோனை மட்டுமே கொல்ல சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான். மற்ற ராஜகுமாரரைக் கொல்வது அப்சலோமின் திட்டமல்ல.

"ராஜகுமாரர் எல்லாரும் எழுந்திருந்து, அவரவர் தம்தம் கோவேறு கழுதையின்மேல் ஏறி ஓடிப்போனார்கள்" - அப்சலேமின் வேலைக்காரர் அம்னோனைக் கொன்றுபோட்டார்கள். தங்களுடைய கண்களுக்கு முன்பாக தங்களுடைய மூத்த சகோதரன் கொல்லப் பட்டதைப் பார்த்து, அவர்கள் எல்லோரும் பயந்து விட்டார்கள். அடுத்து, தங்களுக்கு ஆபத்து வரும் என்று நினைத்து, ராஜகுமாரர் எல்லோரும் தப்பித்து ஓடிவிட்டார்கள். ஆனால் எல்லோரையும் கொல்ல வேண்டுமென்பது அப்சலோமின் விருப்பமல்ல. தன் சகோதரியாகிய தாமாரைக் கற்பழித்த அம்னோனை மட்டுமே கொன்று பழிதீர்க்க வேண்டுமென்று அப்சலோம் திட்டமிட்டிருந்தான்.

13 அதிகாரம்

(10) அம்னோனுக்காகத் தாவீதின் துக்கம்

2சாமு 13:30 அவர்கள் வழியில் இருக்கிற போதே, அப்சலோம் ராஜகுமாரரை யெல்லாம் அடித்துக் கொன்றுபோட்டான், அவர்களில் ஒருவரும் மீந்திருக்க விடவில்லை என்கிறதாய், தாவீதுக்குச் செய்தி வந்தது.

2சாமு 13:31 அப்பொழுது ராஜா எழுந்திருந்து, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தரையிலே விழுந்துகிடந்தான்; அவன் ஊழியக்காரர் எல்லாரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு நின்றார்கள்.

2சாமு 13:32 அப்பொழுது தாவீதின் தமையனாகிய சிமியாவின் குமாரன் யோனதாப் வந்து: ராஜகுமாரரான வாலிபரை யெல்லாம் கொன்றுபோட்டார்கள் என்று என் ஆண்டவன் நினைக்க வேண்டாம்; அம்மோன்மாத்திரம் செத்துப் போனான்; அவன் தன் சகோதரியாகிய தாமாரைக் கற்புழித்த நாள்முதற் கொண்டு, அது அப்சலோமின் நெஞ்சில் இருந்தது.

2சாமு 13:33 இப்போதும் ராஜகுமாரர்கள் எல்லாரும் செத்தார்கள் என்கிற பேச்சை ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய மனதிலே வைக்கவேண்டாம்; அம்னோன் ஒருவனே செத்தான் என்றான்; அப்சலோம் ஓடிப்போனான்.

2சாமு 13:34 ஜாமக்காரச் சேவகன் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது, இதோ, அநேகம் ஜனங்கள் தனக்குப் பின்னாலே மலை ஓரமாய் வருகிறதைக் கண்டான்.

2சாமு 13:35 அப்பொழுது யோனதாப் ராஜாவைப் பார்த்து: இதோ, ராஜகுமாரர் வருகிறார்கள்; உமது அடியேன் சொன்னபடியே ஆயிற்று என்றான்.

2சாமு 13:36 அவன் பேசி முடிந்தபோது, ராஜகுமாரர் வந்து, சத்தமிட்டு அழுதார்கள்; ராஜாவும் அவனுடைய எல்லா ஊழியக்காரரும் மிகவும் புலம்பி அழுதார்கள்.

"தாவீதுக்குச் செய்தி வந்தது" - தாவீதின் குமாரர் அரண்மனைக்கு வருவதற்கு முன்பாகச் செய்தி முந்தி வந்துவிட்டது. ஆனால் தவறான செய்தி வந்தது. அப்சலோம் ராஜகுமாரரையெல்லாம் அடித்துக் கொன்று போட்டான், அவர்களில் ஒருவரும் மீந்திருக்க விடவில்லை என்கிற தவறான செய்தி தாவீதுக்கு வந்திருக்கிறது. பல சமயங்களில் உண்மையான செய்திகளைவிட தவறான செய்திகளும் வதந்திகளும் வேகமாகப் பரவும்.

"தரையிலே விழுந்துகிடந்தான்" - தனக்கு துன்பம் வரும்போதெல்லாம் தாவீது தரையிலே விழுந்து கிடப்பது வழக்கம். (2சாமு 13:31; 2சாமு 12:16-20)

"யோனதாப்" - அம்னோனுக்கு தாமாரைக் கற்புழித்துப் போடுமாறு தீய ஆலோசனை கூறியவன் இந்த யோனதாப். (2சாமு 13:3). இப்போது அவனே தாவீதிடம் வருகிறான். அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோடுவான் என்பது யோனதாபிற்குத் தெரிந்திருக்கிறது. ஆனாலும் அவன் தன் சிநேகிதனைப் பாதுகாக்கவில்லை.

"அது அப்சலோமின் நெஞ்சில் இருந்தது" - அம்னோனைக் கொன்றுபோட வேண்டுமென்னும் எண்ணம் அப்சலோமின் நெஞ்சில் தன் சகோதரியாகிய தாமாரை அம்னோன் கற்புழித்த நாள்முதற்கொண்டு இருந்தது. இரண்டு வருஷங்களாக அப்சலோமின் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த பழிவாங்கும் உணர்ச்சி இப்போது வெடித்துச் சிதறிவிட்டது. (2சாமு 13:23,32).

"அப்சலோம் ஓடிப்போனான்" - பல வருஷங்களுக்கு முன்பு தாவீதும் சவுலுக்குப் பயந்து ஓடிப்போனான். (2சாமு 15:13-37).

(11) அப்சலோம் தப்பியோடிப் போகிறான்

2சாமு 13:37 அப்சலோமோ அம்மியூதின் குமாரனாகிய தல்மாய் என்னும் கேசூரின் ராஜாவினிடத்தில் ஓடிப்போனான்; தாவீது தினந்தோறும் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.

13 அதிகாரம்

2சாமு 13:38 அப்சலோம் கேசூருக்கு ஓடிப்போய், அங்கே மூன்று வருஷம் இருந்தான்.

2சாமு 13:39 தாவீதுராஜா அம்னோன் செத்தபடியினால், அவனுக்காகத் துக்கித்து ஆறுதல் அடைந்தபோது அப்சலோமைப் பின் தொடரும் நினைவை விட்டுவிட்டான்.

"அம்மியூத்" **Ammihud** - இந்தப் பெயருக்கு "துதியின் ஜனம்" **"people of praise"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "அம்மியூத்"துகள்

1. எப்பிராயீம் கோத்திரத்தான். (எண் 1:10; எண் 2:18; எண் 7:48)
2. சிமியோன் கோத்திரத்தான் (எண் 34:20)
3. நப்தலி கோத்திரத்தான் (எண் 34:28)
4. தல்மாயின் தகப்பன் (2சாமு 13:37)
5. உம்ரியின் குமாரன் (1நாளா 9:4)

"தல்மாய் என்னும் கேசூரின் ராஜாவினிடத்தில் ஒடிப்போனான்" - கேசூரின் ராஜாவாகிய தல்மாய் அப்சலோமின் தாத்தா.

"தல்மாய்" **(Talmai)** - இந்தப் பெயருக்கு "தைரியமானவன்" **"bold"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "தல்மாய்"கள்

1. ஓர் இராட்சதன் (எண் 13:22; யோசு 15:14; நியா 1:10)
2. கேசூரின் ராஜா (2சாமு 13:37; 2சாமு 3:3; 1நாளா 3:2)

"தாவீது தினந்தோறும் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்" - தாவீது அப்சலோமை மிகவும் நேசித்தான். அப்சலோம் தன்னுடைய சகோதரனைக் கொன்றுபோட்டான். மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் அப்சலோம் மரண தண்டனை பெறவேண்டும். ஆனால் அவனுக்கு தாவீது ஒரு தண்டனையும் தரவில்லை. பிற்காலத்தில் இதே அப்சலோம் தாவீதுக்கு எதிராக வந்து கலகம் பண்ணினான். அப்சலோமுக்குப் பயந்து தாவீது நாட்டை விட்டு ஒடிப்போனான். தாவீது தன் இரண்டு குமாரரையும் இழந்தான்.

"அப்சலோமைப் பின் தொடரும் நினைவை விட்டுவிட்டான்" - தாவீது அம்னோனுக்காகவும் துக்கித்தான். அப்சலோமுக்காகவும் துக்கித்தான்.

II சாமுவேல் - தொகுப்புரை

14 அதிகாரம்

(12) தாவீதையும் அப்சலோமையும் ஒன்று சேர்க்க யோவாபின் திட்டம்

(அ) யோவாப் தீட்டிய திட்டம்

2சாமு 14:1 ராஜாவின் இருதயம் அப்சலோமின் மேல் இன்னும் தாங்கலாயிருக்கிறதைச் செருயாவின் குமாரன் யோவாப் கண்டு,

2சாமு 14:2 அவன் தெக்கோவாவிலிருக்கிற புத்தியுள்ள ஒரு ஸ்திரீயை அழைத்து: நீ இழவு கொண்டாடுகிறவளைப் போல, துக்கவஸ்திரங்களை உடுத்திக் கொண்டு, எண்ணெய் பூசிக் கொள்ளாமல், இறந்துபோனவனுக்காக நெடுநாள் துக்கிக்கிற ஸ்திரீயைப் போலக் காண்பித்து,

2சாமு 14:3 ராஜாவினிடத்தில் போய், அவரை நோக்கி: இன்ன இன்ன பிரகாரமாகச் சொல் என்று அவள் சொல்லவேண்டிய வார்த்தைகளை யோவாப் அவள் வாயிலே போட்டான்.

யோவாபின் திட்டம்

இந்த அதிகாரத்தில் யோவாபைப் பற்றி மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. தாவீது அப்சலோமுக்காக ஏங்குகிறான். அவனை மன்னிக்க வேண்டுமென்று விரும்புகிறான். இது யோவாபுக்குத் தெரிய வருகிறது. (2சாமு 13:39-14:1). அப்சலோமைத் தாவீது திரும்பவும் தேசத்திற்கு அழைக்க வேண்டும். யோவாப் இதற்காக ஒரு நாடகம் ஆடுகிறான். தெக்கோவா ஊராளான ஒரு ஸ்திரீயை யோவாப் தன்னுடைய திட்டத்தில் பயன்படுத்துகிறான்.

அம்னோன் மரித்துப்போனான். தாவீது அவனுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்தான். தாவீதின் துக்கம் நீங்கிற்று. தன் அடுத்த குமாரனாகிய அப்சலோமைக் காண தாவீது வாஞ்சையாக இருக்கிறான். அப்சலோம் தாவீதை விட்டு ஓடிப்போய் மூன்று வருஷமாயிற்று. அவனை அழைக்க வேண்டுமென்று தாவீது விரும்புகிறான். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் இதைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்று தாவீது தயங்குகிறான். தாவீதின் உள்ளத்தில் பாசத்திற்கும், ஆட்சிப் பொறுப்பிற்கும் இடையில் ஒரு போராட்டம் நடைபெறுகிறது. தாவீதின் குழப்பத்தைத் தீர்த்து வைப்பதற்கு யோவாப் மத்தியஸ்தனாக இங்கு வருகிறான். ராஜாவின் பிரச்சனையைத் தீர்த்து வைக்க முயற்சி பண்ணுகிறான்.

யோவாப் தன்னுடைய முயற்சியில் தெக்கோவா ஊராளான ஒரு ஸ்திரீயின் உதவியை நாடுகிறான். அவள் யோவாபிற்கு உதவி செய்கிறாள். அந்த ஸ்திரீ தாவீதினிடத்தில்போய், அப்சலோமைத் திரும்ப அழைத்துக் கொள்ளுமாறு கூறுகிறாள். தாவீது அப்சலோமைத் திரும்ப அழைத்து வர சம்மதம் தெரிவிக்கிறான்.

தெக்கோவாலூர் ஸ்திரீயின் குணாதிசயங்கள்

1. புத்தியுள்ளவள்.
2. இழவு கொண்டாடுகிறவளைப்போல நன்றாக நடிக்கிறவள்.
3. துக்கவஸ்திரங்களை உடுத்திக் கொண்டவள்.
4. எண்ணெய் பூசிக்கொள்ளாமல், தன்னைத் துக்கமாகக் காண்பிக்கிறவள்.
5. இறந்துபோனவனுக்காக நெடுநாள் துக்கிக்கிறவள் போல தன்னைக் காண்பிக்கிறவள்.
6. தன்னுடைய ஒவ்வொரு வேண்டுகோளுக்கும் ராஜாவைச் சம்மதிக்க வைத்தவள். (2சாமு 14:4-20).

14 அதிகாரம்

(ஆ) புத்தியுள்ள ஸ்திரீ கூறிய உவமை

2சாமு 14:4 அப்படியே தெக்கோவா ஊராளான அந்த ஸ்திரீ ராஜாவோடே பேசப்போய், தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி: ராஜாவே, இரட்சியும் என்றாள்.

2சாமு 14:5 ராஜா அவளைப் பார்த்து: உனக்கு என்ன வேண்டும் என்றதற்கு, அவள்: நான் விதவையானவள், என் புருஷன் செத்துப்போனான்.

2சாமு 14:6 உமது அடியாளுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; அவர்கள் இருவரும் வெளியிலே சண்டைபண்ணி, அவர்களை விலக்க ஒருவரும் இல்லாத படியினால், ஒருவன் மற்றவனை அடித்துக் கொன்றுபோட்டான்.

2சாமு 14:7 வம்சத்தார் எல்லாரும் உம்முடைய அடியாளுக்கு விரோதமாய் எழும்பி, தன் சகோதரனைக் கொன்று போட்டவனை ஒப்பி; அவன் கொன்ற அவன் சகோதரனுடைய பிராணனுக்காக நாங்கள் அவனைக் கொன்று போடுவோம்; சுதந்தரவாளனாயினும் அவனையும் அழித்துப்போடுவோம் என்கிறார்கள். இப்படி என் புருஷனுக்குப் பேரும் நீதியும் பூமியின்மேல் வைக்கப்படாதபடிக்கு, எனக்கு இன்னும் மீதியாயிருக்கிற பொறியையும் அவித்துப் போட மனதாயிருக்கிறார்கள் என்றாள்.

2சாமு 14:8 ராஜா அந்த ஸ்திரீயைப் பார்த்து: நீ உன் வீட்டுக்குப் போ, உன் காரியத்தைக் குறித்து உத்தரவு கொடுப்பேன் என்றான்.

2சாமு 14:9 பின்னும் அந்தத் தெக்கோவாவூர் ஸ்திரீ ராஜாவைப் பார்த்து: ராஜாவாகிய என் ஆண்டவனே, ராஜாவின்மேலும் அவர் சிங்காசனத்தின் மேலும் குற்றமில்லாதபடிக்கு, அந்தப் பழி என்மேலும் என் தகப்பன் வீட்டின்மேலும் சுமரக்கடவது என்றாள்.

2சாமு 14:10 அதற்கு ராஜா: உனக்கு விரோதமாகப் பேசுகிறவனை என்னிடத்தில் கொண்டுவா, அப்பொழுது அவன் இனி உன்னைத் தொடாதிருப்பான் என்றான்.

2சாமு 14:11 பின்னும் அவள்: இரத்தப்பழி வாங்குகிறவர்கள் அழிம்புசெய்து, என் குமாரனை அதம்பண்ணப் பெருகிப் போகாத படிக்கு, ராஜாவானவர் தம்முடைய தேவனாகிய கர்த்தரை நினைப்பாராக என்றாள். அதற்கு ராஜா: உன் குமாரனுடைய மயிரில் ஒன்றாவது தரையில் விழுவதில்லை என்று கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

2சாமு 14:12 அப்பொழுது அந்த ஸ்திரீ: ராஜாவாகிய என் ஆண்டவனோடே உமது அடியாள் ஒரு வார்த்தைசொல்ல உத்தரவாக வேண்டும் என்றாள். அவன்: சொல்லு என்றான்.

தாவீதைத் தெக்கோவாவூர் ஸ்திரீ நம்ப வைத்த விதம்

1. அவளுடைய வெளித்தோற்றம். (2சாமு 14:2)
2. அவள் ராஜாவை அணுகிய விதம். (2சாமு 14:4)
3. தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கிய விதம்.
4. அவள் கூறிய கதை. (2சாமு 14:5-7)

தெக்கோவாவூர் ஸ்திரீ கூறிய சம்பவங்கள்

1. நான் விதவையானவள், என் புருஷன் செத்துப்போனான்.
2. உமது அடியாளுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்.

14 அதிகாரம்

3. அவர்கள் இருவரும் வெளியிலே சண்டைபண்ணினார்கள்.

4. அவர்களை விலக்க ஒருவரும் இல்லை.

5. ஒருவன் மற்றவனை அடித்துக் கொன்றுபோட்டான்.

6. வம்சத்தார் எல்லாரும் உம்முடைய அடியாளுக்கு விரோதமாய் எழும்பினார்கள்.

7. தன் சகோதரனைக் கொன்று போட்டவனை ஒப்பி; அவன் கொன்ற அவன் சகோதரனுடைய பிராணனுக்காக நாங்கள் அவனைக் கொன்றுபோடுவோம் என்று கூறினார்கள்.

8. சுதந்தரவாளனாயினும் அவனையும் அழித்துப்போடுவோம் என்கிறார்கள்.

9. என் புருஷனுக்குப் பேரும் நீதியும் பூமியின்மேல் வைக்கப்படாதபடிக்கு மனதாயிருக்கிறார்கள்.

10. எனக்கு இன்னும் மீதியாயிருக்கிற பொறியையும் அவித்துப் போட மனதாயிருக்கிறார்கள்.

தாவீதின் உத்தரவு

தெக்கோவாவூர் ஸ்திரீக்கு தாவீது உத்தரவு கொடுப்பதாகக் கூறுகிறான். ஆனால் அந்த ஸ்திரீ அதில் திருப்தியடையவில்லை. காலம் தாமதமானால் அவளால் காரியம் சாதிக்க முடியாது. ஆகையினால் தெக்கோவாவூர் ஸ்திரீ தாவீதைப் பார்த்து, ராஜாவின்மேலும் அவர் சிங்காசனத்தின்மேலும் குற்றமில்லாதபடிக்கு, அந்தப் பழி என்மேலும் என் தகப்பன் வீட்டின்மேலும் சுமரக்கடவது என்று கூறுகிறாள். ஆகையினால் ராஜா அவளைப் பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறான். (2சாமு 14:9-10) ராஜாவின் இந்தப் பதிலால் தெக்கோவாவூர் ஸ்திரீயின் பிரச்சனை முடியவில்லை. அந்த ஸ்திரீ அப்சலோமை மனதில் நினைத்துக் கொண்டே பேசுகிறாள். கர்த்தரிடத்தில் மன்னிப்பைக் கேட்டால், அவர் மன்னிப்பார். ஆனால் தாவீதோ தன் மகனை மன்னிக்கவில்லை.

தாவீது அப்சலோமைச் சீக்கிரத்தில் தன்னிடத்தில் அழைத்து வரவேண்டும். ராஜாவும், அந்த ஸ்திரீயினிடத்தில் "உன் குமாரனுடைய மயிரில் ஒன்றாவது தரையில் விழுவதில்லை என்று கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" என்று வாக்குப்பண்ணினான். (2சாமு 14:11). இந்த வார்த்தையைக் கேட்டவுடன் தெக்கோவாவூர் ஸ்திரீ தாவீதின் குடும்ப விவகாரங்களைப் பற்றிப் பேசுகிறாள். (2சாமு 14:12-20).

(இ) தாவீதும், அப்சலோமும் உவமையும்

2சாமு 14:13 அப்பொழுது அந்த ஸ்திரீ: பின்னை ஏன் தேவனுடைய ஜனத்திற்கு விரோதமாய் இப்படிப்பட்ட நினைவை நீர் கொண்டிருக்கிறீர், துரத்துண்ட தம்முடையவனை ராஜா திரும்ப அழைக்காததினாலே, ராஜா இப்பொழுது சொன்ன வார்த்தையினால் குற்றமுள்ளவரைப்போல் இருக்கிறார்.

2சாமு 14:14 நாம் மரிப்பது நிச்சயம், திரும்பச் சேர்க்கக்கூடாதபடிக்கு, தரையிலே சுவறுகிற தண்ணீரைப்போல் இருக்கிறோம்; தேவன் ஜீவனை எடுத்துக்கொள்ளாமல், துரத்துண்டவன் முற்றிலும் தம்மை விட்டு விலக்கப் படாதிருக்கும் நினைவுகளை நினைக்கிறார்.

2சாமு 14:15 இப்போதும் நான் ஆண்டவனாகிய ராஜாவோடே இந்த வார்த்தையைப் பேசவந்த முகாந்தரம் என்னவென்றால்: ஜனங்கள் எனக்குப் பயமுண்டாக்கினதினால், நான் ராஜாவோடே பேசவந்தேன்; ஒருவேளை ராஜா தமது அடியாளுடைய வார்த்தையின்படி செய்வார் என்று உமது அடியாளாகிய நான் நினைத்ததினாலும் வந்தேனே ஒழிய வேறில்லை.

2சாமு 14:16 என்னையும் என் குமாரனையும் ஏகமாய் தேவனுடைய சுதந்தரத்திற்குப் புறம்பாக்கி, அழிக்க நினைக்கிற மனுஷனுடைய கைக்குத் தமது அடியாளை நீங்கலாக்கிவிடும்படிக்கு ராஜா கேட்பார்.

14 அதிகாரம்

2சாமு 14:17 ராஜாவாகிய என் ஆண்டவனுடைய வார்த்தை எனக்கு ஆறுதலாயிருக்கும் என்று உமது அடியாளாகிய நான் எண்ணினேன்; நன்மையையும் தீமையையும் கேட்கும்படி, ராஜாவாகிய என் ஆண்டவன் தேவனுடைய தூதனைப்போல இருக்கிறார்; இதற்காக உம்முடைய தேவனாகிய கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார் என்றாள்.

தெக்கோவாவூர் ஸ்திரீயின் விவாதம்

தாவீது அப்சலோமை மன்னித்து, அவனைத் திரும்பவும் தன்னிடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். தெக்கோவாவூர் ஸ்திரீயின் முக்கிய நோக்கம் இதுதான். இதற்காகவே தாவீதிடம் விவாதம் பண்ணுகிறாள். தன்னுடைய சம்பாஷணையில் தாவீது இந்த ஸ்திரீயின் குமாரனை மன்னிக்கிறான். இந்த ஸ்திரீ தாவீதின் இந்த வாக்கியத்தை அவனுக்கே திரும்பவும் பயன்படுத்துகிறாள். தன் மகனை மன்னிக்கும் தாவீது அவனுடைய மகனாகிய அப்சலோமையே ஏன் மன்னிக்கக்கூடாது என்று ராஜாவிடம் விவாதம் பண்ணினாள். ராஜா அப்சலோமைத் திரும்ப அழைக்காமல் தாமதம் பண்ணுகிறான். ஆகையினால் அவனைத் தாமதம் பண்ணாமல் விரைவாக அழைக்க வேண்டுமென்று தெக்கோவாவூர் ஸ்திரீ விவாதம் பண்ணுகிறாள். (2சாமு 14:13). அம்னோனும் மரித்துப்போனான். அப்சலோமைத் தண்டிப்பதினால் அம்னோன் திரும்ப உயிர் பெறப்போவதில்லை. கர்த்தரிடத்தில் பட்சபாதம் இல்லை. பாவம் செய்கிறவர்களைக் கர்த்தர் மன்னிக்கிறார். அதுபோல தம்முடைய ஜனத்தை ஆளுகை செய்யும் ராஜாவும் தவறு செய்தவர்களை மன்னிக்க வேண்டுமென்று தெக்கோவாவூர் ஸ்திரீ விவாதம் பண்ணுகிறாள். (2சாமு 14:14) ராஜா தன்னுடைய விண்ணப்பத்தை அங்கிகரிக்க வேண்டுமென்று மன்றாடுகிறாள். (2சாமு 14:15-17)

(ஈ) யோவாபின் மீது சந்தேகம்

2சாமு 14:18 அப்பொழுது ராஜா அந்த ஸ்திரீக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னிடத்தில் கேட்கும் காரியத்தை நீ எனக்கு மறைக்கவேண்டாம் என்றான். அதற்கு அந்த ஸ்திரீ, ராஜாவாகிய என் ஆண்டவர் சொல்வாராக என்றாள்.

2சாமு 14:19 அப்பொழுது ராஜா: இதிலெல்லாம் யோவாப் உனக்கு உட்கையாய் இருக்கவில்லையா என்று கேட்டான். அதற்கு ஸ்திரீ பிரதியுத்தரமாக, ராஜாவாகிய என் ஆண்டவன் சொன்னதற்கெல்லாம் வலது பக்கத்திலாவது இடதுபக்கத்திலாவது விலகுவதற்கு ஒருவராலும் கூடாது என்று ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; உமது அடியானாகிய யோவாப் தான் இதை எனக்குக் கற்பித்து, அவனே இந்த எல்லா வார்த்தைகளையும் உமது அடியாளின் வாயிலே போட்டான்.

2சாமு 14:20 நான் இந்தக் காரியத்தை உபமானமாய்ப் பேசுகிறதற்கு உமது அடியானாகிய யோவாப் அதற்குக் காரணமாயிருந்தான்; ஆனாலும் தேசத்தில் நடக்கிறதையெல்லாம் அறிய, என் ஆண்டவனுடைய ஞானம் தேவதூதனுடைய ஞானத்தைப் போல் இருக்கிறது என்றாள்.

"உமது அடியானாகிய யோவாப் தான் இதை எனக்குக் கற்பித்து, அவனே இந்த எல்லா வார்த்தைகளையும் உமது அடியாளின் வாயிலே போட்டான்" - தெக்கோவாவூர் ஸ்திரீ புத்தியுள்ளவள். ஆகையினால் ராஜாவிடம் எதையும் மறைக்காமல் இந்தக் காரியத்தில் யோவாபின் பங்கை உள்ளபடி வெளிப்படுத்தி விடுகிறாள். (2சாமு 14:19-20).

14 அதிகாரம்

(உ) அப்சலோமை அழைத்துவர உத்தரவு

2சாமு 14:21 அப்பொழுது ராஜா யோவாபைப் பார்த்து: இதோ, இந்தக் காரியத்தைச் செய்கிறேன், நீ போய் அப்சலோம் என்னும் பிள்ளையாண்டானைத் திரும்ப அழைத்துக்கொண்டுவா என்றான்.

2சாமு 14:22 அப்பொழுது யோவாப் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி, ராஜாவை வாழ்த்தி: ராஜா தமது அடியானுடைய வார்த்தையின்படி செய்ததினால், என் ஆண்டவனாகிய ராஜாவின் கண்களில் எனக்குத் தயைகிடைத்தது என்று இன்று உமது அடியானுக்குத் தெரியவந்தது என்றான்.

2சாமு 14:23 பின்பு யோவாப் எழுந்து, கேசூருக்குப் போய், அப்சலோமை எருசலேமுக்கு அழைத்துக் கொண்டு வந்தான்.

2சாமு 14:24 ராஜா: அவன் என் முகத்தைப் பார்க்கவேண்டியதில்லை; தன் வீட்டுக்குத் திரும்பிப்போகட்டும் என்றான்; அப்படியே அப்சலோம் ராஜாவின் முகத்தைப் பார்க்காமல் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான்.

"யோவாப் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி, ராஜாவை வாழ்த்தி" - தகப்பனையும், குமாரனையும் சேர்த்து வைக்கப்போகிற சந்தோஷம் யோவாபின் உள்ளத்தில் வருகிறது. இருவரும் தன்மீது நன்றியோடு இருப்பார்கள் என்று யோவாப் நினைத்தான். ஆனால் யோவாபின் வாழ்க்கையோ வேறு விதமாக முடிவுற்றது. *(2சாமு 14: 22-23).*

அப்சலோம் விஷயத்தில் தாவீது செய்த தவறு

யோவாப் கேசூருக்குப் போய், அப்சலோமை எருசலேமுக்கு அழைத்துக்கொண்டுவந்தான். ஆனால் தாவீதோ அப்சலோமின் முகத்தைப் பார்க்க மறுத்துவிட்டான். *(2சாமு 14:21-24).* அவனுடைய முகத்தைப் பார்க்காமல் இருப்பதற்குப் பதிலாக அவனை எருசலேமிற்கு அழைத்து வராமலேயே இருந்திருக்கலாம். தாவீதின் இந்த மனப்பாங்கு அப்சலோமுக்குப் பிடிக்கவில்லை. தன்னுடைய உள்ளத்தில் உள்ள வருத்தத்தை யோவாபிடம் வெளிப்படுத்துகிறான். *(2சாமு 14:32)*

தாவீது அப்சலோமைப் பார்க்காமல் ஏன் பிடிவாதமாக இருந்தான் என்று தெரியவில்லை. அப்சலோம் தாவீதை விட்டுப் பிரிந்ததினால், அவனுடைய மனநிலை மாறிற்று. தந்தையின்மீது பாசம் இல்லாமல் அவனுக்கு விரோதமாக எழும்பினான். ஒரு தகப்பன் குற்றம் செய்த தன் மகனை ஏற்றுக் கொள்ள வேண்டும். அரைகுறையாக மன்னித்து, பிள்ளைகளை ஏற்றுக் கொள்ளாத பெற்றோருக்கு தாவீதின் வரலாறும், அப்சலோமின் வரலாறும் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

தாவீது அப்சலோமைத் தன் மனதார ஏற்றுக் கொண்டிருந்தால் அவன் ஒருவேளை தாவீதுக்கு விரோதமாக சதிபண்ணியிருக்க மாட்டான். அவன் தாவீதுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினான். ஆனால் அவனுடைய முயற்சி பலன் அளிக்கவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் அப்சலோமை நேசித்தார்கள். அவன் தாவீதுக்கு எதிராகக் கலகம் பண்ணாமல் நேரான வழியில் ராஜாவாக இருந்திருக்கலாம். *(2சாமு 14:25-15:6)* ஆனால் ராஜாவுக்கு எதிராகக் கலகம் பண்ணிவிட்டு, ராஜாவாவது மிகவும் சிரமம். தாவீது ராஜ்யபாரத்தைப் பத்சேபாளின் குமாரனாகிய சாலொமோனுக்கு வாக்குப்பண்ணியிருந்தான். ஆனாலும் அப்சலோமை இஸ்ரவேல் புத்திரர் அதிகமாக நேசித்தபடியினால், தாவீது தன்னுடைய வார்த்தையை மாற்றி, ராஜ்யபாரத்தை அப்சலோமுக்குக் கொடுத்திருக்கலாம். ஆனால் தாவீதுக்கும், அப்சலோமுக்கும் இடையில் எல்லாமே சர்வ குழப்பமாயிற்று. இவை அனைத்திற்கும் காரணம் தாவீது தன் மகனாகிய அப்சலோமை மன்னித்து ஏற்றுக் கொள்ளாததுதான். அப்சலோம் மரித்த பின்பு, இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தைப் பற்றிய பிரச்சனை முடிவுக்கு வந்தது. *(1இராஜா 1:13).*

14 அதிகாரம்

(ஊ) அப்சலோமின் அழகும் குடும்பமும்

2சாமு 14:25 இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப் போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக் கொள்ளப்பட்டவனும் இல்லை; உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது.

2சாமு 14:26 அவன் தன் தலைமயிர் தனக்குப் பாரமாயிருப்பதினால் வருஷாந்தரம் சிரைத்துக் கொள்ளுவான்; சிரைக்கும் போது, அவன் தலைமயிர் ராஜாவுடைய நிறையின்படி இருநூறு சேக்கல் நிறையாயிருக்கும்.

2சாமு 14:27 அப்சலோமுக்கு மூன்று குமாரரும், தாமார் என்னும் பேர்கொண்ட ஒரு குமாரத்தியும் பிறந்திருந்தார்கள்; இவள் ரூபவதியான பெண்ணாயிருந்தாள்.

"உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது" - இஸ்ரவேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப் போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக்கொள்ளப்பட்டவனும் இல்லை. அவனுடைய சவுந்தரியத்தைப் பார்த்து இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அவனை நேசித்தார்கள். அவன் ஜனங்களுடைய மனதை நல்வார்த்தைகளைக் கூறி கவர்ந்தான். அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறுவதாகக்கூறி அவர்களைத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டான். அவனுடைய தலைமயிர் மிகவும் பிரசித்திபெற்றது. *(2சாமு 14:25-26).*

"அப்சலோமுக்கு மூன்று குமாரரும்" - இவர்கள் மூவரும் பிறந்த சமயத்திலோ அல்லது அவர்களுடைய சிறுபிள்ளைப் பிராயத்திலோ மரித்துப்போயிருக்க வேண்டும். அப்சலோம் மரித்தபோது அவனுடைய குமாரரில் யாரும் உயிரோடு இல்லை. *(2சாமு 18:18).*

"தாமார்" - அப்சலோம் தன் குமாரத்திக்கு தன் சகோதரியின் பெயரைச் சூட்டியிருக்கிறான். *(2சாமு 13:1-20).* இவர்கள் இருவருமே சௌந்தரியமான ஸ்திரீகள். *(2சாமு 13:1).*

(எ) தாவீதும் அப்சலோமும் முழுவதுமாக ஒப்புரவாகுகிறார்கள்

2சாமு 14:28 அப்சலோம், ராஜாவின் முகத்தைக் காணாமலே, இரண்டு வருஷம் எருசலேமிலே குடியிருந்தான்.

2சாமு 14:29 ஆகையால் அப்சலோம் யோவாபை ராஜாவினிடத்தில் அனுப்பும்படி அழைப்பித்தான்; அவனோ அவனிடத்திற்கு வரமாட்டேன் என்றான்; இரண்டாம்விசையும் அவன் அழைத்தனுப்பினான்; அவன் வரமாட்டேன் என்றான்.

2சாமு 14:30 அப்பொழுது அவன் தன் வேலைக்காரரைப் பார்த்து: இதோ என் நிலத்திற்கு அருகே யோவாபின் நிலம் இருக்கிறது; அதிலே அவனுக்கு வாற்கோதுமை விளைந்திருக்கிறது; நீங்கள் போய், அதைத் தீக்கொளுத்திப் போடுங்கள் என்றான்; அப்படியே அப்சலோமின் வேலைக்காரர் அந்த நிலத்தை தீக்கொளுத்திப் போட்டார்கள்.

2சாமு 14:31 அப்பொழுது யோவாப் எழுந்திருந்து, அப்சலோமிடத்தில் வீட்டிற்குள் போய், என்னுடைய நிலத்தை உம்முடைய வேலைக்காரர் தீக்கொளுத்திப் போட்டது என்ன என்று அவனைக் கேட்டான்.

2சாமு 14:32 அப்சலோம் யோவாபைப் பார்த்து: இதோ, நான் ஏன் கேசூரிலிருந்து வந்தேன்; நான் அங்கே இருந்துவிட்டால் நலம் என்று ராஜாவுக்குச் சொல்லும்படி உம்மை ராஜாவினிடத்தில் அனுப்புவதற்காக உம்மை இங்கே வரும்படி அழைப்பித்தேன்; இப்போதும் நான் ராஜாவின் முகத்தைப் பார்க்கட்டும்; என்மேல் குற்றமிருந்தால் அவர் என்னைக் கொன்று போடட்டும் என்றான்.

II சாமுவேல் - தொகுப்புரை

14 அதிகாரம்

2சாமு 14:33 யோவாப் ராஜாவினிடத்தில் போய், அதை அவனுக்கு அறிவித்தபோது, அப்சலோமை அழைப்பித்தான்; அவன் ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவுக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கினான், அப்பொழுது ராஜா அப்சலோமை முத்தமிட்டான்.

"இரண்டு வருஷம் எருசலேமிலே குடியிருந்தான்" - அப்சலோம் அம்னோனைக் கொலைபண்ணி ஐந்து வருஷமாயிற்று. (2சாமு 13:38). இப்போது தாவீதுக்கு 56 வயதும், அப்சலோமுக்கு 24 வயதும், சாலொமோனுக்கு 6 வயதுமாயிற்று. தாவீது அப்சலோமைப் பொறுத்தளவில் மனம் மாறாமல் கடின இருதயத்தோடு இருக்கிறான். ஐந்து வருஷமாக அப்சலோம் ராஜாவின் முகத்தைக் காணவில்லை. தாவீதும் அவனை மன்னிக்க வில்லை. இதனால் தாவீதுக்கும், அவனுடைய ராஜ்யத்திற்கும் பிரச்சனை உண்டாயிற்று. தாவீது அப்சலோமைப் பூரணமாக மன்னிக்காமல் அரைகுறையாக மன்னித்தான். அவனை எருசலேமிற்குத் திரும்பி வர அனுமதித்தான். ஆனால் அவனைத் தன் குமாரனாக மறுபடியும் ஏற்றுக் கொள்ளவில்லை.

"அப்சலோம் யோவாபை ராஜாவினிடத்தில் அனுப்பும்படி அழைப்பித்தான்" - அப்சலோம் எருசலேமில் தாவீதைக் காணாமலேயே இரண்டு வருஷம் இருக்கிறான். இது அப்சலோமின் மனதிற்கு விசனமாக இருக்கிறது. ஆகையினால் யோவாபை ராஜாவிடத்தில் அனுப்புவதற்காக அவனைக் கூப்பிட்டு அனுப்பினான். தாவீதை விட்டு ஓடிப்போன அப்சலோமை இந்த யோவாப்தான், திரும்ப அழைத்துக் கொண்டு வந்தான். ஆகையினால் யோவாப் தனக்கும், தாவீதுக்கும் இடையிலுள்ள பிரச்சனையைத் தீர்த்து வைப்பான் என்று அப்சலோம் நினைத்தான். ஆனால் யோவாபோ அப்சலோமைப் பார்க்க வரவில்லை. இதனால் கோபமடைந்த அப்சலோம் யோவாபின் வாற்கோதுமை விளைந்திருந்த நிலத்தை தீக்கொளுத்திப் போட்டான். (2சாமு 14:28-31). இறுதியில் அப்சலோம் தாவீது பார்ப்பதற்கு யோவாப் ஒழுங்கு பண்ணினான். (2சாமு 14:32-33).

"நான் ராஜாவின் முகத்தைப் பார்க்கட்டும்; என்மேல் குற்றமிருந்தால் அவர் என்னைக் கொன்று போடட்டும்" - அப்சலோமின் இந்த வார்த்தையைக் கேட்கும்போது இவனுக்குத் தன் தகப்பன்மீது மெய்யான அன்பு இருப்பதுபோன்று தெரியும். தன் தகப்பனுக்கு எதிராக இவன் கலகம் பண்ணமாட்டான் என்பதுபோன்றும் தெரிகிறது. தன்மேல் குற்றம் இருந்தால் தன் தகப்பன் தன்னைக் கொன்றுபோடட்டும் என்றெல்லாம் கூறி, தான் நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாக இருப்பதை வெளிப்படுத்துகிறான். ஆனால் பின்பு மனம்மாறி, அப்சலோம் தாவீதுக்கு எதிராகக் கலகம் பண்ணினான்.

"ராஜா அப்சலோமை முத்தமிட்டான்" - தாவீது ஒரு தகப்பனுக்குரிய கடமையை அப்சலோமிற்கு நிறைவேற்றவில்லை. ராஜா அப்சலோமை முத்தமிட்டாலும் அவனுடைய உள்ளத்தில் அப்சலோமைப் பூரணமாக மன்னித்து, தன் குமாரனாக ஏற்றுக் கொண்டானா என்று தெரியவில்லை. ஆனால் அப்சலோம் மரித்தபோதோ தாவீது அவனுக்காக மனங்கசந்து அழுதான். (2சாமு 18:33).

15 அதிகாரம்

6. உள்நாட்டுக் குழப்பம் - (2இராஜா 25:25; 2சாமு 15:1-19:8; 2:8)

(1) அப்சலோம் இஸ்ரவேலரின் இருதயத்தைக் கவர்ந்து கொள்கிறான்

1சாமு 15:1 இதற்குப்பின்பு, அப்சலோம் இரதங்களையும் குதிரைகளையும், தனக்கு முன் ஓட ஐம்பது சேவகரையும் சம்பாதித்தான்.

1சாமு 15:2 மேலும் அப்சலோம் காலை தோறும் எழுந்திருந்து, பட்டணத்து வாசலுக்குப் போகிற வழி ஓரத்திலே நின்றுகொண்டு, எவனாகிலும் தனக்கு இருக்கிற வழக்கு முகாந்தரமாய் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காகப் போகும்போது, அவனை அழைத்து, நீ எந்த ஊரான் என்று கேட்பான்; அவன் உமது அடியான் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றுக்கடுத்த இன்ன ஊரான் என்றால்,

1சாமு 15:3 அப்பொழுது அப்சலோம் அவனை நோக்கி; இதோ, உன் காரியம் நேர்மையும் நியாயமுமாயிருக்கிறது; ஆனாலும் ராஜாவினிடத்திலே உன் காரியத்தை விசாரிப்பார் ஒருவரும் இல்லை என்பான்.

1சாமு 15:4 பின்னும் அப்சலோம்: வழக்கு வியாஜ்யமுள்ளவர்கள் எல்லாரும் என்னிடத்தில்வந்து, நான் அவர்களுக்கு நியாயஞ்செய்யும்படிக்கு, என்னை தேசத்திலே நியாயாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும் என்பான்.

1சாமு 15:5 எவனாகிலும் ஒருவன் அவனை வணங்க வரும்போது, அவன் தன் கையை நீட்டி அவனைத் தழுவி, முத்தஞ்செய்வான்.

1சாமு 15:6 இந்தப்பிரகாரமாக அப்சலோம் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காக வரும் இஸ்ரவேலருக்கெல்லாம் செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டான்.

"இதற்குப்பின்பு" - அப்சலோம் தாவீதின் ஊருக்கு வந்துவிட்டான். ஆனால் ராஜாவின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. இரண்டு வருஷமாக ராஜாவைப் பார்க்காமலேயே இருக்கிறான். இந்த நிகழ்ச்சி அவ்விரண்டு வருஷங்களுக்குப் பின்பு நடைபெறுகிறது. (2சாமு 14:28-33).

"அப்சலோம் இரதங்களையும் குதிரைகளையும், தனக்கு முன் ஓட ஐம்பது சேவகரையும் சம்பாதித்தான்" - இரதங்களும், குதிரைகளும் பெருமைக்கு அடையாளம். (உபா 17:16,20) ராஜரீகத்திற்கும், அதன் கம்பீரத்திற்கும் அவை அழகு சேர்க்கும். ஒரு ராஜாவுக்கு முன்பாக இவையெல்லாம் முன்னால் போகும்போது அந்த ராஜா போகும் வழியெல்லாம் அவனுக்கு தடையில்லாமல் இருக்கிறது என்று பொருள். அப்சலோம், தைரியசாலி, பெருமைக்காரன், சௌந்தரியமுள்ளவன், சாதுரிய பேச்சுத்திறமையுள்ளவன், பழிவாங்கும் எண்ணமுடையவன், கலகக்காரன். அம்னோன் மரித்த பிறகு தான் ஆட்சிக்கு வரவேண்டுமென்று அப்சலோம் விரும்பினான். தாவீதோடு இதற்காக ஒப்புரவாக முயற்சி பண்ணினான். ஆனால் தாவீதோ அப்சலோமின் முகத்தைக்கூட பார்க்கவில்லை. அப்சலோம் சாலொமோனைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஏனெனில் பத்சேபாள் பாவம் செய்து தாவீதோடு சேர்ந்து கொண்டவள். அவளுடைய புத்திரருக்கு ராஜாங்கத்தில் செல்வாக்கு இராது என்று நினைத்தான். மேலும் அப்சலோம் தாவீதுக்கு எதிராகக் கலகம் பண்ணும்போது சாலொமோன் சிறுபையன்.

அப்சலோம் கலகம் பண்ணுவதற்கு எடுத்த முயற்சிகள்

1. அப்சலோம் இரதங்களையும் குதிரைகளையும், தனக்கு முன் ஓட ஐம்பது சேவகரையும் சம்பாதித்தான்.
2. அப்சலோம் காலைதோறும் எழுந்திருந்து, பட்டணத்து வாசலுக்குப் போகிற வழி ஓரத்திலே நின்றுகொண்டான். (2சாமு 15:2).

15 அதிகாரம்

3. எவனாகிலும் தனக்கு இருக்கிற வழக்கு முகாந்தரமாய் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காகப் போகும்போது, அவனை அழைத்து.....இதோ, உன் காரியம் நேர்மையும் நியாயமுமாயிருக்கிறது; ஆனாலும் ராஜாவினிடத்திலே உன் காரியத்தை விசாரிப்பார் ஒருவரும் இல்லை என்பான். (2சாமு 15:2-4).

4. வழக்கு வியாஜ்யமுள்ளவர்கள் எல்லாரும் என்னிடத்தில்வந்து, நான் அவர்களுக்கு நியாயஞ்செய்யும்படிக்கு, என்னை தேசத்திலே நியாயாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும் என்பான். (2சாமு 15:4-6).

5. அப்சலோம் ராஜாவை நோக்கி: நான் கர்த்தருக்குப் பண்ணின என் பொருத்தனையை எப்ரோனில் செலுத்தும் படிக்கு நான் போக உத்தரவுகொடும். கர்த்தர் என்னை எருசலேமுக்குத் திரும்பி வரப்பண்ணினால், கர்த்தருக்கு ஆராதனை செய்வேன் என்று உமது அடியானாகிய நான் சீரியாதேசத்தில் கேசூரிலே குடியிருக்கும்போது, பொருத்தனை பண்ணினேன் என்றான். (2சாமு 15:7-8).

6. அப்சலோம் இஸ்ரவேல் கோத்திரங்களுக்கெல்லாம் வேவுகாரரை அனுப்பி, நீங்கள் எக்காளத்தொனியைக் கேட்கும் போது, அப்சலோம் எப்ரோனிலே ராஜாவானான் என்று சொல்லுங்கள் என்று சொல்லச்சொல்லி வைத்திருந்தான். (2சாமு 15:10).

7. எருசலேமிலிருந்து வரவழைக்கப்பட்ட இருநூறுபேர் அப்சலோமோடே கூடப் போனார்கள்; அவர்கள் வஞ்சகமின்றி அறியாமையினால் போனார்கள். (2சாமு 15:11).

8. அப்சலோம் பலிகளைச் செலுத்தும் போது,தாவீதின் ஆலோசனைக் காரனாகிய அகித்தோப்பேல் என்னும் கீலோனியனையும் அவன் ஊராகிய கீலோவிலிருந்து வரவழைப்பித்தான்; அப்படியே கட்டுப்பாடு பலத்து,ஜனங்கள் அப்சலோமினிடத்தில் திரளாய் வந்து கூடினார்கள். (2சாமு 15:12).

9. அப்சலோமும், அவனோடு சேர்ந்து கொண்ட கலகத்தாரும் எருசலேமிற்கு வந்து பட்டணத்தைப் பிடித்துக் கொண்டார்கள். (2சாமு 16:15-19).

10. அப்சலோம் அகித்தோப்பேலைப் பார்த்து, நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று ஆலோசனை சொல்லும் என்றான். (2சாமு 16:20-21).

11. அகித்தோப்பேலின் ஆலோசனைப் படியே அப்சலோமுக்கு உப்பரிகையின் மேல் ஒரு கூடாரத்தைப் போட்டார்கள்; அங்கே அப்சலோம் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக, தன் தகப்பனுடைய மறு மனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தான். (2சாமு 16:22-23).

12. ராஜாவுக்கு எதிராகத் தான் அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று அப்சலோம் அகித்தோப்பேலிடத்திலும், ஊசாயினிடத்திலும் ஆலோசனை கேட்டான். (2சாமு 17:1-14).

13. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் கூட்டினான். (2சாமு 17:11-14).

14. யோர்தான் நதியையும் தாண்டி, தாவீதைத் துரத்திச் சென்று, அப்சலோமும், இஸ்ரவேல் ஜனங்களும் கீலேயாத் தேசத்தில் பாளய மிறங்கினார்கள். (2சாமு 17:24-26).

15. எப்பிராயீம் மலையில் அப்சலோம் தாவீதோடும், அவன் மனுஷரோடும் யுத்தம் பண்ணினான். யுத்தத்தில் அப்சலோம் மரித்தான். இதனால் தாவீதுக்கு எதிரான கலகம் முடிவுற்றது. (2சாமு 18:1-18).

15 அதிகாரம்

"உன் காரியம் நேர்மையும் நியாயமுமாயிருக்கிறது" - அப்சலோம் நியாயாதிபதி அல்ல. தன்னை நியாயாதிபதியாக நியமித்தால் அவனுடைய வழக்கு ஜெயம் பெறும் என்று உறுதி கூறுகிறான். இதுபோல பட்டணத்து வாசலுக்குப்போகிற வழி ஓரத்தில் அப்சலோம் நின்றுகொண்டு, ராஜாவினிடத்தில் நியாயத்திற்காகப் போகிறவர்கள் அனைவரையும் பார்த்துக் கூறுகிறான். இதனால் ஜனங்களுடைய மனதில் தாவீதுக்குப் பதிலாக தங்களுக்கு அப்சலோம் ராஜாவாக இருந்தால் நலமாயிருக்குமே என்னும் எண்ணம் உண்டாயிற்று. *(2சாமு 15:3-4).*

"இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டான்" - அப்சலோம் ஒரு திருடன். பொய்சொல்லி, ஏமாற்றி, சாதுரியமாகப் பேசி, ஜனங்களுடைய இருதயத்தைத் திருடிக்கொண்டான். *(2சாமு 15:2-6).*

தாவீதின் தோல்விக்குக் காரணம்

1. தாவீதின் முதுமையும், தேசத்தில் நீதி விசாரிப்பை அவன் புறக்கணித்ததும். *(2சாமு 15:3)*
2. அப்சலோம் இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்து கொண்டது. *(2சாமு 15:6,13)*
3. தாவீதின் பாவங்களினால் ஜனங்களுக்கு அவன்மீது நம்பிக்கையற்றுப் போயிற்று. *(2சாமு 11:1-12:23)*
4. தாவீது பாவம் செய்த தன் குமாரரைத் தண்டிக்காமல் பட்சபாதமாக நடந்து கொண்டான். *(2சாமு 13:1-14:33)*
5. தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம். *(2சாமு 12:10-14)*
6. யோவாபின் மிகப்பெரிய வல்லமையும், துன்மார்க்கமும், அடக்கும் பண்பும். தாவீது இவனுக்கு எதிராக நியாயம் விசாரிக்காமல் இருந்தது. *(2சாமு 3:27-39; 1இராஜா 2:5-6)*
7. ஜனங்களுக்குத் தாவீதின்மீது காணப்பட்ட அதிருப்தி.

(2) குழப்பம் அதிகரிக்கிறது

1சாமு 15:7 நாற்பது வருஷம் சென்றபின்பு, அப்சலோம் ராஜாவை நோக்கி: நான் கர்த்தருக்குப் பண்ணின என் பொருத்தனையை எப்ரோனில் செலுத்தும் படிக்கு நான் போக உத்தரவுகொடும்.

1சாமு 15:8 கர்த்தர் என்னை எருசலேமுக்குத் திரும்பி வரப் பண்ணினால், கர்த்தருக்கு ஆராதனை செய்வேன் என்று உமது அடியானாகிய நான் சீரியாதேசத்தில் கேசூரிலே குடியிருக்கும்போது, பொருத்தனை பண்ணினேன் என்றான்.

1சாமு 15:9 அதற்கு ராஜா, சமாதானத்தோடே போ என்றான்; அப்பொழுது அவன் எழுந்து எப்ரோனுக்குப் போனான்.

1சாமு 15:10 அப்சலோம் இஸ்ரவேல் கோத்திரங்களுக்கெல்லாம் வேவுகாரரை அனுப்பி, நீங்கள் எக்காளத்தொனியைக் கேட்கும் போது, அப்சலோம் எப்ரோனிலே ராஜாவானான் என்று சொல்லுங்கள் என்று சொல்லச்சொல்லி வைத்திருந்தான்.

1சாமு 15:11 எருசலேமிலிருந்து வரவழைக்கப்பட்ட இருநூறுபேர் அப்சலோமோடே கூடப்போனார்கள்; அவர்கள் வஞ்சகமின்றி அறியாமையினால் போனார்கள்.

1சாமு 15:12 அப்சலோம் பலிகளைச் செலுத்தும்போது, தாவீதின் ஆலோசனைக் காரனாகிய அகித்தோப்பேல் என்னும் கீலோனியனையும் அவன் ஊராகிய கீலோவிலிருந்து வரவழைப்பித்தான்; அப்படியே கட்டுப்பாடு பலத்து, ஜனங்கள் அப்சலோமினிடத்தில் திரளாய் வந்து கூடினார்கள்.

15 அதிகாரம்

"நாற்பது வருஷம் சென்றபின்பு" - தாவீது ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டு, நாற்பது வருஷம் சென்ற பின்பு என்று பொருள். (1சாமு 16). ஒரு சில மூலபாஷைப் பதிப்புக்களில், இந்த வாக்கியம் "நாலு வருஷம் சென்ற பின்பு" என்றுள்ளது. நான்கு வருஷம் என்பது அப்சலோம் கேசூரிலிருந்து எருசலேமிற்குத் திரும்பி வந்து, நான்கு வருஷம் சென்ற பின்பு என்றுபொருள். (2சாமு 14: 28-33).

"பொருத்தனை பண்ணினேன்" - அப்சலோம் கர்த்தரிடத்தில் பொருத்தனை பண்ணினதாகக் கூறுகிறான். இது பொய்யா அல்லது மெய்யா என்று தெரியவில்லை. ஏனெனில் இரண்டு மனுஷனுக்கு ஊழியம் செய்ய ஒருவராலும் கூடாது. அப்சலோம் கர்த்தரையும் ஆராதிக்கிறான். கர்த்தரால் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கும் தாவீதுக்கு எதிராகக் கலகமும் பண்ணுகிறான்.

"சமாதானத்தோடே போ" - தாவீது இந்த முறை கர்த்தரிடத்தில் ஆலோசனை கேட்கவில்லை. ஊரீமையும், தும்மீமையும் பயன்படுத்தவில்லை. தாவீது இதற்குரிய தண்டனையை அனுபவித்தான். சமாதானத்தோடே போ என்று தன் மகனை அனுப்பியது தாவீதிற்குச் சாபமாயிற்று. அப்சலோமோடு தாவீது யுத்தம் பண்ண வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று.

"அப்பொழுது அவன் எழுந்து எப்ரோனுக்குப் போனான்" - அப்சலோம் எப்ரோனிலே கர்த்தருக்கு ஆராதனை செய்யப் போகவில்லை. இதன் பின்பு, அவன் தன் தகப்பனையும் பார்க்கவில்லை. ஒரு மதியீனனைப்போல மரத்தில் சிக்கிச் செத்துப்போனான். (2சாமு 18:9-18). எப்ரோன் அப்சலோம் பிறந்த ஊர். அங்கு அவனுக்கு பல நண்பர்கள் இருக்கிறார்கள். அப்சலோம் அவர்களையெல்லாம் ஒன்றுசேர்த்து, தாவீதுக்கு எதிராகச் சதிபண்ணி, கலகம் பண்ணினான்.

"அப்சலோம் இஸ்ரவேல் கோத்திரங்களுக் கெல்லாம் வேவுகாரரை அனுப்பி" - அப்சலோமின் வேவுகாரார்கள் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாருக்கும் மத்தியில் போனார்கள். அங்கு அவர்கள் எக்காளத் தொனியைக் கேட்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொனியைக் கேட்கும்போது, "அப்சலோம் எப்ரோனிலே ராஜாவானான்" என்று அவர்கள் சொல்ல வேண்டும். அக்காலத்தில் எக்காளத்தொனி செய்தி பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. அப்சலோம் எப்ரோனிலே ராஜாவானான் என்னும் செய்தி எக்காளத்தொனியைப்போல ஒவ்வொரு கோத்திரமாகப் பரவிற்று.

"எருசலேமிலிருந்து வரவழைக்கப்பட்ட இருநூறுபேர்" - 200வீரர்கள் அப்சலோமோடு கூட எப்ரோனுக்குப் போனார்கள். அவர்கள் வஞ்சகமின்றி அறியாமையினால் போனார்கள். அப்சலோமின் உள்ளத்தில் இருக்கும் வஞ்சக எண்ணம் அவர்களுக்குத் தெரியாது. தாவீதுக்கு எதிராக அப்சலோம் கலகம் பண்ணுவான் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

"அகித்தோப்பேல்" **(Ahithophel)** - இந்தப் பெயருக்கு "மதியீனத்தின் சகோதரன்" **"brother of folly"** என்று பொருள். இவன் தாவீதின் ஆலோசனைக்காரரில் ஒருவன். மேலும் இவனுடைய குமாரன் தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவனாக இருக்கிறான். (2சாமு 15:12-34; 2சாமு 16:15-23; 2சாமு 17:1-23; 2சாமு 23:34; 1நாளா 27:33-34, சங் 41:9; சங்55:12-14) அப்சலோமும், அகித்தோப்பேலும் தாவீதுக்கு எதிராகக் கலகம் பண்ணுவத்தைக் குறித்து, ஏற்கெனவே பேசி முடிவு பண்ணியிருக்க வேண்டும். இந்தக் கலகத்தைப் பற்றிய எண்ணத்தை அகித்தோப்பேல்தான் ஆரம்பித்து வைத்திருக்க வேண்டும். அகித்தோப்பேல் பத்சேபாளின் தாத்தா. உரியாவைக் கொலை செய்ததற்காகவும், பத்சேபாளைக் கெடுத்துப் போட்டதற்காகவும் அகித்தோப்பேல் தாவீதைப் பழிவாங்குவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். (2சாமு 11:3; 2சாமு 23:34).

"கீலோனியன்" **(Gilonite)** - கீலோ ஊரில் **(Giloh)** வசிக்கிறவன். (2சாமு 23:34).

15 அதிகாரம்

"ஆலோசனைக்காரன்" - அகித்தோப்பேலின் ஆலோசனை மிகவும் ஞானமாக இருக்கும். தேவனிடத்தில் விசாரிப்பது போன்று மெய்யாக இருக்கும். (2சாமு 16:23) அகித்தோப்பேல் ஞானமுள்ளவன். ஆனால் தாவீதுக்கு எதிராக அவனுடைய உள்ளத்தில் கலகக்குணம் பிறந்தபோது, கர்த்தர் அவனுடைய ஞானத்தை மாற்றிவிட்டார். இதனால் அவன் தன் உயிரை மாய்த்துக் கொண்டான். (2சாமு 17:1-23)

"கீலோ" **(Giloh)** - இந்தப் பெயருக்கு "நாடு கடத்துதல்" **"exile"** என்று பொருள். இது யூதாவின் மலைத்தேசத்திலுள்ள ஒரு பட்டணம். (யோசு 15:51).

"ஜனங்கள் அப்சலோமினிடத்தில் திரளாய் வந்து கூடினார்கள்" - அப்சலோமின் கை பலத்தது. தாவீதுக்கு எதிராகக் கலகம் பண்ணுவோரின் எண்ணிக்கை அதிகரித்தது. இந்தச் சூழ்நிலையில் தாவீது 3ஆவது சங்கீதத்தை எழுதினான்.

(3) தாவீது எருசலேமை விட்டு ஓடிப்போகிறான் - (1சாமு 21)

1சாமு 15:13 அதை அறிவிக்கிற ஒருவன் தாவீதினிடத்தில் வந்து, இஸ்ரவேலில் ஒவ்வொருவருடைய இருதயமும் அப்சலோமை பற்றிப்போகிறது என்றான்.

1சாமு 15:14 அப்பொழுது தாவீது எருசலேமிலே தன்னிடத்திலுள்ள தன்னுடையஎல்லா ஊழியக்காரரையும் நோக்கி: எழுந்து ஓடிப்போவோம், இல்லாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை; அவன் தீவிரித்து நம்மிடத்தில் வந்து நம்மைப் பிடித்து, நம்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, நகரத்தைப் பட்டயக்கருக்கினால் சங்காரம் பண்ணாதபடிக்குத் தீவிரமாய்ப் புறப்படுங்கள் என்றான்.

1சாமு 15:15 ராஜாவின் ஊழியக்காரர் ராஜாவைப் பார்த்து: இதோ, ராஜாவாகிய எங்கள் ஆண்டவன் கட்டளையிடும் காரியத்தையெல்லாம் செய்ய உமது அடியாராகிய நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம் என்றார்கள்.

1சாமு 15:16 அப்படியே ராஜாவும் அவனுடைய வீட்டார் எல்லாரும் கால்நடையாய்ப் புறப்பட்டார்கள்; வீட்டைக் காக்க ராஜா மறுமனையாட்டிகளாகிய பத்து ஸ்திரீகளைப் பின்வைத்தான்.

1சாமு 15:17 ராஜாவும் சமஸ்த ஜனங்களும் கால்நடையாய்ப் புறப்பட்டு, சற்றுத் தூரம்போய், ஒரு இடத்திலே தரித்து நின்றார்கள்.

1சாமு 15:18 அவனுடைய ஊழியக்காரர் எல்லாரும், கிரேத்தியர் யாவரும், பிலேத்தியர் யாவரும் அவன் பக்கத்திலே நடந்து போனார்கள்; காத்தூரிலிருந்து கால்நடையாய் வந்திருந்த அறுநூறு பேராகிய கித்தியர் எல்லாரும் ராஜாவுக்குமுன்பாக நடந்தார்கள்.

"இஸ்ரவேலில் ஒவ்வொருவருடைய இருதயமும் அப்சலோமை பற்றிப்போகிறது" - அப்சலோம் ஜனங்களுடைய இருதயத்தைக் கவர்ந்து கொண்டான். (2சாமு 15:6,13). ஒரு காலத்தில் இதே ஜனங்களுடைய இருதயம் தாவீதைப் பற்றிப்போனது. ஏனெனில் அப்போது தாவீது அவர்களைச் சத்துருக்களின் கைகளிலிருந்து இரட்சித்தான். இப்போது ஜனங்கள் தாவீதை விட்டு அப்சலோமிடத்தில் போகிறார்கள்.

"எழுந்து ஓடிப்போவோம், இல்லாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை" - 2சாமு 12:1-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம்.

"ராஜாவின் ஊழியக்காரர்" - தாவீது ராஜாவினிடத்தில் இன்னும் விசுவாசமான ஊழியக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் அநேகர் கிரேத்தியன், பிலேத்தியர், கித்தியர் ஆகியோர் ஆவர். (2சாமு 15:15-18).

"வீட்டைக்காக்க ராஜா மறுமனையாட்டிகளாகிய பத்து ஸ்திரீகளைப் பின்வைத்தான்" - தாவீதின் இந்த மறுமனையாட்டிகளோடு அப்சலோம் சயனித்தான். இதனால் தனக்கும், தாவீதுக்கும் எந்தவிதமான உறவும் இல்லை என்பதை இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிப்படுத்திக் காண்பித்தான். (2சாமு 16:20-23).

II சாமுவேல் - தொகுப்புரை

15 அதிகாரம்

"காத்தூரிலிருந்து கால்நடையாய் வந்திருந்த அறுநூறுபேராகிய கித்தியர்" - இவர்கள் பெலிஸ்திய தேசத்திலுள்ள காத்தூரிலிருந்து வந்திருக்கிறவர்கள். இவர்கள் தாவீதை உண்மையாய்ப் பின்பற்றுகிறார்கள்.

(4) ஈத்தாய்க்கு தாவீதின் ஆலோசனை

1சாமு 15:19 அப்பொழுது ராஜா கித்தியனாகிய ஈத்தாயைப் பார்த்து: நீ எங்களுடனே கூட வருவானேன்? நீ திரும்பிப்போய் ராஜாவுடனேகூட இரு; நீ அந்நியதேசத்தான்; நீ உன் இடத்திற்குத் திரும்பிப் போகலாம்.

1சாமு 15:20 நீ நேற்றுதானே வந்தாய்; இன்று நான் உன்னை எங்களோடே நடந்துவரும்படிக்கு அழைத்துக்கொண்டு போகலாமா? நான் போகக்கூடிய இடத்திற்குப் போகிறேன்; நீ உன் சகோதரரையும் அழைத்துக்கொண்டு திரும்பிப்போ; கிருபையும் உண்மையும் உன்னோடே இருப்பதாக என்றான்.

1சாமு 15:21 ஆனாலும் ஈத்தாய் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: ராஜாவாகிய என் ஆண்டவன் எங்கேயிருப்பாரோ, அங்கே உமது அடியானும், செத்தாலும் பிழைத்தாலும், இருப்பான் என்று கர்த்தருடைய ஜீவனையும் ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

1சாமு 15:22 அப்பொழுது தாவீது ஈத்தாயை நோக்கி: நடந்துவா என்றான்; அப்படியே கித்தியனாகிய ஈத்தாயும் அவனுடைய எல்லா மனுஷரும் அவனோடிருக்கிற எல்லாப் பிள்ளைகளும் நடந்துபோனார்கள்.

1சாமு 15:23 சகல ஜனங்களும் நடந்து போகிறபோது, தேசத்தார் எல்லாரும் மகா சத்தமாய் அழுதார்கள்; ராஜா கீதரோன் ஆற்றைக் கடந்தான்; ஜனங்கள் எல்லாரும் வனாந்தரத்திற்குப் போகிற வழியே நடந்துபோனார்கள்.

"ஈத்தாய்" (Ittai) - இந்தப் பெயருக்கு "உழவன்" **"ploughman"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஈத்தாய்"கள்

1. தாவீதின் நம்பிக்கைக்குரிய அதிகாரிகளில் ஒருவன். 600 பெலிஸ்திய ஊழியக் காரர்களுக்குத் தலைவன். *(2சாமு 15:19-22; 2சாமு 18:2-12)*

2. ரிபாயின் குமாரன் - பென்யமீனன். *(2சாமு 23:29)*

"நீ உன் இடத்திற்குத் திரும்பிப் போகலாம்" - அப்சலோமோடு சேர்ந்திருக்குமாறு தாவீது ஈத்தாய்க்கும், அவனுடைய பெலிஸ்திய ஊழியக்காரருக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்கிறான். ஆனால் அவர்களோ தாவீதோடுகூட இருக்கவே விரும்புகிறார்கள். (2சாமு 15:19). ஈத்தாய் அந்நிய தேசத்தான். அவனும் மற்ற கித்தியரும் காத்தூரில் வசித்து வந்தாலும் அவர்கள் எல்லோருமே புறஜாதியார். ஏதோ ஒரு காரணத்திற்காக அவர்கள் தங்கள் தேசத்திலிருந்து நாடுகடத்தப்பட்டு, காத்தூரில் வந்து குடியேறியிருக்கிறார்கள்.

"கர்த்தருடைய ஜீவனையும் ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்" - ஈத்தாய் ஒரு பெலிஸ்தியன். இவன் தன் புறஜாதி மார்க்கத்திலிருந்து இஸ்ரவேலின் தேவனைத் தன் தெய்வமாக ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். இஸ்ரவேல் புத்திரரைப்போலவே ஈத்தாயும் கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு ஆணையிடுகிறான்.

(5) சாதோக்குக்கும் லேவியருக்கும் தாவீதின் ஆலோசனை

1சாமு 15:24 சாதோக்கும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை அவனோடே கூட இருந்து சுமக்கிற சகல லேவியரும் வந்து, தேவனுடைய பெட்டியை அங்கே வைத்தார்கள்; ஜனங்கள் எல்லாரும் நகரத்திலிருந்து கடந்துதீருமட்டும், அபியத்தார் திரும்பிப்போயிருந்தான்.

II சாமுவேல் - தொகுப்புரை

15 அதிகாரம்

1சாமு 15:25 ராஜா சதோக்கை நோக்கி: தேவனுடைய பெட்டியை நகரத்திற்குத் திரும்பக் கொண்டுபோ; கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நான் அதையும் அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு, என்னைத் திரும்ப வரப்பண்ணுவார்.

1சாமு 15:26 அவர்: உன்மேல் எனக்குப் பிரியமில்லை என்பாராகில், இதோ, இங்கே இருக்கிறேன்; அவர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராக என்றான்.

1சாமு 15:27 பின்னும் ராஜா ஆசாரியனாகிய சாதோக்கை நோக்கி: நீ ஞானதிருஷ்டிக்காரன் அல்லவோ? நீ சமாதானத்தோடே நகரத்திற்குத் திரும்பு; உன் மகன் அகிமாசும் அபியத்தாரின் மகன் யோனத்தானுமாகிய உங்கள் குமாரர் இரண்டுபேரும் உங்களோடே கூடத் திரும்பிப் போகட்டும்.

1சாமு 15:28 எனக்கு அறிவிக்கிறதற்குஉங்களிடத்திலிருந்து செய்திவருமட்டும், நான் வனாந்தரத்தின் வெளிகளிலே தரித்திருப்பேன் என்றான்.

1சாமு 15:29 அப்படியே சாதோக்கும் அபியத்தாரும் தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குத் திரும்பக் கொண்டுபோய்,அங்கே இருந்தார்கள்.

"சாதோக்கும்......அபியத்தாரும்" - இவர்கள் இருவரும் ஆசாரியர்கள். லேவியர் எல்லோரும் தாவீதுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தாவீதோடு உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து வருகிறார்கள். ஆனால் தாவீதோ தேவனுடைய பெட்டியை நகரத்திற்குத் திரும்பக் கொண்டுபோகுமாறு கூறிவிடுகிறான். (2சாமு 15:25-29).

"கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால்" - தாவீது மிகவும் நெருக்கமான சூழ்நிலையில் இருக்கிறான். கர்த்தரையேமுழுமையாகச் சார்ந்திருக்கிறான். (2சாமு 15:25-26) மனுஷருக்கு துன்பமும், பிரச்சனைகளும், இக்கட்டுக்களும், உபத்திரவங்களும் வரும்போது அவர்கள் கர்த்தரை நெருங்கிச் சேர்ந்திருப்பது இயல்பு.

"ஞானதிருஷ்டிக்காரன்"(seer, prophet) - சாதோக்கு ஆசாரியனாகவும், தீர்க்கதரிசியாகவும் ஊழியம் செய்கிறான். பிரதான ஆசாரியன் ஊரீமையும், தும்மீமையும் பயன்படுத்துவதினால் அவன் ஆசாரிய ஊழியத்தோடு சேர்ந்து, தீர்க்கதரிசியின் ஊழியத்தையும் செய்கிறான்.

"அகிமாஸ்" (Ahimaaz) - (1சாமு 14:50)

"யோனத்தான்"(Jonathan)-(1சாமு 13:2)

(6) தாவீதின் துக்கமும் ஜெபமும்

1சாமு 15:30 தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு, ஒலிவமலையின்மேல் ஏறிப்போனான்; அவனோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறினார்கள்.

1சாமு 15:31 அப்சலோமோடே கட்டுப்பாடு பண்ணினவர்களுடன் அகித்தோப்பேலும் சேர்ந்திருக்கிறான் என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாவீது: கர்த்தாவே, அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்தியமாக்கி விடுவீராக என்றான்.

"தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு, ஒலிவமலையின்மேல் ஏறிப்போனான்" - அப்சலோம் தன்னிடத்தில் திரும்பி வந்தபோது தாவீது அவனை மன்னித்து, ஏற்றுக் கொண்டிருந்தால், இப்படி அழுது புலம்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. (2சாமு 14:28-33). தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் ஒலிவமலையின்மேல் தம்முடைய பிதாவை நோக்கி அழுது ஜெபம் பண்ணினார். (லூக்கா 19:37-41). தாவீதோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறினார்கள். முகத்தை மூடுவதும், வெறுங்காலால் நடப்பதும் துக்கிப்பதற்கு அடையாளமாகும். (எஸ் 6:12; ஏசா 20:2,4; எரே 14:4; எசே 24:17).

15 அதிகாரம்

"அப்சலோமோடே கட்டுப்பாடு பண்ணினவர்களுடன் அகித்தோப்பேலும் சேர்ந்திருக்கிறான்" - அகித்தோப்பேல் ஒரு காலத்தில் தாவீதின் நெருங்கிய நண்பனாகவும், ஆலோசனைக்காரனாகவும் இருந்தவன். ஆனால் இப்போதோ அவன் தாவீதைப் புறக்கணித்து விட்டு, அப்சலோமோடு சேர்ந்து கொண்டான். தாவீதின் இருதயத்தால் இதைத் தாங்கிக் கொள்வதற்குக் கடினமாக இருந்திருக்கும். இந்தச் சூழ்நிலையில் தாவீது சங் 41:9, சங் 55:12-14 ஆகிய சங்கீத வசனங்களை இயற்றினான். இந்த வாக்கியங்களுக்கு இரண்டுவிதமான வியாக்கியானங்கள் உள்ளன.ஒன்று அகித்தோப்பேல் தாவீதுக்குத் துரோகம் பண்ணியது. மற்றொன்று யூதாஸ்காரியோத்து இயேசு கிறிஸ்துவுக்குத் துரோகம் பண்ணியது.

"கர்த்தாவே, அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்தியமாக்கிவிடுவீராக" - தாவீதின் விண்ணப்பத்திற்குக் கர்த்தர் ஊசாயின் மூலமாகப் பதிலளித்தார். (2சாமு 17:1-23)

(7) ஊசாயக்குத் தாவீதின் ஆலோசனை

1சாமு 15:32 தாவீது மலையின் உச்சிமட்டும் வந்து, அங்கே தேவனைப் பணிந்து கொண்டபோது, இதோ, அற்கியனாகிய ஊசாய் தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, தலையின்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டவனாய் அவனுக்கு எதிர்ப்பட்டான்.

1சாமு 15:33 தாவீது அவனைப் பார்த்து: நீ என்னோடே கூட நடந்துவந்தால் எனக்குப் பாரமாயிருப்பாய்.

1சாமு 15:34 நீ நகரத்திற்குத் திரும்பிப் போய், அப்சலோமை நோக்கி: ராஜாவே, உம்முடைய ஊழியக் காரனாயிருப்பேன்; முன் நான் உம்முடைய தகப்பனுக்கு ஊழியக்காரனாயிருந்தேன்; இப்போது நான் உமக்கு ஊழியக்காரன் என்றாயேயாகில், எனக்காக அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குவாய்.

1சாமு 15:35 உன்னோடே அங்கே சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்கள் இருக்கிறார்கள் அல்லவா? ராஜாவின் வீட்டிலே பிறக்கிற ஏதேது செய்தி உண்டோ, என்னென்ன கேள்விப் படுகிறாயோ, அதையெல்லாம் சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களுக்கு அறிவிப்பாய்.

1சாமு 15:36 அங்கே அவர்களோடே சாதோக்கின் மகன் அகிமாசும், அபியத்தாரின் மகன் யோனத்தானும், அவர்கள் இரண்டு குமாரரும் இருக்கிறார்கள்; நீங்கள் கேள்விப்படுகிற செய்தியையெல்லாம் அவர்கள் வசமாய் எனக்கு அனுப்புவீர்களாக என்றான்.

1சாமு 15:37 அப்படியே தாவீதின் சிநேகிதனாகிய ஊசாய் நகரத்திற்கு வந்தான்; அப்சலோமும் எருசலேமுக்கு வந்தான்.

"ஊசாய்" **(Hushai)** - இந்தப் பெயருக்கு "அவசரப்படுதல்" **"hastening"** என்று பொருள். இவன் தாவீதின் நண்பனும், ஆலோசனைக் காரனுமாக இருக்கிறான். அகித்தோப்பேலின் ஆலோசனையை இவன் குழப்பினான். (2சாமு 15:32-37; 2சாமு 16:16-18; 2சாமு 17:1-23; 1இராஜா 4:16; 1நாளா 27:33).

"அற்கியன்" **(Archite)** - (2சாமு 16:16; 2சாமு 17:5,14; 1நாளா 27:33) அற்கி பட்டணத்தில் வசிக்கிறவன். எப்பிராயீம், பென்யமீன் ஆகியோருடைய தென்எல்லைப் பகுதியில் இந்தப் பட்டணம் உள்ளது. (யோசு 16:2).

"தலையின்மேல் புழுதியைப் போட்டுக் கொண்டவனாய்" - இது துக்கத்திற்கு அடையாளம். (2சாமு 1:2; 2சாமு 13:19; யோசு 7:6; 1சாமு 4:12; நெகே 9:1; யோபு 2:12; புல 2:10; எசே 27:30; வெளி 18:19).

தாவீது ஊசாயிக்குக் கூறிய காரியங்கள்

1. என்னோடே கூட நடந்துவந்தால் எனக்குப் பாரமாயிருப்பாய்.
2. நீ எருசலேமுக்குத் திரும்பிப்போய் அப்சலோமோடு சேர்ந்துகொள். (2சாமு 15:34).

15 அதிகாரம்

3. எனக்காக அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்கு (2சாமு 15:34).

4. உன்னோடே அங்கே சாதோக், அபியத்தார் என்னும் ஆசாரியர்கள் இருக்கிறார்கள். ராஜாவின் வீட்டிலே பிறக்கிற ஏதேது செய்தி உண்டோ, என்னென்ன கேள்விப் படுகிறாயோ, அதையெல்லாம் சாதோக், அபியத்தார் என்னும் ஆசாரியர்கள் மூலமாக எனக்கு அறிவி. (2சாமு 15:35-36).

"எனக்காக அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குவாய்" - கர்த்தருடைய உதவியினால் ஊசாய் அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்கிப்போட்டான். (2சாமு 17:1-23).

"தாவீதின் சிநேகிதன்" - தாவீது ராஜாவாக இருக்கும்போது மட்டுமல்ல, அவனுடைய துன்ப நேரத்திலும் ஊசாய் தாவீதின் சிநேகிதனாக இருக்கிறான்.

16 அதிகாரம்

(8) மேவிபோசேத்தைப் பற்றி சீபா கூறிய பொய் - *(19:24-30)*

2சாமு 16:1 தாவீது மலை உச்சியிலிருந்து சற்றப்புறம் நடந்துபோனபோது, இதோ, மேவிபோசேத்தின் காரியக்காரனாகிய சீபா, பொதிகளைச் சுமக்கிற இரண்டு கழுதைகளை ஓட்டிக்கொண்டுவந்து, அவனைச் சந்தித்தான்; அவைகளில் இருநூறு அப்பங்களும், வற்றலான நூறு திராட்சப்பழக்குலைகளும், வசந்தகாலத்துப் பலனான நூறு குலைகளும், ஒரு துருத்தி திராட்சரசமும் இருந்தது.

2சாமு 16:2 ராஜா சீபாவைப்பார்த்து: இவைகள் என்னத்திற்கு என்று கேட்டதற்கு, சீபா: கழுதைகள் ராஜாவின் வீட்டார் ஏறுகிறதற்கும், அப்பங்களும் பழங்களும் வாலிபர் புசிக்கிறதற்கும், திராட்சரசம் வனாந்தரத்தில் விடாய்த்துப் போனவர்கள் குடிக்கிறதற்குமே என்றான்.

2சாமு 16:3 அப்பொழுது ராஜா: உன் ஆண்டவனுடைய குமாரன் எங்கே என்று கேட்டதற்கு, சீபா ராஜாவை நோக்கி: எருசலேமில் இருக்கிறான்; இன்று இஸ்ரவேல் வீட்டார் என் தகப்பனுடைய ராஜ்யத்தை என் வசமாய்த் திரும்பப் பண்ணுவார்கள் என்றான் என்று சொன்னான்.

2சாமு 16:4 அப்பொழுது ராஜா சீபாவை நோக்கி: மேவி போசேத்திற்கு உண்டானதெல்லாம் உன்னுடையதாயிற்று என்றான். அதற்குச் சீபா: ராஜாவாகிய என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்க வேண்டும் என்று நான் பணிந்து கேட்டுக்கொள்கிறேன் என்றான்.

"மேவிபோசேத்தின் காரியக்காரனாகிய சீபா" - இவன் தன் எஜமானை வஞ்சித்து விட்டு, தாவீதின் நண்பனைப்போல நாடகமாடி வருகிறான்.

சீபா தாவீதுக்குக் கொடுத்த வெகுமதிகள்

1. பொதிகளைச் சுமக்கிற இரண்டு கழுதைகள். *(2சாமு 16:1-2)*
2. இருநூறு அப்பங்கள். *(2சாமு 16:1)*
3. வற்றலான நூறு திராட்சப்பழக்குலைகள்.
4. வசந்தகாலத்துப் பலனான நூறு குலைகள்.
5. ஒரு துருத்தி திராட்சரசம்

வெகுமதிகளின் விவரம்

1. கழுதைகள் - ராஜாவின் வீட்டார் ஏறுகிறதற்கு
2. அப்பங்களும் பழங்களும் - வாலிபர் புசிக்கிறதற்கு
3. திராட்சரசம் - வனாந்தரத்தில் விடாய்த்துப்போனவர்கள் குடிக்கிறதற்கு.

"எருசலேமில் இருக்கிறான்" - தாவீது மேவிபோசேத்தைப் பற்றி சீபாவிடம் கேட்கிறான். சீபா தன் எஜமானுக்கு உண்மையானவனாக இல்லை. மேவிபோசேத் எருசலேமில் இருக்கிறான் என்று கூறினான். மேலும் "இன்று இஸ்ரவேல் வீட்டார் என் தகப்பனுடைய ராஜ்யத்தை என் வசமாய்த் திரும்பப் பண்ணுவார்கள்" என்று மேவிபோசேத் சொன்னதாக சீபா தாவீதிடம் கூறுகிறான். தாவீது ராஜாவிடம் நல்ல பெயர் எடுப்பதற்காக சீபா நடிக்கிறான். இதன் மூலமாகத் தாவீதுக்கு மேவிபோசேத்தின்மீது கோபம் வரும் என்றும், தன் வசமாக ஒப்படைக்கப்பட்டிருக்கும் மேவிபோசேத்தின் நிலம் தனக்கும், தன் குடும்பத்தாருக்கும் உரியதாகும் என்றும் சீபா திட்டம் பண்ணுகிறான். அவனுடைய திட்டம் நிறைவேறுகிறது. தாவீதும் "மேவிபோசேத்திற்கு உண்டானதெல்லாம் உன்னுடையதாயிற்று" என்று சீபாவிடம் கூறிவிடுகிறான். சீபா ஓர் ஏமாற்றுக்காரன் என்பதைத்தாவீது பின்பு அறிந்து கொள்கிறான். *(2சாமு 16:3-4; 2சாமு 19:24-30)*.

16 அதிகாரம்

"மேவிபோசேத்திற்கு உண்டானதெல்லாம் உன்னுடையதாயிற்று" - இதற்காகத்தான் சீபா நாடகமாடினான். தன் எஜமானைப் பற்றி தாவீதிடம் பொய்கூறினான். தாவீதும் அவசரப்பட்டு, மேவிபோசேத்திற்கு உண்டானதைச் சீபாவிற்குக் கொடுத்து விடுகிறான். (2சாமு 19:24-30).

(9) சீமேயி தாவீதைச் சபிக்கிறான்

2சாமு 16:5 தாவீதுராஜா பகூரிம்மட்டும் வந்தபோது, இதோ, சவுல் வீட்டு வம்சத்தானாயிருக்கிற கேராவின் குமாரனாகிய சீமேயி என்னும் பேருள்ள ஒரு மனுஷன் அங்கேயிருந்து புறப்பட்டு, தூஷித்துக் கொண்டே நடந்துவந்து,

2சாமு 16:6 சகல ஜனங்களும், சகல பலசாலிகளும், தாவீதின் வலது புறமாகவும் இடதுபுறமாகவும் நடக்கையில், தாவீதின்மேலும், தாவீதுராஜாவுடைய சகல ஊழியக்காரர் மேலும் கற்களை எறிந்தான்.

2சாமு 16:7 சீமேயி அவனைத் தூஷித்து: இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்து போ.

2சாமு 16:8 சவுலின் ஸ்தலத்தில் ராஜாவான உன்மேல் கர்த்தர் சவுல் வீட்டாரின் இரத்தப் பழியைத் திரும்பப் பண்ணினார்; கர்த்தர் ராஜ்யபாரத்தை உன் குமாரனாகிய அப்சலோமின் கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்போதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்; நீ இரத்தப்பிரியனான மனுஷன் என்றான்.

2சாமு 16:9 அப்பொழுது செருயாவின் குமாரன் அபிசாய் ராஜாவை நோக்கி: அந்தச் செத்தநாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப் போடட்டுமே என்றான்.

2சாமு 16:10 அதற்கு ராஜா: செருயாவின் குமாரரே, எனக்கும் உங்களுக்கும் என்ன? அவன் என்னைத் தூஷிக்கட்டும்; தாவீதைத் தூஷிக்கவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்; ஆகையால் ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார் என்றான்.

2சாமு 16:11 பின்னும் தாவீது அபிசாயையும் தன் ஊழியக்காரர் எல்லாரையும் பார்த்து: இதோ, என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கத் தேடும்போது, இந்தப் பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான், அவன் தூஷிக்கட்டும்; அப்படிச் செய்ய கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

2சாமு 16:12 ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான்.

2சாமு 16:13 அப்படியே தாவீதும் அவன் மனுஷரும் வழியே நடந்துபோனார்கள்; சீமேயும் மலையின் பக்கத்திலே அவனுக்கு எதிராக நடந்து தூஷித்து, அவனுக்கு எதிராகக் கற்களை எறிந்து, மண்ணைத் தூற்றிக்கொண்டே வந்தான்.

2சாமு 16:14 ராஜாவும் அவனோடிருந்த சகல ஜனங்களும் விடாய்த்தவர்களாய், தங்குமிடத்திலே சேர்ந்து, இளைப்பாறினார்கள்.

"பகூரிம்" (**Bahurim**) - பென்யமீன் தேசத்திலுள்ள ஒலிவமலையின் கிழக்குப் பகுதியிலுள்ள இடம். (2சாமு 3:16; 2சாமு 17:18; 2சாமு 19:16; 1இராஜா 2:8).

"சீமேயி" (**Shimei**) - இந்தப் பெயருக்குக் "கீர்த்தி" **"renowned"** என்று பொருள்.

II சாமுவேல் - தொகுப்புரை

16 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "சீமேயி"கள்

1. பென்யமீன் கோத்திரத்தான் - தாவீது அப்சலோமிடமிருந்து தப்பித்து ஓடியபோது அவனைத் தூஷித்தவன். (2சாமு 16:5-13; 2சாமு 19:16-23)
2. தாவீதின் அதிகாரிகளில் ஒருவன். (1இராஜா 1:8; 1இராஜா 4:18)
3. ஒரு லேவியன் (எண் 3:18)
4. யூதா கோத்திரத்து ராஜவம்சத்தைச் சேர்ந்தவன். (1நாளா 3:19)
5. சக்கூரின் குமாரன் (1நாளா 4:26-27)
6. ரூபன் கோத்திரத்தான். (1நாளா 5:4)
7. மெராரி புத்திரன். (1நாளா 6:29)
8. ஒரு லேவியன் - எதுத்தூனின் குமாரன். (1நாளா 25:3,17)
9. யூதா கோத்திரத்தான். (1நாளா 8:21)
10. லேவியின் பேரன். (1நாளா 23:9)
11. தாவீதின் திராட்சத்தோட்டங்களை மேற்பார்வை செய்தவன். (1நாளா 27:27)
12. எசேக்கியா காலத்தில் இருந்தவன். (2நாளா 29:14)
13. ஒரு லேவியன் (2நாளா 31:12-13)
14. எஸ்றா காலத்திலிருந்த ஒரு லேவியன். (எஸ்றா 10:23)
15. எஸ்றா காலத்திலிருந்த மற்றொரு லேவியன் (எஸ்றா 10:33)
16. பானியின் குமாரன் (எஸ்றா 10:38)
17. கீஷின் குமாரன் (எஸ் 2:5)
18. கெர்சோன் புத்திரன் (சக 12:13)

சீமேயி தாவீதைத் தூஷித்த விவரம்

சீமேயியின் தூஷணவார்த்தைகள் நியாயமற்றது. அதில் உண்மையில்லை. சவுலின் வீட்டாரில் தாவீது யாருடைய இரத்தத்தையும் சிந்தவில்லை. சவுலின் ஸ்தானத்திலும் தாவீது ராஜ்யபாரம் பண்ணவில்லை. மேலும் இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தைக் கர்த்தர் தாவீதிடமிருந்து எடுத்து, அப்சலோமுக்குக் கொடுக்கவில்லை. உரியாவின் இரத்தத்தைச் சிந்தியதற்காகவும், அவனுடைய மனைவியைத் தனக்காக எடுத்துக் கொண்டதற்காகவும் தாவீது பாடுகளை அனுபவிக்கிறான்.(2சாமு 12:10-14)

பென்யமீன் கோத்திரத்தாரில் சவுலும், அவன் குமாரரும் மேலும் பலரும் மரித்துப்போனார்கள். (1சாமு 31) யோவாபுக்கும், அப்னேருக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தில் 360 பேர் மரித்துப்போனார்கள். (2சாமு 2:12-32) அப்னேர் தாவீதிடம் வந்ததின் விளைவாக இஸ்போசேத் மரித்தான். (2சாமு 4:1-12) இதுபோல மேலும் பலர் மரித்துப் போயிருக்கலாம். சீமேயி இதையெல்லாம் மனதில் வைத்து, சவுல் வீட்டாரின் இரத்தப்பழியைக் கர்த்தர் தாவீதின்மீது திரும்பப் பண்ணினார் என்று கூறுகிறான். ஆனால் இந்த மரணங்களுக்கும், தாவீதுக்கும் நேரடித் தொடர்பு எதுவுமில்லை.

தாவீது இரண்டுமுறை சவுலைக் கொன்று போடாமல் அவனைத் தப்ப வைத்தான். தாவீது யூதாவின்மீது மட்டும் ராஜாவாக இருந்து, ஏழரை வருஷங்களாக பென்யமீன் கோத்திரத்தாரோடு யுத்தத்தைத் தவிர்த்தான். (2சாமு 2:8-11; 2சாமு 3:1). தாவீது துணிகரமாகச் சவுலின் வீட்டாருக்கு எந்தச் சேதமும் பண்ணவில்லை. தன்னைத் தூஷித்த சீமேயியைக்கூட தாவீது தண்டிக்காமல் விட்டுவிட்டான். ஆனாலும் அவனைத் தண்டிக்கும் பொறுப்பைத் தாவீது சாலொமோனிடம் ஒப்படைத்து விட்டான். (1இராஜா 2:8-9).

"இரத்தப்பிரியனான மனுஷன்" - யுத்தத்தில் தாவீது அநேகருடைய இரத்தத்தைச் சிந்தியிருக்கிறான். உரியா இரத்தம் சிந்துவதற்கும் தாவீது காரணமாக இருந்திருக்கிறான். மற்றபடி தாவீது இரத்தப்பிரியனான மனுஷன் அல்ல.

"செத்தநாய்" - கிழக்குத் தேசத்தில் ஒரு நபரை அவமரியாதையாக அழைப்பதற்குப் பயன்படுத்தும் சொல்.

II சாமுவேல் - தொகுப்புரை

16 அதிகாரம்

தாவீதின் பொறுமை

தாவீதின் உறவினனான அபிசாய் சீமேயியின் தலையை உடனடியாக வாங்கிப் போட விரும்புகிறான். ராஜாவை சீமேயி தூஷித்ததினால், அபிசாய் அவன்மீது கோபமாயிருக்கிறான். ஆனால் சீமேயியின் இரத்தத்தைச் சிந்த தாவீது விரும்பவில்லை. தான் செய்த பாவங்களுக்காகத் தான் ஏற்கெனவே தண்டிக்கப்பட்டு வருவதாகத் தாவீது நினைக்கிறான். இதற்கு மேலும் தாவீது தன்னுடைய பாவங்களை அதிகரிக்க விரும்பவில்லை. தாவீது அபிசாயிடம் கூறும் வார்த்தைகள் அவனுடைய மனத்தாழ்மையைக் காண்பிக்கிறது. தாவீது தன் ராஜ்யபாரத்தை விட்டு ஒன்றுமில்லாமல் போய்க் கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தன்னைத் தூஷிக்கும்போது தாவீதுக்குக் கோபம் வரவில்லை. கர்த்தர் தன்னைத் தூஷிப்பதற்கு அனுமதித்ததாகக் கூறுகிறான். ஆனாலும் சீமேயி தன்னைத் தூஷித்ததைத் தாவீது மறந்துவிடவில்லை. தன் குமாரனாகிய சாலொமோனிடம் அவனுக்கு நீதி செய்யுமாறு தன் மரணபடுக்கையில் தாவீது கூறுகிறான். (1இராஜா 2:8-11).

"என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கத் தேடும்போது" - தாவீதின் மகனான அப்சலோமே தாவீதைப் பழிவாங்கத் தேடுகிறான். ஆகையினால் பென்யமீன் புத்திரரில் ஒருவன் தன்னைத் தூஷிப்பது பெரிய காரியமல்ல என்று தாவீது கூறிவிடுகிறான். கர்த்தர் அனுமதித்ததினால், இந்தக் காரியங்களெல்லாம் நடைபெறுவதாகத் தாவீது நம்புகிறான். (2சாமு 16:11-13).

"அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார்" - மனுஷருடைய நிந்தையையும், தூஷணத்தையும் சந்திப்பதற்குத் தாவீது இங்கு நல்ல வாக்கியத்தைக் கூறியிருக்கிறான். கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். கர்த்தர் இந்த நிந்தைக்குப் பதிலாகத் தனக்கு நன்மையைச் செய்வார் என்று தாவீது நம்புகிறான். கர்த்தர் நியாயாதிபதியாக இருக்கிறார். தம்முடைய சத்துருக்களை அவர் பழிவாங்குவார். தூஷிப்பதும், ஆசீர்வதிப்பதும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே நிறைவேறும். நன்மையும், தீமையும் கர்த்தருடைய செயல். நம்முடைய வாழ்வில் நடைபெறும் எல்லாக் காரியங்களையும் கர்த்தரே அனுப்பியிருக்கிறார் என்று முடிவு பண்ணிவிடக்கூடாது. மனுஷருடைய வாழ்வில் நடைபெறும் பல காரியங்களுக்கு மனுஷரே பொறுப்பு ஏற்கவேண்டும். சீமேயி தாவீதைத் தூஷித்தது கர்த்தருடைய பிரமாணத்திற்கு எதிரான காரியம். (யாத் 22:28). சீமேயி தூஷணவார்த்தைகளைத் தாவீது ஏற்றுக் கொண்டது அவனுடைய மனப்பக்குவத்தையும், மனத்தாழ்மையையும் காண்பிக்கிறது.

"மண்ணைத் தூற்றிக்கொண்டே வந்தான்" - கிழக்குத் தேசத்தில் மண்ணைத் தூற்றுவது கோபத்திற்கும், சாபத்திற்கும் அடையாளம். அந்த நபருக்கு துன்பமும், துயரமும் வேதனையும், விபத்தும், மரணமும் வரவேண்டுமென்று தூற்றுகிறவர்கள் சாபமிடுவார்கள். (அப் 22:23) சீமேயியின் கிரியைகள் பிசாசின் கிரியைகளாகும். அவனுடைய கோபத்திற்குக் கர்த்தர் காரணமல்ல. அவனுடைய சாபவார்த்தைகளைக் கர்த்தர் நிறைவேற்றப் போவதில்லை.

(10) அப்சலோம் எருசலேமுக்கு வருகிறான் - (1சாமு 12:11-12)

2சாமு 16:15 அப்சலோமும் இஸ்ரவேல் மனுஷராகிய சகல ஜனங்களும் அவனோடேகூட அகித்தோப்பேலும் எருசலேமுக்கு வந்தார்கள்.

2சாமு 16:16 அற்கியனாகிய ஊசாய் என்னும் தாவீதின் சிநேகிதன் அப்சலோமிடத்தில் வந்தபோது, ஊசாய் அப்சலோமை நோக்கி: ராஜாவே வாழ்க, ராஜாவே வாழ்க என்றான்.

2சாமு 16:17 அப்பொழுது அப்சலோம் ஊசாயைப் பார்த்து: உன் சிநேகிதன்மேல் உனக்கு இருக்கிற தயை இதுதானோ? உன் சிநேகிதனோடே நீ போகாதே போனது என்ன என்று கேட்டான்.

II சாமுவேல் - தொகுப்புரை

16 அதிகாரம்

2சாமு 16:18 அதற்கு ஊசாய் அப்சலோமை நோக்கி: அப்படி அல்ல, கர்த்தரும் இந்த ஜனங்களும் இஸ்ரவேல் மனுஷரும் அனைவரும் தெரிந்து கொள்ளுகிறவரையே நான் சேர்ந்து அவரோடே இருப்பேன்.

2சாமு 16:19 இதுவும் அல்லாமல், நான் யாரிடத்தில் சேவிப்பேன்? அவருடைய குமாரனிடத்தில் அல்லவா? உம்முடைய தகப்பனிடத்தில் எப்படி சேவித்தேனோ, அப்படியே உம்மிடத்திலும் சேவிப்பேன் என்றான்.

2சாமு 16:20 அப்சலோம் அகித்தோப்பேலைப் பார்த்து, நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று ஆலோசனை சொல்லும் என்றான்.

2சாமு 16:21 அப்பொழுது அகித்தோப்பேல் அப்சலோமை நோக்கி: வீட்டைக்காக்க உம்முடைய தகப்பன் பின்வைத்த அவருடைய மறுமனையாட்டிகளிடத்தில்பிரவேசியும், அப்பொழுது உம்முடைய தகப்பனுக்கு நாற்றமாய்ப்போனீர் என்பதை இஸ்ரவேலர் எல்லாரும் கேள்விப்பட்டு, உம்மோடிருக்கிற எல்லாருடைய கைகளும் பலக்கும் என்றான்.

2சாமு 16:22 அப்படியே அப்சலோமுக்கு உப்பரிகையின் மேல் ஒரு கூடாரத்தைப் போட்டார்கள்; அங்கே அப்சலோம் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக, தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தான்.

2சாமு 16:23 அந்நாட்களில் அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை தேவனுடைய வாக்கைப்போல இருந்தது; அப்படி அகித்தோப்பேலின் ஆலோசனை யெல்லாம் தாவீதுக்கும் இருந்தது, அப்சலோமுக்கும் அப்படியே இருந்தது.

"ஊசாய் என்னும் தாவீதின் சிநேகிதன்" - ஊசாய் அப்சலோமிடத்தில் வருகிறான். ஆனாலும் இன்னும் அவன் தாவீதின் சிநேகிதனாகவே இருக்கிறான். (2சாமு 16:18) தன்னுடைய சிநேகிதன் யார், தன்னுடைய சத்துரு யார் என்று அப்சலோமால் இன்னும் வேறுபிரித்துப் பார்க்க முடியவில்லை. அவன் ஊசாயைத் தன் பக்கமாக ஏற்றுக் கொள்கிறான். ஊசாய் அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குவதற்காக வந்திருக்கிறவன். (2சாமு 17:1-23).

"வீட்டைக்காக்க உம்முடைய தகப்பன் பின்வைத்த அவருடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசியும்" - அகித்தோப்பேல் தன் பேத்தியாகிய பத்சேபாளின் நிமித்தம் தாவீதைப் பழிவாங்குவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். (2சாமு 11:3; 2சாமு 23:34). அவன் எதிர்பார்த்த வேளை வந்துவிட்டது. தாவீதின் மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசிக்குமாறு அகித்தோப்பேல் அப்சலோமுக்கு ஆலோசனை கூறுகிறான். அப்சலோம் இந்தக் காரியத்தைச் செய்துவிட்டால் அவனால் இனிமேல் தாவீதோடு ஒப்புரவாகவே முடியாது. மேலும் அகித்தோப்பேலின் ஆலோசனை நாத்தான் கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறும் வண்ணமாகவும் அமைந்திருக்கிறது. (2சாமு 12:11). தாவீது பத்சேபாளை எங்கு பார்த்தானோ, அதே இடத்திலேயே அப்சலோம் தாவீதின் மறுமனையாட்டிகளில் பிரவேசித்தான். (2சாமு 16:22; 2சாமு 11:2). ஒரு குமாரன் தன் தகப்பனுடைய மனைவிகளிடத்தில் பிரவேசிப்பது அருவருப்பான காரியம். இதற்கு மரண தண்டனை கொடுக்கப்பட வேண்டும். (லேவி 20:11). இப்படிப்பட்ட தாறுமாறுகள் புறஜாதியாரிடத்திலும் காணப்படாது. (1கொரி 5:1). தாவீது தன் பத்து மறுமனையாட்டிகளையும் எருசலேமிலுள்ள தன்னுடைய வீட்டைக் காப்பதற்காகப் பின்வைத்துப் போனான். (2சாமு 15:16).

"அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை" - தாவீதோடு யுத்தம் பண்ணுமாறு அகித்தோப்பேல் அப்சலோமுக்கு ஆலோசனை கூறுகிறான். (2சாமு 16:21-22; 2சாமு 17:1-6) ஆனால் ஊசாய் மாற்று ஆலோசனை கூறி அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்கி விடுகிறான். (2சாமு 17:7-14). இதனால் அவமானமடைந்த அகித்தோப்பேல் தன் ஜீவனை மாய்த்துக் கொண்டான்.

"தேவனுடைய வாக்கு" **(oracle of God)** - (1பேதுரு 4:11)

17 அதிகாரம்

(11) அகித்தோப்பேல், ஊசாய் ஆகியோரின் முரண்பட்ட ஆலோசனைகள்

2சாமு 17:1 பின்பு அகித்தோப்பேல் அப்சலோமை நோக்கி: நான் பன்னீராயிரம் பேரைத் தெரிந்துகொண்டு எழுந்து, இன்று இராத்திரி தாவீதைப் பின்தொடர்ந்து போகட்டும்.

2சாமு 17:2 அவன் விடாய்த்தவனும் கைதளர்ந்தவனுமாயிருக்கையில், நான் அவனிடத்தில் போய், அவனைத் திடுக்கிடப்பண்ணுவேன்; அப்பொழுது அவனோடிருக்கும் ஜனங்களெல்லாரும் ஓடிப்போவதினால், நான் ராஜா ஒருவனைமாத்திரம் வெட்டி,

2சாமு 17:3 ஜனங்களையெல்லாம் உம்முடைய வசமாய்த் திரும்பப் பண்ணுவேன், இப்படிச் செய்ய நீர் வகைதேடினால், எல்லாரும் திரும்பினபின் ஜனங்கள் சமாதானத்தோடு இருப்பார்கள் என்றான்.

2சாமு 17:4 இந்த வார்த்தை அப்சலோமின் பார்வைக்கும், இஸ்ரவேலுடைய சகல மூப்பரின் பார்வைக்கும் நலமாய்த் தோன்றினது.

2சாமு 17:5 ஆகிலும் அப்சலோம்: அற்கியனாகிய ஊசாயைக் கூப்பிட்டு, அவன் வாய்மொழியையும் கேட்போம் என்றான்.

2சாமு 17:6 ஊசாய் அப்சலோமிடத்தில் வந்தபோது, அப்சலோம் அவனைப் பார்த்து: இந்தப் பிரகாரமாக அகித்தோப்பேல் சொன்னான்; அவன் வார்த்தையின்படி செய்வோமா? அல்லவென்றால், நீ சொல் என்றான்.

2சாமு 17:7 அப்பொழுது ஊசாய் அப்சலோமை நோக்கி: அகித்தோப்பேல் இந்தவிசை சொன்ன ஆலோசனை நல்லதல்ல என்றான்.

2சாமு 17:8 மேலும் ஊசாய்: உம்முடைய தகப்பனும் அவன் மனுஷரும் பலசாலிகள் என்றும், வெளியிலேகுட்டிகளைப் பறி கொடுத்த கரடியைப்போல மனமெரிகிறவர்கள் என்றும் நீர் அறிவீர்; உம்முடைய தகப்பன் யுத்த வீரனுமாயிருக்கிறார்; அவர் இராக் காலத்தில் ஜனங்களோடே தங்கமாட்டார்.

2சாமு 17:9 இதோ, அவர் இப்பொழுது ஒரு கெபியிலாவது, வேறே யாதோரிடத்திலாவது ஒளித்திருப்பார்; துவக்கத்திலேதானே நம்முடையவர்களில் சிலர் பட்டார்களேயானால், அதைக் கேட்கிற யாவரும் அப்சலோமைப் பின்செல்லுகிற ஜனங்களில் சங்காரம் உண்டாயிற்று என்பார்கள்.

2சாமு 17:10 அப்பொழுது சிங்கத்தின் இருதயத்திற்கொத்த இருதயமுள்ள பலவானாயிருக்கிறவனுங்கூட கலங்கிப் போவான்; உம்முடைய தகப்பன் சவுரியவான் என்றும், அவரோடிருக்கிறவர்கள் பலசாலிகள் என்றும், இஸ்ரவேலர் எல்லாரும் அறிவார்கள்.

2சாமு 17:11 ஆதலால் நான் சொல்லுகிற யோசனையாவது, தாண்முதல் பெயெர்செபாமட்டும் இருக்கிற கடற்கரை மணலத்தனை திரட்சியான இஸ்ரவேலர் எல்லாரும் உம்மண்டையில் கூட்டப்பட்டு, நீர்தானே கூட யுத்தத்திற்குப் போக வேண்டும்.

2சாமு 17:12 அப்பொழுது அவரைக் கண்டுபிடிக்கிற எவ்விடத்திலாகிலும் நாம் அவரிடத்தில் போய், பனி பூமியின்மேல் இறங்குவதுபோல அவர்மேல் இறங்குவோம்; அப்படியே அவரோடிருக்கிற எல்லா மனுஷரிலும் ஒருவனும் அவருக்கு மீந்திருப்பதில்லை.

2சாமு 17:13 ஒரு பட்டணத்திற்குள் புகுந்தாரேயானால், இஸ்ரவேலர் எல்லாரும் அந்தப் பட்டணத்தின்மேல் கயிறுகளைப் போட்டு, அங்கே ஒரு பொடிக்கல்லும் காணப்படாதே போகுமட்டும், அதை இழுத்து ஆற்றிலே போடுவார்கள் என்றான்.

17 அதிகாரம்

"நான் பன்னீராயிரம் பேரைத் தெரிந்து கொண்டு" - அப்சலோமிடம் பல ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் இருந்திருக்க வேண்டும். அவர்களில் 12,000பேரைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அகித்தோப்பேல் ஆலோசனை கூறுகிறான்.

அகித்தோப்பேலின் ஆலோசனையும், ஊசாயும் ஆலோசனையும்

அகித்தோப்பேல் அப்சலோமுக்கு ஏற்கெனவே 2சாமு 16:21-23 ஆகிய வசனங்களில் தாவீதின் மறுமனையாட்டிகளோடே சேருமாறு ஆலோசனை கூறினான். இப்போது பன்னீராயிரம் பேரைத் தெரிந்துகொண்டு எழுந்து, இன்று இராத்திரி தாவீதைப் பின்தொடர்ந்து போக வேண்டும் என்று மற்றொரு ஆலோசனையைக் கூறுகிறான். தாவீது விடாய்த்தவனும் கைதளர்ந்தவனுமாயிருக்கையில் அவனைத் திடுக்கிடப்பண்ணலாம். அப்பொழுது அவனோடிருக்கும் ஜனங்களெல்லாரும் ஓடிப்போவதினால், ராஜா ஒருவனைமாத்திரம் வெட்டிப்போடலாம் என்று ஆலோனை கூறுகிறான். இதன் பின்பு ஜனங்கள் சமாதானத்தோடே இருப்பார்கள் என்பது அகித்தோப்பேலின் ஆலோசனை. (2சாமு 17:1-3). அப்சலோமுக்கும், இஸ்ரவேலின் மூப்பருக்கும் இந்த ஆலோசனை நல்ல ஆலோசனையாக இருந்தது. ஆனால் அவர்கள் ஊசாயின் ஆலோசனையையும் கேட்க விரும்பினார்கள். ஊசாயின் ஆலோசனையைக் கேட்டபின்பு, அவர்கள் அகித்தோப்பேலின் ஆலோசனையைத் தள்ளிவிட்டு, ஊசாயின் ஆலோசனையை அங்கிகரித்தார்கள். இதனால் அவமானமடைந்த அகித்தோப்பேல் தன் ஜீவனை மாய்த்துக் கொண்டான்.

அகித்தோப்பேலின் ஆலோசனை

1. நான் பன்னீராயிரம் பேரைத் தெரிந்து கொண்டேன். (2சாமு 17:1).
2. இன்று இராத்திரி தாவீதைப் பின் தொடர்ந்து போவேன்.
3. அவன் விடாய்த்தவனும் கைதளர்ந்தவனுமாயிருக்கையில், நான் அவனிடத்தில் போவேன். (2சாமு 17:2).
4. அவனைத் திடுக்கிடப்பண்ணுவேன்.
5. அப்பொழுது அவனோடிருக்கும் ஜனங்களெல்லாரும் ஓடிப்போவார்கள்.
6. நான் ராஜா ஒருவனைமாத்திரம் வெட்டுவேன்.
7. ஜனங்களையெல்லாம் உம்முடைய வசமாய்த் திரும்பப்பண்ணுவேன். (2சாமு 17:3).

ஊசாயின் ஆலோசனை

1. அகித்தோப்பேல் இந்தவிசை சொன்ன ஆலோசனை நல்லதல்ல (2சாமு 17:7).
2. உம்முடைய தகப்பனும் அவன் மனுஷரும் பலசாலிகள் என்று நீர் அறிவீர். (2சாமு 17:8).
3. அவர்கள் வெளியிலேகுட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப்போல மனமெரிகிறவர்கள் என்று நீர் அறிவீர்.
4. உம்முடைய தகப்பன் யுத்த வீரனுமாயிருக்கிறார். அவர் இராக்காலத்தில் ஜனங்களோடே தங்கமாட்டார்.
5. அவர் இப்பொழுது ஒரு கெபியிலாவது, வேறே யாதோரிடத்திலாவது ஒளித்திருப்பார் (2சாமு 17:9).
6. துவக்கத்திலேதானே நம்முடையவர்களில் சிலர் பட்டார்களேயானால், அதைக் கேட்கிற யாவரும் அப்சலோமைப் பின்செல்லுகிற ஜனங்களில் சங்காரம் உண்டாயிற்று என்பார்கள். அப்பொழுது சிங்கத்தின் இருதயத்திற்கொத்த இருதயமுள்ள பலவானாயிருக்கிறவனுங் கூட கலங்கிப்போவான் (2சாமு 17:9-10).

II சாமுவேல் – தொகுப்புரை

17 அதிகாரம்

7. உம்முடைய தகப்பன் சவுரியவான் என்றும், அவரோடிருக்கிறவர்கள் பலசாலிகள் என்றும், இஸ்ரவேலர் எல்லாரும் அறிவார்கள். (2சாமு 17:10).

8. ஆதலால் நான் சொல்லுகிற யோசனையாவது, தாண்முதல் பெயெர்செபாமட்டும் இருக்கிற கடற்கரை மணலத்தனை திரட்சியான இஸ்ரவேலர் எல்லாரும் உம்மண்டையில் கூட்டப் பட்டும். (2சாமு 17:11).

9. நீர்தானே கூட யுத்தத்திற்குப் போகவேண்டும்.

10. அவரைக் கண்டுபிடிக்கிற எவ்விடத்திலாகிலும் நாம் அவரிடத்தில் போவோம்.(2சாமு 17:12).

11. பனி பூமியின்மேல் இறங்குவதுபோல அவர்மேல் இறங்குவோம்.

12. அவரோடிருக்கிற எல்லா மனுஷரிலும் ஒருவனும் அவருக்கு மீந்திருப்பதில்லை.

13. ஒரு பட்டணத்திற்குள் புகுந்தாரேயானால், இஸ்ரவேலர் எல்லாரும் அந்தப் பட்டணத்தின்மேல் கயிறுகளைப் போடுவோம். (2சாமு 17:13).

14. அங்கே ஒரு பொடிக்கல்லும் காணப்படாதே போகுமட்டும், அதை இழுத்து ஆற்றிலே போடுவோம்.

அகித்தோப்பேலும், ஊசாயும் அப்சலோமுக்கு ஆலோசனை கூறுகிறார்கள். ஊசாயின் ஆலோசனையே அப்சலோமுக்கும், இஸ்ரவேலின் மூப்பருக்கும் நல்ல ஆலோசனையாகப் படுகிறது. அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குகிறதற்காகக் கர்த்தர் இவ்வாறு கட்டளையிட்டிருக்கிறார். (2சாமு 17:14). அப்சலோம் தன் யோசனையின்படி நடக்கவில்லை என்று அகித்தோப்பேல் கண்டபோது, தன் வீட்டுக்குப்போய் நான்றுகொண்டு செத்தான். (2சாமு 17:23). இந்தச் சம்பவத்தினால் தாவீதுக்குத் தப்பியோடுவதற்கும், யுத்தத்திற்கு ஆயத்தமாவதற்கும் சமயம் கிடைக்கிறது.

"நான் ராஜா ஒருவனைமாத்திரம் வெட்டி" - பத்சேபாளின் நிமித்தமாகத் தாவீது அகித்தோப்பேலின் சத்துருவானான். ராஜாவை வெட்டிப்போடுவது அகித்தோப்பேலுக்குச் சந்தோஷமான காரியம். அகித்தோப்பேலின் ஆலோசனை அப்சலோமுக்கு இனிமையாய் இருக்கிறது. ஆனால் ஊசாய் வந்து, அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்கிவிட்டான். (2சாமு 17:4,14).

"அகித்தோப்பேல் இந்தவிசை சொன்ன ஆலோசனை நல்லதல்ல" - அகித்தோப்பேலின் ஆலோசனை நல்லதுதான். ஆனால் இப்பொழுது நல்லதல்ல என்று ஊசாய் அதை அபத்தமாக்க ஆரம்பிக்கிறான். இதனால் அகித்தோப்பேலின் ஆலோசனையைக் குறித்து அப்சலோமுக்கும், இஸ்ரவேலின் மூப்பருக்கும் சந்தேகம் உண்டாயிற்று.

"உம்முடைய தகப்பனும் அவன் மனுஷரும் பலசாலிகள்" - ஊசாய் 2சாமு 17:8-10 ஆகிய வசனங்களில் கூறும் காரியங்கள் அவர்கள் எல்லோருக்கும் ஏற்கெனவே நன்றாகத் தெரிந்திருக்கும் செய்தி. தாவீது இஸ்ரவேல் தேசத்தில் மகா பெரிய பராக்கிரமசாலியாக இருக்கிறான். அவனுடைய 56 வயதிலும் அவனை மேற்கொள்ள யாராலும் முடியாது. தாவீதோடு இருக்கிறவர்களும் பராக்கிரமசாலிகள். பொதுவாக தாவீது இராக்காலத்தில் ஜனங்களோடே தங்குவதில்லை.

"அப்சலோமைப் பின்செல்லுகிற ஜனங்களில் சங்காரம் உண்டாயிற்று" - போர்முனையில் தோல்வியைப் பற்றிய சிறிய செய்திகூட போர்வீரர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி விடும். குழப்பத்தில் போர்வீரர்கள் பயந்து ஓடிப்போவார்கள். (2சாமு 10:13-14; நியா 20:32-39; 1சாமு 14:14).

"ஆதலால் நான் சொல்லுகிற யோசனையாவது" - ஊசாயின் யோசனையை அப்சலோமும், இஸ்ரவேலின் மூப்பரும் அங்கிகரித்து, அகித்தோப்பேலின் யோசனையைத் தள்ளிவிடுகிறார்கள். (2சாமு 17:11-14,23).

17 அதிகாரம்

"நீர்தானே கூட யுத்தத்திற்குப் போக வேண்டும்" - யுத்தத்தில் தாவீதை ஜெயித்தால் அப்சலோமுக்குப் பெருமை உண்டாகும். அவன் எப்போதுமே பெருமையை விரும்புகிறவன். அகித்தோப்பேலின் ஆலோசனைக்கு இது நேர்மாறாக இருக்கிறது. தாவீதைக் கொன்று அகித்தோப்பேல் நல்ல பெயர் எடுக்கலாம் என்று நினைத்தான். ஆனால் இங்கோ அந்த மேன்மையை ஊசாய் அப்சலோமுக்குத் தருகிறான். (2சாமு 17:1-3).

(12) அகித்தோப்பேலின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை - (வசனம் 23; 16:23)

2சாமு 17:14 அப்பொழுது அப்சலோமும் இஸ்ரவேல் மனுஷர் அனைவரும்: அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பார்க்கிலும் அற்கியனாகிய ஊசாயின் ஆலோசனை நல்லது என்றார்கள்; இப்படி கர்த்தர் அப்சலோமின்மேல் பொல்லாப்பை வரப்பண்ணும் பொருட்டு, அகித்தோப்பேலின் நல்ல ஆலோசனையை அபத்தமாக்குகிறதற்குக் கர்த்தர் கட்டளையிட்டார்.

"அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பார்க்கிலும் அற்கியனாகிய ஊசாயின் ஆலோசனை நல்லது" - இது அகித்தோப்பேலுக்குக் கசப்பாக இருக்கிறது. அகித்தோப்பேல் தாவீதுக்கும், அப்சலோமுக்கும் ஆலோசனைக்காரனாக இருந்தவன். அவன் நல்ல ஆலோசனைதான் கூறினான். அது அவர்களுக்கே தெரியாது. கர்த்தர் அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்கச் சித்தம் கொண்டபடியினால், அவனுடைய ஆலோசனை அங்கிகரிக்கப் படவில்லை. (2சாமு 17:14,23) இதுவரையிலும் அகித்தோப்பேலின் ஆலோசனை புறக்கணிக்கப் படவில்லை. இப்போதுதான் முதல் முறையாகப் புறக்கணிக்கப்படுகிறது. தன்னுடைய ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படாததினால் யுத்தத்தில் தாவீதே ஜெயிப்பான் என்பதும், ஜெயித்தவுடன் அவன் தன்னைப் பழிவாங்கிப் போடுவான் என்பதும் அகித்தோப்பேலுக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் அவன் தன் உயிரை மாய்த்துக் கொள்ளத் தீர்மானம் பண்ணுகிறான்.

(13) ஊசாய் தாவீதுக்குக் கூறிய ஆலோசனை

2சாமு 17:15 பின்பு ஊசாய், சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களைப் பார்த்து: இன்ன இன்னபடி அகித்தோப்பேல் அப்சலோமுக்கும் இஸ்ரவேலின் மூப்பருக்கு ஆலோசனை சொன்னான்; நானோ இன்ன இன்னபடி ஆலோசனை சொன்னேன்.

2சாமு 17:16 இப்பொழுதும் நீங்கள் சீக்கிரமாய்த் தாவீதுக்கு அறிவிக்கும் படிக்குச் செய்தி அனுப்பி: நீர் இன்று இராத்திரி வனாந்தரத்தின் வெளிகளிலே தங்கவேண்டாம்; ராஜாவும் அவரோடிருக்கிற சகல ஜனங்களும் விழுங்கப்படாதபடிக்குத் தாமதம் இல்லாமல் அக்கரைப்படவேண்டும் என்று சொல்லச்சொல்லுங்கள் என்றான்.

2சாமு 17:17 யோனாத்தானும் அகிமாசும், தாங்கள் நகரத்தில் பிரவேசிக்கிறதினால் காணப் படாதபடிக்கு, இன்றோகேல் அண்டை நின்றுகொண்டிருந்தார்கள்; ஒரு வேலைக்காரி போய், அதை அவர்களுக்குச் சொன்னாள்; அவர்கள் தாவீது ராஜாவுக்கு அதை அறிவிக்கப் போனார்கள்.

2சாமு 17:18 ஒரு பிள்ளையாண்டான் அவர்களைக் கண்டு, அப்சலோமுக்கு அறிவித்தான்; ஆகையால் அவர்கள் இருவரும் சீக்கிரமாய்ப் போய், பகூரிமிலிருக்கிற ஒரு மனுஷன் வீட்டிற்குள் பிரவேசித்தார்கள்; அவன் முற்றத்தில் ஒரு கிணறு இருந்தது; அதில் இறங்கினார்கள்.

2சாமு 17:19 வீட்டுக்காரி ஒரு பாயை எடுத்து, கிணற்றுவாயின்மேல் விரித்து, காரியம் வெளிப்படாதபடிக்கு, அதின்மேல் நொய்யைப் பரப்பிவைத்தாள்.

2சாமு 17:20 அப்சலோமின் சேவகர் அந்த ஸ்திரீயினிடத்தில் வீட்டிற்குள் வந்து: அகிமாசும் யோனத்தானும் எங்கே என்று கேட்டார்கள்; அவர்களுக்கு அந்த ஸ்திரீ: வாய்க்காலுக்கு அப்பாலே போய் விட்டார்கள் என்றாள்; இவர்கள் தேடிக் காணாதேபோய், எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

17 அதிகாரம்

2சாமு 17:21 இவர்கள் போனபிற்பாடு, அவர்கள் கிணற்றிலிருந்து ஏறிவந்து, தாவீது ராஜாவுக்கு அறிவித்து, தாவீதை நோக்கி: சீக்கிரமாய் எழுந்து ஆற்றைக் கடந்துபோங்கள்; இன்னபடி அகித்தோப்பேல் உங்களுக்கு விரோதமாய் ஆலோசனை சொன்னான் என்றார்கள்.

2சாமு 17:22 அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த சகல ஜனங்களும் எழுந்து யோர்தானைக் கடந்து போனார்கள்; பொழுது விடிகிறதற்குள்ளாக யோர்தானைக் கடவாதவன் ஒருவனும் இல்லை.

"பின்பு ஊசாய், சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களைப் பார்த்து" - தாவீது தன் நண்பனான ஊசாயை அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குவதற்காக அப்சலோமிடம் அனுப்பினான். (2சாமு 15:32-37). ஊசாய் இதைச் செய்து முடித்த பின்பு, இந்தச் செய்தியைச் சாதோக், அபியத்தார் என்னும் ஆசாரியர்கள் மூலமாக அனுப்புகிறான். மேலும் தாவீதும், அவன் ஜனங்களும் எவ்வாறு தப்பிக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறி அனுப்புகிறான். இன்று இராத்திரி வனாந்தரத்தின் வெளிகளிலே தங்கவேண்டாம் என்றும், ராஜாவும் அவரோடிருக்கிற சகல ஜனங்களும் விழுங்கப்படாதபடிக்குத் தாமதம் இல்லாமல் அக்கரைப்படவேண்டும் என்றும் ஊசாய் தாவீதுக்கு ஆலோசனை கூறி அனுப்பினான். (2சாமு 17:15-16).

"இன்றோகேல்" **(En-rogel)** - இந்தப் பெயருக்கு "ரோகேலின் ஊற்று" **"fountain of Rogel"** என்று பொருள். இது சீயோன் மலையின் அடிவாரத்திலுள்ள தண்ணீர் தடாகமாகும். இது ஒருவேளை சீலோவாம் குளமாக இருக்கலாம். யோசு 15:7; யோசு 18:16; 1இராஜா 1:9; யோவான் 9:7).

வேலைக்காரி **(wench)** - שִׁפְחָה - **shif-khaw' - 8198**

பெ.பெ.சொ. - அடிமைப்பெண், வேலைக்காரி, அடிமை, அடியாள், ஊழியக்காரி **(a female slave)** **wench** (2சாமு 17:17); **handmaid** (ஆதி 16:1; ஆதி 25:12; ஆதி 29:24; ஆதி 29:29; ஆதி 30:4; ஆதி 33:1-2; ஆதி 35:25-26; ரூத் 2:13; 1சாமு 1:18; 1சாமு 25:27; 1சாமு28:21-22;2சாமு 14:6-7,12,15-19; 2இராஜா 4:2,16; நீதி 30:23; ஏசா 14:2; எரே 34:11,16; யோவே 2:29); **maid** (ஆதி 16:2-8; ஆதி 29:24,29; ஆதி 30: 7-12; ஏசா 24:2); **maidservant** (ஆதி 12:16; ஆதி 24:35; ஆதி 30:43; யாத் 11:5; 1சாமு 8:16; 2இராஜா 5:26; எரே 34:9-10); **maiden** (ஆதி 30:18; சங் 123:2; பிர 2:7); **womenservants** (ஆதி 20:14; ஆதி 32:5,22); **bondmaid** (லேவி 19:20); **bondwoman** (உபா 28:68; 2நாளா 28:10; எஸ் 7:4); **handmaiden** (ஆதி 33:6; ரூத் 2:13); **servant** (1சாமு 25:41).

"வீட்டுக்காரி ஒரு பாயை எடுத்து, கிணற்றுவாயின்மேல் விரித்து" - யோசுவாவின் காலத்திலும் அவனுடைய வேவுகாரரைத் தப்பிக்க வைக்க இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. (யோசு 2:6)

"இன்னபடி அகித்தோப்பேல் உங்களுக்கு விரோதமாய் ஆலோசனை சொன்னான்" - அப்சலோம் அகித்தோப்பேலின் ஆலோசனையைத் தள்ளிவிட்டாலும், அதை மறுபடியும் ஏற்றுக் கொள்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால், அவசரமாக அவர்கள் அகித்தோப்பேலின் ஆலோசனையையும் அறிவிக்கிறார்கள். (2சாமு 17:21-22).

II சாமுவேல் - தொகுப்புரை

17 அதிகாரம்

(14) அகித்தோப்பேலின் மரணம்

2சாமு 17:23 அகித்தோப்பேல் தன் யோசனையின் படி நடக்கவில்லை என்று கண்டபோது, தன் கழுதையின்மேல் சேணம்வைத்து ஏறி, தன் ஊரிலிருக்கிற தன் வீட்டுக்குப்போய், தன் வீட்டு காரியங்களை ஒழுங்குபடுத்தி, நான்று கொண்டு செத்தான்; அவன் தகப்பன் கல்லறையில் அவனை அடக்கம் பண்ணினார்கள்.

அகித்தோப்பேலின் முடிவு

1. தன் கழுதையின்மேல் சேணம்வைத்து ஏறினான்.
2. தன் ஊரிலிருக்கிற தன் வீட்டுக்குப் போனான்.
3. தன் வீட்டுகாரியங்களை ஒழுங்கு படுத்தினான்.
4. நான்றுகொண்டு செத்தான்.
5. அவன் தகப்பன் கல்லறையில் அவனை அடக்கம் பண்ணினார்கள்.

அகித்தோப்பேல் யூதாஸ்காரியோத்துக்கு அடையாளமாக இருக்கிறான். தாவீதின் விரோதிகளோடு உடன்படிக்கை செய்து கொண்டு, தன் நல்ல நண்பனையே காட்டிக் கொடுத்தான். இதன் விளைவாக நான்றுகொண்டு செத்தான். (சங் 41:9; சங் 55:12-14).

(15) அப்சலோம் தாவீதைத் துரத்துகிறான்

2சாமு 17:24 தாவீது மக்னாயீமுக்கு வந்தான்; அப்சலோமும் சகல இஸ்ரவேலரோடுங் கூட யோர்தானைக் கடந்தான்.

2சாமு 17:25 அப்சலோம், யோவாபுக்குப் பதிலாக அமாசாவை இராணுவத் தலைவனாக்கினான்; இந்த அமாசா, நாகாசின் குமாரத்தியும் செருயாவின் சகோதரியும் யோவாபின் அத்தையுமாகிய அபிகாயிலைப் படைத்த இஸ்ரவேலனாகிய எத்திரா என்னும் பேருள்ள ஒரு மனுஷனுடைய குமாரனாயிருந்தான்.

2சாமு 17:26 இஸ்ரவேல் ஜனங்களும் அப்சலோமும் கீலேயாத் தேசத்திலே பாளயமிறங்கினார்கள்.

"மக்னாயீம்" **(Mahanaim)** - முன்னொரு காலத்தில் மக்னாயீம் யாக்கோபுக்கும், (ஆதி 32:1), அப்னேர், இஸ்போசேத் ஆகியோருக்கும் (2சாமு 2:8-12) அடைக்கலமாக இருந்ததுபோன்று இப்போது இது தாவீதிற்கும் அடைக்கலமாக இருக்கிறது.

"அமாசா" **(Amasa)** - இந்தப் பெயருக்கு "பாரத்தைச் சுமக்கிறவன்" **"burden-bearer"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "அமாசா"க்கள்

1. தாவீதின் சகோதரியாகிய அபிகாயிலின் குமாரன். தாவீதின் மற்றொரு சகோதரியான செருயா என்பவளுக்கு யோவாப், அபிசாய் ஆகிய இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். இவர்கள் எல்லோரும் உறவினர்கள். (2சாமு 17:25; 1நாளா 2:17). தாவீது அவனை மன்னித்து, யோவாபின் ஸ்தானத்தில் அவனைச் சேனைத் தலைவனாக்கினான். (2சாமு 19:13; 2சாமு 20:4-12; 1இராஜா 2:5,32)
2. ஓர் எப்பிராயீமியன் (2நாளா 28:12)

"எத்திரா" **(Ithra)** - இந்தப் பெயருக்கு "நேர்த்தி" **"excellence"** என்று பொருள். இவன் அமாசாவின் தகப்பனும், தாவீதின் சகோதரியாகிய அபிகாயிலின் கணவனுமாவான். (2சாமு 17:25; 1நாளா 2: 16-17). மறுபெயர் ஏத்தேர் **Jether** (1இராஜா 2:5,32; 1நாளா 2:17)

17 அதிகாரம்

"அபிகாயில்" - இவள் நாகாசின் குமாரத்தியும், தாவீதின் சகோதரியுமாவாள். (2சாமு 17:25; 1நாளா 2:16-17). நாகாஸ் என்பது ஈசாயின் மறுபெயர் அல்ல. இது செருயா, அபிகாயில் ஆகியோரின் தாயாரைக் குறிக்கிறது. 1நாளா 2:13-17 ஆகிய வசனங்களில் ஈசாயின் குடும்பத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அதில் அபிகாயில், செருயா, ஆகியோர் தாவீதின் சகோதரிகளாகக் கூறப்பட்டிருக்கிறார்கள். தாவீது ஈசாயின் குமாரன். நாகாஸ் என்பது தாவீதின் தாயாருடைய பெயர். இதே பெயரில் ஒரு மனுஷனும் இருக்கிறான்.

புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும் ஒரே பெயர் கொடுக்கப்பட்டிருக்கிற சம்பவங்கள்

1. அபிகாயில் - மூன்று புருஷரும் (எண் 3:35; 1நாளா 3:14; எஸ் 2:15; எஸ் 9:29), ஒரு ஸ்திரீயும் (1நாளா 2:29; 2நாளா 11:18)
2. ஆனாகு - மூன்று புருஷரும் (ஆதி 36:20-24) ஒரு ஸ்திரீயும் (ஆதி 36:2,14)
3. ஏப்பா - இரண்டு புருஷரும் (ஆதி 25:4; 1நாளா 1:33; 1நாளா 2:47) ஒரு ஸ்திரீயும் (1நாளா 2:46)
4. ஒதியா - இரண்டு புருஷரும் (நெகே 8:7; நெகே 10:10-18), ஒரு ஸ்திரீயும் (1நாளா 4:19)
5. உசீம் - இரண்டு புருஷரும் (ஆதி 46:23; ஆதி 7:12), ஒரு ஸ்திரீயும் (1நாளா 8:8,11)
6. மாகலா - ஒரு புருஷரும் (1நாளா 7:18), ஒரு ஸ்திரீயும் (எண் 26:33)
7. மிகாயா - ஐந்து புருஷரும் (1இராஜா 22: 8-9,12-14; நெகே12:35-41; எரே 36:11-13), ஒரு ஸ்திரீயும்(1இராஜா 15:2; 2நாளா 13:2)
8. நாகாஸ் - இரண்டு புருஷரும் (1சாமு 11:1-2; 2சாமு 10:2; 2சாமு 17:27), ஒரு ஸ்திரீயும் (2சாமு 17:25)

(16) மக்னாயீமில் தாவீதுக்குக் கிடைத்த உதவி - (1இராஜா 2:7)

2சாமு 17:27 தாவீது மக்னாயீமில் சேர்ந்தபோது, அம்மோன் புத்திரரின் தேசத்து ரப்பா பட்டணத்தானாகிய சோபி என்னும் நாகாசின் குமாரனும், லோதேபார் ஊரானான அம்மியேலின் குமாரன் மாகீரும், ரோகிலிம் ஊரானும் கீலேயாத்தியனுமாகிய பர்சிலாவும்,

2சாமு 17:28 மெத்தைகளையும், கலங்களையும், மண்பாண்டங்களையும், கோதுமையையும்,வாற்கோதுமையையும், மாவையும், வறுத்த பயற்றையும், பெரும் பயற்றையும், சிறு பயற்றையும், வறுத்த சிறு பயற்றையும்,

2சாமு 17:29 தேனையும், வெண்ணெயையும், ஆடுகளையும், பால்கட்டிகளையும், தாவீதுக்கும் அவனோடிருந்த ஜனங்களுக்கும் சாப்பிடுகிறதற்குக் கொண்டுவந்தார்கள்; அந்த ஜனங்கள் வனாந்தரத்திலே பசியும் இளைப்பும் தவனமுமாயிருப்பார்கள் என்று இப்படிச் செய்தார்கள்.

மக்னாயீமில் தாவீதோடு சேர்ந்து கொண்டவர்கள்

1. சோபி (Shobi) - ரப்பா பட்டணத்தானாகிய நாகாசின் குமாரன். அம்மோனின் ராஜா.
2. மாகீர் (Machir) - லோதேபாரின் ஊரானான அம்மியேலின் குமாரன்.
3. பர்சிலா (Barzillai) - ரோகிலிம் ஊரானும், கீலேயாத்தியனுமானவன்.

II சாமுவேல் - தொகுப்புரை

17 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "மாகீர்"கள்

1. மனாசேயின் குமாரன். (ஆதி 50:23; எண் 26:29; எண் 27:1; எண் 32:39-40; எண் 36:1; உபா 3:15; யோசு 13:31; யோசு 17: 1-3; நியா 5:14; 1நாளா 2:21-23; 1நாளா 7:14-17)
2. அம்மியேலின் குமாரன் (2சாமு 29:4-5; 2சாமு 17:27)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "பர்சிலா"க்கள்

1. ரோகிலிம் ஊரானும், கீலேயாத்தியனுமாகிய ஐசுவரியவான். (2சாமு 17:27; 2சாமு 19:31-39; 1இராஜா 2:7)
2. அத்ரியேலின் தகப்பன் (2சாமு 21:8)
3. எஸ்றாவின் காலத்திலிருந்த ஒரு மனுஷன் (எஸ்றா 2:61; நெகே 7:63)

"ரோகிலிம்" (Rogelim) - கீலேயாத்திலுள்ள ஓர் இடம். (2சாமு 17:27; 2சாமு 19:31).

சோபி, மாகீர், பர்சிலா ஆகியோர் தாவீதுக்கும், அவனோடிருந்த ஜனங்களுக்கும் கொண்டுவந்த பொருட்கள்

1. மெத்தைகள்
2. கலங்கள்
3. மண்பாண்டங்கள்
4. கோதுமை
5. வாற்கோதுமை
6. மாவு
7. வறுத்த பயறு
8. பெரும் பயறு
9. சிறு பயறு
10. வறுத்த சிறு பயறு
11. தேன்
12. வெண்ணெய்
13. ஆடுகள்
14. பால்கட்டிகள்

"வெண்ணெய்" - ஆபிரகாமின் காலத்திலிருந்தே வெண்ணெயைப் பற்றிய குறிப்பு வந்திருக்கிறது. (ஆதி 18). பசுவின் வெண்ணெயைப் பற்றி பல வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (2சாமு 17:29; உபா 32:14; நியா 5:25; யோபு 20:17; யோபு 29:6; ஏசா 7:15-22) வெண்ணெயின் மென்மையும், அது செய்யப்படும் விதமும் சங் 55:21; நீதி 30:33 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கிறது.

"பால்கட்டி" (cheese of kine) - இதைப் பற்றி 2சாமு 17:29 ஆவது வசனத்தில் தான் முதன் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. 1சாமு 17:18; யோபு 10:10 ஆகிய வசனங்களிலும் இதைப் பற்றிய குறிப்பு உள்ளது.

18 அதிகாரம்

(17) எப்பிராயீம் காட்டிலே யுத்தம்

2சாமு 18:1 தாவீது தன்னோடிருந்த ஜனங்களை இலக்கம் பார்த்து, அவர்கள் மேல் ஆயிரத்துக்கு அதிபதிகளையும், நூற்றுக்கு அதிபதிகளையும் வைத்து,

2சாமு 18:2 பின்பு தாவீது ஜனங்களில் மூன்றில் ஒரு பங்கை யோவாபின் வசமாகவும், மூன்றில் ஒரு பங்கைச் செருயாவின் குமாரனும் யோவாபின் சகோதரனுமான அபிசாயின் வசமாகவும், மூன்றில் ஒரு பங்கைக் கித்தியனாகிய ஈத்தாயின் வசமாகவும் அனுப்பி: நானும் உங்களோடேகூடப் புறப்பட்டு வருவேன் என்று ராஜா ஜனங்களிடத்தில் சொன்னான்.

2சாமு 18:3 ஜனங்களோ: நீர் புறப்பட வேண்டாம்; நாங்கள் முறிந்தோடிப் போனாலும், அவர்கள் எங்கள் காரியத்தை ஒரு பொருட்டாக எண்ணமாட்டார்கள்; எங்களில் பாதிப்பேர் செத்துப்போனாலும், எங்கள் காரியத்தைப்பற்றிக் கவலைப்பட மாட்டார்கள்; நீரோ, எங்களில் பதினாயிரம்பேருக்குச் சரி; நீர் பட்டணத்தில் இருந்துகொண்டு, எங்களுக்கு உதவிசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்கும் என்றார்கள்.

2சாமு 18:4 அப்பொழுது ராஜா அவர்களைப் பார்த்து: உங்களுக்கு நலமாய்த் தோன்றுகிறதைச் செய்வேன் என்று சொல்லி, ராஜா ஒலிமுகவாசல் ஓரத்திலே நின்றான்; ஜனங்கள் எல்லாரும் நூறுநூறாகவும், ஆயிரம் ஆயிரமாகவும் புறப்பட்டார்கள்.

2சாமு 18:5 ராஜா யோவாபையும், அபிசாயையும், ஈத்தாயையும் நோக்கி: பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள் என்று கட்டளையிட்டான்; இப்படி ராஜா அப்சலோமைக் குறித்து அதிபதிகளுக்கெல்லாம் கட்டளையிட்டதை ஜனங்கள் எல்லாரும் கேட்டிருந்தார்கள்.

2சாமு 18:6 ஜனங்கள் வெளியே இஸ்ரவேலருக்கு எதிராகப் புறப்பட்ட பிற்பாடு, எப்பிராயீம் காட்டிலே யுத்தம் நடந்தது.

2சாமு 18:7 அங்கே இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் சேவகருக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டார்கள்; அங்கே அன்றைய தினம் இருபதினாயிரம்பேர் மடியத் தக்கதாக பெரிய சங்காரம் உண்டாயிற்று.

2சாமு 18:8 யுத்தம் அந்த தேசம் எங்கும் பரந்தது; அன்றையதினம் பட்டயம் பட்சித்த ஜனங்களைப்பார்க்கிலும், காடு பட்சித்த ஜனம் அதிகம்.

"தாவீது தன்னோடிருந்த ஜனங்களை இலக்கம் பார்த்து" - தாவீது தனக்கு உண்மையாக இருக்கும் போர்வீரர்களை எண்ணுகிறான். அப்சலோமின் பெரிய சேனையோடு தன்னால் எவ்வாறு யுத்தம் பண்ண முடியும் என்று ஆலோசனை பண்ணுகிறான். தாவீதிடத்தில் எத்தனை யுத்தவீரர்கள் இருந்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அவர்கள்மேல் ஆயிரத்துக்கு அதிபதிகளையும், நூற்றுக்கு அதிபதிகளையும் வைத்தான். தாவீதிடம் 4,000 யுத்தவீரர்கள் இருந்ததாக யோசபஸ் எழுதியிருக்கிறார். தாவீது தன்னுடைய சேனையை மூன்று பிரிவாகப் பிரித்தான். அவர்களை யோவாப், அபிசாய், கித்தியனாகிய ஈத்தாய் ஆகியோர் வசமாக ஒப்படைத்து அனுப்பினான். ஈத்தாய் காத்திலிருந்து வந்த பெலிஸ்தியன். இவனுக்குக்கீழ் 600 பெலிஸ்தர்கள் இருக்கிறார்கள். (2சாமு 18:2; 2சாமு 15:18-22).

II சாமுவேல் - தொகுப்புரை

18 அதிகாரம்

"நீரோ, எங்களில் பதினாயிரம்பேருக்குச் சரி" - இந்த வாக்கியம் மிகைப்படுத்தி கூறப் பட்டிருந்தாலும், தாவீது மெய்யாகவே முக்கியமானவன். தாவீதிற்கு இப்போது 56 வயதாயிற்று. ஆனாலும் அவனுடைய மனுஷர் அவனை இன்னும் சிறந்த யுத்தவீரனாக கருதுகிறார்கள். தானும் அவர்களோடுகூட யுத்தத்திற்குப் புறப்பட்டு வருவதாகத் தாவீது கூறினான். ஆனால் அவர்களோ தாவீது மகனாயீம் பட்டணத்தில் இருந்துகொண்டு, தங்களுக்கு உதவி செய்கிறது நலமாயிருக்கும் என்று கூறுகிறார்கள். ஏனெனில் அப்சலோமின் மொத்த சேனையும் தாவீதைக் கொல்வதிலேயே குறியாக இருப்பார்கள். ஆகையினால் தாவீதை மகனாயீமில் தங்க வைத்து விட்டு, அப்சலோமின் வீரர்களோடு யுத்தம் பண்ணுவது சிறந்தது என்று தாவீதின் மனுஷர்கள் நினைக்கிறார்கள். அகித்தோப்பேல் தாவீதை மட்டுமே கொல்ல வேண்டுமென்று ஆலோசனை கூறினான். (2சாமு 17:2).

"உங்களுக்கு நலமாய்த் தோன்றுகிறதைச் செய்வேன்" - இந்த வாக்கியம் தாவீதின் தாழ்மையை வெளிப்படுத்துகிறது.

"ராஜா ஒலிமுகவாசல் ஓரத்திலே நின்றான்" - மகனாயீமிலிருந்து யுத்தத்திற்குப் புறப்பட்டுப் போகும் தன் வீரர்களை தாவீது கவனித்துக் கொண்டிருக்கிறான். அவர்கள் எல்லோருமே தாவீதின் நம்பிக்கைக்குரியவர்கள்.

"பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்" - தாவீது தன் குமாரன்மீது இன்னும் பிரியமாயிருக்கிறான். தாவீதின் சேனை மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றிற்கு யோவாப், அபிசாய், ஈத்தாய் ஆகிய மூவரும் தலைவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் அப்சலோமை மெதுவாய் நடப்பிக்குமாறு தாவீது கூறுகிறான். இப்படி ராஜா அப்சலோமைக் குறித்து அதிபதிகளுக்கெல்லாம் கட்டளையிட்டதை ஜனங்கள் எல்லாரும் கேட்டிருந்தார்கள். இது ஜனங்களுக்கு மிகவும் விநோதமாக இருந்திருக்கும். தாவீது தன் சத்துருவின்மீது அன்பு கூறுகிறான். அப்சலோம் சத்துருவாக இருந்தாலும், தாவீதின் குமாரனாகவும் இருக்கிறான்.

(18) அப்சலோமின் மரணம்

2சாமு 18:9 அப்சலோம் தாவீதின் சேவகருக்கு எதிர்ப்பட்டான்; அப்சலோம் கோவேறு கழுதை சன்னல்பின்னலான ஒரு கர்வாலி மரத்தின் கீழ் வந்ததினால், அவனுடைய தலை கர்வாலி மரத்தில் மாட்டிக்கொண்டு, அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான்; அவன் ஏறியிருந்த கோவேறு கழுதை அப்பாலே போயிற்று.

2சாமு 18:10 அதை ஒருவன் கண்டு, யோவாபுக்கு அறிவித்து: இதோ, அப்சலோமை ஒரு கர்வாலிமரத்திலே தொங்கக்கண்டேன் என்றான்.

2சாமு 18:11 அப்பொழுது யோவாப் தனக்கு அதை அறிவித்தவனை நோக்கி: நீ அதைக் கண்டாயே; பின்னை ஏன் அவனை அங்கே வெட்டி, தரையிலே தள்ளிப்போடவில்லை? நான் உனக்குப் பத்து வெள்ளிக்காசையும் ஒரு கச்சையையும் கொடுக்கக் கடமையுள்ளவனாயிருப்பேனேஎன்றான்.

2சாமு 18:12 அந்த மனுஷன் யோவாபை நோக்கி: என் கைகளில் ஆயிரம் வெள்ளிக்காசு நிறுத்துக் கொடுக்கப் பட்டாலும், நான் ராஜாவுடைய குமாரன் மேல் என் கையை நீட்டமாட்டேன்; பிள்ளையாண்டானாகிய அப்சலோமை நீங்கள் அவரவர் காப்பாற்றுங்கள் என்று ராஜா உமக்கும் அபிசாய்க்கும் ஈத்தாய்க்கும் எங்கள் காதுகள் கேட்கக் கட்டளையிட்டாரே.

2சாமு 18:13 ராஜாவுக்கு ஒரு காரியமும் மறைவாயிருக்கமாட்டாது; ஆதலால், நான் அதைச் செய்வேனாகில், என் பிராணனுக்கே விரோதமாகச் செய்பவனாவேன், நீரும் எனக்கு விரோதமாயிருப்பீர் என்றான்.

II சாமுவேல் – தொகுப்புரை

18 அதிகாரம்

2சாமு 18:14 ஆதலால் யோவாப்: நான் இப்படி உன்னோடே பேசி, தாமதிக்க மாட்டேன் என்று சொல்லி, தன் கையிலே மூன்று வல்லயங்களை எடுத்துக் கொண்டு, அப்சலோம் இன்னும் கர்வாலிமரத்தின் நடுவிலே உயிரோடே தொங்குகையில், அவைகளை அவன் நெஞ்சிலே குத்தினான்.

2சாமு 18:15 அப்பொழுது யோவாபின் ஆயுததாரிகளாகிய பத்து சேவகர் அப்சலோமைச் சூழ்ந்து அவனை அடித்துக்கொன்று போட்டார்கள்.

2சாமு 18:16 அப்பொழுது யோவாப் எக்காளம் ஊதி ஜனங்களை நிறுத்திப் போட்டபடியினால், ஜனங்கள் இஸ்ரவேலைப் பின்தொடருகிறதை விட்டுத் திரும்பினான்.

2சாமு 18:17 அவர்கள் அப்சலோமை எடுத்து, அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டு, அவன்மேல் மகா பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்; இஸ்ரவேலர் எல்லாரும் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்.

2சாமு 18:18 அப்சலோம் உயிரோடே இருக்கையில்: என் பேரை நினைக்கப் பண்ணும்படியாக எனக்குக் குமாரன் இல்லை என்று சொல்லி, ராஜாவின் பள்ளத்தாக்கிலே தனக்கென்று ஒரு தூணை நிறுத்தி, அந்தத் தூணுக்குத் தன் பேரைத் தரித்திருந்தான்; அது இந்நாள்வரைக்கும் அப்சலோமின் அடையாளம் என்று சொல்லப்படும்.

"அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான்" - யுத்தம் அந்த தேசம் எங்கும் பரந்தது. அப்சலோம் தாவீதின் சேவகருக்கு எதிர்ப்பட்டான். அப்சலோமின் கோவேறு கழுதை சன்னல்பின்னலான ஒரு கர்வாலிமரத்தின் கீழ் வந்தது. அவனுடைய தலை கர்வாலி மரத்தில் மாட்டிக்கொண்டது. அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான். அவன் ஏறியிருந்த கோவேறு கழுதை அப்பாலே போயிற்று.

"அவைகளை அவன் நெஞ்சிலே குத்தினான்" - அப்சலோம் இன்னும் கர்வாலி மரத்தின் நடுவிலே உயிரோடே தொங்கிக் கொண்டிருக்கிறான். யோவாப் தன் கையிலே மூன்று வல்லயங்களை எடுத்துக்கொண்டு, அவைகளை அப்சலோமின் நெஞ்சிலே குத்தினான். தாவீது அப்சலோமை மெதுவாக நடப்பிக்குமாறு யோவாபுக்குக் கட்டளையிட்டிருந்தான். யோவாப் ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. அப்சலோம் மடிந்தால்தான் கலகம் ஓயும் என்று யோவாப் நினைத்தான். யோவாப் அப்சலோமை நெஞ்சில் குத்தியதோடு மட்டுமல்லாமல், யோவாபின் ஆயுததாரிகளாகிய பத்து சேவகர் அப்சலோமைச் சூழ்ந்து அவனை அடித்துக்கொன்று போட்டார்கள். (2சாமு 18:15).

"யோவாப் எக்காளம் ஊதி ஜனங்களை நிறுத்திப்போட்டபடியினால்" - அப்சலோம் மரித்தவுடன், யோவாப் எக்காளம் ஊதினான். அப்சலோமின் வீரர்களைத் தன்னுடைய மனுஷர்கள் பின்தொடர்வதை யோவாப் நிறுத்துமாறு அறிவித்தான். இதனால் இஸ்ரவேலின் இரண்டு பக்கத்திலும் ஜனசங்காரம் குறைகிறது.

"அவன்மேல் மகா பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்" - அப்சலோமை கர்வாலி மரத்திலிருந்து எடுத்து, அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டார்கள். அவன்மேல் மகா பெரிய கற்குவியலைக் குவித்தார்கள். கலகம் பண்ணுவோருக்கு அப்சலோமின் கற்குவியல் ஓர் அடையாளமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ராஜாவுக்கு எதிராகத் துரோகம் பண்ணுவோருக்கு இந்தக் கற்குவியல் ஓர் எச்சரிப்பாகவும் இருக்கிறது. தாவீதை எதிர்த்து வந்த இஸ்ரவேலர் எல்லாரும் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள். இந்த யுத்தத்தில் 20,000பேர் மரித்தார்கள். அவர்களில் அப்சலோமும் ஒருவன். (2சாமு 17:7-8,14-15).

"என் பேரை நினைக்கப்பண்ணும்படியாக எனக்குக் குமாரன் இல்லை" - அப்சலோமுக்கு மூன்று குமாரரும், ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் அப்சலோம் இந்த வாக்கியத்தைக் கூறியதற்கு முன்பாக ஏதோ ஒரு காரணத்தால் மரித்துப்போனார்கள். (2சாமு 14:27) தன் பேரை நினைக்கப்பண்ணும் படியாக அப்சலோம் ராஜாவின் பள்ளத்தாக்கிலே தனக்கென்று ஒரு தூணை நிறுத்தி, அந்தத் தூணுக்குத் தன் பேரைத் தரித்திருந்தான். அந்தத் தூணுக்கு "அப்சலோமின் அடையாளம்" என்று பெயர்.

18 அதிகாரம்

இந்தத் தூண் அப்சலோமின் குமாரர் பிறப்பதற்கு முன்பாகவோ அல்லது அவர்கள் மரித்த பின்போ கட்டப்பட்டிருக்க வேண்டும்.

(19) தாவீதுக்கு யுத்தச் செய்தி வருகிறது

2சாமு 18:19 சாதோக்கின் குமாரனாகிய அகிமாஸ்: கர்த்தர் ராஜாவை அவர் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி நியாயஞ்செய்தார் என்னும் செய்தியை அவருக்குக் கொண்டுபோக, நான் ஓட்டட்டுமே என்றான்.

2சாமு 18:20 யோவாப் அவனை நோக்கி: இன்றையதினம் நீ செய்தியைக் கொண்டு போகக்கூடாது; இன்னொருநாளிலே நீ செய்தியைக் கொண்டுபோகலாம்; ராஜாவின் குமாரன் செத்தபடியினால், இன்றைக்கு நீ செய்தியைக் கொண்டு போக வேண்டாம் என்று சொல்லி,

2சாமு 18:21 யோவாப் கூஷியை நோக்கி: நீ போய், கண்டதை ராஜாவுக்கு அறிவி என்றான்; கூஷி யோவாபை வணங்கி ஓடினான்.

2சாமு 18:22 சாதேக்கின் குமாரனாகிய அகிமாஸ் இன்னும் யோவாபை நோக்கி: எப்படியானாலும் கூஷியின் பிறகாலே நானும் ஓடட்டுமே என்று திரும்பக் கேட்டதற்கு, யோவாப்: என் மகனே, சொல்லும்படி உனக்கு நல்ல செய்தி இல்லாதிருக்கையில்,நீ ஓடவேண்டியது என்ன என்றான்.

2சாமு 18:23 அதற்கு அவன்: எப்படியானாலும் நான் ஒடுவேன் என்றான்; அப்பொழுது யோவாப்: ஓடு என்றான்; அப்படியே அகிமாஸ் சமனான பூமிவழியோடி கூஷிக்கு முந்திக் கொண்டான்.

2சாமு 18:24 தாவீது இரண்டு ஒலி முகக் கெவுனி வாசலுக்கு நடுவாக உட்கார்ந்திருந்தான்; ஜாமங்காக்கிறவன் அலங்கத்திலிருக்கிற கெவுனியின்மேல் நடந்து, தன் கண்களை ஏறெடுத்து, இதோ, ஒரு மனுஷன் தனியே ஓடி வருகிறதைக் கண்டு,

2சாமு 18:25 கூப்பிட்டு ராஜாவுக்கு அறிவித்தான். அப்பொழுது ராஜா: அவன் ஒருவனாய் வந்தால்அவன் வாயிலே நல்ல செய்தி இருக்கும் என்றான்; அவன் ஓடிகிட்டவரும்போது,

2சாமு 18:26 ஜாமங்காக்கிறவன், வேறொருவன் ஓடிவருகிறதைக் கண்டு: அதோ பின்னொருவன் தனியே ஓடிவருகிறான் என்று வாசல் காக்கிறவனோடே கூப்பிட்டுச் சொன்னான்; அப்பொழுது ராஜா: அவனும் நல்ல செய்தி கொண்டு வருகிறவன் என்றான்.

2சாமு 18:27 மேலும் ஜாமங்காக்கிறவன்: முந்தினவனுடைய ஓட்டம் சாதோக்கின் குமாரன் அகிமாசுடைய ஓட்டம் போலிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது என்றான்; அப்பொழுது ராஜா: அவன் நல்ல மனுஷன்; அவன் நல்ல செய்தி சொல்ல வருகிறான் என்றான்.

2சாமு 18:28 அகிமாஸ் வந்து ராஜாவை நோக்கி: சமாதானம் என்று சொல்லி, முகங்குப்புற விழுந்து, ராஜாவை வணங்கி, ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு விரோதமாய்த் தங்கள் கைகளை எடுத்த மனுஷரை ஒப்புக்கொடுத்திருக்கிற உம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக என்றான்.

"நான் ஓடட்டுமே" - அப்சலோம் மரித்துப் போனான். இந்தச் செய்தியை மகனாயீமில் இருக்கும் தாவீது ராஜாவுக்கு அறிவிக்க வேண்டும். சாதோக்கின் குமாரனாகிய அகிமாஸ் ராஜாவிடம் ஓடிப்போய் இந்தச் செய்தியை அறிவிப்பதாக யோவாபிடம் கூறுகிறான். யோவாப் அவனைத் தடுத்தான். ராஜாவிடம் செய்தியை அனுப்புமாறு யோவாப் கூஷியை அனுப்பினான். ராஜாவிடம் செய்தி போய்ச் சேர்ந்தது. ஆனாலும் அகிமாஸ் சமனான பூமிவழியோடி கூஷிக்கு முந்திக்கொண்டான் (2சாமு 18:19-28).

18 அதிகாரம்

"கூஷி" (Cushi) - இந்தப் பெயருக்கு "கறுப்பு" "black" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "கூஷி"கள்

1. தாவீதுக்கு செய்தியைக் கூறுவதற்கு ஓடியவன். *(2சாமு 18:21-32)*
2. யெகுதியின் முன்னோர். *(எரே 36:14)*
3. செப்பனியாவின் தகப்பன். *(செப் 1:1)*

"தாவீது இரண்டு ஒலிமுகக் கெவுனி வாசலுக்கு நடுவாக உட்கார்ந்திருந்தான்" - மகனாயீம் பட்டணத்தின் வெளிவாசலுக்கும், உள்வாசலுக்கும் நடுவாக உட்கார்ந்திருந்தான். இந்த வாசலில் பாதுகாப்பாக பலமாக இருக்கும். பட்டணத்திற்குள் வருவதற்கு எதிரிகள் இந்த வாசலைத்தான் பயன்படுத்துவார்கள். பாதுகாப்பான இடத்தில் தாவீது உட்கார்ந்திருக்கிறான். அலங்கத்தின் சுவர் இந்த இடத்தில் மட்டும் இரண்டு மடங்கு அதிக கனமாக இருக்கும்.

"ஜாமங்காக்கிறவன்" - தாவீது இரண்டு ஒலிமுகக் கெவுனி வாசலுக்கு நடுவாக உட்கார்ந்திருந்தாலும், அந்தப் பாதுகாப்பு தாவீதுக்குப் போதாது. அலங்கத்தின்மீது இரவும், பகலும் காவல்காக்கிறவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். தூரத்திலிருந்து வருகிறவர்களைக்கூட இவர்கள் கண்டுபிடித்து செய்தி கூறுவார்கள். *(2சாமு 18: 24-28; 2இராஜா 9:17-20; ஏசா 21:5-12; ஏசா 62:6; எசே 33:2,6-7; ஆப 2:1)*. வாசல்காக்கிறவன் வாசல்களைக் குறிப்பிட்ட நேரத்தில் திறப்பான். அலங்கத்திற்கு மேலிருக்கும் ஜாமங்காக்கிறவன் கீழிருக்கும் வாசல்காக்கிறவனுக்குச் செய்தியை அறிவிப்பான். இந்த வாசல்காக்கிறவன் தாவீதுக்கு ஓடி வருகிறவனைப் பற்றிய செய்தியை அறிவித்திருக்க வேண்டும். *(2இராஜா 7:10)* நெகேமியாவின் காலத்தில் எருசலேமின் அலங்கங்கள் கட்டப்பட்டது. அப்போது வாசல்காக்கிறவர்களைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. *(நெகே 7:1)*. சாலொமோனுடைய தேவாலயத்தில் 4,000 வாசல்காக்கிறவர்கள் இருந்தார்கள். *(1நாளா 23:5)* இவர்கள் பல வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். *(2நாளா 8:14)* இவர்களுக்குச் சீட்டுப் போட்டு பணிவிடைகள் ஒதுக்கப்பட்டது. *(1நாளா 26:13)*.

"அவன் நல்ல மனுஷன்; அவன் நல்ல செய்தி சொல்ல வருகிறான்" - ஓடுகிறவனுடைய ஓட்டத்தை வைத்து, அவன் நல்ல மனுஷனா, கெட்ட மனுஷனா என்பதையும், நல்ல செய்தி கொண்டுவருகிறானா, அல்லது கெட்ட செய்தி கொண்டு வருகிறானா என்பதையும் கண்டுபிடிக்க முடியும். அகிமாஸ் ஆசாரியனுடைய குமாரன். அப்படிப்பட்டவன் நல்ல செய்தியைக் கொண்டுவருவான் என்று தாவீது நினைத்தான். *(2சாமு 18:27-28)*.

"சமாதானம் என்று சொல்லி" - அகிமாஸ் ராஜாவைப் பார்த்து, சமாதானம் என்று கூறி வாழ்த்துகிறான். சத்துருக்கள் அழிந்து போனார்கள் என்று நல்ல செய்தியைக் கூறுகிறான். இந்த வேளையில் கூஷி வருகிறான். ராஜா அகிமாசை தனித்துப் போய் நிற்குமாறு கூறிவிட்டு, கூஷி கூறும் செய்தியைக் கேட்க ஆயத்தமாயிருக்கிறான். *(2சாமு 18:29-30)*.

(20) அப்சலோமுக்காக தாவீதின் துக்கம்

2சாமு 18:29 அப்பொழுது ராஜா: பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா என்று கேட்டதற்கு, அகிமாஸ் யோவாப் ராஜாவின் வேலைக்காரனையும் உம்முடைய அடியானையும் அனுப்புகிறபோது, ஒரு பெரிய சந்தடியிருந்தது; ஆனாலும் அது இன்னதென்று தெரியாது என்றான்.

2சாமு 18:30 அப்பொழுது ராஜா: நீ அங்கே போய்நில் என்றான்; அவன் ஒரு பக்கத்தில் போய் நின்றான்.

2சாமு 18:31 இதோ, கூஷி வந்து: ராஜாவாகிய என் ஆண்டவனே, நற்செய்தி, இன்று கர்த்தர் உமக்கு விரோதமாயெழும்பின எல்லாரின் கைக்கும் உம்மை நீங்கலாக்கி நியாயஞ் செய்தார் என்றான்.

II சாமுவேல் - தொகுப்புரை

18 அதிகாரம்

2சாமு 18:32 அப்பொழுது ராஜா கூஷியைப் பார்த்து: பிள்ளையாண்டானாகிய அப்சலோம் சுகமாயிருக்கிறானா என்று கேட்டதற்கு, கூஷி என்பவன்: அந்தப் பிள்ளையாண்டானுக்கு நடந்ததுபோல, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களுக்கும், பொல்லாப்புச் செய்ய உமக்கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும் நடக்கக்கடவது என்றான்.

2சாமு 18:33 அப்பொழுது ராஜா மிகவும் கலங்கி, கெவுனிவாசலின் மேல் வீட்டிற்குள் ஏறிப்போய் அழுதான்; அவன் ஏறிப்போகையில்: என் மகனாகிய அப்சலோமே , என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப்பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே, என்று சொல்லி அழுதான்.

"நற்செய்தி" - கூஷி யுத்தச் செய்தியைச் சற்று விரிவாக எடுத்துக் கூறுகிறான். ஆனாலும் ராஜா அப்சலோமின் சுகசெய்தியை அறிந்து கொள்ள விரும்புகிறான். அப்சலோம் மரித்துப்போனான் என்று நேரடியாகக் கூறுவதற்குப் பதிலாகக் கூஷி சுற்றிவளைத்து, "அந்தப் பிள்ளையாண்டானுக்கு நடந்ததுபோல, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களுக்கும், பொல்லாப்புச் செய்ய உமக்கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும் நடக்கக்கடவது" என்று கூறுகிறான். இந்த வாக்கியத்திலிருந்து அப்சலோம் மரித்துப்போனான் என்பதை தாவீது புரிந்து கொள்கிறான். ராஜா மிகவும் கலங்கி, கெவுனிவாசலின் மேல்வீட்டிற்குள் ஏறிப்போய் அழுதான். *(2சாமு 18:33).*

"கெவுனிவாசலின் மேல்வீடு" - ஜாமங்காக்கிறவன் தங்கியிருக்கும் இடம்.

19 அதிகாரம்

(21) தாவீதுக்கு யோவாபின் ஆலோசனை

2சாமு 19:1 இதோ, ராஜா அப்சலோமுக்காக அழுது புலம்புகிறார் என்று யோவாபுக்கு அறிவிக்கப்பட்டது.

2சாமு 19:2 ராஜா தம்முடைய குமாரனுக்காக மனம்நொந்திருக்கிறார் என்று அன்றைய தினம் ஜனங்கள் கேள்விப்பட்டார்கள்; அதினிமித்தம் அன்றையதினம் அந்த ஜெயம் ஜனத்திற்கெல்லாம் துக்கமாய்மாறிற்று.

2சாமு 19:3 யுத்தத்தில் முறிந்தோடுகிறதினால் வெட்கப்பட்டுத் திருட்டளவாய் வருகிறவர்கள்போல, ஜனங்கள் அன்றையதினம் திருட்டளவாய்ப் பட்டணத்திற்குள் வந்தார்கள்.

2சாமு 19:4 ராஜா தன் முகத்தை மூடிக் கொண்டு, மகா சத்தமாய்: என் மகனாகிய அப்சலோமே, அப்சலோமாகிய என் மகனே, என் மகனே என்று அலறிக் கொண்டிருந்தான்.

2சாமு 19:5 அப்பொழுது யோவாப் வீட்டிற்குள்ளே ராஜாவினிடத்தில் போய்: இன்று உம்முடைய ஜீவனையும், உம்முடைய குமாரர் குமாரத்திகளின் ஜீவனையும், உம்முடைய மனைவிகளின் ஜீவனையும், உம்முடைய மறுமனையாட்டிகளின் ஜீவனையும் தப்புவித்த உம்முடைய ஊழியக்காரர் எல்லாரின் முகத்தையும் வெட்கப் படுத்தினீர்; இன்று நீர் உம்மைப் பகைக்கிறவர்களைச் சிநேகித்து, உம்மைச் சிநேகிக்கிறவர்களைப் பகைக்கிறீர் என்று விளங்குகிறது.

2சாமு 19:6 அதிபதிகளும் சேவகரும் உமக்கு அற்பமானவர்கள் என்று இன்று விளங்கப்பண்ணுகிறீர்; அப்சலோம் உயிரோடிருந்து, நாங்கள் அனைவரும் இன்று செத்துப்போனால், அப்பொழுது உம்முடைய பார்வைக்கு நலமாயிருக்கும் என்று இன்று அறிந்துகொண்டேன்.

2சாமு 19:7 இப்பொழுதும் எழுந்திருந்து வெளியே வந்து, உம்முடைய ஊழியக்காரரோடே அன்பாய்ப் பேசும்; நீர் வெளியே வராதிருந்தால், இன்று இரவு ஒருவரும் உம்மோடே தங்கியிருப்பதில்லை என்று கர்த்தர்மேல் ஆணையிடுகிறேன்; அப்பொழுது உம்முடைய சிறுவயது முதல் இதுவரைக்கும் உமக்கு நேரிட்ட எல்லாத் தீமையைப்பார்க்கிலும், அது உமக்கு அதிக தீமையாயிருக்கும் என்றான்.

2சாமு 19:8 அப்பொழுது ராஜா எழுந்துபோய், ஒலிமுகவாசலில் உட்கார்ந்தான்; இதோ, ராஜா ஒலிமுகவாசலில் உட்கார்ந்திருக்கிறார் என்று சகல ஜனங்களுக்கும் அறிவிக்கப் பட்டபோது, ஜனங்கள் எல்லாரும் ராஜாவுக்கு முன்பாக வந்தார்கள்; இஸ்ரவேலரோவெனில் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்.

"ராஜா அப்சலோமுக்காக அழுது புலம்புகிறார்" - இந்தச் செய்தி யோவாபுக்கு அறிவிக்கப்பட்டது. ராஜா தம்முடைய குமாரனுக்காக மனம்நொந்திருக்கிறார் என்று இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் கேள்விப் பட்டார்கள். இதனால் யுத்தத்தில் கிடைத்த ஜெயம் ஜனத்திற்கெல்லாம் துக்கமாய் மாறிற்று. யுத்தத்தில் ஜெயித்ததற்குக் கொண்டாடுவதற்குப் பதிலாக ஜனங்கள் எல்லோரும் துக்கமாய் இருக்கிறார்கள். (2சாமு 19:1-2).

19 அதிகாரம்

"திருட்டளவாய்ப் பட்டணத்திற்குள் வந்தார்கள்" - யுத்தவீரர்கள் யுத்தத்தில் ஜெயித்து, தங்கள் பட்டணத்திற்கு வரும்போது அவர்களுக்கு உற்சாக வரவேற்பு கொடுப்பது வழக்கம். யுத்தத்தில் இவர்கள் தங்களுடைய ஜீவனையும் பணையம் வைத்து, போர்முனையில் சத்துருக்களைச் சந்தித்திருக்கிறார்கள். யுத்தத்தில் அப்சலோம் செத்துப்போனான். ஆனால் தாவீது ராஜாவோ அப்சலோமுக்குப் பதிலாகத் தான் செத்துப்போனால் நலமாயிருக்கும் என்று கூறுகிறான். (2சாமு 18:33). யுத்த வீரர்களுக்கு யுத்த வெற்றியைக் கொண்டாடுவதா அல்லது அப்சலோமின் மரணத்தின் நிமித்தம் தாவீதோடு துக்கமாயிருப்பதா என்று தெரியவில்லை. ராஜா அப்சலோமுக்காக அழுது புலம்புகிறார். ஆகையினால் ராஜாவோடு சேர்ந்து, ஜனங்களும் துக்கமாயிருக்கிறார்கள். தங்கள் வீட்டிற்கு யுத்தத்தில் முறிந்தோடுகிறதினால் வெட்கப்பட்டுத் திருட்டளவாய் வருகிறவர்கள் போல திரும்பி வருகிறார்கள். தாவீதின் தவறுகளில் இதுவும் ஒன்று. அப்சலோம் தாவீதைப் பார்க்க வந்தபோது, அவனுடைய முகத்தைக்கூட தாவீது பார்க்க மறுத்துவிட்டான். ஆனால் இப்போது அப்சலோம் மரித்தபோதோ தாவீது அவனுக்காக அழுது புலம்புகிறான். தாவீது தொடர்ந்து தன் மகனுக்காக அழுதுகொண்டிருந்தால், தாவீதுக்காக யுத்தம் பண்ணியவர்களுடைய மனது சோர்ந்து போகும். ஆனாலும் தாவீது ஒரு வித்தியாசமான மனுஷன். நண்பன் மரித்துப்போனாலும் அழுகிறான். தன் சத்துரு மரித்துப் போனாலும் அழுகிறான். (2சாமு 18:33-19:6).

"மகா சத்தமாய்" - கெவுனி வாசலின் மேல்வீட்டிற்குள் ஏறிப்போய் ராஜா மகா சத்தமாய் அழுகிறான். மேலே ராஜா அழுவது கீழே இருக்கும் அனைவருக்கும் கேட்கிறது. வேதாகமத்தில் மகா சத்தமாய் அழுத சம்பவங்கள் பலவற்றைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. (ஆதி 50:10; நியா 11:35; 1இராஜா 13:30; எரே 22:18.

"அப்பொழுது யோவாப் வீட்டிற்குள்ளே ராஜாவினிடத்தில் போய்" - தாவீது அழுது கொண்டிருக்கிறான். ஜனங்களும் கலக்கமடைந்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் யோவாப் தாவீதுக்கு மறுபடியும் உதவி புரிய வருகிறான். ராஜாவின் வீட்டிற்குள் யோவாப் துணிச்சலோடு செல்கிறான். ராஜாவின் ஊழியக்காரர் எல்லோரையும் தாவீது வெட்கப்படுத்துவதாக அவனைக் கடிந்து கொண்டான். மேலும் ராஜா தன்னைப் பகைக்கிறவர்களைச் சிநேகித்து, தன்னைச் சிநேகிக்கிறவர்களைப் பகைக்கிறார் என்று யோவாப் தாவீதின்மீது குற்றம்சுமத்துகிறான். அப்சலோம் உயிரோடிருந்து, நாங்கள் அனைவரும் இன்று செத்துப்போனால், அப்பொழுது உம்முடைய பார்வைக்கு நலமாயிருக்கும் என்று கூறி தாவீதுக்கு உண்மை நிலையைப் புரிய வைக்கிறான். (2சாமு 19:6). வெளியே வந்து, உம்முடைய ஊழியக்காரரோடே அன்பாய்ப் பேசும்; நீர் வெளியே வராதிருந்தால், இன்று இரவு ஒருவரும் உம்மோடே தங்கியிருப்பதில்லை என்று யோவாப் தாவீதினிடத்தில் விளக்கமாகக் கூறி இஸ்ரவேல் ஜனத்தாருடைய மனநிலையை அவனுக்குப் புரிய வைக்கிறான். (2சாமு 19:7).

"ராஜா ஒலிமுகவாசலில் உட்கார்ந்திருக்கிறார்" - அப்சலோமுக்காக அழுது கொண்டிருந்த ராஜாவை யோவாப் கடிந்து கொண்டான். ராஜா துக்கப்படுவதை நிறுத்திவிட்டு, ஒலிமுகவாசலில் வந்து உட்கார்ந்தான். யுத்தத்திலிருந்து திரும்பி வரும் வீரர்களை ராஜா இந்த வாசலில் அமர்ந்திருந்து வரவேற்பது வழக்கம். அவர்கள் தாவீதையும், அவன் வீட்டாரையும், அவன் ராஜ்யத்தையும் சத்துருவின் கையிலிருந்து மீட்டு, ஜெயத்தோடு திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள்.

VII. **தாவீது இராஜ்யபாரத்தைத் திரும்பப் பெறுகிறான்** - (2சாமு 19:9-21:22)

1. மறுபடியும் தாவீது ராஜா

2சாமு 19:9 இஸ்ரவேலுடைய சகல கோத்திரங்களிலுமுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் வாக்குவாதம் உண்டாகி, அவர்கள்: ராஜா நம்முடைய சத்துருக்களின் கைக்கு நம்மை நீங்கலாக்கிவிட்டார், அவர்தானே பெலிஸ்தரின் கைக்கு நம்மைத் தப்புவித்தார்; இப்போதோ அப்சலோமுக்குத் தப்ப, தேசத்தைவிட்டு ஓடிப்போனார்.

19 அதிகாரம்

2சாமு 19:10 நமக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணிவைத்த அப்சலோம் யுத்தத்திலே செத்தான்; இப்போதும் ராஜாவைத் திரும்ப அழைத்து வராமல் நீங்கள் சும்மாயிருப்பானேன் என்று சொல்லிக் கொண்டார்கள்.

2சாமு 19:11 இப்படி இஸ்ரவேலர் எல்லாரும் பேசிக்கொண்டிருக்கிறது, ராஜா இருக்கிற வீட்டிலே அவனுக்குக் கேள்வியான படியினால், தாவீதுராஜா சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களிடத்துக்கு ஆள் அனுப்பி, நீங்கள் யூதாவின் மூப்பரோடே பேசி: ராஜாவைத் தம்முடைய வீட்டுக்குத் திரும்ப அழைத்துவர நீங்கள் மற்றவர்களுக்குப் பிந்திப் போவானேன்?

2சாமு 19:12 நீங்கள் என் சகோதரர், நீங்கள் என் எலும்பும் என் மாம்சமுமானவர்கள்; ராஜாவைத் திரும்ப அழைத்து வர நீங்கள் பிந்தினவர்களாயிருப்பானேன் என்று சொல்லுங்கள்.

2சாமு 19:13 நீங்கள் அமாசாவையும் நோக்கி: நீ என் எலும்பும் என் மாம்சமும் அல்லவோ? நீ யோவாபுக்குப் பதிலாக எந்நாளும் எனக்கு முன்பாகப் படைத் தலைவனாயிராவிட்டால், தேவன் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்று சொல்லச் சொன்னான்.

2சாமு 19:14 இப்படியே யூதாவின் சகல மனுஷருடைய இருதயத்தையும் ஒரு மனுஷனுடைய இருதயத்தைப் போல் இணங்கப்பண்ணினதினால், அவர்கள் ராஜாவுக்கு: நீர் உம்முடைய எல்லா ஊழியக்காரரோடும் திரும்பிவாரும் என்று சொல்லி அனுப்பினார்கள்.

தாவீது தேசத்தை மறுபடியும் மீட்டுக் கொண்டான்

இக்காலத்தில் இஸ்ரவேல் ராஜ்யம் ஒழுங்கற்று இருக்கிறது. தாவீதுக்கு எதிராகக் கலகம் பண்ணியவன் மரித்துப்போனான். அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று யாருக்கும் தெரியவில்லை. யூதாவைத் தவிர, மற்ற கோத்திரத்தார் தாவீதைப் பற்றி நினைத்துப் பார்க்கிறார்கள். தங்கள் சத்துருக்களின் கைகளிலிருந்து தாவீது தங்களை மீட்டுக் கொண்டதை நினைத்துப் பார்க்கிறார்கள். தாவீது இஸ்ரவேல் புத்திரரைப் பெலிஸ்தரின் கையிலிருந்து மீட்டான். இவர்கள் தாவீதிடம் பேசி, அவனை மறுபடியும் ராஜாவாக திரும்பி வருமாறு அழைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். (2சாமு 19:9-10).

2சாமு 19:9-10 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் புத்திரருக்கு மத்தியில் வாக்குவாதம் உண்டான சம்பவம் கூறப்பட்டிருக்கிறது. இந்த வாக்குவாதத்தில் மூன்றுபிரிவான ஜனங்கள் இருக்கிறார்கள். ஒருபிரிவினர் தாவீதுக்கு உண்மையுள்ளவர்கள். மற்றொரு பிரிவினர் அப்சலோமைப் பின்பற்றியவர்கள். இவர்கள் எண்ணிக்கையில் அதிகம். மூன்றாவது பிரிவினர் தாவீதைப் பிடிக்காதவர்கள். ஆகையினால் ஜனங்களுக்குள் வாக்குவாதம் உண்டாயிருக்கும் இந்தச் சூழ்நிலையில் தாவீது உடனடியாக எருசலேமிற்கு வருவதைத் தவிர்க்கிறான். ஜனங்கள் எல்லோரும் தன்னை ராஜாவாக அங்கிகரிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறான்.

தாவீது சாதோக், அபியத்தார் ஆகிய இரண்டு ஆசாரியர்களையும் அழைத்து, அவர்களை யூதாவின் மூப்பரோடே பேசுமாறு அனுப்புகிறான். இவர்கள் இருவரும் யூதா கோத்திரத்தாரோடே பேசி, ராஜாவை அழைத்து வருவதற்கு ஏற்பாடு பண்ணப் போகிறார்கள். தாவீது யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவன். தாவீது யூதா புத்திரரைப் பார்த்து, “என் எலும்பும் என் மாம்சமுமானவர்கள்” என்று பரிவான வார்த்தைகளைப் பேசுகிறான். யோவாபின் இடத்தில் அமாசாவைப் படைத்தலைவனாக ஆக்குவதாக வாக்குப்பண்ணுகிறான். (2சாமு 19:11-13). யூதாவின் சகல மனுஷருடைய இருதயமும் ஒரு மனுஷனுடைய இருதயத்தைப் போல இணங்கிற்று. அவர்கள் ராஜாவைத் திரும்பி வருமாறு அழைக்கிறார்கள்.

19 அதிகாரம்

யூதாவுக்கு தாவீது விசேஷித்த செய்தி சொல்லி அனுப்பியது இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரின் இருதயத்தில் ஒரு பொறாமையை உண்டுபண்ணிற்று. அவர்கள் யூதா புத்திரருக்கு முன்பாகப் போய் தாவீதை அழைத்து வரவேண்டுமென்று தீர்மானம் பண்ணுகிறார்கள். தாவீது இங்கு பிரித்தாளும் சூழ்ச்சி பண்ணுகிறான். தன்னுடைய கோத்திரத்தார் தன்னை முதலாவதாக வந்து, வரவேற்க வேண்டுமென்று தாவீது விரும்புகிறான். யூதா கோத்திரத்தில் தாவீதுக்கு எதிராக இருக்கக்கூடியவன் அமாசா மட்டுமே. ஆகையினால் தாவீது அமாசாவை மன்னித்து, யோவாபுக்குப் பதிலாக அவனைப் படைத்தலைவனாக ஆக்குவதாக வாக்குப் பண்ணுகிறான். யோவாபை விட அமாசா சிறந்த படைத்தலைவனாக இருப்பான் என்பது தாவீதின் எண்ணம். அமாசா இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் ஒன்றுசேர்க்க முயற்சி பண்ணுவான் என்று தாவீது நினைக்கிறான். தாவீதின் முயற்சி வெற்றி பெற்றது. தாவீதை விட்டுப் பிரிந்திருந்தவர்கள் இப்போது தாவீதை வரவேற்பதற்கு முந்திக் கொள்கிறார்கள். (2சாமு 19:14).

2. தாவீது எருசலேமுக்குத் திரும்புகிறான் - (16:5-14)

2சாமு 19:15 ராஜா திரும்ப வருகிறதற்கு யோர்தான்மட்டும் வந்தபோது, யூதா கோத்திரத்தார் ராஜாவுக்கு எதிர்கொண்டு போய், ராஜாவை யோர்தானைக் கடக்கப் பண்ண கில்கால்மட்டும் வந்தார்கள்.

2சாமு 19:16 பகூரிம் ஊரானுன பென்யமீனனுகிய கேராவின் மகன் சீமேயியும் தீவிரித்து, யூதா மனுஷரோடுங் கூடத் தாவீது ராஜாவுக்கு எதிர்கொண்டு போனுன்.

2சாமு 19:17 அவனோடே பென்யமீன் மனுஷர் ஆயிரம்பேரும், சவுலின் வீட்டு வேலைக்காரனாகிய சீபாவும், அவனோடேகூட அவனுடைய பதினைந்து குமாரரும், அவனுடைய இருபது வேலைக்காரரும் இருந்தார்கள்; அவர்கள் ராஜாவுக்கு முன்பாக யோர்தானை வேகமாய்க் கடந்துபோனார்கள்.

2சாமு 19:18 அவர்கள் ராஜாவின் வீட்டாரை இக்கரைப்படுத்தவும், அவன் விரும்பும் காரியத்துக்கு உதவவும், ஒரு படகு இக்கரையிலே வந்தது; அப்பொழுது கேராவின் குமாரனாகிய சீமேயி யோர்தானைக் கடக்கப்போகிற ராஜாவுக்கு முன்பாகத் தாழவிழுந்து,

2சாமு 19:19 ராஜாவை நோக்கி: என் ஆண்டவன் என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தாமலும், ராஜாவாகிய என் ஆண்டவன் எருசலேமிலிருந்து புறப்பட்டு வருகிற நாளிலே, உமது அடியான் செய்த துரோகத்தை ராஜா நினைக்காமலும், தமது மனதில் வைக்காமலும் இருப்பாராக.

2சாமு 19:20 உமது அடியானாகிய நான் பாவஞ் செய்தேன் என்று அறிந்திருக்கிறேன்; இப்போதும், இதோ, ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு எதிர்கொண்டுவர, யோசேப்பு வீட்டார் அனைவருக்கும் நான் இன்று முந்திக் கொண்டேன் என்றான்.

2சாமு 19:21 அப்பொழுது செருயாவின் குமாரனாகிய அபிசாய் பிரதியுத்தரமாக: கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரைச் சீமேயி தூஷித்தபடியினால், அவனை அதற்காகக் கொல்லவேண்டாமா என்றான்.

2சாமு 19:22 அதற்குத் தாவீது: செருயாவின் குமாரரே, இன்று நீங்கள் எனக்குச் சத்துருக்களாகிறதற்கு, எனக்கும் உங்களுக்கும் என்ன? இன்று இஸ்ரவேலில் ஒருவன் கொல்லப்படலாமா? இன்று நான் இஸ்ரவேலின்மேல் ராஜாவானேன் என்று எனக்குத் தெரியாதா என்று சொல்லி,

II சாமுவேல் - தொகுப்புரை

19 அதிகாரம்

"ராஜா திரும்ப வருகிறதற்கு யோர்தான் மட்டும் வந்தபோது" - யூதா கோத்திரத்தாரின் வரவேற்பு தாவீதுக்கு உற்சாகத்தைத் தருகிறது. தாவீது எருசலேமுக்குத் திரும்பி வருவதற்காக யோர்தான் மட்டும் வருகிறான். அப்போது யூதா கோத்திரத்தார் ராஜாவுக்கு எதிர்கொண்டுபோய், ராஜாவை யோர்தானைக் கடக்கப்பண்ண கில்கால்மட்டும் வந்தார்கள்.

"ராஜாவுக்கு எதிர்கொண்டுபோய், ராஜாவை யோர்தானைக் கடக்கப்பண்ண கில்கால்மட்டும் வந்தார்கள்" - எருசலேம் யூதா கோத்திரத்தில் உள்ளது. யூதா கோத்திரத்தாரே தாவீதை முதன் முதலாக ராஜாவாக ஆக்கினார்கள். ஆகையினால் யூதா கோத்திரத்தின் நன்மதிப்பைப் பெறவேண்டுமென்று தாவீது முயற்சி பண்ணினான். தாவீதின் முயற்சி வெற்றி பெற்றது. யூதா கோத்திரத்தார் ராஜாவை வரவேற்பதற்கு வந்துவிட்டார்கள். *(2சாமு 2: 1-4).*

"கில்கால்" **(Gilgal)** - இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்தபோது முதன் முதலில் கில்காலில் பாளயமிறங்கியிருந்தார்கள். (யோசு 5) சவுலின் நாட்களில் ராஜ்யம் இங்கு புதுப்பிக்கப்பட்டது. *(1சாமு 11:15).* கில்கால் யூதாவுக்கு அருகில் உள்ளது. யூதாவின் மனுஷர் இங்கு வந்து, தாவீது யோர்தானைக் கடப்பதற்கு உதவி பண்ணுகிறார்கள்.

"சீமேயி" (நட்ண்ம்ங்ண்) - தாவீது அப்சலோமிடமிருந்து தப்பியோடினபோது, சீமேயி அவனைத் தூஷித்தான். *(2சாமு 16:5-13)* இப்போது ஆயிரம் பென்யமீனரை அழைத்துக் கொண்டு தாவீதை வரவேற்க வருகிறான். தாவீதைத் தூஷித்ததற்காகத் தன்னை மன்னிக்க வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணுகிறான். பென்யமீன் மனுஷர் ஆயிரம் பேரை சீமேயி அழைத்து வந்ததினால் பென்யமீன் கோத்திரத்தில் தனக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கிறது என்பதை வெளிப்படுத்திக் காண்பிக்கிறான்.

தாவீது சீமேயியை மன்னிக்கவில்லையென்றால் இவர்கள் எல்லோருமே சீமேயியோடு சேர்ந்து, தாவீதுக்கு சத்துருக்களாகி விடுவதற்கு வாய்ப்புள்ளது. *(2சாமு 19:16-18).* தாவீதோடு இருக்கும் அபிசாயிக்கு எப்போதுமே பொறுமையிராது. *(2சாமு 19:21; 2சாமு 16:9; 1சாமு 26:8)* சீமேயியைப் பார்த்தவுடன் அபிசாய், அவனைக் கொல்ல வேண்டுமென்று தாவீதிடம் கூறுகிறான். ஆனால் தாவீதோ சீமேயியை மன்னித்து, அவன் மரித்துப் போகக்கூடாது என்று கூறிவிடுகிறான். *(2சாமு 19:21-23).* ஆனாலும், தாவீது சாலொமோனிடம் சீமேயியின் வழக்கை விசாரிக்குமாறு கூறுகிறான். *(1இராஜா 2:8-9,26-46).*

"சீபா" **(Ziba)** - தாவீது அப்சலோமிடமிருந்து தப்பியோடிய போது, சீபா மேவிபோசேத்தை ஏமாற்றியவன். இப்போது தாவீதை வரவேற்பதற்குத் தன்னுடைய 15 குமாரர்களோடும், 20 வேலைக்காரரோடும் வருகிறான்.

"படகு" **(ferry boat)** - வேதாகமத்தில் இதுபோன்ற படகைப் பற்றி இந்த வசனத்தில் மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. யோர்தானைக் கடப்பதற்காகத் தாவீது இந்தப் படகைப் பயன்படுத்தினான்.

செருயாவின் குமாரர் சத்துருக்களாக இருந்த சம்பவங்கள்

1. அப்னேரைக் கொலைபண்ணியது. *(2சாமு 3:27-39)*
2. யோவாப் - அப்சலோமைத் திரும்ப அழைத்து வந்தது. *(2சாமு 14:1-24)*
3. அபிசாய் - தாவீது அப்சலோமிடமிருந்து தப்பியோடிய போது சீமேயியைக் கொல்ல விரும்பியது. *(2சாமு 16: 9-13)*
4. யோவாப் - அப்சலோமைக் கொன்று போட்டது. *(2சாமு 18:9-18)*
5. அபிசாய் - தாவீது தன் தேசத்திற்குத் திரும்பி வருகையில் சீமேயியைக் கொல்ல விரும்பியது. *(2சாமு 19:21-23)*

II சாமுவேல் - தொகுப்புரை

19 அதிகாரம்

6. யோவாப் - அமாசாவைக் கொன்றது. (2சாமு 20:4-12)

7. யோவாப் - இஸ்ரவேலை இலக்கம் பார்த்தது. (2சாமு 24:1-4)

8. யோவாப் - தாவீதுக்குப் பின்பு அதோனியாவிற்கு ஆலோசனை கூறியது. (1இராஜ 1:7; 1இராஜ 2:5)

3. மேவிபோசேத்தின் நல்ல குணம் - (16:1-4)

2சாமு 19:24 சவுலின் குமாரனாகிய மேவிபோசேத்தும் ராஜாவுக்கு எதிர் கொண்டுவந்தான்; ராஜா போனநாள் முதல், அவன் சமாதானத்தோடே திரும்பிவருகிற நாள் மட்டும், அவன் தன் கால்களைச் சுத்தம் பண்ணவுமில்லை, தன் தாடியைச் சவரம் பண்ணவுமில்லை; தன் வஸ்திரங்களை வெளுக்கவுமில்லை.

2சாமு 19:25 அவன் எருசலேமிலிருந்து ராஜாவுக்கு எதிர்கொண்டு வருகிறபோது, ராஜா அவனைப் பார்த்து: மேவிபோசேத்தே, நீ என்னோடு கூட வராமல்போனது என்ன என்று கேட்டான்.

2சாமு 19:26 அதற்கு அவன்: ராஜாவாகிய என் ஆண்டவனே, என் வேலைக்காரன் என்னை மோசம் போக்கினான்; உமது அடியானாகிய நான் முடவனானபடியினால், ஒரு கழுதையின் மேல் சேணம்வைத்து அதின்மேல் ஏறி, ராஜாவோடேகூடப் போகிறேன் என்று அடியேன் சொன்னேன்.

2சாமு 19:27 அவன் ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில் உமது அடியான்மேல் வீண்பழி சொன்னான்; ராஜாவாகிய என் ஆண்டவனோ தேவனுடைய தூதனைப் போல இருக்கிறார்; உமது பார்வைக்கு நலமாய்த் தோன்றுகிறபடி செய்யும்.

2சாமு 19:28 ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு முன்பாக என் தகப்பன் வீட்டார் எல்லாரும் சாவுக்கு ஏதுவாயிருந்தார்களே ஒழிய, மற்றப்படி அல்ல; ஆனாலும் உமது பந்தியிலே சாப்பிடுகிறவர்களோடே உமது அடியேனை வைத்தீர்; இன்னும் நான் ராஜாவிடத்தில் முறையிட, இனி எனக்கு என்ன நியாயம் இருக்கிறது என்றான்.

2சாமு 19:29 அப்பொழுது ராஜா அவனைப் பார்த்து: உன் காரியத்தைக் குறித்து அதிகமாய்ப் பேசுவானேன்? நீயும் சீபாவும் நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லுகிறேன் என்றான்.

2சாமு 19:30 அதற்கு மேவிபோசேத் ராஜாவை நோக்கி: ராஜாவாகிய என் ஆண்டவன் சமாதானத்தோடே தம்முடைய வீட்டிற்கு வந்திருக்கும் போது, அவனே எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளட்டும் என்றான்.

"சவுலின் குமாரனாகிய மேவிபோசேத்தும் ராஜாவுக்கு எதிர்கொண்டுவந்தான்" - சீபா மேவிபோசேத்தை வஞ்சித்து விட்டான். அவனைப் பராமரிக்கவே இல்லை. மேவிபோசேத் தன் கால்களைச் சுத்தம் பண்ணுவதற்கோ, தன் தாடியைச் சவரம் பண்ணுவதற்கோ, தன் வஸ்திரங்களை வெளுக்கவோ சீபா அவனுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. தாவீது அப்சலோமிடமிருந்து தப்பியோடிய நாளிலிருந்து எருசலேமிற்குத் திரும்பி வரும் நாள் வரையிலும் சீபா மேவிபோசேத்தைச் சிறிதும் கவனிக்கவில்லை. ஆகையினால் மேவிபோசேத் தாவீதைப் பரிதாபமாகப் பார்க்க வருகிறான்.

"என் வேலைக்காரன் என்னை மோசம் போக்கினான்" - சீபா மேவிபோசேத்தை வஞ்சித்து விட்டான். தாவீது யுத்தத்தில் ஜெயித்தால், தனக்கு உண்மையில்லாமல் இருந்தவர்களைக் கொன்றுபோடுவான் என்று சீபா நினைத்தான். இதற்காக மேவிபோசேத்தைப் பற்றி சீபா தாவீதிடம் தவறான செய்திகளைக் கூறியிருந்தான். மேவிபோசேத்தின் சொத்துக்களைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்பது சீபாவின் விருப்பம். ஆனால் இப்போது மேவிபோசேத் ராஜாவிடம் நடந்த உண்மை நிலைமைகளை விவரிக்கிறான். (2சாமு 19:26-30; 2சாமு 16:1-4).

19 அதிகாரம்

"நீயும் சீபாவும் நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ளுங்கள்" - தாவீது 2சாமு 16:4 ஆவது வசனத்தில் கூறிய கட்டளையைத் திருத்தி, மறுபடியும் 2சாமு 9:10 ஆவது வசனத்தில் கூறிய ஆரம்பக் கட்டளையை நிறைவேற்றுகிறான்.

தாவீது சீபாவிற்குச் செய்த காரியங்கள்

1. சீபாவும், அவன் குமாரரும் சவுலின் நிலத்தை எல்லாம் பயிரிட்டு, அதன் வருமானத்தின் ஒரு பகுதியைக் கொண்டு, மேவிபோசேத்தை ஆதரிக்க வேண்டும். (2சாமு 9:1-13).
2. மேவிபோசேத் அப்சலோமோடு சேர்ந்து கொண்டு, தனக்கு எதிராகக் கலகம் பண்ணினான் என்று தாவீது நினைத்தான். ஆகையினால் எல்லா நிலத்தையும் சீபாவுக்கே கொடுத்து விட்டான். தாவீதின் இந்த மனமாற்றத்திற்கு சீபாவின் தவறான செய்தியே இதற்குக் காரணம். (2சாமு 16:1-4).
3. மேவிபோசேத் தனக்கு உண்மையுள்ளவனாக இருப்பதைத் தாவீது புரிந்து கொண்டான். ஆகையினால் சீபாவின் நிலத்தை மேவிபோசேத்தும், சீபாவும் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்று கட்டளையிடுகிறான். (2சாமு 19:29) ஆனால் மேவிபோசேத்தோ எல்லா நிலத்தையும் சீபாவிற்கு மனப்பூர்வமாகக் கொடுத்து விடுகிறான். (2சாமு 19:30).

4. பர்சிலாவுக்கு வெகுமதி - (17:27-29)

2சாமு 19:31 கீலேயாத்தியனாகிய பர்சிலாவும் ரோகிலிமிலிருந்து வந்து, யோர்தான்மட்டும் ராஜாவை வழி விட்டனுப்ப, அவனோடேகூட யோர்தானின் துறைமட்டும் கடந்து வந்தான்.

2சாமு 19:32 பர்சிலா எண்பது வயதுசென்ற கிழவனாயிருந்தான்; ராஜா மக்னாயீமிலே தங்கியிருக்குமட்டும் அவனைப் பராமரித்து வந்தான்; அவன் மகா பெரிய மனுஷனாயிருந்தான்.

2சாமு 19:33 ராஜா பர்சிலாவை நோக்கி: நீ என்னோடேகூடக் கடந்துவா, எருசலேமிலே உன்னை என்னிடத்தில் வைத்து பராமரிப்பேன் என்றான்.

2சாமு 19:34 பர்சிலா ராஜாவைப் பார்த்து: நான் ராஜாவோடேகூட எருசலேமுக்கு வர, நான் இன்னும் உயிரோடிருக்கும் ஆயுசின் நாட்கள் எம்மாத்திரம்?

2சாமு 19:35 இப்பொழுது நான் எண்பது வயதுள்ளவன்; இனி நலமானது இன்னதென்றும் தீதானது இன்னதென்றும் எனக்குத் தெரியுமோ? புசிக்கிறதும் குடிக்கிறதும் உமது அடியேனுக்கு ருசிகரமாயிருக்குமோ? சங்கீதக்காரர் சங்கீதக்காரிகளுடைய சத்தத்தை இனிக் கேட்கக்கூடுமோ? உமது அடியேனாகிய நான் இனி ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப் பாரமாயிருக்க வேண்டியது என்ன?

2சாமு 19:36 அடியேன் கொஞ்சதூரம் யோர்தான்மட்டும் ராஜாவோடேகூட வருவேன்; அதற்கு ராஜா இவ்வளவு பெரிய உபகாரத்தை எனக்குச் செய்ய வேண்டியது என்ன?

2சாமு 19:37 நான் என் ஊரிலே மரித்து, என் தாய் தகப்பன்மார் கல்லறையிலே அடக்கம் பண்ணப்படும்படிக்கு, உமது அடியான் திரும்பிப்போகட்டும்; ஆனாலும், இதோ, உமது அடியானாகிய கிம்காம் ராஜாவாகிய என் ஆண்டவனோடேகூட வருவான்; உம்முடைய பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்யும் என்றான்.

2சாமு 19:38 அப்பொழுது ராஜா: கிம்காம் என்னோடேகூட வரட்டும்; உன் பார்வைக்கு நலமானபடியே நான் அவனுக்கு நடப்பித்து, நீ என்னிடத்தில் வேண்டிக் கொள்வதையெல்லாம் நான் உனக்குச் செய்வேன் என்றான்.

19 அதிகாரம்

2சாமு 19:39 ஜனங்கள் எல்லாரும் யோர்தானைக் கடந்தபோது, ராஜா பர்சிலாவை முத்தமிட்டு அவனை ஆசீர்வதித்து, தானும் கடந்துபோனான்; அவனோ தன்னிடத்திற்குத் திரும்பிப்போய் விட்டான்.

2சாமு 19:40 ராஜா கடந்து, கில்கால் மட்டும் போனான்; கிம்காம் அவனோடே கூடக் கடந்துவந்தான்; யூதா ஜனம் அனைத்தும்,இஸ்ரவேலில் பாதிஜனமும், ராஜாவை இக்கரைப்படுத்தி வந்தபின்பு,

பர்சிலா தாவீதிற்கு உதவி புரிந்த சம்பவங்கள்

1. தாவீது அப்சலோமிடமிருந்து தப்பியோடிய போது. (2சாமு 17:27)
2. எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது. (2சாமு 19:31)

"ராஜா மக்னாயீமிலே தங்கியிருக்குமட்டும் அவனைப் பராமரித்து வந்தான்" - (2சாமு 17:26-29)

"எருசலேமிலே உன்னை என்னிடத்தில் வைத்து பராமரிப்பேன்" - தாவீது அப்சலோமுக்குத் தப்பியோடியபோது, மக்னாயீமில் தங்கியிருந்தான். பர்சிலா தாவீதைப் பராமரித்தான். இப்போது தாவீது எருசலேமுக்குத் திரும்பிப் போகிறான். பர்சிலாவையும் தன்னோடு வருமாறு அழைக்கிறான். அவனைத் தன்னிடத்தில் வைத்து பராமரிப்பதாக வாக்குப் பண்ணுகிறான்.

எண்பது வயதானவர்கள்

1. ஆபிரகாம் (ஆதி 16:16)
2. மோசே (யாத் 7:7)
3. ஆரோன் (யாத் 7:7)
4. காலேப் (யோசு 14:10)
5. பர்சிலா (2சாமு 19:32,35)
6. அன்னாள் - தீர்க்கதரிசினி (லூக்கா 2:37)

பர்சிலாவின் முதிர்வயது குறைபாடுகள்

1. நலமானது இன்னதென்றும் தீதானது இன்னதென்றும் தெரியாது.
2. புசிக்கிறதும் குடிக்கிறதும் ருசிகரமாயிராது.
3. சங்கீதக்காரர் சங்கீதக்காரிகளுடைய சத்தத்தைக் கேட்கக்கூடாது.

"அதற்கு ராஜா இவ்வளவு பெரிய உபகாரத்தை எனக்குச் செய்யவேண்டியது என்ன?" - தன்னுடைய முதிர்வயதில் தான் ராஜாவுக்கு பாரமாயிருக்கக்கூடாது என்று பர்சிலா விரும்புகிறான். முதிர்வயதிலும் ஞானமாய் சிந்திக்கிறான்.

"நான் என் ஊரிலே மரித்து" - தாவீதோடு அரண்மனையில் வாழ்வதைப் பார்க்கிலும், தன் ஊரில் மரித்து, தன் தாய் தகப்பன்மார் கல்லறையிலே அடக்கம்பண்ணப்படுவது பர்சிலாவிற்கு மேன்மையாகத் தெரிகிறது. பர்சிலா தாவீதிற்குப் பாரமாயிருக்க விரும்பவில்லை.

"கிம்காம்" (Chimham) - இந்தப் பெயருக்கு "மெலிதல்" "pining" என்று பொருள். இவன் கீலேயாத்தியனாகிய பர்சிலாவின் குமாரன். (2சாமு 19:37-40). பெத்லகேமிற்கு அருகில் இந்தப் பெயரில் ஓர் இடம் உள்ளது. (எரே 41:17). தாவீது ராஜாவின் அரண்மனையில் பர்சிலாவின் குமாரர்கள் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் இருந்திருக்க வேண்டும். (1இராஜா 7)

"யூதா ஜனம் அனைத்தும், இஸ்ரவேலில் பாதிஜனமும்" - ராஜாவை இக்கரைப் படுத்துவதற்கு யூதா ஜனமும், இஸ்ரவேலில் பாதிஜனமும் மட்டுமே வந்தார்கள். இஸ்ரவேலின் எல்லா ஜனங்களும் வரவில்லை. இங்கு வராத இஸ்ரவேலின் மீதி ஜனம் இங்கு வந்த ஜனங்களோடு வாக்குவாதம் பண்ணுகிறார்கள். (2சாமு 19:41-43).

II சாமுவேல் - தொகுப்புரை

19 அதிகாரம்

5. உள்நாட்டுக் குழப்பம் - *(2இராஜா 25:25)*

(1) தாவீதின் மீது பொறாமை

2சாமு 19:41 இதோ, இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவை நோக்கி: எங்கள் சகோதரராகிய யூதா மனுஷர் திருட்டளவாய் உம்மை அழைத்துவந்து, ராஜாவையும், அவர் வீட்டாரையும், அவரோடேகூட இருக்கிற தாவீதின் மனுஷர் அனைவரையும், யோர்தானைக் கடக்கப்பண்ணினது என்ன என்றார்கள்.

2சாமு 19:42 அப்பொழுது யூதா மனுஷர் எல்லாரும் இஸ்ரவேல் மனுஷருக்குப் பிரதியுத்தரமாக: ராஜா எங்களைச் சேர்ந்தவரானபடியினால் இதைச் செய்தோம்; இதற்காக நீங்கள் கோபிப்பானேன்? நாங்கள் ராஜாவின் கையிலே ஏதாகிலும் வாங்கித் தின்றோமோ? எங்களுக்கு வெகுமானம் கொடுக்கப்பட்டதோ என்றார்கள்.

2சாமு 19:43 இஸ்ரவேல் மனுஷரோ யூதா மனுஷருக்குப் பிரதியுத்தரமாக: ராஜாவினிடத்தில் எங்களுக்குப் பத்துப்பங்கு இருக்கிறது; உங்களைப் பார்க்கிலும் எங்களுக்குத் தாவீதினிடத்தில் அதிக உரிமை உண்டு; பின்னை ஏன் எங்களை அற்பமாய் எண்ணினீர்கள்; எங்கள் ராஜாவைத் திரும்ப அழைத்துவரவேண்டும் என்று முந்திச் சொன்னவர்கள் நாங்கள் அல்லவா என்றார்கள்; ஆனாலும் இஸ்ரவேல் மனுஷரின் பேச்சைப் பார்க்கிலும் யூதா மனுஷரின் பேச்சு பலத்தது.

"திருட்டளவாய் உம்மை அழைத்துவந்து" - இஸ்ரவேலின் பத்து கோத்திரத்தார் யூதாவின் மனுஷர்மீது தவறாகக் குற்றம் சுமத்துகிறார்கள். யூதா மனுஷர் ராஜாவைத் திருட்டளவாய் அழைத்துவரவில்லை. தாவீதை யூதா மனுஷரே முதன் முதலாக ராஜாவாக்கினார்கள். *(2சாமு 19:9)* இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் வாக்குவாதம் பண்ணிய போது, யூதா கோத்திரத்தார் அந்தப் பிரச்சனையைப் பெரிதுபடுத்தாமல் அமைதிப்படுத்துகிறார்கள். ராஜாவை திரும்ப அழைத்து வருகிறார்கள். *(2சாமு 19:14)*. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறிய பின்பு, இஸ்ரவேல் புத்திரருக்குள் இப்போது நடைபெறும் கலகம் பதின்மூன்றாவது கலகமாகும். *(2இராஜா 25:25)* இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்குள் பிரிந்திருப்பதற்குக் காரணமே இல்லை. எல்லோருமே தாவீதை ராஜாவாக ஏற்றுக் கொள்கிறார்கள். *(2சாமு 19:42-43)*.

"ராஜா எங்களைச் சேர்ந்தவரானபடியினால் இதைச் செய்தோம்" - தாவீது யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஆகையினால் மற்ற கோத்திரத்தாரைவிட யூதா கோத்திரத்தார் தாவீதுக்கு நெருக்கமாக இருக்கிறார்கள். யூதா கோத்திரத்தார் ராஜாவின் கையில் ஏதாகிலும் வாங்கித் தின்னவும் இல்லை, அவர்களுக்கு வெகுமானம் கொடுக்கப்பட்டதும் இல்லை. ஆனால் மற்றக் கோத்திரத்தாரோ தங்களுடைய எண்ணிக்கையைப் பெரிதுபடுத்துகிறார்கள். ராஜாவினிடத்தில் தங்களுக்குப் பத்துபங்கு இருப்பதாகக் கூறுகிறார்கள். *(2சாமு 19:43)*. ஒரு பக்கத்தில் யூதாவும், பென்யமீன் புத்திரரும் இருக்கிறார்கள். மற்றொரு பக்கத்தில் இஸ்ரவேலின் மீதி பத்துக் கோத்திரத்தார் இருக்கிறார்கள். நாளுக்குநாள் இந்தப் பிரிவினை வளர்ந்து, ஐம்பது வருஷங்களுக்குப் பின்பு சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் வடக்கு ராஜ்யம் எனவும், தெற்கு ராஜ்யம் எனவும் இரண்டாகப் பிரிந்தது. *(1இராஜா 12)*.

20 அதிகாரம்

(2) இராஜ்யத்தில் மறுபடியும் பிளவு - (2:8)

2சாமு 20:1 அப்பொழுது பென்யமீன் மனுஷனான பிக்கிரியின் குமாரனாகிய சேபா என்னும் பேருள்ள பேலியாளின் மனுஷன் ஒருவன் தற்செயலாய் அங்கே இருந்தான்; அவன் எக்காளம் ஊதி: எங்களுக்குத் தாவீதினிடத்தில் பங்கும் இல்லை, ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமும் இல்லை; இஸ்ரவேலே, நீங்கள் அவரவர் தங்கள் கூடாரங்களுக்குப் போய் விடுங்கள் என்றான்.

2சாமு 20:2 அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் தாவீதை விட்டுப் பின்வாங்கி, பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்பற்றிப் போனார்கள்; யோர்தான் தொடங்கி எருசலேம் மட்டுமுள்ள யூதா மனுஷர் தங்கள் ராஜாவைச் சார்ந்திருந்தார்கள்.

"சேபா என்னும் பேருள்ள பேலியாளின் மனுஷன்" - இஸ்ரவேல் தேசத்தில் ஒவ்வொரு முறை குழப்பமும், கலகமும் ஏற்படும்போது பேலியாளின் மனுஷரில் யாராவது ஒருவன் எழும்பி, தன்னுடைய சுய ஆதாயத்தைத் தேடுகிறான். அதுபோல இப்பொழுது சேபா எழும்பியிருக்கிறான். இவன் பிக்கிரியின் குமாரன்.

"சேபா" (Sheba) - இந்தப் பெயருக்கு "ஆணை" "oath" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "சேபா"க்கள்

1. ராமாவின் குமாரன் (ஆதி 10:7; 1நாளா 1:9)
2. யொக்தானின் குமாரன் (ஆதி 10:28; ஆதி 25:3; 1நாளா 1:22)
3. யக்ஷானின் குமாரன் (ஆதி 25:3; 1நாளா 1:32)
4. பிக்கிரியின்குமாரன் (2சாமு 20:1-22)
5. காத்தியன் (1நாளா 5:13)

சேபா என்னும் பெயரில் அரபியாவில் ஒரு தேசம் இருக்கிறது. (1இராஜா 10:1-13; 2நாளா 9:1-12; யோபு 6:19; சங் 72:10,15; ஏசா 60:6; எரே 6:20; எசே 27:22-23; எசே 38:13) இந்தப் பெயரில் ஒரு பட்டணமும் உள்ளது. (யோசு 19:2).

இஸ்ரவேல் ராஜ்யங்கள் பிரிந்த சம்பவங்கள்

1. தாவீது - இஸ்போசேத்தின் காலம். (2சாமு 2:1-32)
2. தாவீது - அப்சலோமின் காலம். (2சாமு 15:1-19:33)
3. தாவீது - சேபாவின் காலம் (2சாமு 20:1-26)

இந்தப் பிரிவினைகள் சிறிது காலம் மட்டுமே நீடித்தது. ஆனால் ரெகொபெயாம் காலத்தில் ஏற்பட்ட பிரிவினை 260 வருஷங்களுக்கு நீடித்திருந்தது. இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரும் அசீரிய சிறையிருப்புக்குப் போகும் வரையிலும் இஸ்ரவேல் தேசம் பிரிந்த தேசமாக இருந்தது. (1இராஜா 12-17).

"யோர்தான் தொடங்கி எருசலேம் மட்டுமுள்ள யூதா மனுஷர் தங்கள் ராஜாவைச் சார்ந்தார்கள்" - இதுபோன்ற சம்பவங்களில் யூதா மனுஷர் தாவீது ராஜாவையும், மற்றக் கோத்திரத்தார் வேறு யாரையாவதும் பின்பற்றிப்போகிறார்கள்.

(3) தாவீது தன் மறுமனையாட்டிகளைக் காவல் வீட்டில் வைக்கிறான் - (12:11; 16:21)

2சாமு 20:3 தாவீது எருசலேமிலுள்ள தன் வீட்டுக்கு வந்தபோது, வீட்டைக் காக்க ராஜா பின்வைத்துப்போன பத்து மறுமனையாட்டிகளையும் வருவித்து, அவர்களை ஒரு காவல் வீட்டிலே வைத்து பராமரித்தான்; அப்புறம் அவர்களிடத்தில் அவன் பிரவேசிக்கவில்லை; அப்படியே அவர்கள் சாகிற நாள்மட்டும் அடைக்கப் பட்டு, உயிரோடிருக்கிற நாளெல்லாம் விதவைகள்போல் இருந்தார்கள்.

20 அதிகாரம்

"வீட்டைக் காக்க ராஜா பின் வைத்துப்போன பத்து மறுமனையாட்டிகள்" - தாவீது அப்சலோமிடமிருந்து ஓடிப்போனபோது, வீட்டைக் காக்க தன்னுடைய பத்து மறுமனையாட்டிகளை எருசலேமிலே வைத்திருந்தான். அப்சலோம் அவர்களைக் கெடுத்து விட்டான். ஆகையினால் தாவீது தன்னுடைய பத்து மறுமனையாட்டிகளையும் வருவித்து, அவர்களை ஒரு காவல் வீட்டிலே வைத்து பராமரித்தான்; அப்புறம் அவர்களிடத்தில் அவன் பிரவேசிக்க வில்லை. அவர்கள் சாகிற நாள்மட்டும் அடைக்கப்பட்டு, உயிரோடிருக்கிற நாளெல்லாம் விதவைகள்போல் இருந்தார்கள். இவர்கள் சிறைக்கைதிகளைப் போல அடைத்து வைக்கப் பட்டிருக்கவில்லை. தாவீதின் மற்ற மறுமனையாட்டிகளிடமிருந்து இவர்கள் பிரிக்கப்பட்டு, தனி வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள்.

(4) அமாசாவின் மரணம் - (19:13)

2சாமு 20:4 பின்பு ராஜா அமாசாவைப் பார்த்து: நீ யூதா மனுஷரை மூன்று நாளைக்குள்ளே என்னிடத்தில் வரவழைத்து, நீயும் கூட வந்து இருக்க வேண்டும் என்றான்.

2சாமு 20:5 அப்பொழுது அமாசா: யூதாவை அழைப்பிக்கப் போய், தனக்குக் குறித்த காலத்திலே வராமல் தாமதித்திருந்தான்.

2சாமு 20:6 அப்பொழுது தாவீது அபிசாயைப் பார்த்து: அப்சலோமைப் பார்க்கிலும் பிக்கிரியின் குமாரனாகிய சேபா, இப்பொழுது நமக்குப் பொல்லாப்புச் செய்வான்; அவன் அரணான பட்டணங்களில் வந்தடைந்து, நம்முடைய கண்களுக்குத் தப்பிப்போகாதபடிக்கு, நீ உன் எஜமானுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு, அவனைப் பின்தொடர்ந்துபோ என்றான்.

2சாமு 20:7 அப்படியே யோவாபின் மனுஷரும், கிரேத்தியரும் பிலேத்தியரும், சகல பலசாலிகளும் அவன் பிறகாலே புறப்பட்டு, பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின் தொடர எருசலேமிலிருந்து போனார்கள்.

2சாமு 20:8 அவர்கள் கிபியோன் கிட்ட இருக்கிற பெரிய கல்லண்டையிலே வந்தபோது, அமாசா அவர்களுக்கு எதிர்ப்பட்டுவந்தான்; யோவாபோ, தான் உடுத்திக் கொண்டிருக்கிற தன் சட்டையின்மேல் ஒரு கச்சையைக் கட்டிக் கொண்டிருந்தான்; அதில் உறையோடே ஒரு பட்டயம் அவன் இடுப்பண்டையிலே தொங்கிற்று; அவன் புறப்படுகையில் அது விழுந்தது.

2சாமு 20:9 அப்பொழுது யோவாப் அமாசாவைப் பார்த்து: என் சகோதரனே, சுகமாயிருக்கிறாயா என்று சொல்லி, அமாசாவை முத்தஞ்செய்யும்படி, தனது வலது கையினால் அவன் தாடியைப் பிடித்து,

2சாமு 20:10 தன் கையிலிருக்கிற பட்டயத்திற்கு அமாசா எச்சரிக்கையாயிராதபோது, யோவாப் அவனை அவன் குடல்கள் தரையிலே சரிந்துபோகத்தக்கதாய், அதினால் வயிற்றிலே ஒரே குத்தாக குத்தினான்; அவன் செத்துப்போனான்; அப்பொழுது யோவாபும் அவன் சகோதரனாகிய அபிசாயும் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்தொடர்ந்தார்கள்.

2சாமு 20:11 யோவாபுடைய வாலிபரில் ஒருவன் செத்தவனண்டையிலே நின்று, யோவாபின்மேல் பிரியப்படுகிறவன் எவனோ, தாவீதின் பட்சத்தில் இருக்கிறவன் எவனோ, அவன் யோவாபைப் பின்பற்றிப் போவானாக என்றான்.

2சாமு 20:12 அமாசா நடுவழியிலே இரத்தத்திலே புரண்டு கிடந்தபடியினால், ஜனங்கள் எல்லாரும் தரித்துநிற்பதை அவன் கண்டு, அமாசாவை வழியிலிருந்து வயலிலே இழுத்துப்போட்டான்; அவனண்டையில் வருகிறவர்கள் எல்லாரும் தரித்துநிற்பதைக் கண்டு, ஒரு வஸ்திரத்தை அவன் மேல் போட்டான்.

II சாமுவேல் - தொகுப்புரை

20 அதிகாரம்

2சாமு 20:13 அவன் வழியிலிருந்து எடுத்துப் போடப்பட்ட பிற்பாடு, எல்லாரும் கடந்து, பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைத் தொடர, யோவாபுக்குப் பின்சென்றார்கள்.

"அமாசா" (Amasa) - யோவாபுக்குப் பதிலாக அமாசா இஸ்ரவேலின் படைத் தலைவனாக இருப்பான் என்று தாவீது ஏற்கெனவே வாக்குப் பண்ணியிருக்கிறான். (2சாமு 19:13) இப்போது தாவீது அமாசாவுக்கு ஒரு பொறுப்பு கொடுக்கிறான். அவன் யூதா மனுஷர் எல்லோரையும் தாவீதினிடத்தில் அழைத்துக் கொண்டு வரவேண்டும். அதை மூன்றுநாளைக்குள் நிறைவேற்ற வேண்டும். இஸ்ரவேலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலகம் இதனால் அடங்கும். ஆனால் அமாசா தனக்குக் குறித்த காலத்திலே வராமல் தாமதித்திருந்தான். தாவீது சேபாவை அழைத்து வருவதற்காக அபிசாயை அனுப்புகிறான். யோவாபும், அவனுடைய மனுஷரும் கிரேத்தியரும் பிலேத்தியரும், சகல பலசாலிகளும் சேபாவைப் பின்தொடர எருசலேமிலிருந்து போனார்கள். அந்தச் சமயத்தில் அமாசா யோவாபிற்கு எதிர்ப்படுகிறான். யோவாப் அமாசாவைக் கொன்று போட்டான். அதன் பின்பு அவன் அபிசாயோடு சேர்ந்து, கலகத்தை அடக்கினான். (2சாமு 20:5-26). இவ்வாறு யோவாப் இஸ்ரவேலின் படைத்தலைவனாகத் தொடருகிறான்.

"அமாசா எச்சரிக்கையாயிராதபோது, யோவாப் அவனை .... ஒரே குத்தாக குத்தினான்" - தனக்கு எதிராக வந்த நபரை யோவாப் இரண்டாம் முறையாகக் கொன்றுபோடுகிறான். (2சாமு 3:7-39).

"யோவாபும் அவன் சகோதரனாகிய அபிசாயும் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்தொடர்ந்தார்கள்" - அமாசா செத்துப்போனான். இதனால் இஸ்ரவேலின் முழு சேனைக்கும் யோவாபும், அவன் சகோதரனாகிய அபிசாயும் பொறுப்பாக இருக்கிறார்கள். இஸ்ரவேலில் ஏற்பட்ட புதிய கலகத்தை இவர்கள் அடக்கினார்கள். அமாசாவின் சரீரத்தை வழியிலிருந்து வயலிலே இழுத்துப்போட்டு, அதை ஒரு வஸ்திரத்தால் மூடினான். அதன் பின்பு இஸ்ரவேலின் சேனை யோவாபுக்குப் பின்சென்றார்கள். (2சாமு 20:10-13).

(5) இஸ்ரவேலர்மறுபடியும் ஒன்று சேர்கிறார்கள்

2சாமு 20:14 அவன் இஸ்ரவேல் கோத்திரங்களையெல்லாம் சுற்றி, பெத்மாக்காவாகிய ஆபேல்மட்டாகவும், பேரீமின் கடைசிமட்டாகவும் வந்திருந்தான்; அவ்விடத்தாரும் கூடி, தாங்களும் அவனுக்குப் பின்சென்றார்கள்.

2சாமு 20:15 அவர்கள் போய் பெத்மாக்காவாகிய ஆபேலிலே அவனை முற்றிக்கைபோட்டு, பட்டணத்திற்கு எதிராகத் தெற்றுவரைக்கும் கொத்தளம் போட்டார்கள்; யோவாபோடே இருக்கிற ஜனங்கள் எல்லாரும் அலங்கத்தை விழப்பண்ணும்படி அழிக்க எத்தனம் பண்ணினார்கள்.

2சாமு 20:16 அப்பொழுது புத்தியுள்ள ஒரு ஸ்திரீ பட்டணத்திலிருந்து சத்தமிட்டு: கேளுங்கள், கேளுங்கள்; நான் யோவாபோடே பேசவேண்டும்; அவரை இங்கே கிட்டவரச் சொல்லுங்கள் என்றாள்.

2சாமு 20:17 அவன் அவளுக்குச் சமீபத்தில் வந்தபோது, அந்த ஸ்திரீ: நீர்தானா யோவாப் என்று கேட்டாள்; அவன் நான் தான் என்றான்; அப்பொழுது, அவள் அவனைப் பார்த்து: உமது அடியாளின் வார்த்தைகளைக் கேளும் என்றாள்; அவன்: கேட்கிறேன் என்றான்.

20 அதிகாரம்

2சாமு 20:18 அப்பொழுது அவள்: பூர்வகாலத்து ஜனங்கள் ஆபேலிலே விசாரித்தால் வழக்குத் தீரும் என்பார்கள்

2சாமு 20:19 இஸ்ரவேலிலே நான் சமாதானமும் உண்மையுமுள்ள வளாயிருக்கையில், நீர் இஸ்ரவேலிலே தாய் பட்டணமாயிருக்கிறதை நிர்மூலமாக்கப் பார்க்கிறீரோ? நீர் கர்த்தருடைய சுதந்தரத்தை விழுங்க வேண்டியது என்ன என்றாள்.

2சாமு 20:20 யோவாப் பிரதியுத்தரமாக: விழுங்க வேண்டும் அழிக்கவேண்டும் என்கிற ஆசைஎனக்கு வெகு தூரமாயிருப்பதாக.

2சாமு 20:21 காரியம் அப்படியல்ல, பிக்கிரியின் குமாரனாகிய சேபா என்னும் பேருள்ள எப்பிராயீம் பர்வதத்தானாயிருக்கிற ஒரு மனுஷன், ராஜாவாகிய தாவீதுக்கு விரோதமாய்த் தன் கையை ஓங்கினான்; அவனை மாத்திரம் ஒப்புக்கொடுங்கள்; அப்பொழுது பட்டணத்தை விட்டுப் போவேன் என்றான். அப்பொழுது அந்த ஸ்திரீ யோவாபைப் பார்த்து: இதோ, அவன் தலை மதிலின்மேலிருந்து உம்மிடத்திலே போடப்படும் என்று சொல்லி,

2சாமு 20:22 அவள் ஜனங்களிடத்தில் போய் புத்தியாய்ப் பேசினதினால், அவர்கள் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவின் தலையை வெட்டி, யோவாபிடத்திலே போட்டார்கள்; அப்பொழுது அவன் எக்காளம் ஊதினான்; அவரவர் பட்டணத்தை விட்டுக் கலைந்து, தங்கள் கூடாரங்களுக்குப் புறப்பட்டுப்போனார்கள்; யோவாபும் ராஜாவிடத்துக்குப் போகும்படி எருசலேமுக்குத் திரும்பினான்.

"அவன் இஸ்ரவேல் கோத்திரங்களை யெல்லாம் சுற்றி" - யோவாபும், அவனுடைய மனுஷரும் இஸ்ரவேல் கோத்திரங்களையெல்லாம் சுற்றி வந்தார்கள். பெத்மாக்காவாகிய ஆபேல்மட்டாகவும், பேரீமின் கடைசிமட்டாகவும் வந்தார்கள். மற்றக் கோத்திரத்தாரும் யோவாபோடு சேர்ந்து கொண்டு, ஆபேலிலிருந்த சேபாவை முற்றிக்கையிடப் போனார்கள். (2சாமு 20:14-15).

"ஆபேல்" **(Abel)** - இது பெத்மாக்கா மாகாணத்திலுள்ள ஒரு பட்டணம். பாலஸ்தீனத்தின் வடக்குப் பகுதியில் உள்ள தாணின் மேற்குப்புறத்தில் உள்ளது. (2சாமு 20:14-18). மறுபெயர்கள் ஆபேல் பெத்மாக்கா **(Abel-Beth-maachah)** (1இராஜா 15:20; 2இராஜா 15:29) ஆபேல்மாயீம் **(Abel-maim)** (2நாளா 16:4).

"பட்டணத்திற்கு எதிராகத் தெற்றுவரைக்கும் கொத்தளம் போட்டார்கள்" - பட்டணத்தின் அலங்கத்தை இடிப்பதற்கு எத்தனம் பண்ணினார்கள். இதற்குரிய இயந்திரங்கள் அவர்களிடம் இருந்தது.

"புத்தியுள்ள ஒரு ஸ்திரீ" - ஆபேல் பட்டணத்தில் புத்தியுள்ள ஒரு ஸ்திரீ இருந்தாள். சேபா என்னும் ஒரு மனுஷனுக்காக ஆபேல் பட்டணம் அழிக்கப்படுவதை அவள் விரும்பவில்லை. சேபாவை யோவாபிடம் பிடித்துக் கொடுப்பதாக வாக்குப்பண்ணினாள். பட்டணத்தை இடிக்காமல் விட்டுவிடுமாறும் கேட்டுக் கொண்டாள். (2சாமு 20: 16-21).

"ஆபேலிலே விசாரித்தால் வழக்குத் தீரும்" - இது எபிரெயரின் வழக்குச்சொல். ஆபேல் பட்டணத்தார் நியாயமாக வழக்குகளை விசாரிக்கிறவர்கள். மற்ற இடங்களில் தீர்த்து வைக்கமுடியாத வழக்குகளைக்கூட ஆபேலின் மனுஷர் தீர்த்து வைப்பார்கள். இவளும் புத்தியுள்ள ஸ்திரீயாக இருக்கிறாள்.

"விழுங்க வேண்டும் அழிக்கவேண்டும் என்கிற ஆசைஎனக்கு வெகுதூரமாயிருப்பதாக." - ஆபேல் பட்டணத்தை அழிக்க வேண்டும் என்னும் எண்ணம் யோவாபிடம் இல்லை. அவனுக்குத் தேவை தாவீதுக்கு எதிராகக் கலகம் பண்ணிய சேபா மட்டும்தான். அவனை மாத்திரம் தன்னிடத்தில் ஒப்புக்கொடுத்தால் பட்டணத்தைவிட்டுப் போய்விடுவேன் என்று யோவாப் கூறுகிறான். ஆபேலின் ஜனங்கள் அதற்குச் சம்மதம் தெரிவிக்கிறார்கள். சேபாவின் தலையை வெட்டி, மதிலின் மேலிருந்து யோவாபிடத்தில் போட்டார்கள்.

20 அதிகாரம்

"தங்கள் கூடாரங்களுக்குப் புறப்பட்டுப் போனார்கள்" - யோவாபின் மனுஷர் சேபாவைத் தேடிப்போனபோது, தாங்கள் தங்குவதற்குக் கூடாரப்பொருட்களையும் தங்களோடு எடுத்துச் சென்றிருக்க வேண்டும். அப்படிப்பட்ட கூடாரங்களுக்கு அவர்கள் திரும்பிப் போனார்கள். *(2சாமு 19:8).*

(6) புதிய ராஜ்யபாரத்தில் தாவீதின் அதிகாரிகள் - *(8:16; 15:12; 23:8; 1நாளா 27:25)*

2சாமு 20:23 யோவாப் இஸ்ரவேலுடைய எல்லா இராணுவத்தின்மேலும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயா கிரேத்தியர்மேலும் பிலேத்தியர்மேலும் தலைவராயிருந்தார்கள்.

2சாமு 20:24 அதோராம் பகுதிகளை வாங்குகிறவனும், அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரியும்,

2சாமு 20:25 சேவா சம்பிரதியும், சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியருமாயிருந்தார்கள்.

2சாமு 20:26 யயீரியனாகிய ஈராவும் தாவீதுக்குப் பிரதானியாயிருந்தான்.

தாவீதின் தலைவர்கள்

1. யோவாப் - இஸ்ரவேலுடைய எல்லா இராணுவத்தின்மேலும் *(2சாமு 20:23; 2சாமு 8:16)*
2. பெனாயா - கிரேத்தியர்மேலும் பிலேத்தியர்மேலும் *(2சாமு 20:23)*
3. அதோராம் - பகுதிகளை வாங்குகிறவன். *(2சாமு 20:24)*
4. யோசபாத் - மந்திரி *(2சாமு 8:17)*
5. சேவா - சம்பிரதி *(2சாமு 20:25)*
6. சாதோக் - பிரதான ஆசாரியன் *(2சாமு 8:17)*
7. அபியத்தார் - பிரதான ஆசாரியன்
8. ஈரா - பிரதானி *(2சாமு 20:26)*

"பெனாயா" - *(2சாமு 8:18)*

"கிரேத்தியர்மேலும் பிலேத்தியர்மேலும்" - *(2சாமு 8:18)*

"அதோராம்" (Adoram) - இந்தப் பெயருக்கு "உயர்ந்த மரியாதை" "high honor" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "அதோராம்"கள்

1. பகுதிகளை வாங்குகிறவன். *(2சாமு 20:24).* மறுபெயர் அதோனிராம் Adoniram *(1இராஜா 4:6; 1இராஜா 5:14)*
2. ரெகொபெயாமின் அதிகாரி. *(2இராஜா 12:18)*

"யோசபாத்" (Jehoshaphat) - இந்தப் பெயருக்கு "யெகோவா நியாயாதிபதியாயிருக்கிறார்" 'Jehovah is judge" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "யோசபாத்"துகள்

1. தாவீதின் காலத்திலும், சாலொமோனின் காலத்திலும் இருந்த மந்திரி. *(2சாமு 20:24; 2சாமு 8:16; 1இராஜா 4:3; 1நாளா 18:15)*
2. சாலொமோனின் வேலையாள். *(1இராஜா 4:17)*
3. யூதாவின் ராஜா *(1இராஜா 15:24; 1இராஜா 22:1-51; 2இராஜா 8:16; 2இராஜா 12:18; 2நாளா 17:1-21:2,12; 2நாளா 22:9)*
4. நிம்சியின் குமாரன் *(2இராஜா 9:2,14)*
5. ஆசாரியன் *(1நாளா 15:24)*

II சாமுவேல் - தொகுப்புரை

20 அதிகாரம்

யோசபாத்தின் பள்ளத்தாக்கைப் பற்றி யோவே 3:2,12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"அகிலூத்" (Ahilud) - இந்தப் பெயருக்கு "சகோதரன்" "a brother" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "அகிலூத்"துகள்

1. யோசபாத் மந்திரியின் தகப்பன் (2சாமு 20:24; 2சாமு 8:16; 1இராஜா 4:3; 1நாளா 18:15)
2. பாணாவின் தகப்பன் (1இராஜா 4:12)

"சேவா" (Sheva) - இந்தப் பெயருக்கு "மாயை" "vanity" என்றுபொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "சேவா"க்கள்

1. தாவீதின் சம்பிரதி (2சாமு 20:25)
2. மக்பேனாவின் தகப்பன் (1நாளா 2:49)

"ஈரா" (Ira) - இந்தப் பெயருக்குக் "காவல்காரன்" "watcher" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஈரா"க்கள்

1. தாவீதின் பிரதானி (2சாமு 20:26)
2. தெக்கோவாவூரான். (2சாமு 23:26; 1நாளா 11:28,40; 1நாளா 27:9)
3. தாவீதின் மெய்க்காவலன். (2சாமு 23:38)

II சாமுவேல் - தொகுப்புரை

21 அதிகாரம்

6. மூன்று வருஷ ஓயாத பஞ்சம்

2சாமு 21:1 தாவீதின் நாட்களில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சம் உண்டாயிருந்தது; அப்பொழுது தாவீது கர்த்தருடைய சமுகத்தில் விசாரித்தான். கர்த்தர்: கிபியோனியரைக் கொன்றுபோட்ட சவுலுக்காகவும், இரத்தப்பிரியரான அவன் வீட்டாருக்காகவும் இது உண்டாயிற்று என்றார்.

2சாமு 21:2 அப்பொழுது ராஜா: கிபியோனியரை அழைப்பித்தான்; கிபியோனியரோ, இஸ்ரவேல் புத்திரராயிராமல் எமோரியரில் மீதியாயிருந்தவர்கள்; அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டிருந்தும்,சவுல் இஸ்ரவேல் புத்திரருக்காகவும் யூதாவுக்காகவும் காண்பித்த வைராக்கியத்தினால் அவர்களை வெட்ட வகைதேடினான்.

2சாமு 21:3 ஆகையால் தாவீது கிபியோனியரைப் பார்த்து: நான் உங்களுக்குச் செய்ய வேண்டியது என்ன? நீங்கள் கர்த்தருடைய சுதந்தரத்தை ஆசீர்வதிக்கும்படிக்கு, நான் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் என்ன என்று கேட்டான்.

2சாமு 21:4 அப்பொழுது கிபியோனியர் அவனைப் பார்த்து: சவுலோடும் அவன் வீட்டாரோடும் எங்களுக்கு இருக்கிற காரியத்திற்காக எங்களுக்கு வெள்ளியும்பொன்னும் தேவையில்லை; இஸ்ரவேலில் ஒருவனைக் கொன்றுபோட வேண்டும் என்பதும் எங்கள் விருப்பம் அல்ல என்றார்கள். அப்பொழுது அவன்: அப்படியானால், நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டான்.

2சாமு 21:5 அவர்கள் ராஜாவை நோக்கி: நாங்கள் இஸ்ரவேலின் எல்லையிலெங்கும் நிலைக்காதபடிக்கு, அழிந்துபோக எவன் எங்களை நிர்மூலமாக்கி எங்களுக்குப் பொல்லாப்புச் செய்ய நினைத்தானோ,

2சாமு 21:6 அவன் குமாரரில் ஏழுபேர் கர்த்தர் தெரிந்துகொண்ட சவுலின் ஊராகிய கிபியாவிலே நாங்கள் அவர்களைக் கர்த்தருக்கென்று தூக்கிப் போட, எங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படவேண்டும் என்றார்கள். நான் அவர்களை ஒப்புக்கொடுப்பேன் என்று ராஜா சொன்னான்.

2சாமு 21:7 ஆனாலும் தாவீதும் சவுலின் குமாரனாகிய யோனத்தானும் கர்த்தரைக் கொண்டு இட்ட ஆணையினிமித்தம், ராஜா சவுலின் குமாரனாகிய யோனத்தானின் மகன் மேவிபோசேத்தைக் தப்பவிட்டு,

2சாமு 21:8 ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் சவுலுக்குப் பெற்ற அவளுடைய இரண்டு குமாரராகிய அர்மோனியையும் மேவிபோசேத்தையும், சவுலின் குமாரத்தியாகிய மீகாள் மேகோலாத்தியனான பர்சிலாவின் குமாரனாகிய ஆதரியேலுக்குப் பெற்ற அவளுடைய ஐந்து குமாரரையும் பிடித்து,

2சாமு 21:9 அவர்களைக் கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுத்தான்; அவர்களைக் கர்த்தருடைய சமுகத்தில் மலையின்மேல் தூக்கிப்போட்டார்கள்; அப்படியே அவர்கள் ஏழுபேரும் ஒருமிக்க விழுந்தார்கள்; வாற்கோதுமை அறுப்பு துவக்குகிற அறுப்புக் காலத்தின் முந்தினநாட்களிலே அவர்கள் கொன்றுபோடப்பட்டார்கள்.

"அப்பொழுது" - அப்சலோமின் கலகம், சேபாவின் கலகம் ஆகியவை முடிந்த பின்பு. (2சாமு 15:1-20:22).

II சாமுவேல் - தொகுப்புரை

21 அதிகாரம்

தேசத்தில் உண்டான பஞ்சம்

தாவீதின் நாட்களில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சம் உண்டாயிருந்தது. மூன்று வருஷமாகத் தாவீது ஊரீம், தும்மீம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கர்த்தரிடத்தில் விசாரிக்கவில்லை. முதல் இரண்டு பஞ்சம் ஏற்பட்டபோது, இது இயற்கையின் வறட்சி என்று நினைத்தான். ஆனால் மூன்றாம் வருஷமும் பஞ்சம் தொடர்ந்தது. இதைக் கர்த்தரிடத்தில் விசாரிக்க வேண்டுமென்று தாவீது தீர்மானம் பண்ணினான்.

கர்த்தர் தாவீதுக்குப் பதில் கூறினார். கிபியோனியரைக் கொன்றுபோட்ட சவுலுக்காகவும், இரத்தப்பிரியரான அவன் வீட்டாருக்காகவும் இந்தப் பஞ்சம் உண்டாயிற்று என்று கர்த்தர் தாவீதிடம் கூறினார்.

சவுலுக்கும், கிபியோனியருக்கும் என்ன நடந்தது என்பது பற்றி வேதாகமத்தில் கூறப்படவில்லை. இதைப் பற்றிய வரலாறு 2சாமு 21:1-14 ஆகிய வசனங்களில் மட்டுமே காணப்படுகிறது. சவுல் அமைதியை விரும்பும் எமோரியரைக் கொன்றுபோட்டான். அவர்களைப் பாதுகாப்பதாக யோசுவாவின் நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் வாக்குப் பண்ணியிருந்தார்கள். *(2சாமு 21:2; யோசு 9:3,16-17).*

தாவீது கிபியோனியரை அழைப்பித்து, சவுல் செய்த தப்பிதத்திற்குப் பிரயாச்சித்தம் என்ன என்று கேட்டான். சவுலின் குமாரரில் ஏழுபேரைக் கிபியாவிலே கர்த்தருக்கென்று தூக்கிப்போட அவர்களை எங்களுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று கிபியோனியர் கேட்டார்கள். *(2சாமு 21:3-6).* தாவீதும் அவர்களை ஒப்புக் கொடுத்தான். வாதை நின்றது. *(2சாமு 21:7-14).*

2சாமு 21 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் சம்பவம் தாவீதின் ஆரம்பக்கால ஆட்சியின்போது நடைபெற்றிருக்க வேண்டுமென்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் இதற்கு வேதவசன ஆதாரம் எதுவுமில்லை. 2சாமு 21:1 ஆவது வசனத்தில் "அப்பொழுது" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பதால், இது அப்சலோமின் கலகத்திற்குப் பின்பு நடைபெற்றிருக்க வேண்டும்.

சவுல் கிபியோனியரைக் கொன்றுபோட்டது *(2சாமு 21:1),* சவுலின் குடும்பத்தாருடைய அழிவு *(2சாமு 16:7-8),* சவுலின் வீட்டார் சாவுக்கேதுவாக இருந்ததைப் பற்றி மேவிபோசேத் கூறியது *(2சாமு 19:28)* ஆகியவை அனைத்துமே இந்த அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவை.

சவுல் கிபியோனியரைக் கொன்றுபோட்டது எப்போது நடைபெற்றது என்று தெரியவில்லை. ஆனாலும் இஸ்ரவேலின்மீது பஞ்சம் வந்தபடியினால், கிபியோனியருக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென்று தாவீது விரும்பினான். அக்காலத்து வழக்கத்தின் பிரகாரம், அவர்கள் கேட்டுக் கொள்வதை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருந்தான். சவுலின் குமாரர் கொல்லப்பட்ட சம்பவம் இஸ்ரவேலுக்கும், கிபியோனியருக்கும் இடையிலுள்ள உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. *(யோசு 9).*

"கிபியோனியரைக் கொன்றுபோட்ட சவுலுக்காகவும்" - ஆணையிடுகிறவர்கள் அதை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பேற்க வேண்டும். தங்களுக்கு நஷ்டம் வந்தாலும் ஆணையிட்டவர் தன் ஆணையை நிறைவேற்றத் தவறக்கூடாது. கர்த்தர் இதில் கண்டிப்புடன் இருக்கிறார். *(2சாமு 21:1-2; யோசு 9; சங் 15:4).*

"எங்களுக்கு வெள்ளியும் பொன்னும் தேவையில்லை" - கிபியோனியர் சவுலின் குடும்பத்தில் ஏழு குமாரரைக் கொன்றுபோட வேண்டுமென்று விரும்புகிறார்கள். இது கர்த்தருடைய விருப்பமல்ல. கிபியோனியரின் விருப்பம். கிபியோனியர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இருக்கும் புறஜாதியார் ஆவார்கள். இவர்கள் புறஜாதியாரின் வழக்கத்தின் பிரகாரமாகச் சிந்திக்கிறார்கள். அவர்களை நேர்மையாக நடத்த வேண்டுமென்றும், அவர்களுக்குக் கொடுத்திருக்கும் ஆணையை நிறைவேற்ற வேண்டுமென்றும் கர்த்தர் எதிர்பார்க்கிறார். கிபியோனியருக்குப் பிராயச்சித்தம் செய்த பின்பு, தேசத்தில் பஞ்சம் ஒய்ந்தது. கர்த்தர் தேசத்தை மறுபடியும் ஆசீர்வதிக்கிறார்.

21 அதிகாரம்

"எவன் எங்களை நிர்மூலமாக்கி எங்களுக்குப் பொல்லாப்புச் செய்ய நினைத்தானோ"- இஸ்ரவேல் புத்திரருக்கும், கிபியோனியருக்கும் இடையில் ஏற்கெனவே உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சவுலோ அந்த உடன்படிக்கையை மீறி, கிபியோனியரை நிர்மூலமாக்கிவிட்டான். இந்தப் பொல்லாப்புக்குச் சவுலும், அவன் குடும்பத்தாருமே காரணம். ஆகையினால் கிபியோனியர் சவுலின் குமாரரை மட்டுமே கொன்றுபோட வேண்டுமென்று விரும்புகிறார்கள். *(2சாமு 21:4-6).*

"அவன் குமாரரில் ஏழுபேர்" - ரிஸ்பாளின் குமாரர் இருவர், மேராபின் குமாரர் ஐவர். ஆக மொத்தம் ஏழுபேர். *(2சாமு 21:8).*

"மேவிபோசேத்" **(Mephibosheth)** - இவன் யோனத்தானின் குமாரன் *(2சாமு 9:1-13).* ரிஸ்பாளின் குமாரனல்ல. *(2சாமு 21:8).* யோனத்தானின் குடும்பத்தைப் பாதுகாப்பதாகத் தாவீது அவனோடு வாக்குப்பண்ணியிருந்தான். *(1சாமு 20:14-15,42; 1சாமு 23:18)* மேவிபோசேத்திடமும் தாவீது வாக்குப் பண்ணியிருக்கிறான். ஆகையினால் தாவீது யோனத்தானின் குமாரனாகிய மேவிபோசேத்தைத் தப்பவிட்டு விடுகிறான். மற்ற ஏழுபேரை மட்டுமே கிபியோனியரிடம் ஒப்புக் கொடுக்கிறான். *(2சாமு 21:8-9).*

"ரிஸ்பாள்" **(Rizpah)** - இவள் சவுலின் மறுமனையாட்டி. அர்மோனி, மேவிபோசேத் ஆகிய இருவரும் ரிஸ்பாளின் குமாரர்கள். *(2சாமு 21:8,11).*

"மீகாள்" **(Michal)** - இது மேராப் **(Merab)** என்று இருக்க வேண்டும். ஏனெனில் மீகாளுக்கு இரண்டு குமாரர்கள் மட்டுமே இருக்கிறார்கள். *(2சாமு 6:23).* மேராப் தாவீதின் குமாரத்தி. மீகாளின் சகோதரி. இவள் ஆதரியேலின் மனைவி. இவள் ஐந்து குமாரரைப் பெற்றாள். *(1சாமு 18:19).* பழைய ஏற்பாட்டுச் சுவடிகளைப் பிரதியெடுத்தவர் இதைத் தவறாக எழுதியிருக்கிறார். ஒருவேளை மேராப் மரித்த பின்பு, அவளுடைய குமாரரை மீகாள் எடுத்து வளர்த்திருக்க வேண்டும். ஆகையினால் இவர்கள் ஐவரும் மீகாளின் குமாரர் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த வசனத்தில் "மீகாள்...பெற்ற அவளுடைய ஐந்து குமாரர்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதில் "பெற்ற" என்னும் வார்த்தையின் எபிரெய வார்த்தை "யாலத்" **יָלַד - yaw-lad' - 3205** என்பதாகும். இதற்கு "பெறுதல்" என்றுதான் பொருள். இது "வளர்த்தல்" என்று பொருள்படாது.

"வாற்கோதுமை அறுப்பு துவக்குகிற அறுப்புக் காலத்தின் முந்தினநாட்களிலே" - இது கோடைகாலத்தைக் குறிக்கும். எமோரியரின் வழக்கத்தின் பிரகாரம் தூக்கிப்போடப்பட்ட சரீரங்களை உடனடியாக எடுத்துப்போடக் கூடாது. அடுத்து வரும் மழைக்காலம் வரையிலும் அந்த சரீரங்கள் தூக்கிப்போடப்பட்டிருக்க வேண்டும். தங்களுடைய தெய்வங்களின் கோபத்தைத் தணிப்பதற்காக எமோரியர் இதுபோன்று செய்தார்கள். தெய்வ கோபத்தினாலேயே பஞ்சம்வரும்என்பதுஇவர்களுடைய நம்பிக்கை.

7. சவுலின் குமாரருக்காக ரிஸ்பாளின் துக்கம் - *(வசனம் 4-9)*

> 2சாமு 21:10 அப்பொழுது ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் இரட்டுப் புடவையை எடுத்துக்கொண்டுபோய், அதைப் பாறையின்மேல் விரித்து, அறுப்புநாளின்துவக்கம் முதற்கொண்டு வானத்திலிருந்து அவர்கள்மேல் மழை பெய்யுமட்டும் பகலில் ஆகாயத்துப் பறவைகளாகிலும் இரவில் காட்டு மிருகங்களாகிலும் அவர்கள்மேல் விழவொட்டாதிருந்தாள்.

2சாமு 21:11 ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள் என்னும் சவுலின் மறுமனையாட்டி செய்தது தாவீதுக்கு அறிவிக்கப்பட்ட போது,

"ரிஸ்பாள் இரட்டுப்புடவையை எடுத்துக் கொண்டு போய், அதைப் பாறையின்மேல் விரித்து" - மழைகாலம் வருவதற்கு இன்னும் ஐந்துமாதம் இருக்கிறது. அதுவரையிலும் ரிஸ்பாள் தன்னுடைய குமாரரின் சரீரங்களைப் பாதுகாக்கிறாள். பகலில் ஆகாயத்துப் பறவைகளாகிலும் இரவில் காட்டு மிருகங்களாகிலும் அவர்கள்மேல் விழவொட்டாதிருந்தாள். தாவீதுக்கு ரிஸ்பாள் செய்தது அறிவிக்கப்படுகிறது. தாவீது அந்தச் சரீரங்களை எடுத்து வந்து, பென்யமீன் தேசத்துச் சேலா ஊரிலிருக்கிற அவன் தகப்பனாகிய கீசின் கல்லறையில் அடக்கம் பண்ணுவித்தான் *(2சாமு 21:11-14).*

II சாமுவேல் – தொகுப்புரை

24 அதிகாரம்

8. சவுல், யோனத்தான் ஆகியோரின் அடக்கம் - (1சாமு 31:11-13; வசனம் 4-9)

2சாமு 21:12 தாவீது போய், பெலிஸ்தர் கில்போவாவிலே சவுலை வெட்டினபோது, பெத்சானின் வீதியிலே தூக்கிப் போடப்பட்டதும், கீலேயாத்திலுள்ள யாபேஸ் பட்டணத்தார் அங்கே போய்த் திருட்டளவாய்க் கொண்டுவந்ததுமான சவுலின் எலும்புகளையும், அவன் குமாரனான யோனத்தானின் எலும்புகளையும்,அவர்களிடத்திலிருந்து எடுத்து,

2சாமு 21:13 அங்கே இருந்து அவர்களைக் கொண்டுவந்து, தூக்கிப் போடப் பட்டவர்களின் எலும்புகளையும் அவைகளோடே சேர்த்து,

2சாமு 21:14 சவுலின் எலும்புகளையும் அவன் குமாரனாகிய யோனத்தானின் எலும்புகளையும், பென்யமீன் தேசத்துச் சேலா ஊரிலிருக்கிற அவன் தகப்பனாகிய கீசின் கல்லறையில் அடக்கம்பண்ணு வித்தான்; ராஜா கட்டளையிட்ட படியெல்லாம் செய்தார்கள்; அதற்குப் பின்பு தேவன் தேசத்திற்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்.

"பெத்சானின் வீதியிலே தூக்கிப்போடப் பட்டதும்" - யாபேஸ் பட்டணத்தாருக்கு இவர்களுடைய எலும்புகள் மட்டுமே கிடைத்தது. மரித்தவர்களின் மாம்சம் கிடைக்கவில்லை. (1சாமு 31:11-13)

9. பெலிஸ்தருடன் யுத்தம் - நான்கு இராட்சத புத்திரர்

2சாமு 21:15 பின்பு பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம் செய்தார்கள்; அப்பொழுது தாவீதும் அவனோடேகூட அவன் சேவகரும் போய், பெலிஸ்தரோடு யுத்தம் பண்ணினார்கள்; தாவீது விடாய்த்துப் போனான்.

2சாமு 21:16 அப்பொழுது முந்நூறு சேக்கல் நிறை வெண்கலமான ஈட்டியைப் பிடிக்கிறவனும்,புதுப் பட்டயத்தைஅரையிலேகட்டிக் கொண்ட வனுமான இஸ்பிபெனோப் என்னும் இராட்சத புத்திரரில் ஒருவன் தாவீதை வெட்டவேண்டும் என்று இருந்தான்.

2சாமு 21:17 செருயாவின் குமாரனாகிய அபிசாய் ராஜாவுக்கு உதவியாக வந்து, பெலிஸ்தனை வெட்டிக் கொன்று போட்டான். அப்பொழுது தாவீதின் மனுஷர்: இஸ்ரவேலின் விளக்கு அணைந்து போகாதபடிக்கு,நீர் இனி எங்களோடே யுத்தத்திற்குப் புறப்பட வேண்டாம் என்று அவனுக்கு ஆணையிட்டுச் சொன்னார்கள்.

2சாமு 21:18 அதற்குப் பின்பு பெலிஸ்தரோடே திரும்பவும் கோபிலே யுத்தம் நடந்தது; ஊசாத்தியனாகிய சிபேக்காய் இராட்சத சந்ததியான சாப்பை வெட்டிப்போட்டான்.

2சாமு 21:19 பெலிஸ்தரோடு இன்னும் வேறொரு யுத்தம் கோபிலே உண்டானபோது, யாரெயொர்கிமின் குமாரனாகிய எல்கானான் என்னும் பெத்லகேமியன் காத் ஊரானாகிய கோலியாத்தின் சகோதரனை வெட்டினான்; அவன் ஈட்டித் தாங்கானது நெய்கிறவர்களின் படை மரம் அவ்வளவு பெரிதாயிருந்தது.

2சாமு 21:20 இன்னும் ஒரு யுத்தம் காத் ஊரிலே நடந்தபோது, அங்கே நெட்டையனான ஒரு மனுஷன் இருந்தான்; அவன் கைகளில் அவ்வாறு விரல்களும் அவன் கால்களில் அவ்வாறு விரல்களும், ஆக இருபத்து நான்கு விரல் களுள்ளவன்; இவனும் இராட்சத பிறவியாயிருந்து,

2சாமு 21:21 இஸ்ரவேலை நிந்தித்தான்; தாவீதின் சகோதரனான சிமேயாவின் குமாரனாகிய யோனத்தான் அவனை வெட்டினான்.

2சாமு 21:22 இந்த நாலுபேரும் காத்தூரிலே இராட்சதனுக்குப் பிறந்தவர்கள்; இவர்கள் தாவீதின் கையினாலும் அவன் சேவகரின் கையினாலும் மடிந்தார்கள்.

II சாமுவேல் – தொகுப்புரை

21 அதிகாரம்

பெலிஸ்தரோடு நடைபெற்ற யுத்தங்கள்

1. தாவீது பல பெலிஸ்தரைக் கொன்றுபோட்டு விடாய்த்துப்போன யுத்தம். இந்த யுத்தத்தில் இஸ்பிபெனோப் என்னும் இராட்சத புத்திரரில் ஒருவன் தாவீதை வெட்டவேண்டும் என்று இருந்தான். செருயாவின் குமாரனாகிய அபிசாய் ராஜாவுக்கு உதவியாக வந்து, பெலிஸ்தனை வெட்டிக் கொன்றுபோட்டான் *(2சாமு 21:15-17)*.

2. அதற்குப் பின்பு பெலிஸ்தரோடே திரும்பவும் கோபிலே யுத்தம் நடந்தது; ஊசாத்தியனாகிய சீபேக்காய் இராட்சத சந்ததியான சாப்பை வெட்டிப்போட்டான். *(2சாமு 21:18)*.

3. பெலிஸ்தரோடு இன்னும் வேறொரு யுத்தம் கோபிலே உண்டானபோது, யாரெயொர்கிமின் குமாரனாகிய எல்க்கானான் என்னும் பெத்லகேமியன் காத் ஊரானாகிய கோலியாத்தின் சகோதரனை வெட்டினான் *(2சாமு 21:19)*

4. இன்னும் ஒரு யுத்தம் காத் ஊரிலே நடந்தது. ஒரு இராட்சதன் இஸ்ரவேலை நிந்தித்தான்; தாவீதின் சகோதரனான சீமேயாவின் குமாரனாகிய யோனத்தான் அவனை வெட்டினான். *(2சாமு 21:20-22)*

தாவீதும், அவனுடைய பராக்கிரமசாலிகளும் கோலியாத்தோடு சேர்ந்து, ஐந்து இராட்சதரைக் கொன்றுபோட்டார்கள். *(1சாமு 17)*.

"தாவீது விடாய்த்துப்போனான்" - தாவீதுக்கு இப்போது 60 வயதாயிற்று. நீண்ட நாள் யுத்தம் பண்ண முடியவில்லை. முதன் முறையாகத்தாவீது யுத்தத்தில் விடாய்த்துப் போயிருக்கிறான். ஆகையினால் தாவீதின் மனுஷர் தாவீதிடம் இஸ்ரவேலின் விளக்கு அணைந்துபோகாதபடிக்கு, நீர் இனி எங்களோடே யுத்தத்திற்குப் புறப்படவேண்டாம் என்று அவனுக்கு ஆணையிட்டுச் சொன்னார்கள். *(2சாமு 21:17)*.

"இஸ்பிபெனோப்" **(Ishbi-benob)** - இந்தப் பெயருக்கு 'மலையில் சஞ்சரிக்கிறவன்" **"dweller on the mount"** என்று பொருள். இராட்சத புத்திரரில் ஒருவன். இவன் தாவீதை வெட்டவேண்டும் என்று இருந்தான் *(2சாமு 21:16-17)*.

"சீபேக்காய்" **(Sibbechai)** - இந்தப் பெயருக்கு "நெசவாளி" **"weaver"** என்று பொருள். ஊசாத்தியன். இவன் இராட்சத சந்ததியான சாப்பை வெட்டிப்போட்டான். *(2சாமு 21:18; 1நாளா 20:4)*. மறுபெயர்கள் சிபெக்காய் **(Sibbecai)** *(1நாளா 11:29; 1நாளா 27:11)* மெபுன்னாயி **(Mebunnai)** *(2சாமு 23:27)*.

"சாப்" **(Saph)** - இந்தப் பெயருக்கு "உயரம்" **"tall"** என்று பொருள். மறுபெயர் சிப்பாயி **(Sippai)** *(1நாளா 20:4)*.

"எல்க்கானான்" **(Elhanan)** - இந்தப் பெயருக்கு "தேவனுடைய இரக்கம்" **"mercy of God"** என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "எல்க்கானான்"கள்

1. யாரெயொர்கிமின் குமாரன். *(2சாமு 21:19; 1நாளா 20:5)*
2. தோதோவின் குமாரன். *(2சாமு 23:24; 1நாளா 11:26)*

"யாரெயொர்கிம்" **(Jaare-oregim)** - இந்தப் பெயருக்கு "வனாந்தரத்தில் வசிக்கிறவன்" **"foresters"** என்று பொருள். பெத்லகேம் ஊரான்.

"நெய்கிறவர்களின் படைமரம்" - *(1சாமு 17:7)*

இராட்சதப்பிறவி (giant) - רָפָא – raw faw', raw-faw'-iym - 7497

II சாமுவேல் - தொகுப்புரை

21 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - ரெப்பாயீம், இராட்சதர், இராட்சதம், ரெப்பாயீமியர் (2சாமு 21:16,18,20,22; 1நாளா 20:4,6,8). இராட்சதப் பிறவி என்பதன் எபிரெயப் பெயர் ரப்பா என்பதாகும். இது ஒரு ராட்சதனுடைய பெயரையும், எல்லா ராட்சதர்களுக்கும் தகப்பனையும் குறிக்கும். (2சாமு 5:18,22; 2சாமு 23:13; ஆதி 14:5; ஆதி 15:20; உபா 2:11,20; உபா 3:11,13; யோசு 12:4; யோசு 13:12; யோசு 15:8; யோசு 17:15; யோசு 18:16; 1நாளா 11:15; 1நாளா 14:9; 1நாளா 20:4-8; ஏசா 17:5)

"தாவீதின் கையினாலும் அவன் சேவகரின் கையினாலும் மடிந்தார்கள்" - இத்துடன் இராட்சதரின் சந்ததி முடிவுற்றது. இராட்சதரில் இரண்டு பிரிவினர் இருந்தார்கள். ஒன்று ஜலப்பிரளயத்திற்கு முந்தியவர்கள். மற்றொன்று ஜலப்பிரளயத்திற்குப் பிந்தியவர்கள். இவர்கள் விழுந்துபோன தூதர்களுக்கும், மனுஷருடைய குமாரத்திகளுக்கும் பிறந்தவர்கள்.

II சாமுவேல் - தொகுப்புரை

22 அதிகாரம்

VIII. தாவீதின் கடைசிப்பாடலும், கடைசி வார்த்தைகளும் - *(2சாமு 22:1-23:7)*

1. பாட்டு - *(சங் 18)*

(1) தேவனைப்பற்றிய ஒன்பது காரியங்கள் - *(சங் 18:1-2)*

2சாமு 22:1 கர்த்தர் தாவீதை அவனுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும், சவுலின் கைக்கும், நீங்கலாக்கி விடுவித்தபோது, அவன் கர்த்தருக்கு முன்பாகப் பாடின பாட்டு:

2சாமு 22:2 கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் ரட்சகருமானவர்.

2சாமு 22:3 தேவன் நான் நம்பியிருக்கிற துருக்கமும், என் கேடகமும், என் ரட்சண்ணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், என் புகலிடமும், என் ரட்சகருமானவர்; என்னை வல்லடிக்கு நீங்கலாக்கி ரட்சிக்கிறவர் அவரே.

"கர்த்தருக்குப் முன்பாகப் பாடின பாட்டு" - பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் பாடப்பட்டிருக்கிற பாடல். கர்த்தர் தம்முடைய மாறாத வார்த்தைகளைத் தம்முடைய பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தி இதை எழுத வைத்திருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு இருக்கின்ற விதம்

1. கன்மலை *(2சாமு 22:2,32; சங் 18:2)*
2. கோட்டை *(2சாமு 22:2; சங் 18:2)*
3. ரட்சகர் (Deliverer) *(2சாமு 22:2; சங் 18:2)*
4. நம்பியிருக்கிற துருக்கம். *(2சாமு 22:3,32; சங் 18:2)*
5. கேடகம் (Shield) *(2சாமு 22:3)*
6. ரட்சண்ணியக் கொம்பு *(2சாமு 22:3; சங் 18:2)*
7. உயர்ந்த அடைக்கலம் *(2சாமு 22:3; சங் 18:2)*
8. புகலிடம் *(2சாமு 22:3)*
9. ரட்சகர் (Savior) *(2சாமு 22:3)*
10. விளக்கு *(2சாமு 22:29)*
11. கேடகம் (Buckler) *(2சாமு 22:31)*
12. பலம் *(2சாமு 22:33,40)*

(2) தாவீதின் ஜெபம் - *(சங் 18:3-6)*

2சாமு 22:4 ஸ்துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்; அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாக்கி ரட்சிக்கப்படுவேன்.

2சாமு 22:5 மரண அலைகள் என்னைச் சூழ்ந்து கொண்டு, துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது.

2சாமு 22:6 பாதாளக் கட்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டது; மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது.

2சாமு 22:7 எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார்; என் கூப்பிடுதல் அவர் செவிகளில் ஏறிற்று.

ஜெபத்தில் தாவீதின் நம்பிக்கை

1. கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன் *(2சாமு 22:4)*
2. என் சத்துருக்களுக்கு நீங்கலாக்கி ரட்சிக்கப்படுவேன்
3. கர்த்தர் தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார். *(2சாமு 22:7)*
4. என் கூப்பிடுதல் கர்த்தருடைய செவிகளில் ஏறிற்று. *(2சாமு 22:7)*

22 அதிகாரம்

தாவீதின் துயரம்

1. மரண அலைகள் என்னைச் சூழ்ந்து கொண்டது. *(2சாமு 22:5)*
2. துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது.
3. பாதாளக் கட்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டது.
4. மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது. *(2சாமு 22:6)*

கண்ணி (snares) - מוֹקֵשׁ - mo-kashe' - 4170

ஆ.பெ.சொ. - கண்ணி, சிக்கிக்கொள்தல், மூக்கணாங்கயிறு - மனுஷரையும் மிருகங்களையும் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொறி

மனுஷரைப் பிடிக்கும் கண்ணிகள்

1. இருதயத்தைக் கடினப்படுத்துதல் *(யாத் 10:1,7)*
2. விக்கிரகாராதனை *(யாத் 23:33; யாத் 34:12; உபா 7:16; நியா 2:3; நியா 8:27; சங் 106:36)*
3. பொறாமை *(1சாமு 18:6-21)*
4. மரணத்திற்கு காரணமானது *(சங் 18:5; 2சாமு 22:6; நீதி 13:14; நீதி 14:27)*
5. நீதிமானுக்கு எதிராகத் துன்மார்க்கனின் சதி ஆலோசனை *(சங் 64:5)*
6. பாவம் *(சங் 69:22)*
7. மதிகேடனின் உதடுகள் *(நீதி 18:7)*
8. பக்தியில்லாமை *(நீதி 20:25)*
9. கோபம் *(நீதி 22:25)*
10. துன்மார்க்கமான கிரியைகள் *(நீதி 29:4-8)*
11. மனுஷபயம் *(நீதி 29:25)*
12. கிறிஸ்துவை மறுதலித்தல் *(ஏசா 8:14-16)*

நெருக்கப்படும் சமயத்தில் செய்ய வேண்டிய காரியங்கள்

1. கர்த்தரை நோக்கிக் கூப்பிடவேண்டும்.
2. தேவனை நோக்கி அபயமிட வேண்டும்.

நெருக்கத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதினால் ஏற்படும் விளைவுகள் 2சாமு 22:8-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

ஆலயம் (temple) - הֵיכָל - hay-kawl' - 1964

பொதுபெயர்ச்சொல் - ஆலயம், அரமனை, கோவில், சந்நிதி, தேவாலயம் (palace) - இது பரலோகத்திலுள்ள ஆலயத்தைக் குறிக்கும். *(சங் 18:6; ஏசா 6:1; வெளி 7:15; வெளி 11:19; வெளி 14:15,17; வெளி 15:5-8; வெளி 16:1,17)*.

கர்த்தருடைய சரீர அவயவங்கள்

1. செவி *(2சாமு 22:7)*
2. நாசி *(2சாமு 22:9)*
3. வாய் *(2சாமு 22:9)*
4. பாதங்கள் *(2சாமு 22:10)*
5. சரீரம் *(2சாமு 22:11)*
6. ரூபம் *(2சாமு 22:11)*
7. சத்தம் *(2சாமு 22:14)*
8. சுவாசம் *(2சாமு 22:16)*
9. கை *(2சாமு 22:17; யோவான் 4:24)*

22 அதிகாரம்

(3) தேவனுடைய பதில் - (சங் 18:7-20)

2சாமு 22:8 அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது; அவர் கோபங்கொண்டபடியால் வானத்தின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது.

2சாமு 22:9 அவர் நாசியிலிருந்து புகை எழும்பிற்று, அவர் வாயிலிருந்து அக்கினி புறப்பட்டது, அதனால் தழல் மூண்டது.

2சாமு 22:10 வானங்களைத் தாழ்த்தி இறங்கினார்; அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது.

2சாமு 22:11 கேருபீனின்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார். காற்றின் செட்டைகளின்மீதில் தரிசனமானார்.

2சாமு 22:12 ஆகாயத்து மேகங்களிலே கூடிய தண்ணீர்களின் இருளைத் தம்மைச் சுற்றிலும் இருக்கும் கூடாரமாக்கினார்.

2சாமு 22:13 அவருடைய சந்நிதிப் பிரகாசத்தினால் நெருப்புத்தழலும் எரிந்தது.

2சாமு 22:14 கர்த்தர் வானத்திலிருந்து குமுறி, உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார்.

2சாமு 22:15 அவர் அம்புகளை எய்து, அவர்களைச் சிதற அடித்து, மின்னல்களைப் பிரயோகித்து, அவர்களைக் கலங்கப்பண்ணினார்.

2சாமு 22:16 கர்த்தருடைய கண்டிதத்தினாலும், அவருடைய நாசியின் சுவாசக் காற்றினாலும் சமுத்திரத்தின் மதகுகள் திறவுண்டு, பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப்பட்டது.

2சாமு 22:17 உயரத்திலிருந்து அவர் கை நீட்டி, என்னைப் பிடித்து, ஜலப் பிரவாகத்திலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார்.

2சாமு 22:18 என்னிலும் பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என் பகைஞருக்கும் என்னை விடுவித்தார்.

2சாமு 22:19 என் ஆபத்துநாளிலே எனக்கு எதிரிட்டு வந்தார்கள்; கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார்.

2சாமு 22:20 என்மேல் அவர் பிரியமாயிருந்தபடியால், விசாலமான இடத்திலே என்னைக் கொண்டுவந்து, என்னைத் தப்புவித்தார்.

2சாமு 22:21 கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதில் அளித்தார்; என் கைகளின் சுத்தத்திற்குத் தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்.

கர்த்தருடைய பிரத்தியட்ச வெளிப்பாடுகள்

1. பூமி அசைந்து அதிர்ந்தது (2சாமு 22:8).
2. வானத்தின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது.
3. வானங்களைத் தாழ்த்தி இறங்கினார். (2சாமு 22:10).
4. அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது. (2சாமு 22:10,12).
5. காற்றின் செட்டைகளின்மீதில் தரிசனமானார் (2சாமு 22:11).
6. ஆகாயத்து மேகங்களிலே கூடிய தண்ணீர்களின் இருளைத் தம்மைச் சுற்றிலும் இருக்கும் கூடாரமாக்கினார். (2சாமு 22:12).
7. அவருடைய சந்நிதிப் பிரகாசத்தினால் நெருப்புத்தழல் எரிந்தது. (2சாமு 22:13).
8. கர்த்தர் வானத்திலிருந்து குமுறி, உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார். (2சாமு 22:14).
9. மின்னல்களைப் பிரயோகித்தார். (2சாமு 22:15).

22 அதிகாரம்

10. சமுத்திரத்தின் மதகுகள் திறவுண்டது. (2சாமு 22:16).

11. பூதலத்தின் அஸ்திபாரங்கள் காணப் பட்டது.

12. நாசியின் சுவாசக் காற்று புயல் காற்றாயிற்று.

கர்த்தருடைய வெளிப்பாடுகள்

1. அவர் கோபங்கொண்டார். (2சாமு 22:8).

2. அவர் நாசியிலிருந்து புகை எழும்பிற்று (2சாமு 22:9). நாசி கோபப்படும் அடையாளமாகக் கருதப் படுகிறது. (உபா 29:20; சங் 74:1).

3. அவர் வாயிலிருந்து அக்கினி புறப்பட்டது, (2சாமு 22:9).

4. அதனால் தழல் மூண்டது.

5. வானங்களைத் தாழ்த்தினார். (2சாமு 22:10)

6. அவர் இறங்கினார். (2சாமு 22:10)

7. அவர் பாதங்களின்கீழ் காரிருள் இருந்தது. (2சாமு 22:10)

8. கேருபீனின்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார் (2சாமு 22:11).

9. காற்றின் செட்டைகளின்மீதில் தரிசனமானார்.

10. ஆகாயத்து மேகங்களிலே கூடிய தண்ணீர்களின் இருளைத் தம்மைச் சுற்றிலும் இருக்கும் கூடாரமாக்கினார். (2சாமு 22:12)

11. அவருடைய சந்நிதிப் பிரகாசத்தினால் நெருப்புத்தழல் எரிந்தது. (2சாமு 22:13).

12. கர்த்தர் வானத்திலிருந்து குமுறினார். (2சாமு 22:14).

13. உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார்.

14. அவர் அம்புகளை எய்தார். (2சாமு 22:15).

15. மின்னல்களைப் பிரயோகித்தார்.

16. சமுத்திரத்தின் மதகுகளைத் திறந்தார். (2சாமு 22:16)

17. பூதலத்தின் அஸ்திபாரங்களைக் காணப்படச் செய்தார்.

18. பூதலத்தின் அஸ்திபாரங்களைத் தமது நாசியின் சுவாசக்காற்றினால் கண்டித்தார்.

19. உயரத்திலிருந்து உதவி அனுப்புகிறார். (2சாமு 22:17).

20. ஜலப்பிரவாகத்திலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார்.

21. என்னிலும் பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என் பகைஞருக்கும் என்னை விடுவித்தார். (2சாமு 22:18)

22. என் ஆபத்துநாளிலே கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார். (2சாமு 22:19).

23. விசாலமான இடத்திலே என்னைக் கொண்டுவந்தார். (2சாமு 22:20)

24. என்னைத் தப்புவித்தார். (2சாமு 22:20).

25. என்மேல் அவர் பிரியமாயிருந்தார்.

26. என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதில் அளித்தார் (2சாமு 22:21).

27. என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்.

22 அதிகாரம்

எதிரிட்டு வருதல் (prevented) - קדם - kaw-dam' - 6923

வினைச்சொல் - எதிர்கொள், விழு, ஏந்திக்கொள், வா, நட, எழு, விழி, கொடு, ஓடிப்போ, மடங்கடி, எதிரிட்டு வா, நேரிடு, சந்தி (to anticipate or go before) *(2சாமு 22:6,19; யோபு 3:12; யோபு 30:27; சங் 18:5,18; சங் 21:3; சங் 59:10; சங் 79:8; சங் 88:13; சங் 119:147-148).*

கர்த்தருடைய ஆத்துமாவின் சுபாவங்கள்

1. கோபம் *(2சாமு 22:8)*
2. பிரியமாயிருப்பது *(2சாமு 22:20)*
3. தயவு *(2சாமு 22:26)*
4. உத்தமம்
5. புனிதம் *(2சாமு 22:27,36)*
6. மாறுபாடு
7. பலன் *(2சாமு22:33)*
8. வல்லமை
9. மேன்மை

(4) சாட்சி - *(சங் 21-24)*

2சாமு 22:22 கர்த்தருடைய வழிகளைக் காத்துக் கொண்டு வந்தேன்; நான் என் தேவனுக்குத் துரோகம்பண்ணினதில்லை.

2சாமு 22:23 அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன்; நான் அவருடைய பிரமாணங்களை விட்டு விலகாமல்,

2சாமு 22:24 அவர் முன்பாக மனஉண்மையாயிருந்து, என் துர்க்குணத்திற்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன்.

2சாமு 22:25 ஆகையால் கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாகவும், தம்முடைய கண்களுக்கு முன் இருக்கிற என் சுத்தத்திற்குத்தக்கதாகவும் எனக்குப் பலனளித்தார்.

தாவீதின் சாட்சி

1. கர்த்தருடைய வழிகளைக் காத்துக் கொண்டுவந்தேன்.
2. நான் என் தேவனுக்குத் துரோகம் பண்ணினதில்லை.
3. அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன். *(2சாமு 22:23)*
4. நான் அவருடைய பிரமாணங்களை விட்டு விலகவில்லை. *(2சாமு 22:23)*
5. அவர் முன்பாக மன உண்மையாயிருந்தேன். *(2சாமு 22:24)*
6. என் துர்க்குணத்திற்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன்.

தேவபக்திக்கு ஆசீர்வாதங்கள்

1. கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாக எனக்குப் பலனளித்தார்.
2. கர்த்தர் தம்முடைய கண்களுக்கு முன் இருக்கிற என் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குப் பலனளித்தார்.

(5) தேவனுடைய குணாதிசயம் - *(வசனம் 25-51; சங் 18:25-31)*

2சாமு 22:26 தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும்,

2சாமு 22:27 புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடானவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர்.

2சாமு 22:28 சிறுமைப்பட்ட ஜனத்தை ரட்சிப்பீர்; மேட்டிமையானவர்களைத் தாழ்த்த, உம்முடைய கண்கள் அவர்களுக்கு விரோதமாய்த் திருப்பப் பட்டிருக்கிறது.

II சாமுவேல் – தொகுப்புரை

22 அதிகாரம்

மனுஷரில் பல வகை

1. தயவுள்ளவன் (2சாமு 22:26; மத் 5:7; லூக்கா 6:36)
2. உத்தமன் (2சாமு 22:26)
3. புனிதன் 2சாமு 22:27)
4. மாறுபாடானவன் (2சாமு 22:27)
5. சிறுமைப்பட்டவன் (2சாமு 22:28)
6. மேட்டிமையானவன் (2சாமு 22:28; ஏசா 2:11; ஏசா 10:12)

உத்தமன் (upright) - תָּמִים - taw-meem' - 8549

பெயரடை - உத்தமனான, பழுதற்ற, முழுவதுமான, நிறைவேறின, உத்தமமான, உண்மையுமான, தேறினவன், உண்மை, நிதானமாய், பூரண ஞானமுள்ள, உண்மையாயிருந்த, செவ்வையான, செம்மையான, முழுமையான, குறையற்றிருந்த **(perfect, complete, entire, without blemish, undefiled, upright)**

புனிதமானவை

1. பொன் (யாத் 25:11)
2. ஒலிவ எண்ணெய் (யாத் 27:20; லேவி 24:2)
3. வெள்ளைப்போளம் (யாத் 30:23)
4. சாம்பிராணி (யாத் 30:34; லேவி 24:7)
5. குத்துவிளக்கு (யாத் 31:8; லேவி 24:4)
6. தூபவர்க்கம் (யாத் 37:29; யாத் 39:37)
7. மேஜை (லேவி 24:6)
8. திராட்சரசம் (உபா 32:14)
9. கர்த்தருடைய வார்த்தை (சங் 12:6; சங் 119:140; நீதி 30:5)
10. கர்த்தர் (சங் 18:26)
11. கற்பனைகள் (சங் 19:8)
12. இருதயம் (சங் 24:4; மத் 5:8; 1தீமோ 1:5; 2தீமோ 2:22; 1பேதுரு 1:22)
13. மனுஷர் (நீதி 15:26; நீதி 21:8; அப் 20:26; 1தீமோ 5:22)
14. பஞ்சு (தானி 7:9)
15. பாஷை (செப் 3:9)
16. காணிக்கை (மல் 1:11)
17. பதார்த்தங்கள் (ரோமர் 14:20; தீத்து 1:15)
18. மனச்சாட்சி (1தீமோ 3:9; 2தீமோ 1:3)
19. ஜலம் (எபி 10:22)
20. மார்க்கம் (யாக் 1:27)
21. ஞானம் (யாக் 3:17)
22. மனது (2பேதுரு 3:1)
23. கிறிஸ்து (1யோவான் 3:3)
24. மெல்லிய வஸ்திரம் - தூதர்கள் (வெளி 15:6; வெளி 19:)
25. ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி (வெளி 22:1)

மாறுபாடு (froward) - עִקֵּשׁ - ik-kashe' - 6141

பெயரடை - மாறுபாடு, கோணலான, மாறுபாடான, விபரீதம், திரிந்த, மாறுபாடுள்ள - மாறுபாடுள்ளவன் தேவனுக்கு அருவருப்பானவன் (நீதி 3:32; நீதி 11:20).

மாறுபாடுள்ளவை

1. சந்ததி (உபா 32:20)
2. இருதயம் (சங் 101:4; நீதி 11:20; நீதி 17:20)
3. பேச்சு (நீதி 2:12; நீதி 10:31)
4. பாதைகள் (நீதி 2:15)
5. வாய் (நீதி 4:24; நீதி 6:12; நீதி 8:13)

II சாமுவேல் – தொகுப்புரை

22 அதிகாரம்

6. நாவு (நீதி 10:31)

7. மனுஷர் (நீதி 16:28; நீதி 22:5; 1பேதுரு 2:18)

8. திட்டங்கள் (நீதி 6:14; நீதி 16:30)

9. வழிகள் (நீதி 21:8; ஏசா 57:17)

10. தேவன் – மாறுபாடுள்ளவனுக்கு அவர் மாறுபடுகிறவர் (சங் 18:26)

மாறுபடுகிறவர் (unsavoury) - פָּתַל - paw-thal' - 6617

விளைச்சொல் - போராடு, திரியாவரக் காரர், விபரீதம், மாறுபடுகிறவராக தோன்று **(to twine; to struggle; be full of twists, turns; bends; twisting; winding; wrestling)**

(6) சாட்சி - நான்கு ஆசீர்வாதங்கள்

2சாமு 22:29 கர்த்தராகிய தேவரீர் என் விளக்காயிருக்கிறீர்; கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குகிறவர்.

2சாமு 22:30 உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.

"உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்" - தாவீது தன்னுடைய சத்துருக்களை ஜெயித்த சம்பவங்களை இது கூறுகிறது. எபூசியர்மீது தாவீதின் வெற்றியை இது விசேஷமாகக் குறிப்பிடலாம். (2சாமு 5).

(7) தேவனைப்பற்றி ஐந்து காரியங்கள்

2சாமு 22:31 தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்.

2சாமு 22:32 கர்த்தரை அல்லாமல் தேவன் யார்? நம்முடைய தேவனையன்றி கன்மலையும் யார்?

"கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது" - அக்கினியினால் கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டிருக்கிறது. எல்லாச் சோதனையையும் தாங்கியிருக்கிறது. கர்த்தருடைய வசனம் ஒருபோதும் மாறுவதில்லை. அவருடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறும்.

தேவன் (God) - אֱלוֹהַּ - el-o'-ah - 433

ஆ.பெ.சொ.- தேவன்

தேவன் (God) - אֱלֹהִים - el-o-heem' - 430

ஆ.பெ.சொ.-தேவன், தேவர், தெய்வம், நியாயாதிபதி, சுவாமி, தேவி, கர்த்தர் - "எலோகிம்" - 57 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் ஆராதிக்கும் நபர் அல்லது பொருள். விக்கிரகங்களுக்கு விரோதமான தேவன் (சங் 18:31; உபா 32:15-17; 2நாளா 32:15; ஏசா 44:8; தானி 11:37-39; ஆப 1:11). யோபு புஸ்தகத்தில் மட்டும் இச்சொல் 41 தடவைகளும் மற்ற இடங்களில் 16 தடவைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(8) சாட்சி - முப்பத்திரண்டு ஆசீர்வாதங்கள் - (சங் 18:32-50)

2சாமு 22:33 தேவன் எனக்குப் பலத்த அரணானவர்; அவர் என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர்.

2சாமு 22:34 அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்கி, என் உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்.

2சாமு 22:35 வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்கிறார்.

22 அதிகாரம்

2சாமு 22:36 உம்முடைய ரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர்; உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்.

2சாமு 22:37 என் கால்கள் வழுவாதபடிக்கு நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர்.

2சாமு 22:38 என் சத்துருக்களைப் பின் தொடர்ந்து அவர்களை அழிப்பேன்; அவர்களை நிர்மூலமாக்கும்வரைக்கும் திரும்பேன்.

2சாமு 22:39 அவர்கள் எழுந்திருக்கமாட்டாதபடிக்கு என் பாதங்களின் கீழ் விழுந்தார்கள்; அவர்களை முறிய அடித்து வெட்டினேன்.

2சாமு 22:40 யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி, என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப்பண்ணினீர்.

2சாமு 22:41 நான் என் பகைஞரைச் சங்கரிக்கும்படியாக, என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்.

2சாமு 22:42 அவர்கள் நோக்கிப் பார்க்கிறார்கள், அவர்களை ரட்சிப்பார் ஒருவருமில்லை; கர்த்தரை நோக்கிப்பார்க்கிறார்கள், அவர்களுக்கு அவர் உத்தரவு கொடுக்கிறதில்லை.

2சாமு 22:43 அவர்களை பூமியின் தூளாக இடித்து, தெருக்களின் சேற்றைப்போல அவர்களை மிதித்து சிதறப்பண்ணுகிறேன்.

2சாமு 22:44 என் ஜனத்தின் சண்டைகளுக்கு நீர் என்னை விலக்கிவிட்டு, ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக வைக்கிறீர்; நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கிறார்கள்.

2சாமு 22:45 அந்நியர் இச்சகம் பேசி எனக்கு அடங்கி, என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்குக் கீழ்ப்படிகிறார்கள்.

2சாமு 22:46 அந்நியர் முனைவிழுந்து போய், தங்கள் அரண்களிலிருந்து தத்தளிப்பாய்ப் புறப்படுகிறார்கள்.

2சாமு 22:47 கர்த்தர் ஜீவனுள்ளவர்; என் கன்மலையானவர் ஸ்தோத்திரிக்கப் படுவாராக; என் ரட்சிப்பின் கன்மலையாகிய தேவன் உயர்ந்திருப்பாராக.

2சாமு 22:48 அவர் எனக்காகப் பழிக்குப் பழிவாங்கி, ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிற தேவனானவர்.

2சாமு 22:49 அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர்; எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள்மேல் என்னை உயர்த்திக் கொடுமையான மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிறீர்.

2சாமு 22:50 இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள் உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன்.

2சாமு 22:51 தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான ரட்சிப்பை அளித்து, தாம் அபிஷேகம் பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார்.

தேவனுடைய ஆசீர்வாதங்கள்

1. பலத்தால் என்னை இடைகட்டுவார் (சங் 18:32)

2. என் வழியைச் செவ்வைப்படுத்துவார்

3. என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி, என் சத்துருக்களிடமிருந்துஎன்னைத் தப்புவிப்பார் (சங் 18:33)

4. என்னை உயர்தலங்களில் நிறுத்துவார்

5. வெண்கல வில்லும், என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்கு பழக்குவிக்கிறார் (சங் 18:34)

22 அதிகாரம்

6. இரட்சிப்பின் கேடகத்தை எனக்குத் தந்தார் (சங் 18:35)

7. கர்த்தருடைய வலதுகரம் என்னைத் தாங்கும்

8. கர்த்தருடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்

9. என்னுடைய கால்கள் வழுவாதபடிக்கு வழியை அகலமாக்குவார் (சங் 18:36)

10. என் சத்துருக்களை ஜெயிக்க உதவி புரிவார் (சங் 18:37)

11. சத்துருக்களை பின்தொடர்ந்து பிடிக்க உதவிபுரிவார்

12. அவர்களை நிர்மூலமாக்க உதவிபுரிவார்

13. என் பாதங்களின் கீழ் அவர்களை விழப்பண்ண உதவிபுரிவார் (சங் 18:38)

14. யுத்தத்திற்கு என்னைப் பலத்தால் இடைக்கட்டுவார் (சங் 18:39)

15. சத்துருக்களை என் கீழ் மடங்கப் பண்ணுவார்

16. என் பகைவர்களை உதவி அற்றவர்களாகப் பண்ணுவார் (சங் 18:40)

17. என் சத்துருக்களுக்கு செவிகொடுக்க மாட்டார் (சங் 18:41)

18. என் சத்துருக்களை முழுவதுமாக அழிக்க உதவி புரிவார் (சங் 18:41)

19. என் ஜனங்களின் சண்டைகளுக்கு என்னைத் தப்புவித்தார் (சங் 18:43)

20. ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக்குகிறார்

21. நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கும் படி செய்தார் (சங் 18:44)

22. என் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்கு அவர்கள் கீழ்ப்படியும்படி என்னை எஜமான் ஆக்கினார்

23. அந்நியர் முனைவிழுந்து, அரண்களிலிருந்து தத்தளிப்பாய்ப் புறப்படப்பண்ணுவார் (சங் 18:45)

24. கர்த்தர் எனக்காகப் பழிக்குப் பழி வாங்குவார் (சங் 18:46-47)

25. என் சத்துருக்களை எனக்குக் கீழ்ப்படுத்துவார் (சங் 18:47)

26. என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிப்பார் (சங் 18:48)

27. எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் மேல் என்னை உயர்த்துவார்

28. கொடுமையான மனுஷனுக்கு என்னைத் தப்புவிப்பார்

29. மகத்தான இரட்சிப்பை அளித்தர் (சங் 18:49-50)

30. சதாகாலமும் கிருபை செய்கிறார் (சங் 18:50)

மான்களின் கால்கள் - பெண்மான்களின் கால்கள் - அழகுள்ளவை (சங் 18:33; சங் 29:9; ஆதி 49:21; 2சாமு 22:34; யோபு 39:1; உன் 2:7; உன் 3:5; நீதி 5:19; எரே 14:5; ஆப 3:19).

வெண்கலம் (brass) - נְחוּשָׁה - nekh-oo-shaw', nekhoo-shaw' - 5154

பெ.பெ.சொ - வெண்கலம், உருக்கு, செம்பு - தாவீதின் காலத்தில் உருக்கு இல்லை (சங் 18:34; 2சாமு 22:35; யோபு 20:24)

சாந்தம் (gentleness) - עֲנָוָה - an-vaw' - 6037

பெ.பெ.சொ. - காருணியம், சாந்தம் (2சாமு 22:36; 2கொரி 10:1; கலா 5:22)

II சாமுவேல் – தொகுப்புரை

22 அதிகாரம்

தாவீதின் சாதனைகள்

1. கர்த்தருடைய வழிகளைக் காத்துக் கொண்டுவந்தேன். (2சாமு 22:22)

2. நான் என் தேவனுக்குத் துரோகம் பண்ணினதில்லை.

3. நான் அவருடைய பிரமாணங்களை விட்டு விலகவில்லை. (2சாமு 22:23)

4. அவர் முன்பாக மன உண்மையாயிருந்தேன்.(2சாமு 22:24)

5. என் துர்க்குணத்திற்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன்.

6. நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோனேன். (2சாமு 22:30)

7. ஒரு மதிலைத் தாண்டினேன்.

8. என் சத்துருக்களைப் பின் தொடர்ந்து அவர்களை அழித்தேன். (2சாமு 22:38-39)

சத்துருவின் தோல்வி

1. என் சத்துருக்களைப் பின் தொடர்ந்தேன். (2சாமு 22:38)

2. அவர்களை அழித்தேன்.

3. அவர்களை நிர்மூலமாக்கினேன். (2சாமு 22:38-39)

4. அவர்கள் எழுந்திருக்கமாட்டாதபடிக்கு அவர்களைக் காயப்படுத்தினேன். (2சாமு 22:39)

5. என் பாதங்களின் கீழ் விழுந்தார்கள்.

6. என்மேல் எழும்பினவர்களை தேவன் என் கீழ் மடங்கப்பண்ணினார். (2சாமு 22:40)

7. நான் என் பகைஞரைச் சங்கரிக்கும் படியாக, என் சத்துருக்களின் பிடரியைக் கர்த்தர் எனக்கு ஒப்புக்கொடுத்தார். (2சாமு 22:41)

8. அவர்கள் நோக்கிப்பார்க்கிறார்கள், அவர்களை ரட்சிப்பார் ஒருவருமில்லை. (2சாமு 22:42)

9. கர்த்தரை நோக்கிப்பார்க்கிறார்கள், அவர்களுக்கு அவர் உத்தரவு கொடுக்கிறதில்லை.

10. அவர்களை பூமியின் தூளாக இடித்தேன். (2சாமு 22:43)

11. தெருக்களின் சேற்றைப்போல அவர்களை மிதித்தேன்.

12. அவர்களைச் சிதறப்பண்ணினேன்.

"சத்துருக்களின் பிடரி" - வரலாற்றுக் காலத்தில், பிடிப்பட்ட சத்துருக்களைத் தரையில் படுக்க வைத்து, தங்களுடைய கால்களை அவர்களுடைய கழுத்துக்களின் மீது வைப்பார்கள். இது தோல்வியுற்றவர்களுக்கு அவமானத்தின் அடையாளம். (2சாமு 22:44). எபிரெயர்கள் இதைச் செய்திருக்கிறார்கள். (யோசு 7:8,12). வேதாகமத்திலும் இதற்கு சான்றுகள் உள்ளன. (ஆதி 49:8; யாத் 23:27; உபா 28:48; ஏசா 10:27; எரே 27:8; புல 5:5).

"கர்த்தரை நோக்கிப்பார்க்கிறார்கள்" - புறஜாதியார் தங்களுக்குத் துன்பம் வரும்போது, தங்களுடைய தெய்வங்களையும் நோக்கிப் பார்க்கிறார்கள். கர்த்தரையும் நோக்கிப் பார்க்கிறார்கள். (யோனா 1:14). ஆனால் கர்த்தரோ அவர்களுக்கு உத்தரவு கொடுக்கிறதில்லை. ஏனெனில் கர்த்தருடைய உடன்படிக்கைகளுக்கும்,

வாக்குத்தத்தங்களுக்கும் அவர்கள் புறம்பே இருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம் பண்ணிய போது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம் பண்ணினார். அதே சமயத்தில் இஸ்ரவேல் புத்திரரும் பாவத்திலிருந்து விலகியிருக்க வேண்டும். பாவம் செய்தால் கர்த்தர் தண்டிப்பார். அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் இஸ்ரவேல் புத்திரரை ஒப்புக்கொடுத்துவிடுவார்.

II சாமுவேல் - தொகுப்புரை

22 அதிகாரம்

"அவர்களை பூமியின் தூளாக இடித்து" - இது ஒரு உருவக வாக்கியம். சத்துருக்களை முழுவதுமாகச் சங்காரம் பண்ணுதல் என்பது இதன் பொருள். சில சமயங்களில் போர்முனையில் சத்துருக்களின் சரீரங்கள் திறந்த வெளிகளில் சிதறிக் கிடக்கும். ஆகாயத்துப் பறவைகளும், மிருகஜீவன்களும் அவற்றைப் பட்சிக்கும். அவை சத்துருக்களின் மாம்சத்தைப் புசித்த பின்பு, அவர்களுடைய எலும்புகள் மண்ணோடு தூளாகும்.

"என் ஜனத்தின் சண்டைகள்" - இஸ்ரவேல் புத்திரருக்குள் காணப்பட்ட கலகங்கள். அப்னேர், அப்சலோம், சேபா ஆகியோரின் கலகங்களை இந்த வாக்கியம் குறிக்கும். (2சாமு 2:8-4:12; 2சாமு 15:1-18:33).

"ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக வைக்கிறீர்" - தாவீது இஸ்ரவேல் தேசத்தைச் சுற்றிலுமுள்ள எல்லா ஜாதிகளுக்கும் தலைவனாக இருக்கிறான். (2சாமு 5:17-25; 2சாமு 8:1-18; 2சாமு 10:1-19).

"நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கிறார்கள்" - தாவீது சீரியரை ஜெயித்த சம்பவத்தையும், மற்றவர்கள் தாவீதிடம் வந்து பணிந்த சம்பவத்தையும் இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (2சாமு 8:10).

மனுஷருக்கு ஆசீர்வாதங்கள்

1. தயவுள்ளவனுக்கு கர்த்தர் தயவுள்ளவராக இருக்கிறார். (2சாமு 22:26)
2. உத்தமனுக்கு கர்த்தர் உத்தமராக இருக்கிறார்.
3. புனிதனுக்கு கர்த்தர் புனிதராக இருக்கிறார். (2சாமு 22:27)
4. மாறுபாடானவனுக்கு கர்த்தர் மாறுபடுகிறவராக தோன்றுகிறார்.
5. சிறுமைப்பட்ட ஜனத்தை ரட்சிக்கிறார். (2சாமு 22:28)
6. மேட்டிமையானவர்களைத் தாழ்த்துகிறார்.
7. கர்த்தர் இருட்டில் இருக்கிறவர்களுக்கு வெளிச்சத்தைத் தருகிறார். (2சாமு 22:29)
8. தேவனுடைய வழி உத்தமமானது (2சாமு 22:31)
9. தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்.
10. கர்த்தரை அல்லாமல் தேவன் இல்லை. (2சாமு 22:32)
11. கன்மலை
12. பலத்த அரண் (2சாமு 22:33)
13. என் வழியைச் செவ்வைப்படுத்துகிறார். (2சாமு 22:33)
14. என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்குகிறார். (2சாமு 22:34)
15. என் உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்.
16. என் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்கிறார். (2சாமு 22:35)
17. ரட்சிப்பின் கேடகத்தை எனக்குத் தருகிறார். (2சாமு 22:36)
18. கர்த்தருடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்.
19. என் கால்கள் வழுவாதபடிக்கு நான் நடக்கிற வழியை அகலமாக்குகிறார். (2சாமு 22:37)
20. என்னைப் பலத்தால் இடைகட்டுகிறார். (2சாமு 22:40-43)
21. என்மேல் எழும்பினவர்களை என் கீழ் மடங்கப்பண்ணுகிறார்.
22. என் ஜனத்தின் சண்டைகளுக்கு என்னை விலக்கிவிடுகிறார். (2சாமு 22:44)
23. பாதுகாக்கிறார்.

22 அதிகாரம்

24. என் சத்தத்தைக் கேட்டவுடன் அந்நியரை எனக்குக் கீழ்ப்படிய வைக்கிறார். *(2சாமு 22:45)*

25. கர்த்தர் ஜீவனுள்ளவர். *(2சாமு 22:47)*

26. அவர் எனக்காகப் பழிக்குப் பழி வாங்குகிறார். *(2சாமு 22:48)*

27. ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிறார்.

28. என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறார். *(2சாமு 22:49)*

29. எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் மேல் என்னை உயர்த்துகிறார்.

30. கொடுமையான மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிறார்.

31. மகத்தான ரட்சிப்பாக இருக்கிறார். *(2சாமு 22:51)*

32. தம்முடைய ஜனத்துக்கு சதாகாலமும் கிருபை செய்கிறார்.

"கொடுமையான மனுஷன்" **(violent man)** - இது சவுலையோ அல்லது அப்சலோமையோ குறிக்கலாம். *(1சாமு 19:1-26:25; 2சாமு 15:1-18:33)*.

தீர்க்கதரிசன எண் - 5

"தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான ரட்சிப்பை அளித்து" *(2சாமு 22:51)* இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இன்னும் நித்திய காலமாக நிறைவேறும்.

23 அதிகாரம்

2. தாவீதின் கடைசி வார்த்தைகள் - *(உபா 31:1)*

2சாமு 23:1 தாவீதுடைய கடைசி வார்த்தைகள்: மேன்மையாய் உயர்த்தப் பட்டு, யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன் சொல்லுகிறது என்னவென்றால்;

2சாமு 23:2 கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது.

2சாமு 23:3 இஸ்ரவேலின் தேவனும் இஸ்ரவேலின் கன்மலையுமானவர் எனக்குச் சொல்லி உரைத்ததாவது: நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தெய்வ பயமாய்த் துரைத்தனம் பண்ணுகிறவர் இருப்பார்.

2சாமு 23:4 அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து, மழைக்குப் பிற்பாடு தன் காந்தியினால் புல்லைப் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணுகிற சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல இருப்பார் என்றார்.

2சாமு 23:5 என்னுடைய வீடு தேவனிடத்தில் இப்படியிராதோ? சகலமும் திட்டம்பண்ணப்பட்டிருக்கிற நிச்சயமான நித்திய உடன்படிக்கையை என்னுடன் அவர் செய்திருக்கிறார்; ஆதலால் என்னுடைய எல்லா ரட்சிப்பும் எல்லா வாஞ்சையும் வளர்ந்தோங்கச் செய்யாரோ?

2சாமு 23:6 பேலியாளின் மக்கள் அனைவருமோ, கையினால் பிடிக்கப்படக் கூடாததாய் எறிந்துபோடப்பட வேண்டிய முள்ளுக்குச் சமானமானவர்கள்.

2சாமு 23:7 அவைகளை ஒருவன் தொடப்போனால், இருப்பாயுதத்தையும் ஈட்டித்தாங்கையும் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளவேண்டும்; அவைகள் இருக்கிற இடத்தில்தானே அக்கினியினால் முற்றும் சுட்டெரிக்கப்படும் என்றான்.

"தாவீதுடைய கடைசி வார்த்தைகள்" - ஒரு மனுஷனுடைய கடைசி வார்த்தைகள் எப்போதுமே முக்கியமானதாக இருக்கும். இது 2சாமு 22 ஆவது அதிகாரம் முதல் 2சாமு 23:1-7 ஆகிய வசனங்கள் வரையிலும் காணப்படும் தாவீதுடைய பாடலின் கடைசி வார்த்தைகளாகும்.

தாவீதைப் பற்றிய காரியங்கள்

1. கர்த்தரால் மேன்மையாய் உயர்த்தப்பட்டான். *(2சாமு 23:1)*
2. யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்றான்.
3. இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடினான்.
4. கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார். *(2சாமு 23:2)*
5. கர்த்தருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது.

"யாக்கோபுடைய தேவன்" - யாக்கோபு ஒன்றுமில்லாமல் இருந்தபோது, எந்த நன்மையையும் பெற்றுக் கொள்வதற்கு அவன் தகுதியற்றவனாக இருந்தபோது, கர்த்தர் யாக்கோபைச் சந்தித்தார். அவனுக்கு எல்லாக் காரியங்களையும் தமது எல்லாக் கிருபைகளையும் வாக்குப்பண்ணினார்.

தேவனுடைய நாமங்கள்

1. யாக்கோபுடைய தேவன். *(2சாமு 23:1)*
2. கர்த்தருடைய ஆவியானவர் *(2சாமு 23:2)*
3. இஸ்ரவேலின் தேவன் *(2சாமு 23:3)*
4. இஸ்ரவேலின் கன்மலை

II சாமுவேல் - தொகுப்புரை

23 அதிகாரம்

நல்ல ஆட்சியாளரின் சுபாவங்கள்

1. நீதிபரராய் மனுஷரை ஆளுகை செய்ய வேண்டும்.
2. தெய்வபயமாய்த் துரைத்தனம் பண்ண வேண்டும்.

நல்ல ஆட்சியாளரின் உருவகங்கள்

1. அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதிக்கும் சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல இருப்பார்.
2. மழைக்குப்பிற்பாடு தன் காந்தியினால் பூமியிலிருந்து முளைக்கும் புல்லைப்போல இருப்பார்.

"என்னுடைய வீடு தேவனிடத்தில் இப்படியிராதோ?" - இந்த வாக்கியத்திற்கு இரண்டு விதமான வியாக்கியானங்கள் கூறலாம். அவையாவன:

1. தாவீதின் வீடு காலையில் மந்தாரமில்லாத காலைப்பொழுதைப் போல இல்லை. மழைக்குப் பிற்பாடு பூமியிலிருந்து முளைக்கும் புல்லைப் போலவும் இல்லை. ஆனாலும் கர்த்தர் தாவீதோடு நித்திய உடன்படிக்கையைச் செய்திருக்கிறார். (2சாமு 23:4)

2. தாவீதின் வீடு நித்தியமாக ஸ்தாபிக்கப் படவில்லை. ஆயினும் கர்த்தருக்கு ஏற்ற சமயத்தில் அது நித்தியமாக ஸ்தாபிக்கப்படும். ஏனெனில் கர்த்தர் தாவீதோடு நித்திய உடன்படிக்கை செய்திருக்கிறார்.

"என்னுடைய எல்லா ரட்சிப்பும் எல்லா வாஞ்சையும்" - கர்த்தர் தாவீதோடும், அவனுடைய வீட்டாரோடும் உடன்படிக்கை செய்திருக்கிறார். கர்த்தர் தன்னுடைய வீட்டை வளர்ந்தோங்கச் செய்வார். தன்னுடைய இரட்சிப்பே தாவீதின் வாஞ்சையாயிருக்கிறது.

"எறிந்துபோடப்படவேண்டிய முள்" - துன்மார்க்கரும், பிரயோஜனமற்றவர்களும் முட்களைப் போல இருக்கிறார்கள். அவர்களை அணுகும்போது மிகவும் எச்சரிப்போடு இருக்க வேண்டும். அவைகள் இருக்கிற இடத்தில்தானே அக்கினியினால் முற்றும் சுட்டெரிக்கப்பட வேண்டும். (2சாமு 23:6-7).

"இருப்பாயுதத்தையும் ஈட்டித்தாங்கையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளவேண்டும்" - முள்ளை எளிதாகத் தொடமுடியாது. இருப்பாயுதத்தை எடுத்துச் செல்ல வேண்டும். முள்ளைக் கையால் தொடுவதற்குப் பதிலாக மற்றக் கருவிகளால் தொடவேண்டும். கவனக்குறைவாக இருந்தால், அவை நமக்குக் காயம் உண்டாக்கிவிடும்.

IX. தாவீதின் பராக்கிரமசாலிகள் - (8:16; 15:12; 20:23; 1நாளா 11:10; 27:25)

1. ஏஸ்னி ஊரானாகிய அதீனோ - (1நாளா 11:10)

2சாமு 23:8 தாவீதுக்கு இருந்த பராக்கிரமசாலிகளின் நாமங்களாவன: தக்கெமோனியின் குமாரனாகிய யோசேப்பாசெபெத் என்பவன் சேர்வைக்காரரின் தலைவன்; இவன் எண்ணூறுபேர்களின்மேல் விழுந்து, அவர்களை ஒருமிக்க வெட்டிப்போட்ட அதீனோ ஏஸ்னி ஊரானானவன்.

தாவீதின் பராக்கிரமசாலிகள் - 37பேர் (2சாமு 23:8-39)

1. அதீனோ - ஏஸ்னி ஊரானானவன். (2சாமு 23:8)
2. எலெயாசார் - தோதோவின் குமாரன் (2சாமு 23:8-10)
3. சம்மா - ஆகேயின் குமாரன் (2சாமு 23:11-17)
4. அபிசாய் - யோவாபின் சகோதரன். (2சாமு 23:18-19)

II சாமுவேல் – தொகுப்புரை

23 அதிகாரம்

5. பெனாயா - யோய்தாவின் குமாரன். *(2சாமு 23:20-23)*

6. மேலும் 32பேர். *(2சாமு 23:24-39)*

பராக்கிரமசாலி **(mighty men) - גִּבּוֹר - ghib-bore' - 1368**

பெயரடை - பலவானான், பலத்த, பராக்கிரமசாலியான, வல்லமையான, வீரரான, பலசாலியான, பிரதான, திடனான **"mighty"** *(ஆதி 6:4);* **men of war** *(2சாமு 23:8-9,16-17,22);* **princes** *(எஸ்றா 7:28);* **kings** *(தானி 11:3);* **Christ** *(ஏசா 9:6);* **God** *(எரே 32:18).* **"strong man"** *(1சாமு 14:52);* **"champion"** *(1சாமு 17:51)*

உத்தமன் **(upright man) - תָּמִים - taw-meem' - 8549**

பெயரடை - உத்தமனான, பழுதற்ற, முழுவதுமான, நிறைவேறின, உத்தமமான, உண்மையுமான, தேறினவன், உண்மை, நிதானமாய், பூரண ஞானமுள்ள, உண்மையாயிருந்த, செவ்வையான, செம்மையான, முழுமையான, குறையற்றிருந்த **"upright"**; *(2சாமு 22:26);* **"valiant men"** *(1நாளா 7:2; 2நாளா 13:3);*

திறமையுள்ளவன் **(very able men) - חַיִל - khah'-yil - 2428.**

ஆ.பெ.சொ. - திறமை, ராணுவம், சேனை, பராக்கிரமம், ஆஸ்தி, ஐசுவரியம், சம்பத்து, யுத்தம், பலவான், பாக்கியவான், பலம், சேவகர், குணசாலி, செல்வம், பொருள், தைரியம், யோக்கியன், கெட்டிக்காரன், வீரியம் **"very able"**; *1நாளா 9:13);* **"chief"** *(1நாளா 9:26);* **"mighties"** *(1நாளா 11:12,24);* **"mighty"** *(1நாளா 27:6);* **"giant"** *(யோபு 16:14);* **"strongest"** *(நீதி 30:30).*

"தக்கெமோனியன்" **(Tachmonite)** - அதீனோ தக்கெமோனியின் குடும்பத்தைச் சேர்ந்தவன். இவன் தாவீதின் பராக்கிரமசாலிகளில் சிறந்தவன். மறுபெயர் யாஷோபியாம் - அக்மோனியன் **(Jashobeam - Hachmonite)** *(1நாளா 11:11).*

"சேர்வைக்காரரின் தலைவன்" - பராக்கிரமசாலிகளில் அதிகப் பராக்கிரமம் செய்தவன் அவர்களுக்குத் தலைவனாக இருக்கிறான்.

"அதீனோ" **(Adino)** - இந்தப் பெயருக்கு "அணிகலன்" **"ornament"** என்று பொருள்.

"எண்ணூறுபேர்களின்மேல் விழுந்து" - ஒரு யுத்தத்தில் இவன் மட்டும் 800 பேரைக் கொன்றுபோட்டான். 1நாளா 11:11 ஆவது வசனத்தில் 300பேர் என்றுள்ளது. இதை 800 பேரென்றே வாசிக்க வேண்டும். அபிசாய் 300 பேரைக் கொன்றான். *(2சாமு 23:18)* ஆனாலும் அபிசாய் அதீனோவைவிட பெரியவனல்ல.

2. எலெயாசார் - *(1நாளா 11:12)*

2சாமு 23:9 இவனுக்கு இரண்டாவது, அகோயின் குமாரனாகிய தோதோவின் மகன் எலெயாசார் என்பவன்; இவன் பெலிஸ்தர் யுத்தத்திற்குக் கூடின ஸ்தலத்திலே இஸ்ரவேல் மனுஷர் போகையில், தாவீதோடே இருந்து, பெலிஸ்தரை நிந்தித்த மூன்று பராக்கிரமசாலிகளில் ஒருவனாயிருந்தான்.

2சாமு 23:10 இவன் எழும்பித் தன் கைசலித்து, தன் கை பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளுமட்டும் பெலிஸ்தரை வெட்டினான்; அன்றையதினம் கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார்; ஜனங்கள் கொள்ளையிட மாத்திரம் அவனைப் பின்சென்றார்கள்.

"எலெயாசார்" **(Eleazar)** - இந்தப் பெயருக்கு "தேவன் உதவி புரிகிறார்" **"God is helper"** என்று பொருள்.

23 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "எலெயாசார்"கள்

1. தோதோவின் குமாரன் (2சாமு 23:9; 1நாளா 11:12)

2. ஆரோனின் குமாரன் - இரண்டாவது பிரதான ஆசாரியன் (யாத் 6:23-25; யாத் 28:1; லேவி 10:6,12,16; எண் 3:2-4,32; எண் 4:16; எண் 16:37-39; எண் 19:3-4; எண் 20:25-28; எண் 25:7,11; எண் 26:1-3,60-63; எண் 27:2,19-22; எண் 31:6-54; எண் 32:2,28; எண் 34:17; உபா 10:6; யோசு 14:1; யோசு 17:4; யோசு 19:51; யோசு 22:13,31-32; நியா 20:28; 1நாளா 6:3-4,50; 1நாளா 9:29; 1நாளா 24:1-6)

3. சாமுவேலின் காலத்திலிருந்த ஆசாரியன். (1சாமு 7:1)

4. மகேலியின் குமாரன் (1நாளா 23:21-22; 1நாளா 24:28)

5. நெகேமியாவின் காலத்திலிருந்த ஆசாரியன் (நெகே 12:42)

6. ஒரு லேவியன் (எஸ்றா 8:33)

7. யோசேப்பின் முன்னோர்களில் ஒருவன். (மத் 1:15)

"தோதோ" (Dodo) - இந்தப் பெயருக்கு "நேசம்" "beloved" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "தோதோ"க்கள்

1. எலெயாசாரின் தகப்பன். (2சாமு 23:9; 1நாளா 11:12)

2. எல்க்கானானின் தகப்பன். (2சாமு 23:24; 1நாளா 11:26)

3. இசக்கார் கோத்திரத்தின் மனுஷன் (நியா 10:1)

"அகோயியன்" (Ahohite) - அகோயின் குடும்பப் பெயர். இவர்கள் பராக்கிரமசாலிகள். இவர்களில் நான்குபேர் தாவீதோடு சேர்ந்து கொண்டார்கள். (2சாமு 23:9,28; 1நாளா 11:12,29; 1நாளா 27:4).

"தன் கை பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளு மட்டும்" - இவன் ஏராளமான பெலிஸ்தரை வெட்டினான். அதனால் அவனுடைய கை அவனுடைய பட்டயத்தோடே ஒட்டிக் கொண்டது. (2சாமு 23:9-10; 1நாளா 11:12-14).

3. சம்மா - (1நாளா 11:15)

2சாமு 23:11 இவனுக்கு மூன்றாவது, ஆகேயின் குமாரனாகிய சம்மா என்னும் ஆராரியன்; சிறுபயறு நிறைந்த வயலிருந்த இடத்திலே பெலிஸ்தர் ஏராளமாய்க் கூடி, ஜனங்கள் பெலிஸ்தரைக் கண்டு ஓடுகிற போது,

2சாமு 23:12 இவன் அந்த நிலத்தின் நடுவிலே நின்று அதைக் காப்பாற்றி, பெலிஸ்தரை மடங்கடித்துப்போட்டான்; அதனால் கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார்.

2சாமு 23:13 முப்பது தலைவருக்குள்ளே இந்த மூன்றுபேரும் அறுப்புநாளிலே அதுல்லாம் கெபியிலே தாவீதிடத்தில் போயிருந்தார்கள்; பெலிஸ்தரின் தண்டு ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கினபோது,

2சாமு 23:14 தாவீது அரணான ஒரு இடத்தில் இருந்தான்; அப்பொழுது பெலிஸ்தரின் தாணையம் பெத்லகேமிலே இருந்தது.

2சாமு 23:15 தாவீது பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றின் தண்ணீரின் மேல் ஆவல்கொண்டு: என் தாகத்திற்குக் கொஞ்சந் தண்ணீர் கொண்டுவருகிறவன் யார் என்றான்.

23 அதிகாரம்

2சாமு 23:16 அப்பொழுது இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் பெலிஸ்தரின் பாளயத்திலே துணிந்து புகுந்துபோய், பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றிலே தண்ணீர் மொண்டு, தாவீதினிடத்தில் கொண்டுவந்தார்கள்; ஆனாலும் அவன் அதைக் குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிப் போட்டு:

2சாமு 23:17 கர்த்தாவே, தங்கள் பிராணனை எண்ணாமல் போய்வந்த அந்த மனுஷரின் இரத்தத்தைக் குடிக்கும் இந்தச்செயல் எனக்குத் தூரமாயிருப்பதாக என்று சொல்லி, அதைக் குடிக்க மனதில்லாதிருந்தான்; இப்படி இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் செய்தார்கள்.

"ஆராரியன்" **(Hararite)** - இந்தப் பெயருக்கு "மலைத்தேசத்தான்" **"mountaineer"** என்று பொருள். யூதாவிலுள்ள மலைத்தேசத்தில் வசிக்கிறவர்கள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "ஆராரியர்"கள்

1. சம்மா *(2சாமு 23:11,33; 1நாளா 11:34)*
2. அகியாம் *(2சாமு 23:33; 1நாளா 11:35)*

"இவன் அந்த நிலத்தின் நடுவிலே நின்று" - பெலிஸ்தருக்கு முன்பாக இஸ்ரவேலர் எல்லோரும் ஓடிப்போனார்கள். சம்மா அந்த வயலில் தனியாக நின்று, பெலிஸ்தரிடமிருந்து அதைக் காப்பாற்றினான். கர்த்தர் பெரிய இரட்சிப்பை நடப்பித்தார். *(2சாமு 23:11-12)*

"முப்பது தலைவருக்குள்ளே இந்த மூன்றுபேரும்" - தாவீது பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றின் தண்ணீரின் மேல் ஆவல்கொண்டு: என் தாகத்திற்குக் கொஞ்சந் தண்ணீர் கொண்டுவருகிறவன் யார் என்றான். அப்பொழுது இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் பெலிஸ்தரின் பாளயத்திலே துணிந்து புகுந்துபோய், பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றிலே தண்ணீர் மொண்டு, தாவீதினிடத்தில் கொண்டு வந்தார்கள்; ஆனாலும் அவன் அதைக் குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று பானபலியாக ஊற்றிப் போட்டான். *(2சாமு 23:13-17; 1நாளா 15-19).*

"முப்பது தலைவர்" - தாவீதோடுகூட இருந்த முப்பது பராக்கிரமசாலிகள். *(2சாமு 23:13, 23-24; 1நாளா 27:6).*

"அதுல்லாம் கெபி" **(cave of Adullam)** - தாவீது ராஜாவாக ஆவதற்கு முன்பு இந்தக் கெபியில் தங்கியிருந்திருக்கிறான். *(1சாமு 22:1-2)*

"ரெப்பாயீம் பள்ளத்தாக்கு" **(valley of Rephaim)** - ராட்சதரின் பள்ளத்தாக்கு.

"பெலிஸ்தரின் தாணையம் பெத்லகேமிலே இருந்தது" - தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவானபோது பெலிஸ்தர் அவனை அழிப்பதற்காக வந்தார்கள். அப்போது அவர்களின் தாணையம் பெத்லகேமிலே இருந்தது. *(2சாமு 5:17-23).*

"மூன்று பராக்கிரமசாலிகள்" - இவர்கள் அதீனோ *(2சாமு 23:8)*, எலெயாசார் *(2சாமு 23:9-10)*, சம்மா *(2சாமு 23:11-17)* ஆகியோர் ஆவர். இந்த மூவரும் தங்கள் பிராணனை எண்ணாமல், பெலிஸ்தரின் பாளயத்திலே துணிந்து புகுந்துபோய், பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றிலே தண்ணீர் மொண்டு, தாவீதினிடத்தில் கொண்டு வந்தார்கள். தாவீதோ அந்தத் தண்ணீரை குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று பானபலியாக ஊற்றிப் போட்டான். *(2சாமு 23:15-17).* இது தாவீதின் நல்ல சுபாவத்தைக் காண்பிக்கிறது. தன்னுடைய மனுஷரின் ஜீவனைப் பணையம் வைத்து, தாவீது தன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்பவில்லை.

23 அதிகாரம்

4. அபிசாய் - (1நாளா 11:20)

2சாமு 23:18 யோவாபின் சகோதரனும் செருயாவின் குமாரனுமான அபிசாய் என்பவன், அந்த மூன்றுபேரில் பிரதானமானவன்; அவன் தன் ஈட்டியை ஓங்கி முந்நூறு பேரை மடங்கடித்ததினால், இந்த மூன்று பேர்களில் பேர்பெற்றவனானான்.

2சாமு 23:19 இந்த மூன்றுபேர்களில் அவன் மேன்மையுள்ளவனாயிருந்ததினாலல்லவோ, அவர்களில் தலைவனானான்; ஆனாலும் அந்த முந்தின மூன்று பேருக்கு அவன் சமமானவன் அல்ல.

"அந்த மூன்றுபேரில் பிரதானமானவன்" - ஏற்கெனவே அதீனோ, எலெயாசார், சம்மா ஆகிய மூன்று பேரைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. இங்குக் கூறப்பட்டிருக்கும் மூன்றுபேர் அவர்களல்ல. வேறு மூன்று பேர்களாகும். இவர்களில் அபிசாய், பெனாயா ஆகிய இருவரின் பெயர் மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. (2சாமு 23:18-23).

"அவன் தன் ஈட்டியை ஓங்கி முந்நூறு பேரை மடங்கடித்ததினால்" - அபிசாய் யோவாபின் சகோதரனும் செருயாவின் குமாரனுமாவான். இவன் தாவீதின் உறவினன். ஒரே நேரத்தில் முந்நூறுபேரைத் தன் ஈட்டியால் குத்திக் கொன்று போட்டான். (1நாளா 11:20-21). அதீனோ ஒரே நேரத்தில் 800 பேரை வெட்டிப்போட்டான். அதீனோவைவிட அபிசாய் 500பேரைக் குறைவாகவே கொன்று போட்டிருக்கிறான். (2சாமு 23:8, 1சாமு 26:6).

5. பெனாயா - (1நாளா 11:22)

2சாமு 23:20 பராக்கிரமசாலியாகிய யோய்தாவின் குமாரனும் கப்செயேல் ஊரானுமாகிய பெனாயாவும் செய்கைகளில் வல்லவனாயிருந்தான்; அவன் மோவாப் தேசத்தின் இரண்டு வலுமையான சிங்கங்களைக் கொன்றதுமல்லாமல், உறைந்த மழை காலத்தில் அவன் இறங்கிப்போய், ஒரு கெபிக்குள் இருந்த ஒரு சிங்கத்தையும் கொன்றுபோட்டான்.

2சாமு 23:21 அவன் பயங்கர ரூபமான ஒரு எகிப்தியனையும் கொன்றுபோட்டான்; அந்த எகிப்தியன் கையில் ஒரு ஈட்டியிருக்கையில், இவன் ஒரு தடியைப் பிடித்து, அவனிடத்தில் போய், அந்த எகிப்தியன் கையிலிருந்த ஈட்டியைப் பறித்து, அவன் ஈட்டியினாலே அவனைக் கொன்றுபோட்டான்.

2சாமு 23:22 இவைகளை யோய்தாவின் குமாரனாகிய பெனாயா செய்தபடியினால், மூன்று பராக்கிரமசாலிகளுக்குள்ளே பேர்பெற்றவனாயிருந்தான்.

2சாமு 23:23 முப்பதுபேரிலும் இவன் மேன்மையுள்ளவன்; ஆனாலும் அந்த முந்தின மூன்றுபேருக்கும் இவன் சமமானவன் அல்ல; இவனைத் தாவீது தன் மெய்க்காவலருக்குத் தலைவனாக வைத்தான்.

"கப்செயேல்" **(Kabzeel)** - யூதாவிலுள்ள பட்டணம். சவக்கடலின் தெற்கு கடைசியில் மேற்குப் பகுதியில் உள்ளது. (யோசு 15:21; 1நாளா 11:22). மறுபெயர் எகாப்செயேல் **(Jekabzeel)** (நெகே 11:25).

"செய்கைகளில் வல்லவனாயிருந்தான்" - (1நாளா 11:22; 2சாமு 8:18)

23 அதிகாரம்

வலுமையான சிங்கம் (lion of God)
-אֲרִיאֵל - ar-ee-ale' - 740

ஆ.பெ.சொ. - அரியேல்

தேவனுடைய (எல்) பெண் சிங்கம் - இதற்கு தேவனுடைய சிங்கம் என்று பொருள். எருசலேமிற்கு இந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 29). செப்துவஜிந்த் பதிப்பில் மோவாபியரான ஆரியேலின் இரண்டு குமாரரைக் கொன்றுபோட்டான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தாவீதின் பராக்கிரமசாலிகள்

1. ஆசகேல் - யோவாபின் சகோதரன் (2சாமு 23:24)
2. எல்க்கானான் - பெத்லகேம் ஊரானாகிய தோதோவின் குமாரன்.
3. சம்மா - ஆரோதியன் (2சாமு 23:25)
4. எலிக்கா - ஆரோதியன்
5. ஏலெஸ் - பல்தியன் (2சாமு 23:26)
6. ஈரா - இக்கேசின் குமாரன் - தெக்கோவியன்
7. அபியேசர் - ஆனதோத்தியன். (2சாமு 23:27)
8. மெபுன்னாயி - ஊசாத்தியன்
9. சல்மோன் - அகோகியன் (2சாமு 23:28)
10. மகராயி - நெத்தோபாத்தியன்
11. ஏலேப் - பானாவின் குமாரன் (2சாமு 23:29)
12. இத்தாயி - ரிபாயின் குமாரன் - பென்யமீனன்
13. பெனாயா - பிரத்தோனியன் (2சாமு 23:30)
14. ஈத்தாயி - காகாஸ் நீரோடைகளின் தேசத்தான்.
15. அபிஅல்போன் - அர்பாத்தியன் (2சாமு 23:31)
16. அஸ்மாவேத் - பருமியன்
17. எலியூபா - சால்போனியன் (2சாமு 23:32)
18. யோனத்தான் - யாசேனின் குமாரன்
19. சம்மா - ஆராரியன் (2சாமு 23:33)
20. அகியாம் - சாராரின் குமாரன் - ஆராரியன்
21. எலிப்பெலேத் - அகஸ்பாயிபின் குமாரன். (2சாமு 23:34)
22. எலியாம் - அகித்தோப்பேலின் குமாரன்.
23. எஸ்ராயி - கர்மேலியன் (2சாமு 23:35)
24. பாராயி - அர்பியன்
25. ஈகால் - சோபா ஊரானாகிய நாத்தானின் குமாரன் (2சாமு 23:36)
26. பானி - காதியன்
27. சேலேக் - அம்மோனியன் (2சாமு 23:37)
28. நகராய் - பெரோத்தியன்
29. யோவாப் - செருயாவின் குமாரன்
30. ஈரா - இத்ரியன் (2சாமு 23:38)
31. காரேப் - இத்ரியன்
32. உரியா - ஏத்தியன் (2சாமு 23:39)

6. மற்ற பராக்கிரமசாலிகள் - (1நாளா 11:26-27)

2சாமு 23:24 யோவாபின் தம்பி ஆசகேல் மற்ற முப்பதுபேரில் ஒருவன்; அவர்கள் யாரெனில், பெத்லகேம் ஊரானாகிய தோதோவின் குமாரன் எல்க்கானான்,

23 அதிகாரம்

2சாமு 23:25 ஆரோதியனாகிய சம்மா, ஆரோதியனாகிய எலிக்கா,

2சாமு 23:26 பல்தியனாகிய ஏலெஸ் இக்கேசின் குமாரனாகிய ஈரா என்னும் தெக்கோவியன்.

2சாமு 23:27 ஆனதோத்தியனாகிய அபியேசர், ஊசாத்தியனாகிய மெபுன்னாயி,

2சாமு 23:28 அகோகியனாகிய சல்மோன், நெத்தோபாத்தியனாகிய மகராயி,

2சாமு 23:29 பானாவின் குமாரனாகிய ஏலேப் என்னும் நெத்தோபாத்தியன், பென்யமீன் புத்திரரின் கிபியா ஊரானாகிய ரிபாயின் குமாரன் இத்தாயி,

2சாமு 23:30 பிரத்தோனியனாகிய பெனாயா, காகாஸ் நீரோடைகளின் தேசத்தானாகிய ஈத்தாயி,

2சாமு 23:31 அர்பாத்தியனாகிய அபிஅல்பொன், பருமியனாகிய அஸ்மாவேத்,

2சாமு 23:32 சால்போனியனாகிய எலியூபா, யாசேனின் குமாரரில் யோனத்தான் என்பவன்.

2சாமு 23:33 ஆராரியனாகிய சம்மா, சாராரின் குமாரனாகிய அகியாம் என்னும் ஆராரியன்,

2சாமு 23:34 மாகாத்தியனின் குமாரனாகிய அகஸ்பாயிம் மகன் எலிப்பெலேத், கீலோனியனாகிய அகித்தோப்பேலின் குமாரன் எலியாம் என்பவன்.

2சாமு 23:35 கர்மேலியனாகிய எஸ்ராயி, அர்பியனாகிய பாராயி,

2சாமு 23:36 சோபா ஊரானாகிய நாத்தானின் குமாரன் ஈகால், காதியனாகிய பானி,

2சாமு 23:37 அம்மோனியனாகிய சேலேக், செருயாவின் குமாரனாகிய யோவாபின் ஆயுததாரியான பெரோத்தியனாகிய நகராய்,

2சாமு 23:38 இத்ரியனாகிய ஈரா, இத்ரியனாகிய காரேப்,

2சாமு 23:39 ஏத்தியனாகிய உரியா என்பவர்களே; ஆக முப்பத்தேழுபேர்.

"ஆசகேல்" - ஆசகேல் தாவீது ராஜ்யபாரம் பண்ணிய எட்டாம் வருஷத்தில் மரித்துப் போனான். ஆகையினால், தாவீதின் பராக்கிரமசாலிகளைப் பற்றிய அட்டவணை பல வருஷங்களை உள்ளடக்கியிருக்கிறது. (2சாமு 23:24; 2சாமு 2:8-32).

"முப்பதுபேர்" - இந்த முப்பதுபேரில் யார்யார் இடம்பெற்றிருக்கிறார்கள் என்று தெளிவாகத் தெரியவில்லை. ஏனெனில் இந்த அட்டவணையில் முப்பதுக்கும் மேற்பட்ட நபர்களின் பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது. (2சாமு 23:39).

"சம்மா" - இந்த அட்டவணையில் இரண்டு சம்மாவின் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. (2சாமு 23:11,25,33). 2சாமு 23:33 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சம்மாவும், 2சாமு 23:11 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சம்மாவும் ஒரே நபரே.

"ஈரா" - இந்த அட்டவணையில் இரண்டு ஈராக்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. (2சாமு 23:26,38).

"பெனாயா" - இந்த அட்டவணையில் இரண்டு பெனாயாக்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. (2சாமு 23:20,30).

"எலியாம்" - இவன் பத்சேபாளின் தகப்பன். தாவீதின் ஆலோசனைக்காரனான அகித்தோப்பேலின் குமாரன். (2சாமு 15:31; 2சாமு 16:23; 2சாமு 17:1-23).

"உரியா" - பத்சேபாளின் புருஷன். (2சாமு 11:1-27; 2சாமு 12:10).

"ஆக முப்பத்தேழுபேர்" - முதலாவது மூன்றுபேர் (2சாமு 23:13,16-17,19,23), இரண்டாவது மூன்றுபேர் (2சாமு 23:18-19, 22-23), மூன்றாவதாக 31பேர் (2சாமு 23:24-39) ஆக மொத்தம் 37 பராக்கிரமசாலிகள்.

II சாமுவேல் - தொகுப்புரை

24 அதிகாரம்

X. தாவீதின் பாவம் - (நாளா 21)

1. இஸ்ரவேலை இலக்கம் பார்க்கிறான்

2சாமு 24:1 கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின்மேல் மூண்டது. இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார் என்று அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதற்கு தாவீது ஏவப்பட்டான்.

2சாமு 24:2 அப்படியே ராஜா தன்னோடிருக்கிற சேனாபதியாகிய யோவாபைப் பார்த்து: ஜனங்களின் இலக்கத்தை நான் அறியும்படிக்கு நீ தாண்முதல் பெயெர்செபா மட்டுமுள்ள இஸ்ரவேலரின் கோத்திரமெங்கும் சுற்றித்திரிந்து ஜனங்களைத் தொகையிடுங்கள் என்றான்.

தாவீதுக்குச் சாத்தானின் சோதனை

தாவீது இஸ்ரவேலை இலக்கம் பார்க்குமாறு ஏவப்படுகிறான். கர்த்தர் அவனை ஏவவில்லை. சாத்தானே தாவீதை ஏவுகிறான். (நாளா 21:1) சாத்தான் தாவீதை ஏவுவதற்குக் கர்த்தர் அனுமதிக்கிறார். தாவீது ஜனங்களை இலக்கம் பார்த்ததினால் கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின்மேல் மூண்டது. இதற்காகக் கர்த்தர் இஸ்ரவேலைத் தண்டித்தார். (2சாமு 24:10-17).

"ஜனங்களைத் தொகையிடுங்கள்" - (நாளா 21:2)

2. யோவாபின் ஆலோசனை - (நாளா 21:3)

2சாமு 24:3 அப்பொழுது யோவாப் ராஜாவைப் பார்த்து: ராஜாவாகிய என் ஆண்டவனுடைய கண்கள் காணும்படி உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஜனங்களை இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும், நூறுமடங்கு அதிகமாய் வர்த்திக்கப்பண்ணுவாராக; ஆனாலும் என் ஆண்டவனாகிய ராஜா இந்தக் காரியத்தை விரும்புகிறது என்ன என்றான்.

3. இஸ்ரவேலின் இலக்கம் - (நாளா 21:4)

2சாமு 24:4 ஆகிலும் யோவாபும் இராணுவத்தலைவரும் சொன்ன வார்த்தை செல்லாதபடிக்கு, ராஜாவின் வார்த்தை பலத்தது; அப்படியே இஸ்ரவேல் ஜனங்களைத் தொகையிட, யோவாபும் இராணுவத்தலைவரும் ராஜாவை விட்டு புறப்பட்டுப் போய்,

2சாமு 24:5 யோர்தானைக் கடந்து, காத் என்னும் ஆறுகளின் நடுவே இருக்கிறபட்டணத்திற்கு வலதுபுறமான ஆரோவேரிலும் யாசேரிடத்திலும் பாளயமிறங்கி,

2சாமு 24:6 அங்கேயிருந்து கீலேயாத்திற்கும் தாதீம்ஒத்சிக்கும் போய், அங்கேயிருந்து தாண்யானுக்கும், சீதோனின் சுற்றுப்புறங்களுக்கும் போய்,

2சாமு 24:7 பிற்பாடு தீரு என்னும் கோட்டைக்கும் ஏவியர் கானானியருடைய சகல பட்டணங்களுக்கும் போய், அங்கேயிருந்து யூதாவின் தென்புறமான பெயெர்செபாவுக்குப் போய்,

2சாமு 24:8 இப்படி தேசமெங்கும் சுற்றித்திரிந்து, ஒன்பது மாதமும் இருபது நாளும் ஆனபிற்பாடு எருசலேமுக்கு வந்தார்கள்.

"யோவாபும் இராணுவத்தலைவரும் சொன்ன வார்த்தை செல்லாதபடிக்கு" - தாவீதின் உத்தரவுக்கு யோவாபும், மற்ற இராணுவத் தலைவரும் எதிர்க்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய வார்த்தை தாவீதின் வார்த்தைக்கு முன்னாகச் செல்லவில்லை. ராஜாவின் கட்டளைக்கு எல்லோரும் கீழ்ப்படிகிறார்கள். (நாளா 21:4)

ஜனங்களைத்தொகையிடுகிறவர்களுடைய பிரயாணம்

1. எருசலேமிலிருந்து யோர்தானைக் கடந்து, ஆரோவேருக்குப் போனார்கள். (2சாமு 24:5)
2. ஆரோவேரிலிருந்து யாப்போக்கு நதிக்குஅருகிலுள்ள யாசேரிடத்திற்குப் போனார்கள்.

II சாமுவேல் - தொகுப்புரை

24 அதிகாரம்

3. யாசேரிலிருந்து கீலேயாத்திற்குப் போனார்கள். (2சாமு 24:6)

4. கீலேயாத்திலிருந்து தாதீம்ஒத்சிக்கும் போனார்கள்.

5. தாதீம்ஒத்சியிலிருந்து தாண்யானுக்குப் போனர்கள்.

6. தாண்யானிலிருந்து சீதோனின் சுற்றுப்புறங்களுக்கும் போனார்கள்.

7. சீதோனிலிருந்து தீரு என்னும் கோட்டைக்குப் போனார்கள். (2சாமு 24:7)

8. ஏவியருடைய சகல பட்டணங்களுக்கும் போனார்கள்.

9. கானானியருடைய சகல பட்டணங்களுக்கும் போனார்கள்.

10. பெயர்செபா வரைக்கும்போய், எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். (2சாமு 24:8)

"ஆரோவேர்" **(Aroer)** - (யோசு 12:2)

"காத் என்னும் ஆறு" - இது யாப்போக்கு நதியாக இருக்கலாம்.

"தாதீம்ஒத்சி" **(Tahtim-hodshi)** - இந்தநிலம் எங்கிருக்கிறது என்று தெளிவாகத் தெரியவில்லை. இது தேசத்தின் கீழ்ப்பகுதியில் இருக்கலாம். சந்திரனை இங்கு வழிபடும் ஜனங்கள் இருந்தார்கள். பெத்ஷிமேஸ் "சூரியனின் வீடு" **"house of the sun"** என்று அழைக்கப்பட்டது போல, தாதீம்ஒத்சியை "சந்திரனின் வீடு" என்று அழைக்கலாம். இது கீலேயாத்தில் உள்ளது.

"தாண்யான்" **(Dan-jaan)** - இந்த வாக்கியத்தில் மட்டுமே இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் மற்ற சுவடிகளில் இந்த இடம் லாயீஸ்**(Laish)** என்று எழுதப்பட்டிருக்கிறது. இது பாலஸ்தீன தேசத்தின் வடக்கு எல்லையில் உள்ளது. இஸ்ரவேல் புத்திரர் இங்கு குடியேறினார்கள். (யோசு 19:47; நியா 18:29).

"தீரு" **(Tyre)** - தாவீதின் காலத்தில் தீரு மிகப்பெரிய கோட்டையாக விளங்கிற்று. (யோசு 19:29). அதன்பின்பு, இதுமேலும் வலுவடைந்தது. தீருவின் கோட்டையைப் பிடிப்பதற்கு நேபுகாத்நேச்சாருக்கு பதின்மூன்று வருஷங்களாயிற்று. இதன் பின்பு, இந்தக் கோட்டையை மத்தியதரைக்கடலிலுள்ள ஒரு தீவில் கட்டினார்கள். இந்தக் கோட்டையை மகா அலெக்ஸாண்டர் முழுவதுமாக அழித்துப் போட்டான். ஒரு காலத்தில் தீரு உலக வியாபாரத்தின் மையஸ்தலமாக விளங்கிற்று. தீருவின் ராஜாவாகிய ஈராம், தாவீது, சாலொமோன் ஆகியோரின் நெருங்கிய சிநேகிதனாக இருந்தான். (2சாமு 5:11; 1இராஜா 5:1; 1இராஜா 7:13-14; 1இராஜா 9:11-12; 1நாளா 14:1; 1நாளா 22:4; 2நாளா 2:3,11-14). இஸ்ரவேல் புத்திரர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, இஸ்ரவேல் தேசம் மறுபடியும் திரும்பிக் கட்டப்பட்டபோது தீருவைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. (எஸ்றா 3:7; நெகே 13:16) தீருவைக் குறித்து பல தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டிருக்கிறது. (சங் 45:12; சங் 83:7; சங் 87:4; ஏசா 23; எரே 25:22; எரே 27:3; எரே 47:4; எசே 26-29; ஓசி 9:13; யோவே 3:4; ஆமோ 1:9-10; சக 9:2-3, மத் 11:21-22; மத் 15:21; மாற்கு 3:8; மாற்கு 7:24,31.)

"ஏவியர் கானானியருடைய சகல பட்டணங்களுக்கும்" - கானான் தேசத்தின் அந்நிய ஜாதிகள் இன்னும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் வாசம்பண்ணுகிறார்கள்.

"ஒன்பது மாதமும் இருபது நாளும்" - இஸ்ரவேல் ஜனங்களை எண்ணித் தொகையிடுவதற்கு ஒன்பது மாதமும், இருபது நாளும் ஆயிற்று.

4. இலக்கம்பார்த்த தொகை - (1நாளா 21:5)

2சாமு 24:9 யோவாப் ஜனத்தை இலக்கம்பார்த்த தொகையை ராஜாவுக்குக் கொடுத்தான்; இஸ்ரவேலிலே பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகர் எட்டுலட்சம்பேர் இருந்தார்கள்; யூதா மனுஷர் ஐந்து லட்சம் பேர் இருந்தார்கள்.

24 அதிகாரம்

"இஸ்ரவேலிலே பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகர்" - இஸ்ரவேல் தேசத்தில் எட்டுலட்சம் பேரும், யூதாவின் மனுஷர் ஐந்து லட்சம் பேரும் ஆக மொத்தம் பதின்மூன்று இலட்சம்பேர் இருந்தார்கள். (2சாமு 24:9). 1நாளா 21:5 ஆவது வசனத்தில் இவர்களுடைய எண்ணிக்கை 11இலட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டுக்கும் இடையில் மூன்று இலட்சம்பேர் எண்ணிக்கையில் வித்தியாசமாக இருக்கிறார்கள். ஒருவேளை இந்த மூன்று இலட்சம்பேரும் பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகராக இல்லாமல் சாதாரண ஜனங்களாக இருந்திருக்க வேண்டும். (2சாமு 24:9) யூதாவின் மனுஷரில் 470,000பேர் பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகராக இருந்தார்கள். (1நாளா 21:5) மீதமுள்ள 30,000பேர் சாதாரண ஜனங்களாக இருந்திருக்க வேண்டும்.

5. தாவீது மனம் திரும்புகிறான் - (1நாளா 21:7-8; 2சாமு 12; சங் 21)

2சாமு 24:10 இவ்விதமாய் ஜனங்களை எண்ணின பின்பு, ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது; அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி: நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன்; இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; நான் மகாபுத்தியீனமாய்ச் செய்தேன் என்றான்.

2சாமு 24:11 தாவீது காலமே எழுந்திருந்த போது, தாவீதின் ஞானதிருஷ்டிக் காரனாகிய காத் என்னும் தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகிச் சொன்னது:

"இவ்விதமாய் ஜனங்களை எண்ணின பின்பு, ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது" - ஜனங்களை எண்ணித் தொகைபார்த்து, தாவீது கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். அவனுடைய மனச்சாட்சி அவனை வாதிக்கிறது.

கர்த்தருடைய சமுகத்தில் தான் செய்த பாவத்தை அங்கிகரிக்கிறான். "ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; நான் மகாபுத்தியீனமாய்ச் செய்தேன்" என்று கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான்.

புத்தியீனம் (foolishly) - סָכַל - saw-kal' - 5528

வினைச்சொல் - புத்தியீனமாய்ச்செய், மதியில்லாதவராயிரு, பயித்தமாக்கிவிடு, பைத்தியமாகப்பண்ணு, மதியற்றவனாயிரு **(to be silly; to play the part of a fool)** (2சாமு 24:10; 2சாமு 15:31; ஆதி 31:28; 1சாமு 13:13; 1சாமு 26:21; 1நாளா 21:8; 2நாளா 16:9; ஏசா 44:25).

"தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத் என்னும் தீர்க்கதரிசி" - தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனம் திரும்பிய பின்பு, கர்த்தர் அவனுக்குக் காத் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாக மறுஉத்தரவு அருளுகிறார். (2சாமு 24:12-13).

"காத்" **(Gad)** - இந்தப் பெயருக்குச் "சேனை" **"a troop"** என்று பொருள். (ஆதி 30:11).

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "காத்"துகள்

1. யாக்கோபின் ஏழாவது குமாரன். (ஆதி 30:11; ஆதி 35:26; ஆதி 46:16; ஆதி 49:19; யாத் 1:4; எண் 1:14,24-25; எண் 2:14; எண் 7:42; எண் 10:20; எண் 13:15; எண் 26:15-18; எண் 32:1-34; எண் 34:14; உபா 27:13; உபா 33:20; யோசு 4:12; யோசு 13:24-28; யோசு 18:7; யோசு 20:8; யோசு 21:7,38; யோசு 22:9-34; 1சாமு 13:7; 1சாமு 24:5; 1நாளா 2:2; 1நாளா 5:11; 1நாளா 6:63,80; 1நாளா 12:14; எரே 49:1; எசே 48:27-34; வெளி 7:5)

2. தாவீதின் ஞானதிருஷ்டிக்காரன் (2சாமு 24:11-19; 1சாமு 22:5; 1நாளா 21:9-19; 1நாளா 29:29; 2நாளா 29:25)

24 அதிகாரம்

"தாவீதின் ஞானதிருஷ்டிக்காரன்" - தாவீதுக்குத் தீர்க்கதரிசனம் உரைப்பதற்காகக் காத் பலமுறை ஏவப்பட்டிருக்கிறான். தாவீது ராஜாவாக ஆவதற்கு முன்பே காத் அவனுக்குத் தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறான். (1சாமு 22:5). நாத்தானும் தாவீதுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறான். (2சாமு 7:1-29; 2சாமு 12:1-15)

6. மூன்று காரியங்கள் - (1நாளா 21:9)

2சாமு 24:12 நீ தாவீதினிடத்தில் போய், மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள், அதை நான் உனக்குச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

2சாமு 24:13 அப்படியே காத் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி: உம்முடைய தேசத்திலே ஏழு வருஷம் பஞ்சம் வர வேண்டுமோ? அல்லது மூன்றுமாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின்தொடர, நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போக வேண்டுமோ? அல்லது உம்முடைய தேசத்திலே மூன்று நாள் கொள்ளைநோய் உண்டாகவேண்டுமோ? இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டுபோக வேண்டும் என்பதை நீர் யோசித்துப் பாரும் என்று சொன்னான்.

காத் தாவீதிடம் சொன்ன செய்திகள்

1. மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்.

2. அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள், அதை நான் உனக்குச் செய்வேன்.

தாவீதுக்கு முன்பாக வைக்கப்பட்ட மூன்று காரியங்கள்

1. உம்முடைய தேசத்திலே ஏழு வருஷம் பஞ்சம் வர வேண்டுமோ?

2. மூன்றுமாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின்தொடர, நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போகவேண்டுமோ?

3. உம்முடைய தேசத்திலே மூன்றுநாள் கொள்ளைநோய் உண்டாகவேண்டுமோ?

7. கர்த்தருடைய கையில் விழுவோமாக - (1நாளா 21:13)

2சாமு 24:14 அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்; இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக என்றான்.

"நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக" - கர்த்தரையும், அவருடைய கிரியைகளையும் தாவீது நன்றாக அறிந்தவன். ஆகையினால் கர்த்தருடைய கையில் தன்னை ஒப்புக் கொடுக்கிறான். ஏனெனில் கர்த்தருடைய கிருபையும், இரக்கமும் பெரியது. கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தில் கொள்ளை நோயை வரப்பண்ணினார். அதில் 70,000பேர் செத்துப்போனார்கள். தாவீது மற்ற இரண்டு காரியங்களைத் தேர்ந்தெடுத்திருந்தால், அதில் எத்தனைபேர் மரித்துப் போவார்கள் என்பது தெரியவில்லை.

"மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக" - தாவீது சவுலின் கையில் பல வருஷங்களாக விழுந்திருந்தான். சமீபத்தில் அப்சலோமுக்குத் தப்பியோடினான். மனுஷருடைய கைகள் இரக்கமற்றவை. ஆனால் கர்த்தருடைய கரமோ கிருபையும், இரக்கமும் மிகுந்தது.

24 அதிகாரம்

8. கொள்ளை நோய் - (1நாளா 21:14)

2சாமு 24:15 அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலிலே அன்று காலமே தொடங்கி குறித்தகாலம் வரைக்கும் கொள்ளை நோயை வரப்பண்ணினார்; அதினால் தாண்முதல் பெயெர்செபாமட்டுமுள்ள ஜனங்களில் எழுபதினாயிரம்பேர் செத்துப்போனார்கள்.

"கொள்ளைநோயை வரப்பண்ணினார்" - இஸ்ரவேல் தேசத்தில் கொள்ளை நோய் வருவதற்குக் கர்த்தர் அனுமதித்தார். அவர் ஒருவேளை தமது தூதனுக்குக் கொள்ளை நோயை அனுப்புமாறு கட்டளையிட்டிருக்க வேண்டும். (2சாமு 24:16). கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு அவரிடம் எப்போதுமே அதற்குரிய நபர்கள் இருப்பார்கள்.

"அன்று காலமேதொடங்கி குறித்தகாலம் வரைக்கும்" - கொள்ளைநோய் காலையில் ஆரம்பித்தது. மூன்று பகலும், மூன்று இரவும் கொள்ளைநோய் தொடர்ந்தது. ஆகமொத்தம் இஸ்ரவேல் தேசத்தில் மூன்றுநாள் கொள்ளை நோய் உண்டாயிற்று. (2சாமு 24:13) இந்தக் கொள்ளைநோயினால் எழுபதினாயிரம்பேர் செத்துப்போனார்கள்.

9. எருசலேமின்மீது தேவனுடைய இரக்கம் - (1நாளா 21:15)

2சாமு 24:16 தேவதூதன் எருசலேமை அழிக்கத் தன் கையை அதின்மேல் நீட்டினபோது, கர்த்தர் அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு, ஜனங்களைச் சங்கரிக்கிற தூதனை நோக்கி: போதும், இப்போது உன் கையை நிறுத்து என்றார்; அந்த வேளையில் கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருந்தான்.

"தேவதூதன் எருசலேமை அழிக்கத் தன் கையை அதின்மேல் நீட்டினபோது" - தேவதூதன் ஏற்கெனவே தாண்முதல் பெயெர்செபாமட்டும் கொள்ளை நோயை அனுப்பிவிட்டான். இப்போது எருசலேமை அழிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறான். எருசலேம் கர்த்தருடைய நேசமான பட்டணம். அதைத் தமக்குத் தலைநகரமாகக் கர்த்தர் தெரிந்து கொண்டார். அந்தப் பட்டணத்தை அழிக்கத் தேவதூதன் அதின்மேல் தன் கையை நீட்டினான். ஆனால் கர்த்தரோ அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார். தேவதூதனுடைய கையை நிறுத்துமாறு கர்த்தர்கட்டளையிட்டார். இதனால் எருசலேம் பட்டணம் தனக்கு வரவிருந்த அழிவிலிருந்து தப்பித்தது. தம்முடைய சாபத்தைத் தொடர வேண்டுமென்பது கர்த்தருடைய விருப்பமல்ல. எருசலேம் பட்டணத்தை அழிக்காமல் கர்த்தர் தமது மனதை மாற்றிக் கொண்டார்.

"கர்த்தர் அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு" - (ஆதி 6:6)

"தேவதூதன்" - ஒரே ஒரு தேவதூதனைக் கொண்டு கர்த்தர் ஒரு பட்டணத்தையே அழிப்பதற்குச் சித்தம் கொண்டார். ஒரு தேவதூதனால் ஓர் இரவில் 185,000 யுத்த வீரரைச் சங்காரம் பண்ண முடியும். (2நாளா 32:21; ஏசா 37:36)

10. ஜனத்தை உபாதிக்கிற தூதன் - (1நாளா 21:16)

2சாமு 24:17 ஜனத்தை உபாதிக்கிற தூதனை தாவீது கண்டபோது, அவன் கர்த்தரை நோக்கி: இதோ, நான்தான் பாவஞ்செய்தேன்; நான் தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக என்று விண்ணப்பம்பண்ணினான்.

"அவன் கர்த்தரை நோக்கி" - தாவீது கர்த்தரிடத்தில் நேரடியாகப் பேசுகிறான். தேவனுக்கும், மனுஷனுக்கும் மத்தியஸ்தர் ஒருவரே. இயேசு கிறிஸ்து என்பவரே அவர். இயேசு கிறிஸ்துவையல்லாமல் வேறு மத்தியஸ்தர் நமக்கு இல்லை. (1தீமோ 2:4-5).

"நான்தான் பாவஞ்செய்தேன்" - இஸ்ரவேல் ஜனங்களை எண்ணித் தொகையேற்றிய பாவத்தைத் தாவீது இங்கு இரண்டாம் முறையாக அறிக்கை பண்ணுகிறான். (2சாமு 24:10,17). எல்லாப் பாவங்களையும் தாவீது தன்மீது ஏற்றுக் கொள்கிறான். இஸ்ரவேல் ஜனங்களைத் தண்டிக்காமல் விட்டுவிடுமாறு விண்ணப்பம் பண்ணுகிறான். தன்னை மட்டும் தண்டிக்குமாறு தாவீது கர்த்தரிடத்தில் மன்றாடுகிறான்.

24 அதிகாரம்

"இந்த ஆடுகள் என்னசெய்தது?" - தாவீது இஸ்ரவேல் ஜனங்களை ஆடுகள் என்று வர்ணிக்கிறான். ஜனங்களை ஆடுகளாக வர்ணித்த முதல் மனுஷன் தாவீதுதான். *(2சாமு 24:17; 1நாளா 21:17; சங் 23)* தாவீது ஒரு நல்ல மேய்ப்பன். தன் சிறு வயதில் ஆடுகளை மேய்த்தவன். ஆடுகளைப் பற்றி நன்கு அறிந்தவன். ஆகையினால் ஜனங்களை ஆடுகளாக வர்ணித்துப் பேசுகிறான். *(1சாமு 16:11,19; 1சாமு17:15,34; 2சாமு7:8)*. தீர்க்கதரிசியாகிய நாத்தானும் ஆட்டைப் பற்றிக் கூறியிருக்கிறான். ஆனால் தாவீது இங்கு ஆடுகள் என்று கூறுவது இஸ்ரவேல் ஜனங்களையே குறிக்கும். *(சங் 23)*

மனுஷரை ஆடுகள் என்று வர்ணித்தவர்கள்

1. தாவீது *(2சாமு 24:17; 1நாளா 21:17; சங் 23; சங் 119:176)*
2. பெயர் தெரியாத ஆசிரியர் *(சங் 44:11; சங் 49:14; சங் 95:7; சங் 100:3)*
3. ஆசாப் *(சங் 74:1; சங் 78:52; சங் 79:13)*
4. ஏசாயா *(ஏசா 53:6-7; அப் 8:32)*
5. எரேமியா *(எரே 12:3; எரே 23:1; எரே 50:6,17)*
6. எசேக்கியேல் *(எசே 34:6,11-12)*
7. சகரியா *(சக 13:7; மத் 26:31)*
8. இயேசு கிறிஸ்து *(மத் 9:36; மத் 10:6,16; மத் 12:11-12; மத் 15:24; மத் 18:12-13; மத் 25:32-33; யோவான் 10:27; யோவான் 21:16-17)*
9. பவுல் *(எபி 13:20)*
10. பேதுரு *(1பேதுரு 2:25)*

"உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக" - இந்தப் பாவத்திற்குத் தாவீது மட்டுமே காரணம். *(2சாமு 24:1)*. ஒருவன் தான் செய்த பாவத்தை அங்கிகரித்து, அதற்குரிய தண்டனையை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கும்போது கர்த்தருடைய கிருபையும், இரக்கமும் அவனுக்கு சமீபமாக இருக்கும். *(2சாமு 24:17-25)*.

11. கர்த்தருக்கு பலிபீடம் கட்ட தாவீது நிலம் வாங்கி அங்கு பலி செலுத்துகிறான் - *(1நாளா 21:18-27; 2நாளா 3:1)*

2சாமு 24:18 அன்றையதினம் காத் என்பவன் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் போய், எபூசியனாகிய அர்வனாவின் களத்திலே கர்த்தருக்கு ஒரு பலி பீடத்தை உண்டாக்கும் என்றான்.

2சாமு 24:19 காத்துடைய வார்த்தையின் படியே தாவீது கர்த்தர் கற்பித்த பிரகாரமாகப் போனான்.

2சாமு24:20 அர்வனா ஏறிட்டுப்பார்த்து: ராஜாவும் அவனுடைய ஊழியக்காரரும் தன்னிடத்தில் வருகிறதைக்கண்டு, அர்வனா எதிர்கொண்டுபோய் தரைமட்டும் குனிந்து ராஜாவை வணங்கி,

2சாமு 24:21 ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானிடத்தில் வருகிற காரியம் என்ன என்று கேட்டதற்கு, தாவீது: வாதை ஜனத்தை விட்டு நிறுத்தப்படக் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு இந்தக் களத்தை உன் கையிலே கொள்ள வந்தேன் என்றான்.

2சாமு 24:22 அர்வனா தாவீதைப் பார்த்து: ராஜாவாகிய என் ஆண்டவன் இதை வாங்கிக் கொண்டு, தம்முடைய பார்வைக்கு நலமானபடி பலியிடுவாராக; இதோ, தகனபலிக்கு மாடுகளும் விறகுக்குப் போரடிக்கிற உருளைகளும் மாடுகளின் நுகத்தடிகளும் இங்கே இருக்கிறது என்று சொல்லி,

24 அதிகாரம்

2சாமு 24:23 அர்வனா ராஜயோக்கியனாய் அவை எல்லாவற்றையும் ராஜாவுக்குக் கொடுத்த பின்பு, அர்வனா ராஜாவை நோக்கி: உம்முடைய தேவனாகிய கர்த்தர் உம்மிடத்தில் கிருபையாயிருப்பாராக என்றான்.

2சாமு 24:24 ராஜா அர்வனாவைப் பார்த்து: அப்படியல்ல; நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகனபலி களைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன் என்று சொல்லி, தாவீது அந்தக் களத்தையும் மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான்.

2சாமு 24:25 அங்கே தாவீது கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தினான்; அப்பொழுது கர்த்தர் தேசத்துக்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்; இஸ்ரவேலின் மேலி ருந்த அந்த வாதை நிறுத்தப்பட்டது.

"அன்றையதினம்" - வாதையின் மூன்றாம் நாள். (2சாமு 24:13,18).

"கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கும்" - காத் மூலமாக தாவீதுக்கு இரண்டாம் செய்தி வருகிறது. தாவீது பாவநிவாரண பலி செலுத்தி, தேவனுடைய உக்கிரத்தை மாற்ற வேண்டும். இதற்காக அவன் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்க வேண்டும். (2சாமு 24:18-25).

"அர்வனா" **(Araunah)** - இந்தப் பெயருக்கு "சந்தோஷமாகச் சத்தமிடுவது" **"shout for joy"** என்று பொருள். (2சாமு 24:16-24). மறுபெயர் ஒர்னான் **(Ornan)** (1நாளா 21:15-28; 2நாளா 3:1). இவன் ஓர் எபூசியன். தாவீது எருசலேமைக் கைப்பற்றி, அதைத் தனக்கு தலைநகரமாக்கிய போது, அந்த நகரத்தில் பல எபூசியர்கள் தங்கி விட்டார்கள். அவர்களில் அர்வனாவும் ஒருவன். (2சாமு 5:6-12). தாவீது எல்லா எபூசியரையும் எருசலேமை விட்டு, துரத்திவிட்டிருந்திருக்க முடியும். அல்லது அவர்களைக் கொன்றுபோட்டிருந்திருக்க முடியும். யுத்தத்தில் ஜெயிக்கும் பொழுது இவ்வாறு செய்வது பிரமாணத்தின்படி அங்கிகரிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் தாவீதோ அவர்களைக் கொன்றுபோடாமல், எருசலேமில் தங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறான். அதனால் எபூசியர்கள் தாவீதின் தாராளமான குணத்திற்கு நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள். அர்வனா தாவீதுக்கு தகனபலி செலுத்த மாடுகளையும், விறகுக்குப் போரடிக்கிற உருளைகளையும், மாடுகளின் நுகத்தடிகளையும் கொடுத்தான். (2சாமு 24:22-23; 1நாளா 21:20).

"தாவீது கர்த்தர் கற்பித்த பிரகாரமாகப் போனான்" - கொள்ளைநோயினால் இஸ்ரவேல் ஜனங்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் தாவீது காலதாமதம் பண்ணாமல், அர்வனாவைப் பார்க்கப் போகிறான்.

அர்வனா செய்த காரியங்கள்

1. ராஜாவும் அவனுடைய ஊழியக்காரரும் தன்னிடத்தில் வருகிறதைக்கண்டான். (2சாமு 24:20)
2. அர்வனா எதிர்கொண்டுபோய் தரைமட்டும் குனிந்து ராஜாவை வணங்கினான்.
3. ராஜாவாகிய என் ஆண்டவன் தமது அடியானிடத்தில் வருகிற காரியம் என்ன என்று கேட்டான். (2சாமு 24:21)
4. ராஜாவாகிய என் ஆண்டவன் இந்தக் களத்தை வாங்கிக் கொண்டு, தம்முடைய பார்வைக்கு நலமானபடி பலியிடுவாராக; இதோ, தகனபலிக்கு மாடுகளும் விறகுக்குப் போரடிக்கிற உருளைகளும் மாடுகளின் நுகத்தடிகளும் இங்கே இருக்கிறது என்று சொன்னான். (2சாமு 24:22)

24 அதிகாரம்

"ராஜாவும் அவனுடைய ஊழியக்காரரும் தன்னிடத்தில் வருகிறதைக்கண்டு" - அர்வனாவைப் பார்ப்பதற்கு ராஜாவும், அவனுடைய ஊழியக்காரரும் வருகிறார்கள். அவர்களைப் பார்த்தபோது, அர்வனாவுக்குப் பயம் வந்திருக்கும். ஆனாலும் தாவீது ராஜா நீதியான மனுஷன் என்றும், அவன் நீதியான காரியங்களையே செய்வான் என்றும் அர்வனா தன் உள்ளத்தில் நம்புகிறான்.

"உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன்" - தாவீது அர்வனாவின் களத்தை இலவசமாக வாங்க விரும்பவில்லை. அதற்குரிய கிரயம் கொடுத்து வாங்க விரும்புகிறான். தாவீது பாவம் செய்து விட்டான். பாவநிவாரண பலிகளை இந்தக் களத்தில் செலுத்த வேண்டுமென்று கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். (2சாமு 24:18). ஆகையினால் தாவீது ஒவ்வொரு காரியத்தையும் கர்த்தருக்குப் பயந்து நிறைவேற்றுகிறான். தாவீது அர்வனாவின் களத்தை ஐம்பது சேக்கலுக்கும் (2சாமு 24:24), நிலத்தை அறுநூறு சேக்கலுக்கும் வாங்கினான். (1நாளா 21:25).

களம் (threshingplace) - גֹּרֶן - go'-ren - 1637

ஆ.பெ.சொ. - போர்க்களம், படைப்புக்களம், போரடிக்கிறகளம், களம், விசாலமான இடம், களஞ்சியம்

நிலம் (place) - מָקוֹם - maw-kome', mek-o-mah' - 4725

ஆண்பால் பெயர்ச்சொல் - இடம், ஸ்தலம், வாசஸ்தலம், வீடு, ஸ்தானம், நிலம், மறைவிடம்.

"அங்கே தாவீது கர்த்தருக்கு ஒரு பலி பீடத்தைக் கட்டி" - தாவீது கர்த்தருக்கு அந்தக் குறிப்பிட்ட இடத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறான். அதன் பின்பு, சாலொமோன் அதே இடத்தில் கர்த்தருடைய தேவாலயத்தைக் கட்டுகிறான். (2நாளா 3:1-2).